# போகர்

## கருக்கிடை நிகண்டு 500

### மூலமும் உரையும்





தாமரை நூலகம், சென்னை - 26.

# போகமுனிவர் கருக்கிடை நிகண்டு 500

## மூலமும் உரையும்

பதிப்பாசிரியர்
ஆர். சி. மோகன்



தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 236

முதல் பதிப்பு : ஏப்ரல் - 1999

இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் - 2012

மூன்றாம் பதிப்பு : மார்ச் 2016

நான்காம் பதிப்பு : மார்ச் 2019

உரிமைபெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர் : போகர் கருக்கிடை நிகண்டு 500

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : மார்ச் 2019

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : 21 செ. மீ. x 14 செ. மீ

தாளின் தன்மை : 16.6 கி.கி. வெள்ளைத்தாள்

எழுத்தின் அளவு : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 224+8

பிரதிகள் : 1000

நூலின் விலை : ரூ.100/-

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை - 34

# பதிப்புரை

மூலிகைகள், உப்புக்கள், உலோகங்கள், பாஷாணங்களைப் பற்றிய வேதியல் உண்மைகளைக் கூறும் நூல் போகர் நிகண்டுக்கு இணையாக வேறெதுவுமே கிடையாது.

அதன் தொடர்ச்சியே போகர் கருக்கிடை நிகண்டு என்னும் இந்த நூல்

இந்நூலில் ஐம்பத் தொன்பது மூலிகைகளைப் பற்றியும் நாற்பத்திரண்டு பறவைகள் விலங்குகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

இதன் சிறப்பு அம்சம் வாலை பூஜாயந்திரம்-பூஜா விதிகள், நாற்பத்து முக்கோண சக்கரம் பூஜா விதி ஆகிய இரு பகுதிகளுமே ஆகும். சித்தர்களின் பூஜை முறைகளைப் பற்றி வேறெந்த நூலிலும் இவ்வளவு தெளிவான விளக்கம் இல்லை.

இந்நூலில் கூறப்பட்டுள்ள மூலிகைகள், பறவைகள் விலங்குகளின் மருத்துவ குணங்களும் வேதியல் பண்புகளும் தனியாக அட்டவணை மூலம் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன.

இந்நூல்களின் அருமை அறிந்து இவற்றில் பொதிந்துள்ள வேதியல் பண்புகளை ஆய்வு செய்து உலகறியச் செய்யும் கடமை தமிழக அரசுக்கு மட்டுமன்றி ஒவ்வொரு தமிழனுக்குமே உரிய தாகும்.

எஸ்.பி. இராமச்சந்திரன்
பதிப்பசிரியர்

# போகமுனிவர்
# கருக்கிடை நிகண்டு-500

## பொருளடக்கம்

91/4

## VI போகமுனிவர்

முற்றும்

உ

சிவமயம்

போகமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# கருக்கிடை நிகண்டு - 500.

(இரண்டாவது காண்டம்)

## காப்புகள்

ஆனைமுகன் தன்பாதம் முருகன் பாதம்
ஐயருட சீர்பாதம் அம்பாள் பாதம்
வான்உமையாள் தன்பாதம் வருணன்பாதம்
வாகான லட்சுமியாள் வரதன் பாதம்
கானனையாள் சித்தர்களின் ரிஷிகள் பாதம்
கமலமதில் வீற்றிருக்கும் வாணி பாதம்
கோன் அனைய கும்பமுனி பாதம் போற்றிக்
கூறுகிறேன் கருக்கடையின் தொகுப்புத்தானே. (1)

தொகுப்பான பெருநூ லினிகண்டு அனந்தம்
தொந்தமாங் கருக்கடையில் சிலதும் சொன்னோம்
வகுப்பான கடைச்சரக்கு உபரசங்கள்
வண்மையாய் நாலுவிதப் பெயரும் சொன்னோம்
பகுப்பான பாஷை எல்லாம் பகர்ந்து சொன்னோம்
பண்பான மிர்தசஞ் சீவி அனந்தம்
நகுப்பான லவணவகை அனந்தங் கோடி
நாதாக்கள் அறியவென்று நாட்டினேன் பார். (2)

பாரப்பா யுகநான்குங் கடந்து மேதான்
பாடிவைத்தேன் ஆயிரத்துச் சில் வானந்தான்
சீரப்பா கருக்கடைதா னதற்கு நேராய்ச்
சிறப்பான மூலிவகை திரட்டி வைத்தேன்
ஆரப்பா எனைப்போல ஐந்நூறும் சொல்வார்
அப்பனே நானுனக்கு அறியச் சொன்னேன்
தேரப்பா இந்நூலைப் பார்த்து மேதான்
தெளிவுறவே மூலிப்பேர் தெளிந்து பாரே. (3)

## நூல்

### பாச்சுற்றியின் பெயர்

பாச்சுற்றிப் பேர்தனையே பகரக்கேளு
பண்பான நாளிகாவித்துறு மலிதாவாகும்
காச்சுற்றிக் கபோதசரணா நளினியாகும்
கடிவிஷங்கள் குஷ்டங்கள் போக்கியாகும்
கோச்சிற்றி கிரகிணி கிருமினாசி
கெடியான மேகங்கள் போக்கியாகும்
ஈச்சுற்றி ஈயத்தின் தோஷம் போக்கி
யேற்றமாம் பாச்சுற்றி இயலுமாமே. (1)

*நாளிகா வித்துறு, மலிதா, போத சரணா, நளினி, கடிவிஷங்கள் குஷ்டங்கள் போக்கி, கிரகிணி, கிருமினாசி, மேகங்கள் போக்கி ஈயத்தின் தோஷம் போக்கி இவை எல்லாம் பாச் சு த்திப் பெயர்களாகும்.*

### பரியங்கம் பாதிப்பெயர்

பரியங்கம் பாதிப்பேர் பகரக்கேளு
பண்பான குதிரைவா லிகலுமாகுந்
தரியங்கத் தீயினுட புஷ்பமாகுந்
தமியான புஷ்தீபாதுக் கிதாவாகும்
கரியங்ககட் டுவாபரி யங்கபாதி
கண்டர்தனைச் செம்பாக்கி கனகச்சியாகும்
புரியங்க பூரணபுஷ் பியுமேயாகும்
பேரான பரியங்கப் பாதியாமே. (2)

*குதிரைவாலி, கலுகம, தீலன் துஷ்மம், புஷ்தீபாதுக்கிதா, கரியல்கட்டுவா, பரிங்கப்பாதி, துரிசைச் செம்பாக்கி கனகச்சி, பூரண புஷ்பி இவை எல்லாம் பரியங்கப்பாதியின் பெயர்களாகும்.*

### நருஞ் சோந்தியின் பெயர்

நருஞ்சோந்திப் பேர்தனையே நவிலக்கேளு
நாணுகமாம் உக்கட்டா சூட்சுமபத்திராந்
திருஞ்சோந்தி தீர்க்கவே ரகிதயஷ்டிகாவாஞ்
சிதவிரிய மணிசுவர்ண புஷ்பமாகுஞ்
சருஞ்சோந்தி சுதாமதா சாரவிருட்சஞ்
சணத்திலே கல்லுப்புக் கட்டிப்போகும்
உருஞ்சோந்தி உப்பெல்லாம் வயிரமாக்கி
யுண்மையாம் நறுஞ்சோந்தி உயற்சியாமே. (3)

*உக்ககடா, சூக்ஷசுமபத்தரா தீர்க்கவே, ரகிதயஷ்டிகா, மணிசுவர்ண புஷ்பம், சுதாமாதா, சாரவிருட்சம் நறுஞ்சோதிப் பெயர்களாகும் இது கல்லுப்பபைக் கட்டும்*

## ஆரையின் பெயர்

ஆரையுட பெயர்தனையே யறியக்கேளு
அழகான சுநிஷணா சூட்சுமயத்திரா
வாரையாம் வத்திகச் சதுர்த்தளாவர
மகத்தான சூதவெண்ணை இறுகியாகும்
ஈரையாம் ஈயத்தைப் பற்பமாக்கி
எழிலான இரணத்தின் நீரைக்கொல்லி
சாரையாஞ் சலரோகம் போக்கியாகுந்
தண்ணீரைச் சுருக்கியாம் ஆரைப்பேரே. (4)

*சுநிஷணா குக்ஷசம்பத்தி, சூத வெண்ணையிறுகி, ஈயத்தைப் பற்பமாக்கி விறணத்தின் நீரைக்கொல்லி, சலரோகம் போக்கி, தண்ணீரைச் சுருக்கி இவை எல்லாம் ஆரையின் பெயர்களாகும்.*

## கசப்பான பசளையின் பெயர்

கசப்பான பசளைப்பேர் கருதக்கேளு
கண்டாத வெள்ளைசூதமது மணியுமாகுந்
தசப்பான சுருக்கிடவே சாதிலிங்கமயினஞ்
சண்டாள விஷத்தியாஞ் சளச்சியாகு
மசப்பான மக்கினியும் போதக்கியமாகும்
மாவிஷங் கடிபிரியந் தானுமாகும்
அசப்பான நாகத்தைச் செந்தூரியாக்கி
அதிகமாங் கசப்பான பசளைப்பேரே. (5)

*சூதத்தை மணியாக்கி, (சூத வெண்ணையை மணியாக்கி), சுருக்கிட சாதிலிங்க மயினம், விஷத்தியாத் தளச்சி, மதக்கினி, போதக்கி சுற்கடிபறியா, நாகத்தை செந்தூரியாக்கி இவை எல்லாம் கசப்பு பசளையின் பெயர்களாகும்.*

## இருவேலியின் பெயர்

இருவேலிப் பேரினுட இயக்கங்கேளு
ஈறிப்போம் அரிகேசா முதிச்சியமாகும்
வருவேலி வாளகஞ் சலமுமாகு
மகத்தான கேசாம்பு நாகவியாகுந்
திருவிசித ளந்தித்தப் பித்தசாந்தி
சிலேஷ்ம அரிவிகற்பாகம் அரமுமாகுஞ்
சுருவேலி சுரதாக நாசனியாகும்
சுயம்பான இருவேலி சூட்சமாமே. (6)

*வானசஞ்சலம், கேசரம், புகைவியா, சீதளம் தீத்த பித்தம், சேற்பாக அரம், சுரகாச நாசனி இவை எல்லாம் இருவேலியின் பெயர்களாகும்.*

## பருத்தியின் பெயர்

பருத்தியுட பேர்தனையே பகரக் கேளு
பண்பான வாமன்னியச் சாதன பலமாகும்
வருத்தியாம் வாஷ்டியாங் காற் பாசிய ந்தக்கினிகாவா
மகத்தான நக்கினசிதுபலயினாசம்
குருத்தியாங் குலிகுலப வசுமிறத் தாவாங்
கூறான கவிரயதித் தமதுராவாகுங்
கிருத்தியாங் கிருமிஅரா காமர்கண்டு
கிரந்திவிர ணாபகாப ருத்தியாமே. (7)

*காருண்ணியாச் சாதனப் பலம், வாட்டி, காரபாகியந்தக்கினிகா, நக்கினசது பலபினாசம், கலிகுல பலசுமிற்தாகஷாய தித்த மதுரா, கிறுமியாச் காமர் கண்டு இவை எல்லாம் பருத்தியின் பெயர்களாகும்.*

## செம்பருத்தியின் பெயர்

செம்பருத்திப் பேர்தனையே செப்பக்கேளு
செகப்பான ரெத்தசாதன பலமாகும்
நம்பருத் திரத்தாகாற் பாசமாகும்
நக்கினசிறு குருத்தியிர மாத்தபுஷ்பி
மெம்பருத்தி மேகசா தனியுமாகும்
விரணங்கள் குஷ்டங்கள் ரத்தசுத்தி
நம்பருத்தி சாறுதனில் நாகங்கட்டும்
நாடியதோர் செம்பருத்தி நாமமாமே. (8)

*ரத்த சாதன பலம், ரத்தகார பாகம், சிறுகுருத்தி, மாத புஷ்பி, மேகசாதனி, விரணங்கள், குஷ்டங்கள் ரத்த் சுத்தி, சாறுதனில் நாகம் கட்டும் இவை எல்லாம் செம்பருத்தியின் பெயர்களாகும்.*

## அகத்தி செவ்வகத்தின் பெயர்

அகத்தியுட பேர்தனையே யறியக்கேளு
அகத்தியகோ முனின்னாமாமுனி தளமாகும்
மகத்தியாம துசிக்குரு வேஷாந் துவியாகும்
மாசற்ற விரைத்தயிலம் அயமுருக்கியாகும்

பகத்தியாம் பழுப்புச்சாறு சத்துக்காதி
பாங்கான பட்டைதான் வேகத்துக் காதியாம்
வேர்ப்பட்டை மேகம்போக்கும்
விதமான அகத்தியுட விந்தையாமே. (9)

*அகத்திய கோமுனி, நாமா முனிதளம், மதுகீ, குருவேஷாந்துவி, விரைதயிலம் அயமுறுக்கி, பழுப்புச் சாறுசத்துக்கு ஆதி, பட்டைதான் வேகத்துக்காதி, வேர்ப்பட்டை மேகம் போக்கும்.*

### சக்கிரவர்த்தியின் பெயர்

சக்கிரவர்த்திப் பேரைசாற்றக் கேளு
சமனான வாலைத்துகம் முஷ்கப் பிரார்த்தம்
வக்கிரமாம் வாலைத்துகஞ் சக்கிரவாஸ்த்துகமாம்
மணியான விரைத்தயிலம் பாஷாணங்கட்டும்
சிக்கிரமாம் சிவந்தநிற :பற்ப மாகும்
சிலேஷ்மகப நாசனியாந் திலதியாகும்
நக்கிரமாம் நாசிதனில் விரணம்போக்கி
நாடியதோர் சக்கிரவர்த்திப் பேருமாமே. (10)

*வாலைதுகம் முஷக்கப்பிரார்த்தம், வாஸ்தகம், சக்கிர வாஸ்தகம், விரைத்தயிலம் பாஷாணங்கட்டும், சிவந்த நிறபற்பம் சிலேஷ்ம கப நாசனி, திலதி, நாசிதனில் விரணம் போக்கி இவை எல்லாம் சக்கரவர்த்தியின் பெயர்களாகும்.*

### அரைக்கீரையின் பெயர்

அரைக்கீரைப் பேர்தனையே யறியக்கேளு
அழகான சல்லிகா ரேமசத்தி
சிரக்கீரை சின்னபதி தாசாதியாகுஞ்
செழும்பான செருங்கபத்த னாசமாகு
மரக்கீரை மதுர சாசுக புஷ்பியாகும்
வாதசுர நாசனியா மார்க்கியாகும்
நரக்கீரை ருசிகரிபித்த சமனியாம்
நாடியதோர ரைக்கீரை நாமமாமே. (11)

*சல்லிகாரோ மசித்தி, சின்னபதி, தாசாதி, மதுரசாசு புஷ்பி, வாதசுரநாசனி, ருசிக்கரபித்த சமனி இவை எல்லாம் அரைக்கீரைப் பெயர்களாகும்.*

### காளானின் பெயர்

காளானின் பேர்தனையே கருதக்கேளு
கனகற்ப சத்திரந்து கவகோவாகும்
பூளாமி றுப்போடம் பூமிகெந்தகமாம்
புகழான செங்காளான் சூதம்கட்டும்
நாளான கருங்காளான் நாகம்கட்டும்
நவமான பச்சை என்றால் பரிசவேதி
தேளான சிலேஷ்மான ருசிகரியுமாகுஞ்
செயமான காளானின் செயலுமாமே. (12)

சந்திரந்துகோ, இருப்போட்கம், பூமிகந்தகம் என்பவை காளானின் பெயர்கள் கருங்காளான் நாகங்கட்டும், செக்காளான், சூதத்தைக் கட்டும் சிலேஷ் மானருசிகறியுமாகும்பச்சைக்காளான் பரிச வேதியாகும்.

### வனமிட்டியின் பெயர்

வனமிட்டிப் பெயர்தனையே வகுக்கக்கேளு
மாச்சற்ற கிறிங்காடமகத்துவமாகுந்
தினமிட்டிசிறிங் கஞ்சசல பிம்பமாகுந்
திரிகண்டக மானதோர் சிலேஷ்ம அரியாகுந்
தனமிட்டி தாளகத்தைப் பற்பமாக்கி
சாரத்தைக் கட்டியேத மனியமாக்கி
அனமிட்டி யாரோக்கிய வூஷ்ணியாக்கும்
அதிகவசிய கரியானவன மிட்டியாமே. (13)

சிறிங்கார மதத்துவா, சிறிங்கஞ்ச சலபிற்பம், திரிகண்டகம் சிலேஷ்மஅரி, தாளகத்தை பற்பமாக்கி, சாரத்தைக் கட்டியே தங்கமாக்கிக், ஆரோக்கிய பூஷணி, அதிகவசியகரி இவை எல்லாம் வனமிட்டியின் பெயர்களாகும்.

(தமனியம் = தங்கம்)

### பூசனிக்காயின் பெயர்

பூசனியின் பெயர்தனையே புகலக்கேளு
பெரியகூழ்ப்பாண்ட தலபுஷ் பதலாவாகுங்
காசினிக்குப் பாண்டங்கா மபலாவாங்
கடிதான பாஷாண வூறல்போக்கி

மாசனி மருந்தீடு முறியப்பண்ணி
மகாஅவு ஷதனாசனி குளிர்ச்சியாகுந்
தாசனி மஞ்சள்நிறப் புஷ்பியாகுஞ்
சாம்பலாம் பூசனிப்பேர் சாற்றலாமே. (14)

*கூழ்பாண்டம், புஷ் பதலா, பாண்டமகாபலா, பாஷாண ஊறல் போக்கி, மருந்தீடு முறியப்பண்ணி, அவிழ்தநா சனி, குளிர்ச்சி, மஞ்சள் நிறபுஷ்பி இவை எல்லாம் பூசனியின் பெயர்களாகும்.*

### கக்கரியின் பெயர்

கக்கரியின் பேர்தனையே கருதக்கேளு
காற்கோடகி ராசபுஷ்பி தானுமாகும்
றொக்கரி ரோமசாலி யானமாகும்
ரூபமாம் பத்திரிகாரு கச்சியாகும்
சிக்கரிசி சிலேஷ்மனா சனியுமாகுந்
திட்சணி கடுத்தியுஷ்ணகப ஆரியாகும்
நக்கரி ரசாயனி தீபனியாகும்
நாடியதோர் கக்கரியி னாமமாமே. (15)

*கார்க் கோடகி, றாசபுஷ்பி, ரோமசாலியானம், பத்திரி, காருகச்சி, சிலேஷ்மனாசனி, சித்தி யூஷணகபகாரி, ரசாயனி தீபனி இவை எல்லாம் கக்கரிக்காயின் பெயர்களாகும்.*

### கொம்மட்டியின் பெயர்

கொம்மட்டிப் பேர்தனையே கூறக்கேளு
குக்கலிங்கோ வாறுகோகொடிச்சியாகும்
பம்மட்டி பண்டுபத்திரச் சாயாவாகும்
பாச்சான பண்பான பழத்தியாகு
மும்மட்டி மூர்த்திரக்கிரிச்சிர அரியுமாகு
மூதண்ட தாகனா சனியுமாகும்
பிம்மட்டி வாதமாம் பித்த அரியாகும்
பெரியகொம் மட்டியுட பேருமாமே. (16)

*கோவாறு, கோகொடிச்சி, பாண்டு பத்திரச்சாயா பண்பான பழத்தி மூத்திரக் கிரிச்சரநோய் போக்கி, தாகனாசனி, வாத பித்தநாசனி, இவை எல்லாம் கொம்மட்டியின் பெயர்களாகும்.*

### இரும்பிலியின் பெயர்

இரும்பிலியின் பெயர்தனையே யியம்பக்கேளு
யேற்றசோதா வன்னியா பிராமணியாகுங்
கரும்பிலிகா யாமிலகாத்து வம்மிலமாகுங்
கனமான கெந்தகத்தைத் தயிலமாக்கி
நரும்பிலிவேர்ச் சாற்றில் நாகங்கட்டும்
நலமான யிலைதன்னி லீயங்கட்டும்
சுரும்பிலி திரிதோஷ சமனியாகுஞ்
சொல்லியதோ ரிரும்பிலியின் சூட்சமாமே. (17)

*சோதாவன்னி, பிராமணி, மிலகாத்துவமிலம், கெந்தகத்தை தயிலமாக்கி, வேர்சாற்றில் நாகங்கட்டும், இலை தன்னில் ஈயம்கட்டும், திரிதோஷ சமனி இவை எல்லாம் இரும்பிலியின் குணங்களாம்.*

### புஷ்கர மூலப்பெயர்

புஷ்கர மூலப்பேரை புகலக்கேளு
பேரான மூலத்து புஷ்கரமூலம்
நஷ்கரம் நாசனம் புஷ்கராவயமாம்
நயனத்துக்கு றுதியாம் நலனியாகும்
வஷ்கரம் வாதபித்த சமனியாகும்
மதாக்கினி விரணகரி கிறுமிநாசி
தஷ்கரந் தாதுவர்த் தினியுமாகுஞ்
சாற்றியதோர் புஷ்கர மூலப்பேராமே. (18)

*மூலத்து புஷ்கர மூலம், மனாசனம், புஷ்காரவயம், நயனத்துக்குறுதி வாதபித்த சமனி, விரணகரி, கிறுமி நாசி, தாது வர்த்தினி இவை எல்லாம் புஷ்கரத்தின் பெயர்களாகும்.*

### பிரம்பின் பெயர்

பிரம்பினுட பேர்தனையே புகலக்கேளு
பெருமையாம் வெத்திரோவாம் வசாக்கிரமாகும்
பரம்பான பதத்திர விரியமாகும்
பாங்கான தீர்கவல் லியுமேயாகும்
முரம்பான முனிபதத்தி முள்ளிச்சியாகும்
மூதுணர்ந்தோர் கையினிட தெண்டுமாகுஞ்
சுரம்பான சூலைநா சனியுமாகுந்
துஷ்டிவிர ணத்தியானப் பிரம்புமாமே. (19)

*வெற்ற தோவா, வசாக்கினி, தீற்கவல்லி, முனி பதத்தி, முள்ளிச்சி, கைத்தண்டு, சூலைநாசனி இவை எல்லாம் பிரம்பின் பெயர்களாகும்.*

### மிளகறணையின் பெயர்

மிளகறணைப் பேரினுட விபரங்கேளு
மிடுக்கான சிஞ்சினிசஞ் சினியாகுங்
குளகரணை மோகினிக்குள மஞ்சிநியாகுங்
குறமான வின்னோமா குணத்தியாகுங்
களகறணை கடிவிஷங்கள் கபவாதயரியாங்
கனத்ததோர் சிலேஷ்ம அரிகாரத்தியாகுந்
துளகறணை துஷ்டமாம் விரணம்போக்கிச்
சொல்லியதோர் மிளகறணைச் சூட்சமாமே. (20)

*சிஞ்சினி, சஞ்சினி, மோகினிக் குளமஞ்சாயா, விஞ்ஞேயர்ங் குணத்தி, கடிவிஷங்கள், கபவாதங்கள், சிலேஷ் மயரிகாரத்தி, விரணம் போக்கி, இவை எல்லாம் மிளகறணையின் பெயர்களாகும்.*

### கொகிழியின் பெயர்

கொகிழினுட பேர்தனையே கூறக்கேளு
கொகிழான கடும்பாரங்காசு வேதாவாகும்
பகிழான பாலித்திகா ரச்சாளாம்
பாங்கான ஷரத்திரசு வேதாசநாபி
சகிழான சகணியிபக் கணகியானா
சமரசமா ந்துரோணசோர பூரணி
தகிழானத் தசாபாடல் பவுண்டிரகமாகுஞ்
சாற்றியதோர் கொகிழினுட தண்மையாமே. (21)

*கடும்பாரங் காசுவேதா, காவிந்தி, காரச்சா, ஷத்திர, சுவேதா சானாபி, குகண்டகி, துரோண சோர பூரணி, தசா பாடல் பவுண்டிரகம் இவை எல்லாம் கொகிழியின் பெயர்களாகும்.*

### கிளுவையின் பெயர்

கிளுவையுடப் பெயர்தனையே கிளறக்கேளு
கெட்டியாம் உருக்குதனைப் பற்பமாக்கி
திளுவையாஞ் சிதாக்கியாதிண ன் னாக்கியாவாந்
திரிசூலி மோகினிவட பத்திரிகாவாந்

நளுவையாஞ் சைவாவாஞ் சதிரியாகும்
சமரமாம் வாதபித்தஞ் சமனியாகும்
விளுவையாம் விரணகரி மேகசாந்தி
மிடுக்கான கிளுவையுட மேன்மையாமே. (22)

*உருக்குதனை பற்பமாக்கி, சிதாக்கியா, திண்ணாக்கியா, வந்திரி, சூலி, வடபத்திரிகா, சைவா, சதிரி, வாதபித்த, சமனி, இவை எல்லாம் கிளுவையின் பெயர்களாகும்.*

### ஐவிரலியின் பெயர்

ஐவிரலிப் பெயர்தனையே அறியக்கேளு
அஞ்சுவிர லங்குலிங்க பீசம்
பைவிரலி பஞ்சாங் குலராகி சிதர்பிண்டமாகும்
பருத்ததோர் பலமான வற்பலாவாஞ்
சைவிரலி சாதிலிங்க மயினியாகுஞ்
சடைமுடியோன் பழத்துக்குள் வாசியாகும்
செய்விரலி சிலேத்துமனா சனியுமாகுஞ்
சிறுகருப்பி அய்விரலிச் செயலுமாமே. (23)

*அங்குலிங்க பீசம், பஞ்சாங்குலார் சிகாபின்டம், வற்பலா சாதிலிங்க மயினி, சடைமுடியான், பழத்துக்குள்வாசி, சிலேஷ்மனாசனி இவை எல்லாம் ஐவரவியின் பெயர்களாகும்.*

### கவுதும்பையின் பெயர்

கவுதும்பைப் பேர்தனையே கருதக்கேளு
கவுதூம்ர வாணாவாம் அதிசத்திராத்துவி
செவுதும்பை கெவுதம்பா மேஷாவாஞ்
செயமான கிஷான பூதி கொந்திகாவுமாகுந்
துவுதும்பை கும்பயோ னித்துரோணபுஷ்பமாஞ்
சூதான பாஷாணங் கட்டிப்போகுங்
கவுதும்பைச் சாக்கினோ யாகிறுதும்பகமாகுஞ்
சாற்றியதோர் கவுதும்பைத் தண்மையாமே. (24)

*சம்பவற்ணா, அதிச்சற்று யார்த்துவி, கெவுதும்பாமேஷா, பூதி கெந்திகா, கும்பயோனி, துறோண புஷ்பம், பாஷாணங்கட்டி, சாக்கினோயாகிறு தும்பகம் இவை எல்லாம் கவுதும்பையின் பெயர்களாகும்.*

### பிறங்குநாரியின் பெயர்

பிறங்குநாரிப்பேரைப் பேசக்கேளு
பெருமையாங் கச்சிரோ கெந்தமூலா
தறங்கான சந்திரவிடோ துல்லபச்சமாகுஞ்
சமன்குறோ தனாபிசனா வன்னா
சிறங்கான சோரிசஞ் சக்கரியாஞ்
செனனாக பந்தனியாஞ் சிந்தூரியாகும்
வறங்கான வாதச சமனியுமாகு
மருவியதோர் பிறங்குநாரிப் பேருமாமே. (25)

*கிச்சிரோகி கந்தம், சந்திரவிடோ துல்லபச்சம், குறோதநாபி, சனாவன்னா, சோரிசஞ்சக்கரி, நாகபந்தனி, நாக செந்தூரி, வாதசமனி இவை எல்லாம் பிறங்குநாரியின் பெயர்களாகும்.*

### செங்கத்தாரியின் பெயர்

செங்கத்தா ரிப்பேரைச் செப்பக்கேளு
செவிவிய மாங் கோஷ்டகமா நேத்திரபுஷ்பி
நங்கான சர்வாங்கி ரத்த புஷ்பிகாலாம்
நற்பட்டைச் சாறுதனில் நாகஞ்செம்பாம்
வெங்கான வேர்ச்சாற்றில்வெள்ளி செம்பாம்
பூச்சாற்றில் தங்கஞ்செம்பாம்
பம்பான பழச்சாற்றில் அயமுஞ்செம்பாம்
பாடியதோர் செங்கத்தாரிப் பேருமாமே. (26)

*செவ்வியம், மாங்கோஷ்டம், நேத்திர புஷ்பி, சறுவாங்கி, ரத்த புஷ்பிகா பட்டைச் சாறில் நாகஞ் செம்பு, வேர்ச் சாற்றில் வெள்ளி செம்பு, பூச்சாற்றில் தங்கஞ் செம்பு, பழச்சாற்றில் அயம் செம்பு மாகும் இவை எல்லாம் செங்கந்தாரியின் செயலகளாகும்.*

### காட்டுத்தீ பெயர்

காட்டுத்தீப் பெயர்தனையே கருதக்கேளு
கண்கண்ட நிழல்மட்டுப் பூண்டுதீயும்
மாட்டுத்தீ மரக்காற்றுப் பட்டமட்டும்
மனுஷரொடு மிருகங்கள் பறவைமாயும்
ஊட்டுத்தீயு லோகங்கள் பற்பமாகும்
ஊழித்தீ காலாக்கினி தகனாக்கிநேயா
பூட்டுத்தீ பிர்மசோமா லப்பாவாகும்
பெருந்தீயாங் காட்டுத்தீப் பேருமாமே. (27)

நிழல்பட்டும் பூண்டு தீயும், மரக்காத்துப்பட்ட விட மட்டும் மனிதர் மிருகங்கள் பறவைகள் மாயும் ஊழித்தீ, காலாக்னி, தகனாக்கினேயா, பெருந்தீ பிர்மம் சோமாலப்பாப்பா இவை எல்லாம் காட்டுத் தீயின் பெயர்களாகும்.

### புல்லூரியின் பெயர்

புல்லூரிப் பேர்தனையே பொருந்தக்கேளு
புன்மையாஞ்சேகரி யாகம்பாரோ
வல்லூரி வந்தரக்கோ நீர் வல்லிகாலா
மகாவிருட் சாதநீவிருட் பாவாங்
கல்லூரி காமா விருட்சமாகும்
காமினி காமாலை நாசனியாகுந்
தில்லூரி திரிதோஷஞ் சமனியாகுஞ்
செப்பியதோர் புல்லூரிச் செயலுமாமே. (28)

சேகரியாகப் பாரோ, வந்தாகோதிர் வல்லிகா, மகாவிருக்ஷாத நீவிருபா, காமவிருக்ஷம், காமினி, காமாலை நாசினி, திரிதோஷசமனி இவை எல்லாம் புல்ரியின் பெயர்களாகும்.

### திலகவிருட்சத்தின் பெயர்

திலகவிருட்சப்பேரை செப்பக்கேளு
திலகமாம் பூரணக் கிறிமானமாகுங்
குலகமாங் குரகச்சின்ன புஷ்பமாகுங்
குளிர்ச்சி மண்டன காரியாவாகும்
விலகமாம் விருட்சசித்திரோ விசேசுதமாகும்
வெளுப்பான பாஷாணங் கட்டிவெள்ளை
சதலமாம் தாளகத்தின் மஞ்சள்போக்கும்
சலகையாந் திலகவிருட்சப் பேராமே. (29)

பூறணகசிறிமான், குரகச் சின்ன புஷ்பகம், குளிர்ச்சி கொண்டங்காரி, விருக்ஷ சித்திரோ, விசேஷதம், வெள்ளைப் பாஷாணங்கட்டி, தாளகத்தின் மஞ்சள் போக்கி இவை எல்லாம் திலக விருக்ஷத்தின் பெயர்களாகும்.

### உச்சிலந்தின் பெயர்

உச்சிலந்தின் பேரை யுரைக்கக்கேளு
உறமான பந்துகோபந் துசிலசியா
நச்சியாஞ் செடி நடுவே கோழிச்சூடாம்
நற்செவப்பு வெள்ளையுமாய் நல்கும்வேசி

திச்சியா செம்புதனை பற்பமாக்கி
திரிவங்க செந்தூர மாக்கியாகுங்
கச்சியாங் காயத்தைக் கல்லாக்கியாகுங்
கடி 'பவுச்சி சிலந்தியுட காட்சியாமே. (30)

*பந்து கோபம், துசிலசியா, செடி நடுவே கோழிச்சூடு, சிவப்பு வெள்ளையாய் நல்கும் வேசி, செம்பை பற்பமாக்கி, திரிவங்கத்தையும் செந்தூரமாக்கி, காயத்தை கல்லாக்கி இவை எல்லாம் உச்சிச்சிலந்தன் பெயர் ஆகும். பாட பேதம் = உச்சிச்சிலந்தின்.*

## பாவட்டையின் பெயர்

பாவட்டைப் பேர்தனையே பகரக்கேளு
பணாவிருத்த தூமகந் தானுமாகு
மாவட்டை மாந்தத்தை யறுக்கியாகு
மகத்தான கிறகணியை மாற்றியாகும்
காவட்டை கபந்தனை யகற்றியாகுங்
கடியசுக்கான் றன்னைச் சத்துமாக்கி
மாவட்டை மகாதோஷம் நீக்கியாகு
மகத்தான பாவட்டை வண்மையாமே. (31)

*பனா விறுத்த தூமகம், மாந்தத்தை அறுக்கி, கிறகணியை மாற்றி கபந்தன்னை அகற்றி, சுக்கான் தன்னைச் சத்துமாக்கி, மகாதோஷ நீக்கி இவை எல்லாம் பாவட்டையின் பெயர்களாகும்.*

## கருங்கொடியின் பெயர்

கருங்கொடியின் பெயர்தனையே கருதக்கேளு
கானசியாமா கிருஷ்ணாவல் லக்கினியாகும்
யிருங்கொடி பிறுவதபிறுதாநி காவாம்
பேரான சினித்தகுஞ்சார புஷ்பியாகு
மருங்கொடி மகாநீலோசை வதாம்பூலம்
வல்லிகா-மனோசிலையை மார்க்கமாக்கி
அல்லிகா அயந்தனையே செந்தூரமாக்கி
யடர்ந்தகருங் கொடியினுட ஆண்மையாமே. (32)

*கானசியாமா கிறணா வலக்கினி, பிறுந்த பிறுதானிகா, சீனித் தகுஞ்சரபுஷ்பி, மகா நீலோ, சைவதாம்பூலம், மனோசிலையை மார்க்கமாக்கி, அயந்தனை செந்தூரமாக்கி இவை எல்லாம் கருங்கொடியின் பெயர்களாகும்.*

### ஒட்டொட்டின் பெயர்

ஒட்டொட்டின் பெயர்தனையே யுணர்த்தக்கேளு
ஓங்காரி கிச்சூரிதிட்சணபத்திரி
பட்டொட்டி பணிஆரி மருப்பலமாகும்
பருந்திற்கமூ லானகஷா யரசமாகுங்
கிட்டொட்டி கிறாமிளிக விவேதநியா
கெந்தகத்தைச் செம்பாக்கித் தயிலமாக்கி
நட்டொட்டி சுவாசகா சாக்கினியாகும்
நணுகியதோர் ஒட்டொட்டி னாமமாமே. (33)

*கிச்சூரி தீஷ்ண பத்திரி, பணியாரி மருப்பலகம், மூலான கஷாயரசம், கிறாமிளிக விவேதனி, கெந்தகத்தை செம்பாக்கி கெந்தகத்தை தயிலமாக்கி, சுவாசகாசாக்கினி இவை எல்லாம் ஒட்டொட்டியின் பெயர்கள் ஆகும்.*

### செம்பரத்தையின் பெயர்

செம்பரத்தைப் பேர்தனையே செப்பக்கேளு
செம்பாகுசும அரித்தமாலோ மயாகும்
நும்பரத்தை ரூபகா செவாலியாகும்
ருத்திர புஷ்பா தாம்பிர புஷ்பாவுமாகும்
சம்பரத்தை பரபுஷ்பா சாதிலிங்கமயினி
தண்மை யாமதனிவா மல்லிகாவாகும்
கம்பரத்தைக் காரீயச் செம்பியாகுங்
கடியசெம்பரத்தையுட காட்சியாமே. (34)

(பாட பேதம் : அமரியத்த மாலோ மயாகும்)

*சுமரியத்தமாலோபி, ரூபிகா சேவாலி, தாம்பிற புஷ்பம், பரபுஷ்பா, சாதிலிங்க மயினி, மதினிவா, மல்லிகா காரீயச் செம்பி இவை எல்லாம் செம்பரத்தையின் பெயர்களாகும்.*

### கொடிக்கள்ளியின் பெயர்

கொடிக்கள்ளிப் பேர்தனையே சூர்ந்துகேளு
கொடியாம் விருட்சமா மகாவிருட்சமாகு
மடிக்கள்ளி வாதனா சனியுமாகு
மகத்தான தீட்சணி சோரியாகும்
படிக்கள்ளி பாயினில் விரோசனியாம்
பண்பான பாலுக்குள் சூதங்கட்டும்
நடிக்கள்ளி யியத்தை நாகமாக்கி
நாடியதோர் கொடிக்கள்ளி நாமமாமே. (35)

கொடியா விருக்ஷம், மகாவிருக்ஷம், வாதனாசனி, தீட்சணி, சோரி, விரோசனி, பாலுக்குள் சூதம் கட்டும், ஈயத்தை நாகமாக்கி இவை எல்லாம் கொடிக்கள்ளியின் பெயர்களாகும்.

## இலைக்கள்ளியின் பெயர்

இலைக்கள்ளிப் பெயர்தனையே யியற்றக்கேளு
யெழிலானதிர சுதகாத சாதத்துத்தச்சம்
தலைக்கள்ளித் தாயமள கண்டகமாகுந்
தனிவச்சிர கண்டஞ்செந் தூரமாகும்
குலைக்கள்ளி குணமாத்திரஞ்சு பத்திரமாகும்
குணக்கியாந் தீட்சணி கடுதித்தாசங்
கலைக்கள்ளி போவாதோ தாபவகை பாண்டு
கன ரோகஅரியிலைக் கள்ளியாமே. (36)

துகாதச்சாந்தத் தச்சம், தாயமன கண்டகம், வச்சிர கண்டஞ் செந்தூரம், குணமாத்திரம் சுபத்திரம், தீக்ஷணி, கடுதீத்தாசம், தாபவகைபாண்டு இவை போம். கனரோக அரி இவை இலைக்கள்ளியின் பெயர்களாகும்.

## திருகுகள்ளியின் பெயர்

திருகுகள்ளிப் பெயரைச் செப்பக்கேளு
திருக்கியாம் பத்திரகிங் காதபத்திரம்
சுருகுகள்ளி சுவானசிகுவாதினச் சிங்காவாகுந்
துடீயதனட்சிரணி யபித்தாரோத்தா
மிருகுகள்ளி மிறுதுயவி நார்சனியுமாகு
மிடுக்கான அயசிலிட யீயமாகும்
நருகுகள்ளி நாகபந் தனியுமாகும்
நாடியதோர் திருகுகள்ளி நாமமாமே. (37)

பத்திரசிங்காத பத்திரம், சிகுவாதிளச்சிங்கா,தனட்சிரணிய பித்தாய ரொத்தா,மிருது வினாசனி, அயச்லிடயீயம், நாக பந்தனி இவை எல்லாம் திருகு கள்ளியின் குணங்களாகும்.

## மான்செவிக்கள்ளியின் பெயர்

மான்செவிக் கள்ளிப்பெயரை வகுக்கக்கேளு
மகத்தான அரன்சினுகு பயசாவாகும்
தீன்செவி சினித்தமாங் கடுகமாகுஞ்
செயலான லகுவூஷ்ணங்க பாநிலக்கினம்

ஊன்செவியு லோகபந் தனியுமாகும்
உண்மையாம் நாகத்தைப் பற்பமாக்கி
கூன்செவி குன்மத்தைப் போக்கியாகுங்
கூரான மான்செவிக் கள்ளியாமே. (38)

*சினுகுபயசா, சனித்த மாங்கடுகம், லகுயுஷ்ணங்க பானி லக்கினம், லோக பந்தனி, நாகத்தை பற்பமாக்கி, குன்மத்தை போக்கி, இவை எல்லாம் செவிக்கள்ளியின் பெயர்களாகும்.*

### பொன்னாவாரையின் பெயர்

பொன்னாவாரைப் பெயரை புகலக்கேளு
பொன்னான மேகமாரியு மாதியாகும்
உன்னான ருக்குமமா மேகச்சத்துரு
வுத்தமமா மரிகசிரேணிக காசயாவாம்
வன்னான வதனபுஷ் பகமுமாகு
மகத்தான காரீயஞ் செந்தூரியாகும்
நன்னான நாகபந் தனியுமாகும்
நாடியதோர் பொன்னாவாரைப் பேருமாமே. (39)

*மேகமாரி, ருக்குமம், மேக சத்துரு, மரிக்கிறேணிச காசயம், வதன புஷ்பகம், காரீயச் செந்தூரி, நாகபந்தனி, இவை எல்லாம் பொன்னாவாரையின் பெயர்களாகும்.*

### ஓதியமரத்தின் பெயர்

ஓதிய மரத்தின்பேரினுட வுண்மைகேளு
வுயர்ந்ததோர் பாசாந்திரியாம் சிறிங்கிசம்
சதியமாஞ் சட்சுகியோ பகுளாங்கி காவாஞ்
சண்ட மாருதமான விருட்ச மாகும்
பிதியதோர் மிருதுபுஷ்பி விரணநாசனியாம்
வியனான அதிசாரம் போக்கியாகும்
துதியமாம் சரத்தசோ ஷணியுமாகுந்
துளர்ச்சியா மொதியமரச் சூட்சமாமே. (40)

*பாசாந்திரி, சிறிங்கிசம், சக்ஷுசுகியோ பகுளாகிகா, சண்ட மாருத விருக்ஷம், மிறுதுபுஷ்பி, விரண நாசனி, அதிசாரம் போக்கி, மாம்சரத்த, சேரஷணி இவை எல்லாம் ஒதிய மரத்தின் பெயர்களாகும்.*

### புன்னையின் பெயர்

புன்னையுட பெயர்தனையே புகலக்கேளு
புன்னாகம் புருஷ ஆகச்சியமாகுந்
துன்னையுட துங்காகி யாரேத்தகேசரமாம்
துடியான சுவேத புஷ்பகமுமாகும்
வன்னையுட வாசினையாங் கெந்தியாகு
மாசற்ற பத்திரமாம் வாதநாசனியாம்
வின்னையுட விரணங்கள் குட்டம்போகும்
மிடுக்காகும் புன்னையுட விபரமாமே. (41)

*புருஷயாக்கியச்சம், துங்காக்கியாரேத்த கேசரம், சுவேதபுஷ்பகம், வாசினி, கேந்தி, மாசற்றபத்திரம் வாதநாசனி விரணங்கள் போக்கி, குஷ்டம் போக்கி இவை எல்லாம் புன்னை மரத்தின் பெயர்களாகும்.*

### சுரபுன்னையின் பெயர்

சுரபுன்னைப் பெயர்தனையே சொல்லக்கேளு
சுரயேது சிந்துபுஷ்பகமுமாகும்
தரபுன்னை் தாகித்த யந்திகாலாந்
தளிரான சுகந்தபுஷ் பகமும்மாகும்
நரபுன்னை நாகசெந் தூரியாகும்
நலநீதவேர்ச் சாற்றினில் வெடியுப்புக்கட்டும்
குரபுன்னை குஷ்டங்கள் போக்கியாகுங்
கூரான சுரப்புன்னைக் குணமும்மாமே. (42)

*சிந்துபுஷ்பம், தாக்கி மதயந்திகா, சுகந்த புஷ்பம், நாகசெந்தூரி, வேர்ச்சாற்றில் வெடிஉப்பு கட்டும், குஷ்டம் போக்கி, இவை சுரபுன்னையின் பெயர்களாகும்.*

### நறும்பிசினின் பெயர்

நறும்பிசினின் பேர்தனையே நவிலக்கேளு
நலமான சாதிரசோர சொப் பௌவமாகும்
கரும்பிசின் காகுடோ யவாயமுமாகுங்
கடியவச் சபனாப்போர் கெந்தாசமாகும்
பறும்பிசின் பவுரோவாம் நாளிகயேலசமாம்
பண்பான சுகந்தாசத சோபியாகும்
நிறும்பிசின் நவலோகம் பற்பாந்ததாவாம்
நேரான கௌதமம் நறும்பிசினி னாமமாமே. (43)

சோர சொப்போளம், காகூடோயலாயலயம், போசெந்தாசம், பவரோவா, நாளிகயேவசம், சுகந்தரசத சோம்பி நில்லோகம் பற்பாந்ததா இவை எல்லாம் நறும் பிசினின் பெயர்களாகும்.

### திருவட்டப்பிசினின் பெயர்

திருவட்டப்பி சினின் பெயர்செப்பக்கேளு
சிறிவேஷ்ட கோகுவாய சகமுமாகுந்
தருவட்டஞ்சி றிவாச்சா ளத்துருமமாகுஞ்
சகமானசிறி வாசியாசிறி சகோசகோதமாந்
துருவட்டந் தூபவிருட்சந் தானுமாகுந்
தூபகமார்த்த கோரத்த சீரஷம்
விருவட்டம் விரணரோ பனமுமாகு
மிடுக்கான திருவட்டப் பிசினுமாமே. (44)

கோகுவாயசகம், சிறி வாச்சான் துருமம், சிறிவாசியா, சிறிசகோதா, தூப விருக்ஷச்சம், ரத்த கோரத்த சீரஷம், விரண ரோபனம் இவை எல்லாம் திருவட்டப் பிசின் பெயர்களாகும்.

### சன்னையின் பெயர்

சன்னையுட பேர்தனையே சாற்றக்கேளு
சகமான நிசாசரிதன அரியுமாகும்
நன்னையா மரத்தபீதம் காரியாகும்
நலமான கோதனா பிகுநாசன்னா
தொன்னையாஞ் சோரிசங்கினி காத்ததாவாஞ்
சோரபுஷ்பிச கேசனியுமாகும்
வன்னையா வத்துமதா குனச்சோரமாகு
மகத்தான சன்னையுட மார்க்கமாமே. (45)

நிசாசரி, தனயரி, மரத்த பீதக்காரீ, சோரி, சங்கனிகாத்தா, கேசனி, மதாகுனச் சோரம் இவை எல்லாம் சன்னையின் பெயர்களாகும்.

### உகாவின் பெயர்

உகாவினுட பேரின்பே ருறுதிகேளு
வுண்மையாந் தீட்சண விருட்சமாகுந்
தகாயினுட தானுகோகுன்ம நாசனமாஞ்
சகுண்டி தீகவுணபல சங்கிசீயாம்
மகாயினுட காகவல்ல பவிரோசனபலமாகும்
மனப்பிர வாளர்ப்பல சுமிர்தமாகும்
நகாயினுட ரத்தகாம்பி ரசமாகும்
நற்பஞ்சவி சதீயுகாயு மாமே. (46)

*தீக்ஷண விருக்ஷம், குன்மநாசனம், தீக்ஷணபலசங்கிசியா, காகவல்லலி விரேரசனபலம், பிறவாணரப் பலசுமிறுதம், ரத்தகாம் பிறசம், இவை எல்லாம் உகாயின் பெயர்களாகும்.*

### கண்டில்வெண்ணெயின் பெயர்

கண்டில்வெண்ணெய் பேர்தனையே கருதக்கேளு
கனமான காலேபுஞ்சியாச் சீதமாகும்
சிண்டில் வெண்ணெய் சித்திர சத்துராமதுரி
சுகவிப்பியா மதினிமத்திரகா சேதிகதிதாவாகும்
வண்டில்வெண் ணெய்மதுர மாம்பித்த காதிசமாம்
வரனான நேத்திரவிபந் தக்கினமாரு
சண்டில்வெண்ணெய் சாலேய ஞ்சீதளந்தித்தஞ்
சமரசமாங் கண்டில்வெண்ணெய்க் காட்சியாமே. (47)

*சாலேயுஞ் சியாச்சிதம், சித்திர சத்திரா, மதுரிகாலிப்பியா, திரிகச்சே திகதிதா, மதுரம், பித்தகாதிசம், நேத்திர விபந்தக்கினம், சாலேயஞ் சீதளந்தீத்தம் இவை எல்லாம் கண்டில வெண்ணையின் பெயர்களாகும்.*

### சிவப்புநெல்லின் பெயர்

சிவப்புநெல்லுப் பேர்தனையே செப்பக்கேளு
செயலான மகாசாலி ரத்தசாலி
துகப்பான சுகந்தப்பிர வர்த்ததாவாந்
தூய்மையாங் கடபுஷ்பீ கச்சசாலி
சகப்பான சங்கலனே கிருஷ்ணசாலி
சகச்சா ரகமான மூத்ததாவாம்
வகப்பான வச்ரபாண பனச்சைவமாகு
வனேரண்ணியா சிகப்பு நெல்லு மார்க்கமாமே. (48)

*மகாசாலி, ரெத்தசாலி, சுகந்தப் பீதப் பிறவத்தா, கடபுஷ்பிகச்சுசாலி, சங்கலேகிருஷ்ணசாலி, சாரக முத்ததா இவை எல்லாம் சிகப்பு நெல்லின் பெயர்களாகும்.*

### நல்லரிசியின் பெயர்

நல்லரிசிப் பேர்தனையே நவிலக்கேளு
நலமான சவாக் கிருஷ்ணசாலிச்சம்
வில்லரிசி விரிசியாயிதமே வசமாகு
மிக்கான கிருதவிருத் திச்சமாகும்

கல்லரிசி கார்கச்சு அயோவிதாவாங்
கனமான மகசாலி கறத்தவர்னம்
சல்லரிசிசம் போக விர்த்தியாகுஞ்
சமரசமாம் நல்லரிசித் தன்பேராமே. (49)

*கிருஷ்ணசாலிச்சம், விரியிசியாயித மேவசம், கிறுத விறுத்திச்சம், அயோவிதா, மகசாலிச்ச ரத்த வர்ணம், சம்போக விருத்தி இவை எல்லாம் நல்லரிசியின் பெயர்களாகும்.*

### வெள்ளரிசியின் பெயர்

வெள்ளையென்ற அரிசியின் பெயர்விளம்பக்கேளு
மிக்கான சுவேதக சாலியுமாகும்
வள்ளையென்ற மகாசாலிச் சொற்றவர்ண
மகத்தான லட்சுமியின் விலாசமாகும்
வில்ளையென்ற வெறிப்பான வேருமாகு
மிக்கான வர்னலா வுகமுமாகும்
பிள்ளையென்ற பெலசாலி யரிசியாகும்
புனிதமாம் வெள்ளரிசிப் பேருமாமே. (50)

*சுவேதசாலி, மகாசாலி, சொற்றவர்ணம், லட்சுமியின் விலாசம், வெரிப்பான வேரு, வர்ணலாவுதம், பலசாலியரிசி இவை எல்லாம் வெள்ளரிசியின் பெயர்களாகும்.*

### கறுப்பரிசியின் பெயர்

கறுப்பான அரிசிப்பேர் கருதக்கேளு
கரியான புஷ்பகத் தாவுமாகு
மறுப்பான மகாரவி கிருஷ்ணவீறு
மகத்தான தனோபல மார்க்கியாகு
முறுப்பான குஷ்டநோய் கடியநாரா
யுறுதியாம் புண்களுக்கு வுபகாரியாகும்
திருப்பான தேகத்துக் குறுதியான
சீரான கறுப்பரிசிச் செயலுமாமே. (51)

*புஷ்பகத்தா, கிருஷ்ணவீறுகி, தனோ பலமாற்கி, குஷ்ட நோய் கும்பனா, புண்களுக்கு உபகாரி, தேக்த்துக் குறுதி இவை எல்லாம் கறுப்பரிசியின் பெயர்களாகும்.*

### கோதும்பையின் பெயர்

கோதும்பைப் பேர்தனையே கூறக்கேளு
கோதமாயா வர்சைவ பகுதா மிலமாகும்
பேதும்பை மிலேச்சைபே ாசனமுமாகு
மிக்கான புதிநக சைவமாகும்
காதும்பை கங்கைநிரு பசேபமாகுங்
கதிரத காலிமகா சாலியாகுந்
தூதும்பை சுகந்தாவன வதத்ததாவாந்
துய்முஷ்டிக் கோதும்பைச் சூட்சமாமே. (52)

*அவாசைபகுதாமிலம், மிலேச்சபோசனம், சுங்கநீரி, ரத்தசாலி, மகாசாலி, சுகுந்தாவன வத்தா இவை எல்லாம் கோதுமையின் பெயர்களாகும்.*

### அவலின் பெயர்

அவலினுடப் பேர்தனையே யறியக்கேளு
யவசித்தா ரவமாகச் சாத்தசாரம்
முவலான முகத்தானி லோரசாவாகு
மிக்கான தயச்செவமுனி பட்சியாகும்
மிவலான பிறபாலிகா கருணரண்ணியம்
மிக்கான தகச்சரசா சாரகத்து
திலவான பிரசாதி தாதிகடையாகுஞ்
செப்பியதோ ரவலினுட சீருமாமே. (53)

*சாத்த சாரம், முகத்தானி லோர்சா, சைவமுனி, பட்சியம், பிறபாலி, காகருண ரணியம், தகச் சாசச் சாரசத்து தாதிகடையா இவை எல்லாம் அவிலின் பெயர்களாகும்.*

### வரகின் பெயர்

வரகினுடப் பேர்தனையே வழுத்தக்கேளு
மகத்தான தோத்திரவங் கோரதூஷஞ்
சரகான சட்சமநாத்தி யோஷாவாகுஞ்
சமருடச்சியா மாசச் சித்திரமாகும்
பிரகான பீச்சகமு னிபாகம்வாகும்
பெரிதான கெவாஅயங் கானகத்தி
அரகான அணிச்சப் புத்தகமுமாகு
மழகான வரகினுட வாண்மையாமே. (54)

கோத்திரவம், கோர தூஷம், சக்ஷம நாத்தியோலியா, சமருட்சியாமாகச் சித்திரம், பீசச்சமுனிபாகம் கேவா, அயங்கானகத்தி, அனிச்சபுத்தகம், இவை எல்லாம் வரகின் பெயர்களாகும்.

### தினையின் பெயர்

தினையினுடப் பேர்தனையே செப்பக்கேளு
செழுமை பிறி யங்குணங் குலச்சைலமாகும்
தனையினுட செயமாகச் சித்தரத்தண்டுலமாந்
தண்மையாம் அஸ்த்திசம் பந்தனமாகும்
சனையினுட சைவக நிரியசகத்திகஞ்
சுகமான பாண்டுபோ சனமுமாகுங்
கனையினுட கானக விருத்தியாகுங்
கனமான தினையினுடக் காட்சியாமே. (55)

குணங்கலுச்சைவம், சியமாகச் சித்திரதண்டு, அஸ்தி சம்பந்தனம், கனிரிச்ச கத்திகம், பாண்டு போசனம், கானகவிறுத்தி இவை எல்லாம் தினையின் பெயர்களாகும்.

### மொச்சையின் பெயர்

மொச்சையுடப் பேர்தனையே மொழியக்கேளு
முகமான தானியமா ஷத்துவாகும்
விச்சையுட விக்கிநோயா குருவிந்தோவாம்
விருக்ஷாகா மிக்கான பயறுமாகும்
உச்சையாம் உருக்கினத்துக் காதியாகும்
உண்மையாஞ் சத்துக்குக் காலனாகும்
அச்சையாம் ஆதார வேருமாகு
மாண்மையா மொச்சையுடப் பேருமாமே. (56)

தானிய மாஷத்து, விக்கிறோயா, குருவிந்தோ, பயறு, உருக்கினத்துக் காதி, சத்துக்குக் காலன், ஆதார வேரு இவை எல்லாம் மொச்சையின் பெயர்களாகும்.

### பனிப்பயரின் பெயர்

பனிப்பயரின் பேர்தனையே பகரக்கேளு
பண்பான லாசகா கிருஷ்ணமுக்கா
சனிப்பயரு சாரிதா யரிமுண்டகமாகுஞ்
சாங்கமா மூக்கரசா லாரினாவா

வனிப்பயறு வாசனாபி சேத்தசோபா
மதுரமா சோத்தமா சிரேஷ்டாவாகுஞ்
சுனியான சரசூபா விருத்தவேஷி
சுகபவே திசம்பனிப் பயறுமாமே. (57)

*வாசகா, கிருஷ்ண முக்கா, சாரிதாய முண்டகம், முக்காசாவாரினா, பிசேத்தா சோபா, சோத்தமாசிரேஷ்டா சரசூபா லிறுத்தவேஷி இவை எல்லாம் பனிப்பயறின் பெயர்களாகும்.*

### கறுப்புக்கடலையின் பெயர்

கறுப்பான கடலையுட பேரைக்கேளு
கனமான அரேணவம்வா னாச்சமாகும்
சறுப்பான சாகாள காரளவாந்
தண்மையாங் களகச்சத்திரி புடாபுருட்சா
மறுப்பான மகாகெந்தா சுகந்தாசமாகு
மகத்தான சணகமாங் கிருஷ்ண சன்னுகமாம்
கெறுப்பான கெந்தகத்தின் றயிலமாகுங்
தெட்டியாங் கறுப்பான கடலையாமே. (58)

பாடபேதம் : காவாங் காரனகாவாந்

*அரேணவம், வானாச்சம், காரளகா, காரகசத்திரி, புடாருஷா மகாகெந்தா, சுகந்தாசம், சனகம், கிருஷ்ண சன்னுகம், கெந்தகத்தை தயிலமாக்கி, இவை எல்லாம் கறுப்பு கடலையின் பெயர்களாகும்.*

### அனுமுலு துவரையின் பெயர்

அனுமூலு துவரையுட வாண்மைகேளு
அழகான சிங்காரச் சுவேதமை பா
சனுமூலு சயோலங்கா முப்பிறியாவாஞ்
சமர்த்தான மங்குஷட்டா கானிருப்பியா
தனுமூல தாக்கந்தா சுனம்புசாவாந்
தண்மையாம் பாஷாண ரசிதச்சியாகும்
பனுமுலு பாலவிலோ சனியுமாகும்
பாடியதோ ரனுமூலு துவரையாமே. (59)

*சிங்கார சுவேதமைசுபா, சயோலங்கா காமுகப் பிரியா, மங்குஷ்டா கானிருப்பியா, தாக்கந்தா, சுனம்புசா, பாஷாண ரசிதச்சி பால விலோசனி இவை எல்லாம் அனுமுலு துவரையின் பெயர்களாகும்.*

ஆமப்பா மூலிகையின் சாதியெல்லாம்
அறிந்தமட்டு மாராய்ந்து ஆயியைத்தான்கேட்டு
ஓமப்பா நந்திசொல்லக் கேட்டுக்கேட்டு
உவப்பான காலாங்கிநாயர் சொல்லக்கேட்டு
சேமப்பா வடமொழியின் திரட்டையெல்லாம் பார்த்து
சிரசான சித்தர்களைத் தொழுதுகேட்டு
நாமப்பா நிகண்டுக்குள் பேரையெல்லாம்
நழுவாம லறிந்தமட்டுஞ் சொன்னேன்பாரே. (60)

மூலிகை சாதி எல்லாம் ஆராய்ந்தும், ஆயியான தாயை கேட்டும் நந்தியை கேட்டும், காலாங்கி நாதரைக் கேட்டும் வட மொழியை ஆராய்ந்தும் பலசித்தர்களை தொழுது கேட்டும் இந்த நிகண்டிற்குள் சொல்லி வைத்துள்ளேன். பிறகு மூலிகையின் எண்ணிக்கையை கூறுகிறேன் கேள்.

சொன்னதொரு மூலிகையின் தொகுப்புக்கேளு
சுளுக்காக நானூற்று யெழுபத்துமூன்று
பென்னதொரு பேரையெல்லாம் பிரித்துச்சொன்னேன்
பேரான சாஸ்திரத்தி லில்லையில்லை
இன்னதொரு சாஸ்திரந்தான் மெத்தமெத்த
யேழையாம் பசலைக்குத் தெரிந்துபோகும்
பன்னதொரு பாஷைப்பேர் சொன்னதர்மம்
பராபரமா மணித்தாய்க்குக் குருவுக்காச்சே. (61)

மூலிகையின் தொகுப்பு:- மூலிகையின் தொகுப்பைக் கூறுகிறேன் கேள். மூலிகை மொத்தம் நானூற்று எழுபத்து மூணு ஆகும். மூலிகைப் பேரை எல்லாம் பிரித்துச் சொல்லி உள்ளேன் இது சாத்திரத்தில் இல்லை. இந்த சாத்திரம் தான் மிகவும் உயர்த்தி இதை சாதாரண மனிதர்களுக்கும் தெரியும்படி சொல்லி வைத்தேன். பரிபாஷை பேர் சொன்ன தருமத்தின் பயன் என் தாயான மனோன்மணிக்கும் குருவுக்கும் சென்று அடையும்.

**மூலிகைகள் முற்றுப் பெற்றது.**

### மூலிகையின் தொகுப்பு

ஆச்சென்ற பேரினுட தொகுப்புகேளு
அழகான சீந்திலொடு மரள்காஞ்சோரி
பேச்சென்ற பெருஞ்சோதி யாடாதோடை
பேரான கருங்காலி வெண்கருங்காலி
வேச்சென்ற வேம்போடு பெரியவேம்பு
விதமான நிலவேம்பு சர்க்கரைவேம்பு
கோச்சென்ற கோரையொடு கிழங்குபற்படாகங்
கொடியான வெட்டிவே ரிலாமிச்சம்வேரே. (62)

*சீந்தில், மரளம், காஞ்சோரி, பெருஞ்சோரி, ஆடாதோடை, கருங்காலி, வெண் கருங்காலி, வேம்பு, பெரிய வேம்பு, நில வேம்பு, சர்க்கரை வேம்பு, கோரைக் கிழங்கு, பற்பாடகம், வெட்டிவேர், விலா மிச்சவேர்.*

வேரான பேய்ப்புடல் வட்டத்திருப்பி
மிக்கான குமிழிபெருங்கு மிழிதேவதாரம்
பேரான பெரியவெள்ளை பிறளைபரணி
புகழான கண்டங்கத்திரி சிறுவழுதலையாகும்
நேரான பெரியவழு தலைநெரிஞ்சில்
நேர்வில்வ முன்னைகழற் கொடியுமாகுந்
தாரான சுவேதகழங் கொடிகொட்டைக்கரந்தை
சுணையான நாறுகின்ற கரந்தையாமே. (63)

*பேய்ப்புடல், வட்டதிருப்பி, குமிழி, பெருங்குமிழி, தேவதாரம், பெரிய வெள்ளை, பறலை நீ பறணி, கண்டங்கத்திரி, சிறுவழுதலை, பெரிய வழுதலை, நெரிஞ்சில், வில்வம், முன்னை, சுழற்கொடி வெண்கழற் கொடி, கொட்டைக் கரந்தை, நாறுகரந்தை.*

ஆமென்ற நன்னாரி பேய்ப்பீர்க்கோடு
ஆண்மைரண்டு மீர்க்குப்பழு பாகலாகு
மூமென்ன முள்வெள்ளரி நிலவுகாயோடு
முயர்வெள்ளைக் கிலுகிலுப்பைக் கோவையோடு
தேமென்ற தித்திப்புக் கோவைகொன்றை
திறமான யெலிச்செவி சதுரக்கள்ளி
சேமென்ற சிவந்தநா யுருவியோடு
சிவந்த சதுரக்கள்ளிச் சாறடையாமே. (64)

நன்னாரி, பேய்ப்பீர்க்கு, ரெண்டுபீர்க்கு, பழுபாகல், முள்வெள்ளரி, நிலவுகா, வெள்ளை கிலுகிலுப்பை கோவை, தித்திப்புக் கோவை, கொன்றை, எலிச்செவி, சதுரக்கள்ளி, சிவதை, நாயுருவி, சிகப்புச் சதுரதுகள்ளி, சாரடை

ஆமேதான் மூக்குரட்டை செம்முள்ளியோடு
ஆண்மையாஞ் சித்தாமுட்டி பேராமுட்டிபாலை
தேமேதான் திருநாமப்பாலை குடசப்பாலை
சிறப்பான வெட்பாலைபழ முண்ணிப்பாலை
நாமேதா னரிப்பயறு முதியார்கூந்தல்
நல்வேளை யாமணக்கு சிவப்பாமணக்கு
மாமேதான் மாதளைக்கொம் மட்டிமாதளையா
மகாவிளா சர்க்கரைக் கரும்புமாமே. (65)

முக்கறட்டை, செம்முள்ளி, சித்தா முட்டி பேராமுட்டி பாலை, திருநாமப்பாலை, குடச பாலை, வேட்பாலை பழமுண்ணிப் பாலை, நரிப்பயறு, முதியார் கூந்தல், வெள்ளையா மணக்கு, சிவப்பாமணக்குமாதளை, கொம்மட்டி மாதளை, விளா, சர்க்கரைக் கரும்பு,

கரும்பான வெண்கரும்பு அமுக்கறாபிரமி
கடும்பூனைக் காஞ்சொறி பூனைக்காலி
சிரும்பான சிறுபூளை மந்தாரைகொக்கிறகு
செயலான அழிஞ்சிலொடு பாகல்காட்டாத்தி
கரம்பான முசுமுசுக்கை புன்னைகீழான்
சடியநெல்லி கருங்கொள்ளு கூகைநீறு
திரும்பான தேக்கினொடு கருவூமத்தை
சேவகனார் கரிசலாங் கண்ணியாமே. (66)

வெள்ளைக்கரும்பு, அமுக்கரா, பிரமி, பூனைக்காஞ்சோரி, பூனைக்காலி, சிறுபீளை, மந்தாரை, கொக்கிறகு, அழிஞ்சி, பாகல் காட்டாத்தி, சாணம், முசுமுசுக்கை, எழில் புன்னை, கிழாநெல்லி, கருங்கொள்ளு, கூகை நீறு, தேக்கு கரு ஊமத்தை, சேவகனார், கரிசலாங்கண்ணி.

கண்ணியொடு பொற்றலை யெருக்குவேளை
கனகமணித் தக்காளி கருந்தக்காளி
குண்ணியொடு குன்றிமணி பெரியமுள்ளங்கி
குறிசின்ன முள்ளங்கி யாற்றுமுள்ளங்கி
முண்ணியொடு முருங்கைபுன முருங்கையாந்துளசி
முத்தகருந் துளசிநீரத்திப்பூ வெள்ளுள்ளி
இன்னியொடு யீருள்ளி நொச்சில்கரு நொச்சி
யேற்றமாம் வாழையுடக் கிழங்கதாமே. (67)

*பொற்றலை, எருக்கு, வெள்ளெருக்கு, மணித்தக்காளி கறுந்தக்காளி, குண்டுமணி, பெரிய முள்ளங்கி, சின்ன முள்ளங்கி,. ஆற்று முள்ளங்கி, முருங்கை, புன முருங்கை, துளசி, கருந்துளசி, நீர்த்திப்பிலி, வெள்ளுள்ளி, ஈருள்ளி, நொச்சி, கருநொச்சி, வாழைக்கிழங்கு.*

கிழங்கான தென்னமரம் பனையும் நிலப்பனையாங்
கெட்டிவெள்ளை காக்கணான்முடக் கொத்தான்செம்பை
சழங்கான சங்கங்குப்பி பொரும்பில்வெள்ளறுகு
சதிரான கறுப்பறுகு பவளவ றுகாகும்
புழங்கான புளியாரை தாமரையினோடு
புதிய தாமரைவளையந் தாமரையின் மணியாம்
தழங்குதா மரைத்தாது தாமரையின்கிழங்கு
தண்மையாஞ் செங்கழுநீ ரரக்காம்பல்தானே. (68)

*தென்னமரம், பனைமரம், நிலப்பனை, வெள்ளைகாக்கன், முடக்கொற்றான், செம்பை, சங்கங்குப்பி, பொரும்பில், கறுப்பறுகு, வெள்ளறுகு, பவழவறுகு, புளியாரை, தாமரை, தாமரை வளையம், தாமரை மணி, தாமரை தாது, தாமரையின் கிழங்கு, செங்கழுநீர், அரக்காம்பல்.*

தானென்ற கல்லினுட தாமரையினோடு
தண்மைவெளித் தாமரைகுளரி மல்லிகையாம்
ஆனென்ற ஆற்றுமல்லிகை முல்லையாகும்
அழகுமுல்லைப் பேதங்கள் நந்தியாவட்டம்
ஏனென்ற யிருவாட்சி செண்பகம் சிறுசெண்பகம்
எளிதான செவ்வந்தி குங்குமச் செவ்வந்தி
தேனென்ற யெலுமிச்சை சிற்றீச்சு பேரீச்சு
செழுமைமுந் திரிப்பழம்புளி முந்திரிப்பழமே. (69)

*கல்தாமரை, வெள்ளைத் தாமரை, குளிரி, மல்லிகை, ஆற்றுமல்லி, முல்லை, முல்லை பேதம், நந்தியாவட்டம், இருவாட்சி, செண்பகம், சிறு செண்பகம், செவ்வந்தி, குங்குமச் செவ்வந்தி, எலுமிச்சை, சிற்றீச்சு, பேரீச்சு, முந்திரிப்பழம், புளி முந்திரிப்பழம்.*

பழமான யிலந்தையொடு யிலுப்பை மலையிலுப்பை
பலாசுமுள்பலாசு ஆல் அரசு இச்சில் நாவல்
பழமான அத்திபே யத்திப்பூவரசு
அலரிவன்னி நீர்க்கடம்பு கடம்புவெண்கடம்பு
வழமான வாகையோடு கறுப்புனுட வாகை
வயிரமாம் வேங்கையொட்டை யிலவுயிலவம்பிசின்
பழமான மரமதாம் பொன்னாங்கண்ணி
பேரான மாவிலிங்கை லோத்திரம் வெள்ளிலோத்திரமே. (70)

இலந்தை, இலுப்பை, மலையிலுப்பை, பலாசு, முள்பலாசு, ஆல், அரசு, இச்சில், நாவல், அத்தி, பேயத்தி, பூவரசு, அலரி, வன்னி, நீர்க்கடம்பு, வெண்கடம்பு, வாகை, கறுப்புவாகை, வேங்கை ஒட்டை, இலவு, இலவம்பிசின், மாமரம், பொன்னாங்கண்ணி, மாவிலங்கை, லோத்திரம், வெள்ளை லோத்திரம்.

திறமான வஞ்சியொடு ஆத்தினுடமருது
செழும் ஆட்டுச் செவிமருது குதிரைச்செவிமருது
இறமான இறிற்கிழங்கு பாலிறிற் கிழங்கு தானுமாகும்
இனிமையாந் தேள்கடைநெய்ச் சட்டியாகும்
சிறமான சிறுவிடுகொள் பெருவிடுகொள்ளாகுந்
திறமைதண்ணீர் மிட்டான்கா கொள்ளியாகும்
அறமான க்ஷாகாகோளி சிவகமாகும்
ஆதியா மியிடவகம்பேர் மல்லியாமே. (71)

வஞ்சி, ஆற்றுமருது, ஆட்டுச் செவிமருது, குதிரைச் செவிமருது, யிறிற்க்கிழங்கு, பாலிற்கிழங்கு, தேள்கடை, நெய்ச்சட்டி, சிறுவிடு கொள்ளு பெருவிடு கொள்ளு, தண்ணீர் மிட்டான், காகொள்ளி. க்ஷாகாகோளி, சிவகம், இடவகம், பேர்மல்லி.

மல்லியொடு சித்தமல்லி சிறுபுள்ளடியாகு
மகாராயஷ்டி மதுகமொடு சாரிபாதி
பல்லியொடு பதுமுகம்பிற புண்டரீகம்
பாங்கான மேதைமகா மேதைதேக்கு
நல்லியென்ற ஞாழல்பால் வீழிவீழி
நண்பான பாதிரிவெண் பாதிரியுமாகும்
பெல்லியென்றபெருங் குரும்பை கருஞ்சூலி தறுமுருக்கை
பெருங்குறிஞ்சி ஆயில்புங்கு வலம்புரிக்கொடடியாகே.(72)

சித்தமல்லி, சிறுபுள்ளடி, யஷ்டிமதுகம், சாரியபாதி, பதுமுகம், புண்டரிகம், மேதை, மகாமேதை, தேக்கு, ஞாழல், பால்வீழி, வீழி, பாதிரி வெண்பாதிரி, பெருகுறும்பை, கருஞ்சூலி, நறுமுருங்கை, பெருங்குறிஞ்சி, ஆயில், புங்கு வலம்புரி, கொட்டி.

கொடியான மருக்காரை பாற்பை யிருளாகும்
குணமான பாலிருள் இருள் விடுகளா விழுது
மடியான மராமரங் கமுகு தமுதாழை
மகாதெர்ப்பை ஆதண்டை குழலாதண்டை

நடியான நாணலொடு திமிசுபுசபத்திரி
நலவிடத்தேர் நெட்டிதளத் துவயமுமாகும்
பிடியான யேரிவாழ் வுத்தாமணி பேராமுட்டி
புதியநறுங் குறிஞ்சி நத்தைச் சூரியாமே. (73)

*மருக்காரை, பாற்பை, இருளி, பாலிருளி, இருள்வீடு, களா, விழுது, மராமரம், கமுகு, தழுதாழை, தெற்பை, ஆதண்டை, குழல் ஆதண்டை, நாணல், திமிசு, புஜபத்திரி, விடத்தேர் நெட்டி, (நெட்டி) நளத்து வயம், பெரியவாழை, உத்தாமணி, பிறாமுட்டி, நறுங்குறிஞ்சி, நத்தைச்சூரி.*

சூரியொடு செப்பினுட நெரிஞ்சிலாகுஞ்
சூதக்கண் புகல்புகு வள்ளியோடு
மீரைமிளிரை அசோகம்யேலா வாலுகமா
மின்பேரு முத்தக்காசு அதிங்குதானும்
வீரியொடு வெள்ளைநாக்கணத்தி நேர்வாளம்
மிக்கான குரட்டையது கஞ்சாங்கோரை
மருவகமா மிரையிங்குணங் காட்டுத்துளசியாகு
மயேந்துதிப் பிலி காமான் கரசியாமே. (74)

*செப்பு நெரிஞ்சி, காணபுத்தா, கல்புகுவள்ளி, மிளிரை, அசோகம், யேலாவாலுகம், பெருமுத்தக் காசு, அதிங்கு, வெள்ளை நாக்கணத்தி, நேர்வாளம், குறட்டை, கஞ்சாங்கோரை, மருவகம், இங்குணம், காட்டுத் துளசி, திப்பிலிகாமன், காசி.*

கரசியொடு அனிச்சைகற்றாழை குப்பைமேனி
சாங்கமாஞ் செருப்படியுஞ் சிவனார்வேம்பு
சுரசிதூது வளையோடு ஆடுதின்னாப்பாளை
தூயவெற்றிலை யாகாச கெருடனாகும்
நிரத்த மண்டலிகாட்டா மணக்கு
நேரான மருதாணிகெஞ்சா நிலவாகை
கரசிகட்டுக் கொடியும் பிரண்டைவல்லாரை
கனமான மயூரசிகைதாம் பூரசிகையாமே. (75)

*அனிச்சை, கற்றாழை, குப்பமேனி, செருப்படி, சிவனார் வேம்பு, தூதுவளை, ஆடுதின்னாப் பாளை, வெத்திலை, ஆகாசகருடன், ரத்த மண்டலி, காட்டா மணக்கு, மருதாணி, கஞ்சா, நிலவாகை, கட்டுக் கொடி, பிரண்டை, வல்லாரை, மயூரசிகை, தாம்பிரசிகை,*

சிகையான கானல்மா தில்லையோடு மலைமா
சீரான கப் பெட்டி புளித்தசிறுகீரை
சிகையான நீரறளி செவ்வறளியோடு
நியசத்தி சாறணை தும்பை பேய்த்தும்பை
பிகையான பேய்க்கொள்ளு பேய்க்கடலையாகும்
பெரியதொரு மலைகளிலே யிருக்கின்ற
புகையான சித்தருக்கு காண்குமூலி
பேய்த்துவரை யழு கண்ணி தொழு கண்ணியாமே.(76)

*கானல் மா தில்லை, மலைமா, கப்பெட்டி, புளிச்ச கீரை, சிறுகீரை, நீர்அரளி, செவ்வரளி, சத்திசாரணை, தும்பை, பேய்த்தும்பை, பேய்க்கொள்ளு, பேய்க்கடலை, பேய்த்துவரை, அழுகண்ணி, தொழுகண்ணி.*

ஆமென்ற முடவாட்டின் கால் நாகசிங்கி
யதிகமா மிருப்பவல் பொன்னூ மத்தை
காமென்ற கருமத்தை நச்சுப்புல் நான்முகப் புல்
காவட்டம் புல்லோடு சுணங்க விருட்சம்
ஏமென்ற வெருமைக் கணைச் சான் ரோமவிருட்சம்
சேர்எழிலானசாந் தாடுபாவை முண்டினியா
மென்ற சாயாவிருட்சங் கரு நெல்லிக்கல்லாரை
சாந்தமாங் கல்ச்சேம்பு கல்லறளிதானே. (77)

*முடவாட்டின் கால், நாகசிங்கி, இருப்பவல், பொன்னூமத்தை, கருவூமத்தை, நச்சுப்புல்லு, நான்மூகப்புல், காவட்டம்புல், சுணங்க விருக்ஷம், எருமைக்கனைச்சான், ரோமவிருக்ஷம், சேர்ந்த பாவை, முண்டினி, சாயாவிருக்ஷம், கருநெல்லி, கல்லாரை, கல்சேம்பு கல்லறளி.*

தானான மூவிலையாங் குருந்தினோடு
தனியத்த முத்திருக்கஞ் செவிசெந்திராய்தான்
சேனான செம்பல்லி செவ்வகத்தியோடு
செழுமை நீலஞ்சோறி நிலக்கடம்பு
பூனான புறங்கைநாறிபூத ணக்கு
பேரான செருந்தி கொத்தான் வறட்சுண்டியாதிரம்
தானான கட்டுமாம் பழங்காய் புனம்புளி
கடியதோரிதனை தும்பி சிறு தும்பியாமே. (78)

*மூவிலைக் குருந்து, முத்தெருக்கன் செவி, செந்திராய், செம்பல்லி செவ்வகத்தி, நிலஞ்சோதி, நிலக்கடம்பு, பிறங்கை நாரி, பூதணக்கு, செருந்தி கொத்தான், வறச்சுண்டி, ஆதிரம், காட்டுமா, பனங்காய், புனம்புளி, ஈதனை, தும்பி சிறுதும்பி.*

தும்பியாஞ்சோனகப் பூம் பத்திராயாகும்
கணையான பேய்த்துமட்டி பெருங்கரும்பினோடு
பம்பியா மறிதுடரி தாளிநறுந்தாளி
மகாதேவ தாளியொடு நாகதாளி
பிம்பியாம் பேய்ச்சுரை பேய்ப்பீர்க்கோடு
பெரிதான சற்பாட்சி யிறுகுவ சற்பாட்சி
விம்பியாம் விஷ்ணுகாந்தி நாகபலையாகு
மிக்கான நீர்க்கடம்பு கிளிமூக்காமே. (79)

*சோனகப்பூ, பந்திராயிர, பேய்த்தும்மட்டி, பெருங்கரும்பு, துடரி, தேவதாளி, தாளி, நறுந்தாளி, நாகதாளி, பேய்ச்சுரை, பேய்ப்பீர்க்கு, பெரியசற்பாட்சி, இறுகுவசற் பாட்சி, விஷ்ணு காந்தி, நாகபாலை, நீர்க்கடம்பு கிளிமூக்கு.*

மூக்கினொடு யீகை நறு விளி புளிவஞ்சு
மிக்கசிறு கல்லூரி வேட்பூலாவாம்
நீக்கினொடு நீர்ப்பூலா தலைச்சூடுவள்ளி
நெடிய பிர்மதண்டி யொடுபொடுதலை கோடாசாலை
ஈக்கினொடு யிடுகொள்ளு காட்டுக்கொள்ளு
எய்யபேய்க் கரும்புதினைப் பூக்கிறுமிசத்துரு
பேய்க்கினொடு பேய்த்தும்மட்டி நாய்ப்பாகல்
பேர்பெரிய தும்புரு நிலக்குராவே. (80)

*ஈகை, நறுவிளி, புளிவஞ்சி, சிறுகல்லூரி, வேட்பூலா, நீர்ப்பூலா, தலைச்சூடுவள்ளி, பிரம்மதண்டி பொடுதலை, கோடாசாலை யிடு கொள்ளு, காட்டுக் கொள்ளு, பேய்க்கரும்பு, தினைப்பூ, கிறுமிசத்துரு, பேய்த்தும்மட்டி, நாய்ப்பாகல், தும்புரு, நிலக்குரா.*

குராபூவம் பழம் பலா முட்பலா வாகுங்
குணமான வனமரைதணக்கியிசங்கு
வெராவெள்வேல் கருவேல் காஞ்சிரை
வேம்பாடல் விளக்கமா மலையாத்தி சடைச்சியாகும்
தராகப்பூ சடைச்சி தமனத்து வயமாகுஞ்
சதுகமா மாஞ்சரோகணி மூங்கிலரிசி
முராகமூங்கிற் குருத்து செவ்விறகு செம்மரமா
மூர்க்கமாங் கருமருது வொருக்கொம்பியாமே. (81)

*பூவம்பழம், பலா, வனமரை, முள்பலா, தணக்கி , இசங்கு, வெள்வேல், கருவேல், காஞ்சிறை, வேம்பாடல், மலையாத்தி, சடைச்சி, கப்புசடைச்சி, தமனத்துவயம், சதுகம், மாஞ் சறோகணி, மூங்கிலரிசி, மூங்கில் குருத்து, செவ்விறகு, செம்மரம், கருமருது, ஒருக்கொம்பி.*

கொம்பியாம் நீர்விளாக்கழு தை மான் புள்ளி
கொடியநேயம் பொன்வண்ணச் சாலியாகும்
செம்பிசெழு மலர்க்கொன்றை பெருமலர்க்கொன்றை
சிறுநீலி யோமையொடு யுதிரமாறி
பும்புளி நரளைக்கிழக்கு பேய்க்கும்மட்டி
பெரியதோர் சுண்டைக்காய்க் காரியெள்ளு
பிம்பீத ரோகணி கொடியான நெல்லி
பேரான சின்னருகை யாவாரைதானே. (82)

*நீர்விளா, கழுதைமான் புள்ளி, நேயம், பொன் வர்ணச்சாலி, செழுமலர் கொன்னை, பெரிய மலர் கொன்னை, சிறுநீலி, யோமை, உதிரமாரி, புளிகறணை, பேய்க்கொம்மட்டி, சுண்டைக்காய், காரெள்ளு, பீதரோகணி, கொடி நெல்லி, சின்னருகு, ஆவாரை.*

வாரிகாட்டுக் கருணை ருதந்தையாகு
மகத்தான ஆதளைக்காய் நரிமுருக்கு
நாரி நாய் வேளை நெப் பத்திகையுமாகுங்
நெடிகிரிகிளி முருக்கு பத்திரம் வஞ்சு
மாரி மா காளி திதாளிப் பனைவிருத்தி
மகத்தான வோரிலைத்தாமரை நீர்முள்ளி
வீரியமாம் வெள்ளை நீர்முள்ளி பாற்சோற்றி
மிக்க பரியங்கபாதிநறுஞ் சோற்றியாமே. (83)

*காட்டுக்கரணை, ருதந்தி, ஆதளை, நரிமுருக்கு, கிளி முருக்கு, நெய்ப்பத்திகை, மஞ்சிபத்திரி, நாய்வேளை, நாபி, மாகாளி, தாளிப்பனை, விருத்தி ஓர் இலைத்தாமரை, நீர்முள்ளி, வெள்ளை நீர்முள்ளி, பாச்சுற்றி, (பாயசோத்தி), பரியங்கபாதி, நறுஞ்சோற்றி.*

ஆமென்ற ஆரையொடு கசப்பான பசளை
அதிகமா மிருவேலிப் பருத்திச் செம்பருத்தி
தாமென்ற அத்தியொடு சக்கிரவர்த்தந்
தனித்ததோர் அரைக்கீரை காளானாகும்
வாமென்ற வனமிட்டி பூசினி கக்கரி
மகத்தான கொம்மட்டி இரும் பிலியுமாகும்
பூமென்ற புஷ்கரமூலம் பிரம்பு முளகறணை
பெரிய கோகிழி கிளுவை அய்விரலிதானே. (84)

ஆரை, கருப்பு பசளை, இருவேலி, பருத்தி செம்பருத்தி, அகத்தி, சக்கிறவாதம், அரைக்கீரை, காளான், வனமிட்டி, பூசணிக்காய், கொம்மட்டி, இரும்பிலி, புஷ்கரமூலம், பிரம்பு, முளகறணை, பெரிய கோகிழி, கிளுவை, ஐவிரலி.

விரலியொடு கவுதும்பை பிறங்குநாறி
மிக்கசெங் கத்தாரி யோடு காட்டுத் தீயாம்
புரவி யொடுபுல்லூரி திலகவிருட்சம்
பெரியவுச்சிச் சிலந்தன்பா வட்டையாகும்
அரவியொடு கருங்கொடி யொட்டொட்டிம் செம்பரத்தை
கன கொடிக்கள்ளி யிலைக்கள்ளிதிருகுகள்ளி
மரலியொடு மான்செவிக் கள்ளிபொன்னாவாரை
மாசற்ற வொதிபுன்னை சுரப்புன்னைகாணே. (85)

*தும்பை, பிறங்குனாரி, செங்கத்தாரி, காட்டுத்தீ, புல்லூரி, திலக விருட்சம், உச்சிச்சிலந்தி, பாவட்டை, கருங்கொடி, ஒட்டொட்டி, செம்பரத்தை, கொடிகள்ளி, திருகுகள்ளி, இலைக்கள்ளி, மான் செவிக், கள்ளி, பொன்னாவாரை, ஒதி புன்னை, சுரபுன்னை.*

காணநறும்பிசின் திருவட்டம் பிசின்சன்னை
கனமான வுகாயோடு கண்டில்வெண்ணெய்
தீணசிவப் பானநெல் நல்லரிசியாகுந்
திறமான வெள்ளரிசி கறுப்பானஅரிசி
கோணவு காதும்பைய வல்வரகு தினை மொச்சை
கொடியான பனிப்பயறு கறுப்பான கடலை
ஆணயனுலு துவரை மூலிகையின்றொகுப்பு
அடக்கினே னானூற்று யெழுபத்துமூன்றே. (86)

*நறும்பிசின், திருவட்டம் பிசின், சன்னை, உகா, கண்டில் வெண்ணை சிகப்பு நெல், நல்லரிசி, வெள்ளரிசி, கறுப்பரிசி, கோதும்பை, அவல், விறவ, தினை, மொச்சை, பனிப்பயறு, கறுப்பு கடலை, அனுமுலுதுவரை ஆக இவை மொத்தம் நானூற்று எழுபத்து மூன்றாகும்.*

அடக்கினே னானூற்று யெழுபத்துமூன்று
அதிகமா மூலிகைப் பேர் சொல்ல வென்றால்
நடக்கினே நாலாயிரத்து நானூற்று
நாற்பத்து நாலுவிதமானதொரு மூலிதன்னை
கடக்கினோன் கற்பத்துக் கெடுத்தமூலி
காலாங்கி நாயர்தான் சொல்லக்கேட்டு
முடக்கினேன் முத்துப்போ லொருகயற்றில் கோர்த்தேன்
முதுமையாய் நிகண்டுக்குள் திறந்திட்டேனே. (87)

*மூலிகை மொத்தம் நாலாயிறத்து நானூற்று நாற்பத்தி மூன்றாகும். இதை குறுக்கி நானூற்று எழுபத்து மூன்றாக சொன்னேன். இவையெல்லாம் கற்ப மூலிகைகளாகும். இவை அனைத்தையும் என் குருவான காலாங்கி நாதரிடம்*

கற்று அறிந்து இந்த நிகண்டிற்குள் முத்துமாலை மூலிகை போல் கோர்வையாக சொல்லி உள்ளேன்.

### கற்பத்துக் கெடுத்த

திறந்திட்டேன் சீந்திலுக்குத் தேகசித்தி
திறமான மருளுக்கு விரணம்போகும்
கறந்திட்ட காஞ்சோறி கபத்தைச்சாடுங்
கடியபெருங் காஞ்சோறி சிலேஷ்மம் போக்கும்
துறந்திட்ட ஆடாதோடை சுரத்தைப்போக்குஞ்
சுயம்பான கருங்காலி குட்டம்போக்கும்
நறந்திட்ட வெண்கருங்கா லிக்குத்தானும்
நாகமது கட்டியே மணிபோலாமே. (88)

மூலிகைகளின் குணம்:- சீந்திலால் தேகம் சித்தியாகும் (காயம் அழியாமல் நிற்கும்) மறளம், விறணங்களை போக்கும், காஞ்சோரியால் கபம் விலகும். பெருகாஞ்சோரியால் சிலேஷ்மம் போகும். ஆடாதோடை சுரத்தை போக்கும் கருங்காலியால் குட்டம்போகும் வெண்கருங்காலியால் நாகம் கட்டி மணிபோல் ஆகும்.

### மூலிகையின் குணங்கள்

மணியான வேம்புதான் பித்தம்போக்கும்
மகாபெரிய வேம்புதான் வாதம் போக்கும்
நிணியான நிலவேம்பு சுரத்தைப்போக்கும்
நேர்ந்தசர்க்க ரைவேம்பு காய சித்தியாகுங்
கொணிகோரைக் கிழங்குக்குத் தோஷம்போகுங்
கூரான பற்படாங் கண்ணுக் காகும்
விணிவெட்டி வேருக்குத் தாபம் போகும்
மேன்மை யிலா மிச்சம்வேர் பித்தசுரம்போமே. (89)

வேம்பால் பித்தம் போகும். பெரிய வேம்பால் வாதம் போகும். நிலவேம்பு சுரத்தை அகற்றும், சர்க்கரை வேம்பால் காயசித்தி உண்டாகும். கோரைக்கிழங்கால் திரிதோஷம் போகும். பற்பாடகம் கண்களுக்கு ஒளியை கொடுக்கும் வெட்டிவேருக்குத் தாபம் அகற்றும் தன்மை உண்டு. விலாமிச்சை வேர்பித்த சுரத்தை அகற்றும்.

போமேதான் பேய்ப்புடோல் பித்தந்தானும்
புகழ்வட்டத் திருப்பியென்றால் பேதிகட்டுங்
கோமேதான் குமிழுக்குச் சன்னிபோகுங்
கொடிய பெருங் குமிழுக்குச் சுரங்கள் போகுந்

தேமேதான் தேவதாரஞ் சிலேஷ்மத்தைய றுக்குஞ்
செப்பரிய வெள்ளையென்றால் வாதம்போகும்
ஆமே பறவைநீ பரணிக்கு அத்தி சுரம் போகும்
அருங்கண்டங் கத்திரிக்குச் சுவாசம்போமே. (90)

*பேய்ப்புடல் பித்தத்தை அகற்றும், வட்ட திருப்பியாய் பேதிகட்டும், குமிழியால் சன்னி அகலும், பெருங்குமிழியால் சுரங்கள் போகும். தேவதாருவால் சிலேஷ்மம் போகும். பெரிய வெள்ளை வாதத்தை போக்கும். பறலை நீ பறணியால் அஸ்தி சுரம் அகலும். கண்டங்கத்திரியால் சுவாசம் என்ற நோய் அகலும்.*

சுவாசமொடு காசம்போஞ் சிறுவழுதலைக்கு
செப்பரிய வழுதலைக்குச் சிலேஷ்மம்போகும்
நிவாசமாம் நெரிஞ்சிலுக்கு மூத்திரக் கிரிச்சம்
நேரான வில்வமது சத்திபோகும்
முவாசமா முன்னைக்கு மேகம்போகும்
மூர்க்கமாங் கழற்கொடிக்கு விரைவாதம்போகும்
வாசமாம் வெண்கழற்கொடிக்குக் குன்மம்போகும்
மிடுக்கான கொட்டைக்கரந்தைக்கு வாக்குண்டாமே.(91)

*சிறுவழுதலையால் சுவாச காசம் விலகும். பெரிய வழுதலையால் சிலேஷ்மம் அகலும், நெரிஞ்சிவால் மூத்திரம்கிருச்சம் போகும். வில்வத்தால் வாந்திபோகும். முன்னையால் மேகம் அகலும். கழற் கொடியால் விரைவாதம் அகலும், கொட்டைக் கரந்தையால் வாக்கு திடமாகும்.*

### கெந்தகத்தயிலம் சூதபற்பம்

ஆமே நாறு கரந்தை காய சித்தியாகும்
ஆண்மையாம் நன்னாரிமருந்தீடு போகும்
போமே பேய்ப்பீர்க்குக் கெந்தகந் தயிலமாகும்
பெரியரண்டு பீர்க்குக்கு வாத சமனாகும்
பாமே பழுபாகல்தான் லிங்கங்கட்டும்
பழுத்தமுள் வெள்ளரிக் கிரிச் சிரம்போகும்
நேமேதாநிலப்பூ உகாய்க்குத்தான் சத்தெல்லா மிறங்கும்
நிறத்த வெள்ளைக் கிலுகிலுப்பை சூதம் பற்பமாமே.(92)

*நாறு கரந்தையால் காயசித்தி உண்டாகும். நன்னாரியால் மருந்தீடு போகும், பேய்ப்பீர்க்கு கெந்தகத்தை தயிலமாக மாற்றும். ரெண்டு பீர்க்கு வாதத்தை சமனாக்கும். பழுபாகல் லிங்கத்தை கட்டும். முள் வெள்ளரியால் கிரிச்சிரம் போகும். நிலப்புஉகாவால் எல்லா பொருள்களிலும் சத்தெடுக்கலாம். வெள்ளைக் கிலுகிலுப்பையால் சூதம் பற்பமாகும்.*

### ரசம் கட்டும் நீர் சுருங்கும், பாஷாண மெழுகு

பற்பமாங் கோவைக்குச் சலக்கழிச்சல்
பாங்கான தித்திப்பாங் கோவைரசங்கட்டுங்
குற்பமாங் கொன்றைக்குக் கிருமி போகுங்
கொடிய எலிச் செவிக்குத்தா னீர்சுருங்குந்
தற்பமாஞ் சதுரக்கள்ளி பாஷாணமெழுகு
தனியான சிவதைதான் விரோசனியாம்
நற்பமா நாயுருவி மந்தத்தை யறுக்கும்
நற்சிவப்பு சதுரக்கள்ளி தங்கஞ்செம்பாமே. (93)

கோவையால் சலகழிச்சல் போகும், தித்திப்புக் கோவையால் ரசம்கட்டும், கொன்றையால் கிறுமி போகும், எலிச்செவியாகில் நீர் சுருங்கும், சதுரக் கள்ளியால் பாஷாணம் மெழுகாகும், சிவதையால் விரோசமைாகும். நாயுருவி மாந்தத்தை அறுக்கும். சிகப்பு சதுரக்கள்ளியால் தங்கம் செம்பாகும்.

செம்பான சாறடைதிமிர் வாதம்போகுந்
திறமான மூக்குரட்டை பீனிசம்போகும்
அம்பான செம்முள்ளி சிலேட்டுமத்தை யறுக்கும்
ஆண்மையாஞ் சித்தாமுட்டி சுரகத்தைப்போக்கும்
பெம்பான பேராமுட்டி சகலசுரம்போக்கும்
பேரான பாலைதான் சுளுக்குப்போக்குந்
தெம்பான திருநாமப்பாலை பித்தந்தீர்க்குந்
செழுமைகுட சப்பாலை யதி சாரம் போமே. (94)

சாறடையால் திமிர்வாதம் போகும். முக்குறட்டையால் பீனிசம் அகலும், செம்முள்ளி சிலேஷ்மத்தை அறுக்கும். சித்தா முட்டியால் சுரம் அகலும், பேராமுட்டியால், சகலசுரங்களும் போகும், பாலையால் சுளுக்கு போகும், திருநாமப்பாலையால் பித்தம் தீரும், குடசப்பாலையால் அதிசாரம் அகலும்.

### மூலிகைகளின் குணங்கள்

சாரமாம் வெட்பாலை யிரும்பீலியந்
தனித்தபழம் பாலைதான் சாடும்பித்தம்
நாரமாம் நரிப்பயறு பித்தசமனாகும்
நல்முதியார் கூந்தலுக்குக் காரியம்பற்பம்
மேரமாம்வெள்ளை யாமணக்கு வாதம்போகும்
மிக்கசிவப் பாமணக்கு சாதிலிங்கமயினம்
மாரமா மாதளையிரும் புருக்கியாகு
மணத்த கொம்மட்டி மாதளைதான் சத்திபோமே. (95)

*வெட்பாலையால் இரும்பு ஈயமாகும். பழமுண்ணிப்பாலை பித்தத்தை சாடும், நரிப்பயரால் பித்தசமனாகும், முதியார் கூந்தலால் காரீயம் பற்பமாகும். வெள்ளையாமணக்கு வாதத்தை போக்கும், சிகப்பாமணக்கால் சாதி லிங்கம் மயினமாகும், மாதளை இருப்புருக்கியாகும் கொம்பட்டி மாதுளை வாந்தியை நிறுத்தும்.*

சத்திபோம் விளாவுக்குத் தனிப்பித்தம் போகுஞ்
சர்க்கரைக்குத் தாபம்போ மயக்கம் போகுங்
கத்திபோங் கரும்புக்குக் கல்லடைப்பு போகுங்
கனத்த வெள்ளைக் கரும்புக்குக் கபங்கள் போகும்
அத்திபோ மமுக்கறா சயங்காள் போகும்
ஆனதோர் பிரமியினால் விக்கல்போகும்
புத்திபோம் பூனைக்காஞ் சொறிக்குச் சிலேஷ்மம்
பூனைக்கா லிப்பருப்புத் தம்பனைக்காமே. (96)

*கொம்மட்டி மாதளையால் சத்திபோகும் விளாவால் பித்தம் அகலும், சர்க்கரையால் தாபமும், மயக்கமும் போகும், கரும்பால் கல் அடைப்பு விலகும், வெள்ளைக் கரும்பால் சயங்கள் விலகும், அமுக்குறா வால் க்ஷயங்கள் விலகும். பிரமியால் வீக்கங்கள் விலகும். பூனைக்காஞ் சோரியால் சிலேஷ்மம் போகும். பூனைக்காலி வித்து தம்பனையாகும் (விந்து கட்டும்).*

**பாஷாணமெழுகு லிங்க மெழுகு**

ஆமென்ற சிறுபூளை நீரிறங்கும்
அழகான மந்தாரை பாஷாண மயினங்
கோமென்ற கொக்கிறகு சாதிலிங்க மயினங்
குறிப்பான அழிஞ்சிலுக்கு விஷங்கள் போகும்
பாமென்ற பாகலுக்குப் பாஷாண தோஷம்
பண்பாகுங் காடாத்தி கிராணி போகுஞ்
சாமென்ற சாணாக்கில் தங்கம் நீறுந்
தனிமுசு முசுக்கையது சயங்கள்போமே. (97)

*சிறுபீளையால் நீர் இறங்கும், மந்தாரை யால் பாஷாணம், மயினமாகும், கொக்கிறகு செடியால் சாதிலிங்கம் மயினமாகும். அழிஞ்சிலால், விஷங்கள் விலகும், பாகலால் பாஷாண தோஷம் அகலும், காட்டகத்தியால் கிராணி விலகும், சாணாக்கியால்தங்கம் நீறும். முசுமுசுக்கையால் க்ஷயங்கள் போகும், சூத வெண்ணையிறுகும், கெந்தி கட்டும்.*

போகுமே யெழில் புன்னை புண் கிரந்தி
புகழ்கீழா நெல்லிக்குக் காமாலை போகுங்
காகுமே கருங்கொள்ளு வுருக்கினத்துக் காகுங்
கடுங்கூகை நீறுதா னூஷ்ணம் போகுந்

தேகுமே தேக்கி னுக்குச் சலத்தில் மட்டு
தீயான தகரைக்கு மாந்தம் போகும்
ஊகுமே யூமத்தைச் சூதவெண்ணெ யிறுகும்
உறுசேவக னார்கிழங்கு கடிகள்போமே. (98)

புன்னையால் புண் கிரந்தி விலகும். கீழாநெல்லியால் காமாலை போகும், கருங்கொள்ளு உருக்கினத்துக்கு ஆதியாகும். கூகை நீறால் உஷ்ணம் விலகும், தேக்கினுக்குச் சலத்தில் மட்டு, தகரையால், மாந்தம் விலகும். ஊமத்தையால் சூத வெண்ணை இறுகும். சேவகனார் கிழங்கால் கடிவிஷங்கள் போகும்.

## கெந்தி கட்டும்

கடிகள்போங் கரிசாலை பாண்டுக்காகும்
கனத்த பொற் றலைக்குத் தான் காய சித்தியாகும்
எடிகள மெருக்குக்குக் கருச் சன்னிபோகும்
ஏற்றமாம் வெள்ளெருக்குச் சாரங்கட்டும்
மடிகைமணித் தக்காளி தணலாத்தியாகு
மத்தகருந் தக்காளி கெந்திகட்டும்
குடிகையாங் குன்றிமணி காரங்கட்டுங்
குணம் பெரிய முள்ளங்கி கிரிச்சிரம் போமே. (99)

கரிசாலையால் பாண்டு போகும். பொற்றலையால் காயசித்தி உண்டாகும். எருக்கால் கருச்சன்னி விலகும். வெள்ளெருக்கால் சாரங்கட்டும். மணத்தக்காளி தணல் ஆத்தியாகும் (தணலையாற்றும்) கருந்தக்காளி கெந்தி கட்டும். குண்டுமணி காரம் கட்டும் பெரிய முள்ளங்கியால் கிருச்சிரம் போகும்.

## நாகம் கட்டும்

கிரஞ்சின்ன முள்ளங்கி கெந்திகட்டுஞ்
சித்தாற்று முள்ளங்கி சிலேத்மம்போகு
முரமுருங்கை கண்ணுக்குள் விரணம்போகு
மூர்க்கமாம் புனமுருங்கை நாகங்கட்டுந்
துரந்துளசி தோஷங்கள் போக்கியாகுஞ்
சுயம்பான கருந்துளசி செந்தூரத்தாதி
சிரந்தநீர்த் திப்பிலி சன்னிபோகுந்
நேரான வெள்ளுள்ளி வாதம்போமே. (100)

சின்ன முள்ளங்கியால் கெந்தி கட்டும், ஆத்து முள்ளங்கியால் சிலேஷ்மம் விலகும், முருங்கை கண்ணுக்குள் இருக்கும் விரணத்தை அகற்றும், புனமுருங்கையால் நாகம்கட்டும், துளசியால் தோஷங்கள் போகும். கருந்துளசி செந்தூரத்துக்கு ஆதியாகும். நீர்த் திப்பிலியால் சன்னி போகும். வெள்ளுள்ளியால் வாதம் அகலும்.

**தாமரை வளையம் நஞ்சு முறிக்கும்**

வாதமாம் யீருள்ளி வேகம்போகும்
மகத்தான நொச்சிலுக்குக் கடுப்பு போகும்
காதமாங் கருநொச்சில் கரப்பான் போகுங்
கனத்ததோர் வாழைக்குப் பெரும்பாடு போகும்
ஊதம்வா ழைக்கிழங்கு வுழலைதீரும்
உத்தமமாந் தென்னமர மருட்சைபோகும்
பாதமாம் பனைக்கிழங்கு விருத்தியாகும்
பண்பான நிலப்பனைதான் பாலையாமே. (101)

*ஈருள்ளியால் வேகம் போகும். நொச்சியால் கடுப்பு போகும். கருநொச்சிலால் கரப்பான் விலகும், வாழையால் பெரும்பாடு தீரும். வாழைக்கிழங்கு அழலை தீரும். தென்னை மரத்தால்மருட்சைஅகலும், பனைக் கிழங்கால் விருத்தியாகும் (வீரிய விருத்தி) நிலப்பனையால் பாலை பருவம் உண்டாகும்.*

பாலைவெள்ளைக் காக்கணான் விரோசனியாகும்
பாங்கான முடக்கொத்தான் வாதம்போகும்
சேலையாஞ் சேமைக்குத் தினவுபோகும்
சிறுசங்கங் குப்பிக் குட்டம்போகும்
போலையாம் பொரும்பிலுக்கு விரணம்போகும்
புகழான கறுப்பறுகு காசம்போகும்
வேலையாம் வெள்ளறுகு மேகம்நீக்கும்
மிகப்பவழ அறுகுக்கு சுவாசம்போமே. (102)

*வெள்ளைக் காக்கினான் விரோசனியாகும், முடக்கொற்றானால் வாதம் போகும், சேமையால் செம்பையால் தினவு அகலும், சங்கங்குப்பியால் குஷ்டம் போகும். பொரும்பில்லால் பொருமலுக்கு விரணம் போகும், கறுப்பறுகு காசம் போகும், வெள்ளறுகு மேகத்தை அகற்றும் பவழ அறுகால் சுவாசம் என்ற நோயை அகற்றும்.*

சுவாசம்போம் புளியாரைக் காயசித்தி புளியாஞ்
சுகமான தாமரைதான் கண் குளிர்ச்சி
தவாசதா மரை வளையம் நஞ்செல்லா முறிக்குந்
தாமரையின் மணிதானும் வசிகரமாகும்
அவாசதா மரைத்தாது மேகம் போகும்
ஆனதா மரைக் கிழங்கு ஆண்மை யுண்டாம்
திவாசமாஞ் செங்கழுநீர் திரிதோஷம் போகுஞ்
செப்பரிய அரக்காம்பல் சிலேத்மம்போமே. (103)

புளியாரை காயசித்தியை கொடுக்கும். தாமரை கண்களுக்கு குளிர்ச்சியாகும், தாமரை வளையம் நஞ்செல்லாம் முறிக்கும். தாமரை மணி வசிகரசத்தி கொடுக்கும் தாமரைத்தாது மேகத்தைப் போக்கும், தாமரைக் கிழங்கு ஆண்மையைக் கொடுக்கும். செங்கழுநீர் திரிதோஷத்தைப் போக்கும். அரக்காம்பல் சிலேஷ்மத்தை அகற்றும்.

### கல்தாமரையால் உலோகச் செம்பாகும்

போமென்ற கல்த்தாமரைக்கு லோகங்கள்செம்பாம்
புதியவெள்ளைத் தாமரைக்குச் சூதங்கட்டும்
கோமென்ற குளிரிக்கு வுப்புகட்டுங்
குணமாக மல்லிகைதான் எண்ணெய்க்குக்கும்
ஆமேயந்தி மல்லிகைக்கு அழகாம்மேனி
ஆண்மையா முல்லைக்குச் சோபந்தீரும்
மூமேதான் முல்லைபேதங்கள் முத்தோஷம்போகும்
முன்னை நந்தியா வட்டங் கண்ணுக்காமே. (104)

கல்தாமரையால் லோகங்கள் எல்லாம் செம்பாக மாறும். வெள்ளைத் தாமரையால் சூதம் கட்டும், குளிரியால் உப்புக்கட்டும், மல்லிகையால் சரக்குகள் எண்ணை கக்கும், முல்லையால் சோபம் தீரும், முல்லை வகைகளாய் முத்தோஷம் விலகும், நந்தியாவட்டை கண்ணுக்கு பார்வையை அளிக்கும்.

### முள் பலாசில் தாரம் நீறும்

கண்ணுக்கா மிருவாட்சி ரத்தபித்தந்தீருங்
கனமான செண்பகந்தான் பருக்கள் போகும்
திண்ணுசிறு செண்பகந்தான் பித்தம் போகுஞ்
செவ்வந்தி சித்த விப்பிர மைபோகுங்
குண்ணு குங்குமவந்தி கோழைபோகுங்
கூரான வெலுமிச்சை பயித்தியம்போகும்
திண்ணுசிற் றிஞ்சிதான் றிரிதோஷம்போகுஞ
செயலான பேரிஞ்சி சுரங்கள்போமே. (105)

இருவாட்சியால் ரத்தபித்தம் தீரும். செண்பகத்தால் பருக்கள் விலகும், சிறுசெண்பகத்தால் பித்தம் போகும், செவ்வந்தியால் சித்தப் பிரமை நீங்கும், குங்குமச் செவ்வந்தியால் கோழை போகும், எலுமிச்சையால் பயித்தியம் போகும். சிற்றிஞ்சியால் திரிதோஷம் போகும், பெரிய இஞ்சியால் சுரங்கள் விலகும்.

சுரம்போகும்முந் திரிப் பழத்தால் தோஷம் போகுஞ்
செயலான புளிமுந்திரி திரிதோஷம்போகுஞ்
இரமான யிலந்தைக்கு கடுப்பு போகு
மிலுப்பை யென்றா லேத்தமா மிரணம் போகும்
மரமான மலையிலுப்பை வாதம் போக்கு
மகத்தான பலாசுதான் பேதியாகு
முரமான முட்பலா அரிதாரம் நீற்றும்
மூர்க்கமாம் ஆலுக்குப் புழுக்கள் போமே. (106)

*முந்திரிப்பழம் தோஷத்தை அகற்றும், இலந்தையால் கடுப்பு போகும், இலுப்பையால் விரணங்கள் போகும், மலை இலுப்பையால் வாதம் அகலும், பலாசு பேதியை உண்டாக்கும், முள்பலாவால் அரிதாரம் நீறும், ஆலால் புழுக்கள் போகும்.*

போமென்ற அரசுக்குப் புத்தி யுண்டாம்
புகழான யிச்சிலுக்கு வூஷ்ணம் போகும்
நாமென்ற நாவலுக்கு விரணந்தீரும்
நலமான அகத்திக்குப் பெரும்பாடு நீங்கும்
போமென்ற பேயத்தி தம்பனையாகும்
பூவரசு சகலவிஷ குட்டந்தீரும்
ஆமென்ற வலரிக்கு நடுக்கல் நிற்கும்
அதிக வன்னி யிரும்பு செம் பாகு மன்றே. (.07)

*அரசால் புத்தி உண்டாகும். இச்சிலிலால் (குஷ்டம்) உஷ்ணம் போகும். நாவலால் விரணம் திரும், அகத்தியால் பெரும்பாடு தீரும், பேயத்தியால் தம்பனை உண்டாகும், பூவரசால், விஷமும், குஷ்டமும் தீரும். அலரியால் நடுக்கம் தீரும். வ்ன்னியால் இரும்பு செம்பாகும்.*

**நீர்க்கடம்பு நாகம் கட்டும் கடம்பு பாஷாணங் கட்டும்**

ஆமென்ற நீர்க்கடம்பு நாகங்கட்டும்
அதிகமாங் கடம்புக்குப் பாஷாணங் கட்டும்
வேமென்ற வெண்கடம்பு சூதங்கட்டும்
வெறுப்பான வாகைதான் விரணந்தீரும்
காமென்ற கறுப்புக்கு கெந்திகட்டுங்
கடிதான வேங்கைக்கு கடிகள்போகும்
மென்ற வொட்டைக் , வுதிரம்போகும்
முத்துமாயிலவுக்கு வதிசாரம்போமே. (108)

நீர்க்கடம்பால் நாகம் கட்டும். கடம்பால் பாஷாணங்கள் கட்டும், வெண் கடம்பால் சூதம் கட்டும், வாகையால் விரணம் தீரும், கருப்பு வாகையால் கெந்திகட்டும், வேங்கையால் கடிவிஷங்கள் போகும், ஒட்டையால் உதிரம் நீங்கும், இலவால் அதிசாரம் விலகும்.

சாரயில வம்பிசின் சுக்கிலங்கட்டுந்
 தளுக்கான மாமரம் வாந்திநிற்கும்
பேரானபொன்னாங் கண்ணிதான் கண்ணொளிவுதோணும்
 புகழான மாவிலிங்கை சன்னிதீரும்
நேரான லோத்திரமென்றால் கண்ணுக்காகும்
 நுகர்வெள்ளை லோத்திரந்துரிசி குருவாகும்
வாரவஞ்சி கண்ணுக்கு யிடுப் புறுதியாகும்
 மகாஆற்று மருந்துக்கு வழலை போமே. (109)

பாடபேதம் இலவம் பிஞ்சு

இலவம் பிஞ்சால் சுக்கிலம் கட்டும், மாமரம் வாந்தி நிற்கும், பொன்னாங்கண்ணியால் கண்ணொலி அதிகமாகும், மாவிலங்கையால் சன்னி திரும், லோத்திரம் கண்ணுக்கு மருந்தாகும். வெள்ளை லோத்திரம் துரிசி குருவாகும், வஞ்சி கண்ணுக்கு இடுப்புறுதியாகும், ஆற்று மருந்தால் வழலை நீங்கும், வழலை சளி

### வெள்ளியபற்பம் காரீயபற்பம்

போம்ஆட்டுச் செவிமருது வெள்ளீயபற்பம்
 புகழ்குதிரைச் செவிமருது காரீயபற்பம்
ஏமஇறிற் கிழங்குக்கு யீளைபோகும்
 ஏற்றமாம் பாலிநீர் பாஷாணங்கட்டும்
தேமேதான் தேள்கொடுக்குத்தான் சிறங்குபோகும்
 தெளிவான நெய்ச்சட்டி சீதசுரம்போகும்
தாமேசிறு விடுகொள்ளூ தண்ணீர்க்கட்டும்
 தயங்காத பெருவிடுகொள் சாரஞ்சாமே. (110)

ஆட்டுச் செவிமருதால் வெள்ளீயம் பற்பமாகும், குதிரைச் செவி மருதால் காரியம் பற்பமாகும். கொடுக்கால் இறிற் கிழங்கால் ஈளை போகும், பாலிநீரால் பாஷாணம் கட்டும், தேள் சிறங்குபோகும், நெய் ச்சட்டியால் சீதசாம் அகலும், சிறு விடுக் கொள்ளால் தண்ணீர் கட்டும், பெரு 'விடு ளால் சாரம் சாகும்.

சாகுந்தண் ணீர்மிட்டான் சிங்கிச்செம்பு
தனித்தகா கோளிக்குச் சலங்கள் நிற்கும்
சீரு காகோளி திற முண்டாக்குஞ்
சீவகங் கல்லுப்பு கட்டிப் போகும்
யீருமயிட வகந்தனக்கு கௌரி கட்டும்
ஏற்றமாம் பேராமல்லி சுரங்கள் போகும்
தாகுசித்தாமல்லிகைக்குச் சவலைபோகுந்
தனித்தசிறு புள்ளடிக்குக் கணங்கள்போமே. (111)

*சீருதண்ணீர் மிட்டானால் சிங்கி செம்பாகும். காகோளியால் சலங்கள் நிற்கும், ஷாகாகோளியால் திறம் உண்டாகும். சீவகத்தால் கல்லுப்புக் கட்டிப் போகும், மயிடவகத்தால் கெவுரிகட்டும், பேராமல்லியால் சுரங்கள் போகும், சித்தா மல்லியால் சவலை தீரும், சிறுபுள்ளடியால் கணங்கள் போகும் (இவ்விடத்தில் கணங்கள் என்பது குழந்தைகளுக்கு வரும் சுரம் குறிக்கிறது).*

போகவே யஷ்டமதுகம் பிரமியங்கள்போகும்
போசாரி பாதிரிக்குச் சூதங்கட்டும்
பாகவே பதுமுகம் பாலையாகும்
பணர்த்தமா புண்டரிகமப் பிரேகசத்தாம்
மேகவேமே தைக்குமகா தோஷம்போகு
மிகமான மகாமேதை துஷ்டசுரம்போகுந்
தேகவே தேக்குக்குச் சிரங்குபோகுஞ்
செப்பரி ஞாழலுக்குத் தினவுபோமே. (112)

*அஷ்டமதுகத்தால் பிரமியங்கள் தீரும், சாரியாதியால் சூதம் கட்டும், பதுமுகத்தால் இளமை உண்டாகும், புண்டரீகத்தால் அப்பிரகம் சத்தாகும் மேதையால் மகாதோஷம் விலகும், மகா மேதையால் துஷ்ட சுரம் விலகும், தேக்கால் சிரங்கு போகும், ஞாழலால் தினவு போகும்.*

மேதை : பொற்றலைக் கையான், ஞாழல் = பொன்னா வாரை, மயிர்க்கொள்ளை

தினவுபோம் பால் வீழி அயம்ஈயமாகுஞ்
செயமான வீழிக்குக்காய சித்தியாகும்
பனவான பாதிரிக்குப் பாண்டுபோகும்
பகர்ந்தவெண் பாதிரிக்குத் தாளகங்கட்டும்
பெனவான பெருங்குரும்பை பிறிவுக்காகும்
பேரான குறுஞ்சூலி யண்டமெழுகாகும்
நனவான நறும்முருக்கை நாகரசங்கட்டும்
நலமான பெருங்குறிஞ்சில் கடுப்புபோமே. (113)

*பாலவீழியால் அயம் ஈயமாகும், வீழியால் காயசித்தி உண்டாகும், பாதிரியால் பாண்டுபோகும். வெண்பாதிரியால் தாளகம் கட்டும், பெருங்குறும் பையால் பிறிவுக்காகும், குறுஞ்சூலியால் அண்டம் மெழுகாகும், நறுமுருங்கை யால் நாகம் கட்டிப் போகும், பெருஞ்குறிஞ்சிலால் கடுப்பு போகும்.*

கடுப்பான ஆயிலது வாதம் போக்கும்
கனமான புங்குக்குச் சூலை போகும்
வடுப்பான வலம்புரி குளிதோஷம் போகும்
மருக்காரை நசியத்துக் குறுதியாகும்
படுப்பான பாற்பைதான் சவ்வீரங்கட்டும்
பண்பான யிருளிதான் குடோரம்போகும்
நடுப்பான பாலிருளி சூதங்கட்டும்
நலமான யிருள்விடு காந்தஞ்சத்தாமே. (114)

*ஆயில்பட்டை வாதம் போகும், புங்கால் சூலை போகும், வலம்புரியால் குளிதோஷம் போகும், மருக்காரை நசியத்துக்கு உறுதியாகும், பார்ப்பையால் சவ்வீரம் கட்டும், இருளியால் குடோரம் போகும், பாலிருளியால் சூதம் கட்டும், இருள்வீட்டால் காந்தம் சத்தாகும்.*

சத்தான களாவிழுது வெடியுப்புக் கட்டும்
தனமான மராமரஞ் சூடன் கட்டும்
கத்தான கமுகுதான் பற்குறுதி யாகும்
கனமான தழுதாழை வாதம் போகும்
தெத்தான தெர்ப்பைக்கு கிறுச்சரம் போகுந்
திறமான ஆதண்டைப் பீனிசம் போகுங்
கொத்தகுழ லாதண்டை சரக் கெல்லாங் கட்டுங்
கொடிதான நாணல்துன் மாங்கிஷம்போமே. (115)

*களா விழுதால் வெடியுப்பு கட்டும், மராமரம் சூடன் கட்டும், கமுகு பல்லுக்கு ஆதியாகும், தழுதாழையால் வாதம் போகும், தெர்ப்பையால் கிறிச்சரம் போகும், ஆதண்டையால் பீனிசம் போகும், குழலா தண்டை எல்லா சரக்கையும் கட்டும், நாணலால் துன்மாங்கிஷம் போகும்.*

துன்பான திமிசுதான் சோரங் கட்டும்
சுயம்பான புசபத்திரி வசிகரி யாகும்
வின்பான விடத்தேற்குச் சூத பற்ப மாகும்
மிக்கான நெட்டிதா னீரைக் கட்டும்
நன்பான தளத்துவயம் நாகசெந்தூரம்
நலமான பெரிய வாழை யீய செந்தூரம்
உன்பான வுத்தாமணி உஷ்ணத்தையறுக்கு
முயர்ந்தபிரா முட்டிக்குச் சாரஞ்சாமே. (116)

திமிசு சோரம் கட்டும், விடத்தேறி சூதம் பற்பமாகும், ஏநட்டி நீரைக்கட்டும், தளத்துவம் தாகத்தை கட்டும், பெரிய வாழையால் ஈயம் செந்தூரமாகும். உத்தாமணி உஷ்ணத்தை அறுக்கும், பிராமுட்டியால் சாரம் சாகும்.

சாரமாம் நறுங்குறிஞ்சி மயிலிறகு சத்தாகுஞ்
சகத்தநத்தைச்சூரி யிரும்புருக்கியாகு
சேரசெப்பு நெருஞ்சில்நீ ருஷணம்போகுஞ்
செயலான கர்ணப்புத்தான் சிலையதுவு மெழுகாம்
காரகல் புகுவள்ளி காயசித்தி க்ஷணத்தில்
கனமான வள்ளிக்குக் கல்லுப்புக் கட்டும்
ஆரமாம் அசோகுக்கு குன்மம் போகும்
அதியேலா வாலுகத்துக்குக் கடிகள்போமே. (117)

நறுஞ்குறிஞ்சானால் இறகு சத்தாகும், (நத்தைச் சூரிசமம்பை உருக்கும்) நெறிஞ்சால் சிறுநீர் உஷ்ணம் போகும், காணபுத்தால் சிலை மெழுகாகும், கல்புகு வள்ளியால் காயசித்தியாகும், வெள்ளியால் கல்லுப்புக்கட்டும், அசோகுவால் குன்மம் போகும், யேலா வாலுகத்தால் கடிவிஷங்கள் போகும்.

அடிபெரு முத்தக்காசால்சுர தோஷம் போகும்
அதிங்குக்கு கால்கைகள் கடுப்புப் போகும்
வெடிவெள்ளை நாக்கணத்தி விரோசனியாம்
மிடுக்கான நேர்வாளந் துடியாம்பேதி
குடியான குறட்டைதான் கோழைபீனிசம் போகுங்
கொடுங் கஞ்சாங் கோரைக்கு குளிரும் போகுங்
மடியவருமா த்துக்குத் தாபம்போக்கு
மகத்தான யிங்குணம் லிங்கமிறுகிடுமே. (118)

பெருமுத்தக்காசால் சுரங்கள் போகும். அதிங்கால் கைகால் கடுப்பு போகும், வெள்ளை நாக்கணத்தி விரோசனமாகும், நேர்வாளத்தால் பேதி உண்டாகும், குறட்டையால் பீனிசம், கோழை போகும், கஞ்சாங்கோரையால் குளிருபோகும், மருவகத்தால் கடுமையான தாபம் போகும், இங்குணத்தால் லிங்கம் கட்டி இறுகும்.

### கற்றாழையில் சூதம்சுத்தி

இடுங்கட்டுத் துளசிக்கு யிரைப்பு போகும்
ஏற்ற திப் பிலி காமன் தாது விர்த்தி
சடுஞ்சாசி பாம்புவிஷக் கடிகள் தீரும்
சகமறிய அனிச்சையது சொரியல் போகும்

கடுங்கற் றாழை தனக்குச் சூதஞ் சுத்தியாகும்
கடிய குப்பை மேனிதா னுப்பைக் கட்டும்
திடுஞ்செருப் படிக்குத்தான் சிலேத்மம் போகுஞ்
சிவனார்தன் வேம்புக்குச் சில்விஷங்கள் போமே. (119)

காட்டு துளசியால் இரைப்பு போகும், திப்பிலி யால் தாது விர்த்தியாகும், சாசியால் விஷப்பாம்பு கடிகள் தீரும், அனிச்சையால் சொறிகள் விலகும், கற்றாழையால் சூதம் சுத்தியாகும், குப்பை மேனி உப்பைக் கட்டும், செருப்படியால் சிலேஷ்மம் போகும். சிவனார் வேம்புக்கு விஷங்கள் போகும்.

சில்லான தூதுவளை சிலேத்துமம் போக்குஞ்
சிறுவாடு தின் னாப் பாளை நாகங் கட்டும்
வெல்லான வெற்றிலைக்கு நாகம் நீறும்
மிக்கவாகாசக் கெருடன் சூதங் கட்டும்
நில்லானரத்த மண்டலி யிரும்பை யுருக்கும்
நேர்ந்த காட் டாமணக்கு யிரும்பி லீயம்
மல்லான மரு தானி யிரும்பு செம்பாம்
மகத்து-கஞ் சாவுக்கு யோகமா மென்னே. (120)

தூதுவளையால் சிலேஷ்மங்கள் போகும், ஆடுதிண்ணாப்பாளையால் நாகம் கட்டும், வெத்திலையால் நாகம் நீறும், ஆகாச கருடனால் சூதம் கட்டும், ரத்தமண்டலியால் இரும்பு உருகும், காட்டாமணக்கால் இரும்பு ஈயமாகும், மருதாணியால் இரும்பு செம்பாகும், கஞ்சாவால் யோகம் திடப்படும்.

என்ன நில வாகைக்குப் புழுக்கள் சாகும்
ஏத்தமாங் கட்டுக்கொடி உப்பைக்கட்டும்
பின்னமாம் பிரண்டைக்கு வயிரம் நீறும்
பேரான வல்லாரை யுடலந் தேறும்
மன்னவே மயூரசிகை நாகங் கட்டும்
மகத்தான தாம்புரசிகை சூதங் கட்டும்
கன்னவே கானலரை பித்தளை நீறுங்
கடிதான தில்லைக்குப் பாஷாணஞ்சாமே. (121)

நிலவாகையால் புழுக்கள் சாகும், பிரண்டையால் வயிரம் நீறும், கட்டுக்கொடி உப்பைக் கட்டும், வல்லாரையால் உடல் தேறும், மயூர சிகை நாகம் கட்டும், தாம்பிற சிகை சூதம் கட்டும். கானலரையால் பித்தளை நீறும். தில்லைபாஷாணத்தைக் கட்டும்.

கடிதான மலைமரத்தான் குடவநீறும்
கப்பெட்டிகு திரைப்பல் மெழுகுமாகும்
பிடிபிளிச் சிறுகீரை சூதங்கட்டும்
பேரான நீரரளி யிரும்பு செம்பாம்

கிடிதான செவ்வரளி தங்கஞ்செம்பாஞ்
செயசத்தி சாரணைதான் காரீய பற்பம்
துடியான தும்பைக்குச் சுரங்கள்போகுஞ்
சுனையான பேய்த்தும்பை தோஷம்போமே. (122)

*மலை மரத்தார் பித்தளை நீறும், கப்பெட்டியாம் குதிரைப் பல்லாஷாணம் மெழுகாகும் நீறளியால் இரும்பு செம்பாகும். செவ்வரளியால் தங்கம் செம்பாகும், சத்தி சாரனை காரீயத்தை பற்பமாக்கும், தும்பையால் சுரங்கள் விலகும், பேய்த் தும்பையால் தோஷம் போகும், தொருகண்ணி துணித்த சதை கூடும்.*

போமென்ற பேய்க்கொள்ளு சகலமுஞ்சத்தாம்
பேய்க்கடலை கெந்தியுட தயிலமாகுங்
தாமென்ற பேய்த்துவரை தாளகமாந் தயிலம்
செகமறிய அழுகண்ணிச் சூதங்கட்டுந்
தோமென்ற தொழுகண்ணிதுணித்த சதைகூட்டுஞ்
சுகந்த முட வாட்டின் கால் சவ்வீரங்கட்டும்
நாமென்ற நாகசிங்கி நாகங்கட்டும்
நலமான மிருப்பவல்தான்மாக் கெட்டியாமே. (123)

*பேய்க் கொள்ளால் சகலமும் சத்தாகும், பேய்க்கடலையால், கெந்திதயிலமாகும், பேய்த்துவரையால் தாளகத் தயிலமாகும், அழுகண்ணியால் சூதம் கட்டும், தொழுகண்ணியால் துணித்த சதைகூடும் (துண்டித்த) முடவாட்டின் கால் சவ்வீரம் கட்டும், நாக சிங்கியால் நாகம் கட்டும், இருப்பவலால் மாக் கெட்டியாகும்.*

கட்டியாம் பொன்மத்தைச் சூதங்கட்டுங்
கருமத்தைக் கெந்தகத்தைக் கட்டிப்போடும்
நட்டியாம் நச்சுப்புல் ரசேந்திர குருவாகும்
நான்முகப் புல்லீயத்தைப் பற்பமாகும்
குட்டியாங் காவட்டம் புல்மாந்தம்போக்குங்
சூரான சுண்ங்க விருட்ச்ஞ் சூதங் கட்டும்
எட்டி யெருமைக் கணைச்சா னெழிலகம் சுத்தி
யெழில் ரோம விருட்சத்திற சகல சித்தி யாமே. (124)

*பொன்மத்தை சூதம் கட்டும், கருமத்தை கெந்தகத்தைக் கட்டும், நச்சுப்புல்லால் ரசேந்திரம் குருவாகும், நான்முகப்புல் ஈயத்தை பற்பமாக்கும், காவட்டம் புல் மாந்தம் போக்கும், சுணங்க விருக்ஷம் சூதம் கட்டும் எருமைக் கணைச்சானால் அகம் சுத்தியாகும். ரோம விருஷத்தால் சகல சித்தும் பலிதமாகும்.*

சித்தானசேர்ந் தாடுபாவை தங்கச்செம்பு
செயமான முண்டினிதான் சித்தானகுளிகை
சத்துச்சாயா விருட்சஞ் சண வேதி யாகுஞ்
செம்பான கருநெல்லி சகல சித்தாம்
கத்தான கல்லாரை குதங்கல்லாம்
கல்ச்செம்பு சூதமது குருவுமாகும்
தத்தான கல்லற ளி தங்கஞ் செம்பாஞ்
சகமூ விவிலைக்குருந்து சூதம் மணியாமே. (125)

சேர்ந்நாடு பாவையால் தங்கம் செம்பாகும் முண்டினியால் சித்தான குளிகையாகும், வாயாவிருக்ஷம் சணவேதியாகும், கருநெல்லியால் சகல சித்தும் பலிதமாகும், கல்லாரையால் சூதம் கல்லாகும், கல்செம்பால் சூதம் குருவாகும், கல்லறளியால் தங்கம் செம்பாகும். மூவிலைக் குருத்தால் சூதம் மணியாகும்.

## செம்பல்லி சூதம் கட்டும்

மணியான முத்திருக்கஞ் செவி சூதங் கட்டும்
மாசற்ற செந்திராய் சூதஞ் செம்பாந்
திணியான செம்பல்லி சூதங் கட்டுந்
திறமான வெவ்வகத்தி சாதிலிங்க மயினம்
நிணிலஞ் சோதிக்கு கண்டா வெளுப்பாகும்
நிலக்கடம்பு அப்பிரகஞ் சத்துமாகும்
பிணிபிறங்கை நாறிக்கு கெவுரிகட்டும்
பூதணக்கு மால்தேவி கட்டும்பாரே. (126)

முத்தெருக்கன் செவிசூதம் கட்டும், செந்திராயால் சூதம் செம்பாகும், செம்பல்லியால் சூதம் கட்டும், செவ்வகத்தியால் சாதிலிங்கம் மயினமாகும், நீலச் சோதியால் கண்டர் வெளுப்பாகும், (கண்டர்-துரிசு) நிலக்கடம்புவால் அப்பிரகம் சத்தாகும். பிறங்கை நாரி கெவுரி கட்டும், பூதணக்கால் மால்தேவி கட்டும்

பாரென்ற செருந்திக்குப் பாஷாணங்கட்டும்
பண்பான கொத்தான்தான் பித்தம்போகும்
வாரென்ற வறட்சுண்டி நீரைக்கட்டும்
மகத்தான ஆதிரந்தான் வெடியுப்புக்கட்டுங்
காரென்ற காட்டுமா தாபம்போக்குங்
கனமான அம்பளங்காய் கல்லுப்புக்கட்டும்
போரென்ற புனம்புளி சாரங்கட்டும்
புகழாக யிதளைதான் சூலைபோமே. (127)

செருந்தியால் பாஷாணம் கட்டும், கொத்தான் பித்தம் போக்கும், வறச்சுண்டி நீரைக்கட்டும், ஆதிரம் வெடியுப்பை கட்டும், காட்டுமா தாபத்தைப் போக்கும், யம்பளங்காய் கல்லுப்பைக் கட்டும், புனம்புளி கருவங்கம் கட்டும், இதளையால் சூலைபோகும்.

செருந்தி = வாட்கோரை, மணத்தக்காளி.

சூலைபோந் தும்பைக்குச் சூத பற்பமாகுந்
துணையான சிறுதும்பை சோபந் தீர்க்கும்
பாலை போஞ் சோனகப்பூ பாதரச மாகும்
பம்மந்திரா சன்னிதனைப் போக்குவிக்கும்
பேலைபேய்த் தும்மட்டிப் பாஷாணங்கட்டும்
பெருங்கரும்பில் வெள்ளீயம் பற்பமாகும்
மாலைபோந் துடரிமால்தேவி பற்பமாம்
மகதேவதா ளிக்குச்சூத பற்பமாமே. (128)

தும்பையால் சூதம் பற்பமாகும், சிறுதும்பையால் சோபம் தீரும், சோனகப்பூ பாதரசமாகும், யந்திரா சன்னி போக்குவிக்கும், பேய்த்துமட்டி பாஷாணம் கட்டும், பெருங்கரும்பு வெள்ளீயம் பற்பமாகும், துடறியால் மால்தேவி பற்பமாகும், (மால் தேவி தாளகம்) தேவதாளியால் சூதம் பற்பமாகும்.

தாளிக்கு யிளைப்பிருமல் மூர்ச்சை போகுந்
தனித்த நறுந் தாளிக்குச் சிலேத்மம் போகும்
நாளிநாக தாளிக்கு நாகங்கட்டும்
நலமான பேய்ச் சுரைக்கு விஷங்கள் தீரும்
பேளி பேய்ப் பீர்க்குக்கு கெந்தகத்தின் றயிலம்
பெரிய சற் பாட்சிக்கு அரவின்விஷம் போகும்
ஈளிறு சுவசற்பாட்சிக்கு லிங்கம்கட்டும்
எழிலான விஷ்ணுகாந்திக்குச் சுரங்கள்போமே. (129)

தாளியால் இளைப்பிருமல் மூற்சைகள் போகும், நறுந்தாளியால் சிலேஷ்மம் போகும், நாக தாளியால் நாகம் கட்டும், பேய்ச்சுரையால் விஷங்கள் தீரும், பேய்பீர்க்கு கெந்தகத்தை தயிலமாக்கும், சற்பாட்சியால் நல்ல பாம்பின் விசம் போகும். சுவசற்பாட்சியால் விங்கம் கட்டும், விஷ்ணு காந்தியால் சுரங்கள் போகும்.

போமென்ற நாகபலை தாம்பரசெந்தூரம்
புகழான நீர்க்கடம்பு யீயசெந்தூரம்
கோமென்ற கிளிமூக்கு லோகசெந்தூரங்
கெடியான யீகைக்குத் தாளகச்செந்தூரம்

நாமென்ற நறுவிளிக்கு நாக்குப்புண்ணாறும்
நலமான புளிவஞ்சி நாகரசம் பற்பம்
காமென்ற ிறுகல்லூரி கல்லுப்புக் கட்டுங்
கடியதோர் வெட்பூலா வுஷ்ணம்போமே. (130)

நாகபாலையால் தாம்பிரம் செந்தூரமாகும், நீர்க்கடம்பு ஈயத்தை செந்தூரமாக்கும், கிளிமுக்கு லோகத்தை எல்லாம் செந்தூரமாக்கும், ஈகையால் தாளகம் செந்தூரமாகும், நறுவிளியால் நாக்குப் புண் ஆறும், புளிவஞ்சியால் நாகரசம் பற்பமாகும், சிறுகல்லூரி கல்லுப்பைக் கட்டும், வேட்பூலா உஷ்ணத்தை அகற்றும்.

பூலான நீர்ப்பூலா போகமிகவாகும்
புகழான தலைச்சூடு வெள்ளி ரசங் கட்டும்
பேலான பிரம்மதண்டி சூதங்கட்டும்
பொடுதலைக்கு வயித்தினுட கடுப்பு போகுங்
காலான கோடாசாலை வயிற்றுப்புழு மாளுங்
கொடியதோ ரிடுகொள்ளு சத்துசூர்மை
கானான காட்டுக்கொள்ளு காரங்கட்டும்
கடியபேய்க் கரும்புக்குப் பிசாசுபோமே. (131)

நீர்ப்பூலா போகத்தை மிகச் செய்யும்

தலைச்சூடு வள்ளி, ரசத்தை கட்டும், பிறமதண்டி சூதம் கட்டும், பொடுதலை வயிற்றின் கடுப்பு போகும், கோடாசாலையால் வயிற்றுப்புழு மாயும், யிடுகொள்ளால் தூய்மையான சத்து கிடைக்கும், காட்டுகொள்ளு சாரத்தை கட்டும், பேய்க்கரும்பால் பிசாசு விலகும்.

## திணைப்பூ சிலைகட்டும்

பிசாசான திணைப்பூவு சிலையைக்கட்டும்
பெரியகிருமி சத்துருக்குப் புழுக்கள்போகும்
பசாசான பேய்த்தும்மட்டிப் பாஷாணங்கட்டும்
பாங்கான நாய் பாகலுக்கும் மலட்டுப்புழுப்போகும்,
தொசாசான துரும்புக்குச் சூதம் பற்பமாகுந்
தூய்மையாம் நீர்க்குரா சத்திறக்கும்
புசாபூவம் பழத்துக்கு யெண்ணெய்க்கக்கும்
புதுப்பலா கரப்பானாம் புதுமையாமே. (132)

திணைப்பூ சிலையை கட்டும் (மனோசிலை) சிறுமிசத்துருவால் புழுக்கள் போகும், பேய்த் தும்மட்டி பாஷாணம் கட்டும், நாய்பாகலால் மலட்டுப் புழுக்கள் போகும், சானதுரும்பால் சூதம் பற்பமாகும், நீர்க்குறாசத்தை இறக்கும், பூவம்பழம் எண்ணை கக்கும், பலா கரப்பான் போகும்.

ஆமென்ற முட்பலா வாண்மை யுண்டாம்
அடுக்கான வனமரை அரி தாரம் வெள்ளை
தாமென்ற தண்கருக்குச் சவளை யாகுந்
தண்மையா மிசங்குக்குச் சிலேத்மம் போகும்
வேமென்ற வெள்வேலுக்கு விரணம்போகும்
மிக்ககரு வேலுக்குப் பல்லிறுகும்
காமென்ற காஞ்சிரைகாய் சித்தியாகுங்
கடியவேம் பாடலுக்குக் கனவிரணம்போமே. (133)

*முள்பலா ஆண்மை உண்டாகும், வனமரையால் அரிதாரம் வெள்ளையாகும், தண்கருசவளையாகும், இசங்கு சிலேஷ்மம் போகும், வெள்வேல் விரணம் போகும், கருவேல் பற்களை இறுகச் செய்யும், காஞ்சிறைக்காய் சித்தி உண்டாக்கும், வேம்பாடலால் கனவிரணம் போகும்.*

விரணம் போ மலை யாத்தி பேதி கட்டும்
மிக்க சடைச்சிவிரியனுட விஷத்தைப்போக்கும்
கரணகப் பூச்சடைச்சி கண்டர்வெள்ளை
கடிய தம னத்துவயந் தம்பனையாகும்
சரணமாஞ் சதகத்துக்கு ப்புக்கட்டுந்
தனிமாஞ்ச ரோகணிக்குக் கண்புகைச்சல் போகும்
முரண மூங்கி லரிசிக்குச் சுரதோஷம் போகும்
மூங்கிலுட குருத்துக்கு ரத்தம்போமே. (134)

*மலையாத்தி பேதிகட்டும், சடைச்சி விரியனுட விஷத்தை போக்கும், அகப்பூச்சடைச்சியால் கண்டர் வெள்ளையாகும். தமனத்துவயம் தம்பனமாகும் (விந்து ஸ்தம்பனமாகும்) சதுகம் உப்புக்கட்டும் மாஞ்சரோகிணிக்குக் கண்புகைச்சல் போகும், மூங்கிலரிசியால் சுரதோஷம் போகும், மூங்கில் குருத்துக்கு ரெத்தம் போகும்.*

ரத்தமாஞ் செவ்விறகு அயச் செம்பாகும்
நலமான செம்மரம் தங்கஞ்செம்பாகும்
கத்தமாங் கருமருது கிருஷ்ணதாரங்
கனமான வொருக்கொம் பிரசிதஞ்செம்பு
நித்தமாம் நீர்விளா பயித்தியம் போக்கும்
நேர்கழுதை மான்புள்ளி வெள்ளீயங் கட்டும்
அத்தைநே யம்மரம் அரிதாரங்கட்டு
மழகான பொன்வண்ணச் சாலி தங்க மாமே. (135)

*செவ்விறகு அயத்தை செம்பாக்கும், செம்மரத்தால் தங்கம் செம்பாகும், கருமருது கிறுஷ்ண தாரமாகும், யொருக்கொம்பி ரசிதம் செம்பாகும், நீர்விளா*

பயித்தியம் போகும், கழுதை மான்புள்ளி வெள்ளீயம் கட்டும், நேயம் அரிதாரம் கட்டும், பொன்வர்ணச்சாலி லோகத்தை தங்கமாக்கும்.

தங்கமாஞ்செழு மலர்க்கொன்றை புழுவகற்றும்
தரியபெரி மலர்க்கொன்றை கிருமிபோக்கும்
உங்கமா மோமைக்குத் தினவுமாறும்
உயர்ந்தசிறு நீலிக்கு நரைகள்போகுஞ்
செங்குவு திர மாரிக்குத் துரிசிசெம்பாஞ்
சினத்தபுளி நறளைக்குச் திமிருபோமே
பொங்குபேய்க் கொம்மட்டி லிங்கங்கட்டுப்
பேரான சுண்டைக்காய் சுரங்கள்போமே. (136)

செழுமலர் கொண்ணை புழுவகற்றும், பெரிய மலர் கொண்ணை காயசித்தியை அளிக்கும், யேமையால் தினவு போகும், சிறுநீலியால் நரைகள் போகும் (உதிரமாரிக்கு துரிசு செம்பாம் புளி நறணைக்கு திமிரு போகும், பேய்க்கும்மட்டி லிங்கங் கட்டும், சுண்டைக்காய் சுரங்கள் அகற்றும்.

சுரமான காரெள்ளுத் திலதமாகுந்
துடிபீத ரோகணி கண்குளிர்ச்சி
குரமான கொடிநெல்லிகெந்திசெம்பாகுங்
குணமான சின்ருகை தயிலத்தாதி
அரமான ஆவாரை யீயச்செந்தூரி
அதிகாட்டுக் கரணைக்கு கெந்திதயிலம்
துரமான ருதந்திக்குச் சிலைதயிலமாகுந்
துரிதமாம் அதளைக்காய் சூதஞ்சாமே. (137)

காரெள்ளு திலதம் செய்யப் பயன்படும், பீதறோகிணியால் கண குளிர்ச்சியாகும், கொடிநெல்லி அயம் செம்பாகும். சின்னருகு தயிலத்துக்கு ஆதி, ஆவாரை ஈய செந்தூரியாகும், காட்டுக் கரணையால் கெந்தகம் தயிலமாகும், ருந்தியால் சிலைதயிலமாகும், ஆதளைக்காயால் சூதம் சாகும்.

சாகுமே நரிமுருக்கை சயத்தைப் போக்குஞ்
சமர்த்தான கிளிமுறுக்கு அயச் செந்தூரம்
நேகுமே நெய்ப்பத் திரைக்குக் காய சித்தி
நேர்ந்த மஞ்சி பத்திரிதான் காந்தஞ் செம்பாம்
நாகுமே நாய்வேளை வயத்தைக் கட்டும்
நற்பச்சை நாபிக்குச் சூதங் கட்டும்
மாகுமே மாகாளி மயக்கம் போகு
மகத்தான தாளிப்பனைக்குச் சலங்கள் போமே. (138)

*(நரிமுருக்கு சயத்தைப் போக்கும்) கிளி முருக்கு அயத்தை செந்தூரமாக்கும், நேய்ப்பத்திரம் காயசித்தியை அளிக்கும், மஞ்சிபத்திரியால் காந்தம் செம்பாகும், நாய்வேளை வலத்தைக் கட்டும், பச்சைநாபியால் சூதம் கட்டும், மாகாளியால் மயக்கம் போகும், தாளிப்பனையால் சலங்கள் போகும்.*

சலமான விருத்திக்குச் சவர்காரஞ்சுண்ணந்
தனிவோ ரிலைத்தாமரை அழலை போகும்
நிலமான நீர்முள்ளி வீக்கம் போக்கும்
நிலவெள்ளை நீர்முள்ளி செம்பு குருவாகும்
பலமான பாற்சோற்றி பனிச்சை போகும்
பரியங்கப் பாதிக்குப் பாஷாணங் கட்டும்
நலமான நறுஞ்சோந்தி நாகங் கட்டும்
நல்லாரைச் சூதவெண்ணெ யிறுகும்பாரே. (139)

*விறுத்தியால் சவுக்காரம் சுண்ணமாகும், ஓரிலைத் தாமரையால் அழலை போகும், நீர் முள்ளி வீக்கம் போக்கும், வெள்ளை நீர் முள்ளி செம்பு குருவாகும், பாற்சோத்தியால் பனிசை போகும், பரியங்க பாதிக்கு பாஷாணம் கட்டும், நறுஞ்சோதியால் நாகம் கட்டும், ஆரையால் சூதவெண்ணை கட்டும்.*

இறுங்கருப்பு பசளைக்குச் சூதங்கட்டும்
இருவேலி தாபத்தைப் போக்குவிக்கும்
பரும்பருத்தி பெரும்பாடு தனைப் போக்குவிக்கும்
பணத்தைசெம் பருத்திக்குப் பித்தம் போகும்
அறுமகத்தி வேக்காடு தனையகற்றும்
அரியசக் கிரவர்த்தம் பித்தம்போகும்
கறுமரைக் கீரைதான் சுரத்துக்குக் கேற்கும்
காளானில் நாலுவிதஞ் சூதம் கட்டுமாமே. (140)

*கருப்பு பசளைக்கு சூதம் கட்டும், இருவேலி தாபத்தை போக்கும், பருத்தி பெரும்பாடுத்னை நீக்கும், செம்பருத்தியால் கதித்த பித்தம் போகும், அகத்தி வேக்காட்டை அகற்றும், சக்கிரவர்த் தம் பித்தத்தைப் போக்கும், அரைக்கீரை சுரத்தை அகற்றும், நாலுவகைக் காளான் சூதத்தைக் கட்டும்.*

கட்டான வனமிட்டிச் சாரங்கட்டும்
கடியபூ சனிதனக்கு வூறல்போகும்
மட்டான கக்கரிதா னீர்ப்பெருக்கும்
மகத்தான கொம்மட்டி வாதம்போக்கும்
இட்டான யிரும்பிலியில் கெந்தகத்தின்றயிலம்
எளிய புஷ்கர மூலங் கண்ணுக்காகும்
பிட்டான பிரம்புக்குச் சூலைபோகும்
பெரிய மிள கறணைக்குக் கிரந்திபோமே. (141)

*வனமிரட்டி சாரம் கட்டும், பூசனிக்காய் ஊறலைப் போக்குவிக்கும், கக்கரி நீரைம் பெருக்கும், கொம்மட்டி வாதம் போக்கும், இரும்பிலி கெந்தகத்தை தயிலமாக்கும், புஷ்கரமூலம் கண்ணுக்கு ஒளியை கொடுக்கும், பிரம்பு சூலையை அகற்றும். மிளகறணை கிரந்தியைப் போக்கும்*

கிரந்தியாங் கொழுகுக்குக் கிறுமிபோகும்
கிளுவைக்கு துஷ்டவிர ணங்கள் போகும்
அரந்தியாம் ஐவிரலி லிங்கங்கட்டும்
ஆண்மையாங் கவுதும்பை மூலம்போக்கும்
பிரந்தியாம் பிறங்குநாறி பொட்டிலுப்பு கட்டும்
பெருஞ் செங்கத் தாரிதா னயச் செம்பாகுங்
கரந்தியாங் காட்டுத்தீ கண்டர் வெளுப்பாகுங்
கடியபுல் லூரிக்குக் கருங்குட்டம் போமே. (142)

*கொழுகால் கிருமிபோகும், கிளுவையால் துஷ்ட விரணங்கள் போகும், ஐவிரலி லிங்கம் கட்டும், கவுதும்பை மூலத்தைப் போக்கும், பிறங்கினாரி பொட்டிலுப்பை கட்டும், செங்கத்தாரியால் அயம் செம்பாகும், காட்டுதீயால் கண்டர் வெளுப்பாகும், புல்லூரியால் கருங்குட்டம் போகும்.*

குட்டமாந் திலகவிருக்ஷந் தொட்டி செந்தூரக்
குளிவுச்சி ச்சலந்தனக்கு குதிரைப்பல் கட்டும்
பட்டமாம் பாவட்டை வாதம் போக்கும்
பரிவாயருங் கொடிக்குத்தான் பாஷாணங் கட்டும்
ஒட்டமாம் ஒட்டொட்டி யுறுதியாங்காயம்
உகந்த செம் பரத்தைக்குச் சாதிலிங்க மயினம்
பெட்டமாங் கொடிக்கள்ளி பெலக்கும் பாஷாணம்
பெரியயிலைக் கள்ளிக்குப் பாஷாணஞ் சாமே. (143)

*திலகவிருஷத்தால் தொட்டிப் பாஷாணம் செந்தூரமாகும், உச்சி சிலந்தியால் குதிரைப்பல் பாஷாணம் கட்டும் பாவட்டை வாதம் போக்கும் கருங்கொடியால் பாஷாணங்கள் கட்டும், ஒட்டொட்டியால் காயம் உறுதியாகும், செம்பரத்தையால் சாதிலிங்கம், மயினமாகும், கொடிக்கள்ளியால் பாஷாணம் பலக்கும், இலைக்கள்ளியால் பாஷாணம் சாகும்.*

சாம்திருகு கள்ளிக்கு கௌரி கட்டுந்
தனித்த மான் செவிக்கள்ளித் தாளகந்தான் மெழுகாம்
போம்பொன் னாவரைக்கு யீயம் செந்தூரம்
பேரான வொதிதானும் விரணம் ஆற்றும்
ஆபுன்னை யாகாத விரணந்தீரும்
அதிகமாஞ் சுரபுன்னை யரிதாரங் காட்டும்
நாம நறும் பிசினுக்கு நாகங் கட்டும்
நற்றிரு வட்டம் பிசினி தான்துரு நீர்ப் போமே (144)

*திருகுகள்ளிப் பாலால் கெவுரி கட்டும் மான் செவிக்கள்ளி தாளகத்தை மெழுகாக்கும் பொன்னாவரை ஈயம் செந்தூரமாகும், ஒதியம் விரணத்தை ஆற்றும், புன்னை ஆறாத விரணத்தை ஆற்றும், சுரப்புன்னை அரிதாரம் கட்டும், நறும் பிசின் நாகம்கட்டும், திருவட்டம் பிசினால் துறுநீர் போகும்.*

நீரான சன்னைக்குச் சிலை தான் கட்டும்
நெடிதான வுகாய்க்குத் தானப் பிரகஞ்சத்தாம்
காரான கண்டில் வெண்ணெய் கண்பருவைப் போக்கும்
கண்சிவப்பு நெல்லுக்குக் காயமதுவலுக்கு
நாரான நல்லரிசி நாக்கு ருசியாகும்
நலமான வெள்ளரிசி சீரணாக்கும்
காரான கறுப்பரிசி கடிகள்போகுங்
கனத்தகோ தும்பைக்கு வுடலழுத்தமாமே. (145)

*சன்னையால் சிலை கட்டும் (மனோசிலை). உகாவினால் அப்பிரகம் சத்தாகும், கண்டில் வெண்ணையால் பருபோகும். சிகப்பு நெல்லால் காயம் வலுக்கு, நல்லரிசி நாக்குக்கு (ருசியாக இருக்கும்) ருசியை தரும், வெள்ளரிசி உணவு செறிக்கும், (சீரணமாகும்) கருப்பரிசியால் கடிவிஷங்கள் விலகும், கோதுமை உடல் அழுத்தமாகும்.*

அழுத்தமாம் அவல்தனக்கு ஆண்மை யாகும்
அதியமாம் வரகுக்கு ஆண்மை குண்ணும்
திழுத்தமாந் தினைதனக்குச் சீரணமா க்குஞ்
செமொச்சைப் பயருக்கு வாத முண்டாம்
பிழுத்தமாம் மணிப்பயரு பித்தம்போகும்
பெருங் கறுப்புக் கடலைக்குக் க்ாயசித்தாம்
பழுத்த அணு முலுதுவரை பாங்கா மேனி
பலப்படவே சித்தியாம் வுப்பைக் கட்டே. (146)

*அவல் ஆண்மையை கொடுக்கும், வரகால் ஆண்மை குன்றும், தினை சீரண சக்தியை அளிக்கும், மொச்சைப் பயறால் வாதம் உண்டாகும், மணிப்பயறால் பித்தம் போகும், கருப்பு கடலையால் காயம் சித்தியாகும், அனுமுலு துவரையால் மேனிபாங்காக பிரகாசிக்கும், மேனி பலப்பட உப்பைக் கட்டவேண்டும்.*

## உப்புக்கட்டு

சித்தியாம் உப்பெடுத்துச் சிவன்தான் சொன்னார்
தேவி சொன்னாள் திருமூல நாயனார் சொன்னார்
நித்தியமா நந்தி சொன்னார் மச்சர் சொன்னார்
ரிஷபரொடு பதஞ்சலியுங் கோரக்கர் சொன்னார்

நத்தியாம் நாகார்ச் சுனராம் தேவர்
நலமான சித்தர்களும் உப்பே சொன்னார்
பெத்தியா மென்னுப்புக் காலாங்கி சொல்லப்
பிசகாமல் பார்த்திட்டுப் பிதற்றினேனே. (147)

*உப்பைக்கட்டும் முறையைப், பற்றி, சிவன், பார்வதி தேவி, திருமூலர் நந்தி, மச்சர், ரிஷபர், பதஞ்சலி, கோரக்கர், நாகார்ச் சுனர் மற்றும் எல்லா சித்தர்களும் சொன்னார்கள் என்னுடைய குருநாதர் காலாங்கிநாதரும் சொன்னார் இதை முறை தவறாமல் அறிந்து இந்த நூலில் நான் சொல்லி வைத்தேன்.*

### கல்லுப்புக்கட்டு

பார்த்திட்ட வுப்பேது வென்றா யானால்
பாக்குப் போல் கல்லுப்பை யுடைத்துக் கொண்டு
ஏர்த்திட்ட பழச்சாற்றில் தோய்த்துத் தோய்த்து
ஏழுநாள் ரவிதனிலே யுலரப் போட்டு
கார்த்திட்ட கட்டுக்கொடி சிறுகல்லூரி
கனத்த குப்பை மேனி யிலை சமனாய்ச் சேர்த்து
ஆர்த்திட்ட பழச்சாற்றி லரைத்து மைபோல்
அடவாகச் சேறுபோற் குழப்பி வையே. (148)

*கல்லுப்புக்கட்டு:- கல்லுப்பை எடுத்து பாக்குபோல் நறுக்கிக் கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றில் தோய்த்து தோய்த்து சூரிய வெப்பத்தில் உலரப் போட்டு எடுத்துக் கொள்ளவும். பின்னர் கட்டுக்கொடி இலை, சிறுகல்லூரி இலை, குப்பைமேனி இலை இவை மூன்றும் சமமாய் எடுத்து எலுமிச்சம், பழச்சாற்றில் மைபோல் அரைத்துத் தனியாக வைத்துக் கொள்ளவும்.*

வைத்த பின்பு முன்காய்ந்தவுப்பு மேலே
வளமான புழுகோடு வீரஞ் சீனம்
வைத்த பின்பு வெள்ளை யென்ற பாஷாணந் தானும்
வராகனெடை பலத்துக்கு நிறுத்துக் கொண்டு
நைத்த பின்பு நாற்சாமங் கல்வத் திட்டு
நலமான பழச்சாறு விட்டு ஆட்டி
உய்த்தபின்பு வுப்பின் மேல்பூசிப்பூசி
யுரப்பான ரவிதனிலே காயப்போடே. (149)

*புனுகு, வீரம், சீனம், வெள்ளைப் பாஷாணம் இவை நான்கையும் வகைக்கு ஒரு வராகன் எடை வீதம் எடுத்துக் கொண்டு பழச் சாறு விட்டு நான்கு சாமம் அரைத்து முன்பு சூரிய வெப்பத்தில் காயவைத்துள்ள உப்பின்மேல் பூசி உலர வைக்கவும்.*

**உப்புமணி**

அரைத்திட்டு நால்சாமம் உப்பில் பூசி
ஆண்மையாம் ரவிதனிலே காயப் போட்டு
கரைத்திட்ட கல்லூரிக்கட்டுக் கொடி மேனி
கனியவே சுட்டு நன்றாய்ச் சாம்பலாக்கி
இரைத்திட்டு யெலுமிச்சஞ் சாற்றி லரைத்து
ஏற்றமாம் வுப்புமேல் கவசங்கட்டி
பரைத்திட்ட பாண்டத்தில் பண்பாய் வைத்துப்
பாங்கான வோடு கொண்டு பதிய மூடே. (153)

பதியவே ஓடுமூடிச் சீலைசெய்து
பாங்கான குழிவெட்டி முழங்கால்மட்டும்
புதியவே பெரும் புடமாய்ப் போட்டெடுத்து
பேராக வெடுத்துப்பார் வெளுப்பாய்க் காணும்
கதியவே கரியில் வைத்து வுருக்கிப் பாரு
கண்விட்டு ஆடுமே பொன் போல்தானும்
எதியவே யிந்தவுப்புக் கொப்பே தெஃனறா
லென்தாயார் மனோன்மணிக்கு யிணையுமாமே. (154)

*ஆறியபின் எடுத்துக் கவசத்தை அகற்றி காயவைத்து பின்னர் வீரம், வெண்கரு, புனுகு, சீனம், கடல் நுரை மதியுப்பு, சாரம் இவற்றை வகைக்கு கால்பலம் எடுத்துச் சேர்த்து பழச்சாற்றால் நான்கு சாமம் அரைத்து உப்பின் மேல் பூசிக் கவசம் பண்ணி ஒரு பாண்டத்தில் வைத்து மேல் ஓடுமூடிசீலை மண் செய்து குழிக்குள் வைத்துப் பெரும்புடம்போட்டு எடுக்க உப்பு வெளுத்து மணி போல் காணும். இதைக்கரியில் வைத்து உருக்கினால் பொன் போல் கண்விட்டு ஆடும், இந்த உப்புமணி தாயான மனோன்மணிக்கு இணையானதாகும். இதற்குஇணையாக வேறெதையும் சொல்ல முடியாது.*

மணியான உப்பெடுத்து வுருக்கிப்பாரு
மாசற்ற பொன்போலே கண்விட்டாடும்
துணியான சூதத்தின் மணியோவென்பார்
சுப்பிரமாம் வீரத்தின் மணியோவென்பார்
வணியான வயிரத்தின் மணியோவென்பார்
மாசற்ற முத்தினுட மணியோவென்பார்
கணியான கமலினியின் மணியோவென்பார்
காரணமாஞ் சித்தர்கள்தான் மயங்குவாரே. (155)

*இந்த உப்பு மணியை எடுத்து உருக்கினால் பொன்போல் பிரகாசித்து ...டாடும். இதைக் கண்டவர்கள் இது சூதமணியோ, வீரமணியோ, ...யோ, முத்துமணியோ என்று சந்தேகம் கொண்டு மயங்குவார்கள்.*

மயங்கியதோர் உப்புநின் றுருகும்போது
மாட்டுநீ நாலுக்கு ஒன்று தங்கம்
தயங்கிய தோர் தங்க யெடை நாகம் போடு
தன்னாகத் திடைபோடு சூதந் தானும்
தியங்கியதோர் சூத யெடை கெந்தி போடு
சிலையதுவுந் தாளகமுங் கெந்தியிடை போடு
கயங்கியதோ ரெடுத்துடனே களங்குமாகுங்
காட்டிட்வே யொரு நூற்றுக் கொன்று தானே. (156)

*இந்த மணி உருகும்போது மணி எடைக்கு நாலில் ஒன்று தங்கமும், தங்கத்தின் எடைக்கு நாகமும், நாகத்தின் எடைக்கு சூதமும், சூதத்தின் எடைக்கு கெந்தியும், கெந்தியின் எடைக்கு மனோசிலையும், தாளகமும் சேர்த்தால் களங்காகும்.*

### களங்குச் செந்தூரம்

ஒருநூற்றுக் கொன்றிடவே லோகந்தானும்
உத்தமனே மாற்றதுவும் பத்துப் பத்து
கருநூற்றுக் களங்கத்தைக் கல்வத்திட்டு
கனநாகச் செயநீரைக் குத்தி யாட்டி
திருநூற்று வில்லை பண்ணிச் செப்பி லிட்டுச்
சீலைசெய்து குக்கிடமாய்ப் புடத்தைப் போட
அருநூற்று அருணன் போல் சிவந்து காணும்
ஆயிரத்துக் கொன்றிடவே யேம மாமே. (157)

*இந்தக் களங்கை நூற்றுக்கு ஒன்று லோகங்களில் தாக்கினால் பத்தரை மாற்றுள்ள தங்கம் உண்டாகும். களங்குடன் செயநீரை வார்த்து கல்வத்தில் அரைத்து செப்பு அகலில் இட்டு சீலைமண் செய்து கோழிப்புடம் போட அருணனைப்போல் சிவந்து செந்தூரமாகும். இந்தச் செந்தூரத்தை ஆயிரத்துக்கு ஒன்று லோகத்தில் தாக்கினால் லோகங்கள் பொன்னாகும்.*

ஒண்ணான செந்தூரங் குன்றி யுண்ண
வுத்தமனே சிலைபோலத் தேகமாகும்
விண்ணான கேசரியாம் யோகத்தைக் காட்டும்
வேதாந்த வாலையைத் தான் நித்தம் பூசி
உண்ணான மதுவையுண்டு வாசிபூட்டு
வுட்கருவி புறக் கருவி தெரிந்து போகும்
குண்ணான மலைபோலக் கைகளாகுங்
கோடியுகஞ் சமாதியிலே யிருக்கலாமே. (158)

உப்புதான் உயிர், கார சாரத்திற்கும் வேதை மூலிகைகளுக்கும் இந்த உப்புதான் உயிராகும். இந்தக் கட்டிய உப்பினால்தான் (உப்புக் கட்டுனால்) வாதசித்தி, வாசிசித்தி எல்லாம் செயமாகும்.

### திருமூலநாயனர் எழுபதுயுகம்

ஆமென்ற வுப்பை யல்லோ திருமூல நாய
ராடியே எழுபதுதான் யுக்மும் பார்த்து
நாமென்ற காலாங்கி நாயருக்குச் சொன்னார்
காலாங்கி நாயனார் கடாக்ஷம் வைத்து
பாமென்ற பக்குவம் பார்த் தெனக்குச் சொன்னார்
பராபரையி னருளாலே பார்த்துத் தேறி
ஏமென்ற யெழுகோடி யுகந்தான் பார்த்து
இணையில்லா தெழுதினேன் நிகண்டில் தானே. (164)

இந்த உப்புக் கட்டை கொண்டு திருமூலநாதர் எழுபது யுகம் சித்து ஆடிப்பார்த்து அறிந்து காலாங்கி நாதருக்கு உபதேசம் செய்தார். காலாங்கி நாதர் என்மேல் கடாட்சம் வைத்து பக்குவமான பருவம் பார்த்து எனக்கு உபதேசம் செய்தார் பராபரையின் அருளால் உபதேசம் செய்ததை முறையாக அறிந்து ஏழுகோடியுகம் சித்துகள் விளையாடிப் பார்த்துப் பின்னர் இந்த நூலில் எழுதி வைத்தேன்.

தானென்ற வுப்படங்கிக் கட்டினாக்கால்
சமரசமாய் வாதமொடு காயசித்தியாகும்
வானென்ற சூதமது மணிபோலாகு
மகத்தான கெவுனவழி யோடலாகும்
தேனென்ற சிவகாமி சிவனும்வந்து
தியானத்தில் கடாட்சித்துச் சொல்வார் தாமே
மூனென்ற மூலிகையால் சொன்ன தெல்லாஞ் சித்தி
மூவுல குஞ் சஞ்சரித்துத் திரியலாமே. (165)

உப்பு அடங்கிக் கட்டினால் வாத சித்தியும் பலிதமாகும். இந்த உப்பு சூதமணியைப் போலவே சகலசித்தையும் புரியும் கட்டிய உப்பினால் கெவுனசித்தியை பெறலாம். சமாதியில் நின்றால் சிவகாமியும், சிவனும் வந்து உபதேசம் செய்வார்கள். மூலிகையினால் செய்யும் அனைத்து வித காரியமும் சித்தியாகும். மூன்று லோகமும் சஞ்சரித்து திரியலாம்.

திரியவே யண்ட ரண் டங்க ளெல்லாஞ்
சித்தாக வேண்டுமென்றா லுப்பைக் கட்டு
திரியவே யுப்பென்றால் வாய்க் கெளிதோ மக்காள்
செகமெல்லா மோர் மணிக்கு விலை காணாது

திரியவே செகச்சாலம் வெளியாய்ப் போகுந்
தேகமது வுகாந்த வரை யிருக்கலாகும்
திரியவே கற்பங்க ளுண்ணச் சித்தி
சிவயோக சார மெல்லாந் தெரிந்து போமே. (166)

*அண்டரண்ட பதங்கள் எல்லாம் திரியலாம் நீ சித்தாக வேண்டும் என்றால் உப்பைக் கட்ட வேண்டும். உப்பு கட்டுவது என்றால் மனிதர்களே எளிதான காரியம் இல்லை. ஒரு உப்புக் கட்டு மணிக்கு இந்த உலகமே கொடுத்தாலும் விலைகாணாது. இந்த மணியினால் (கட்டிய உப்பினால்) செகசால வித்தைகள் ஆடலாம். இந்த தேகம் யுகாந்தம் வரை இருக்கும் சகல விதமான கற்பங்களும் சித்தியாகும் சிவயோக சாரத்தின் உண்மைகள் எல்லாம் புரியும்.*

தெரிந்திடவே காரசாரப் பேரைச்சொன்னேன்
திறமான பாஷாணப் பேரைச்சொன்னேன்
உரிந்திடவே யுபரசத்தின் பிரிவைச் சொன்னேன்
உத்தமமாங் கடைச்சரக்கி னுண்மைசொன்னேன்
முரிந்திடவே மூலிகையின் பேரை யெல்லாம்
முத்துப்போல் பொருக்கியே முறைமை சொன்னேன்
பருந்திடவே யூர்வனவும் பறப்பனவும்பேரை
பாடுகிறேன் வெளியாகப் பண்பாய்க்கேளே. (167)

இதுவரை காரசாரத்தின் பெயர்களையும், பாஷாணத்தின் பெயர்களையும், உபரசத்தின் பொயர்களையும், கடைச்சரக்கின் பொயர்களையும், மூலிகையின் பெயர்களையும், முத்துப்போல் பொறுக்கி கோர்த்து முறையாகச் சொன்னேன். இனி ஊர்வன, பறப்பன முதலான மிருகச்களின் பெயர்களைச் சொல்லுகிறேன்.

### யானையின் பெயர்

ஆனையுடப் பெயர்தனையே அறியக்கேளு
அத்தியாங் கெசமாகும் நாகமாகும்
ஈனையிப்பேர் பத்திர தகரியுமாகும்
எழிலான வாரணங் குஞ்சரமாகும்
தானையாந் தந்தியாம் மதங்கபுஷ்பி
தலையருவி தூக்கிய களிறுமாகும்
வேனையாம் வேழமாம் யிருள்மருப்பு
வெண்டலை யுருட்டியிடு மானையாமே. (168)

*ஆனையின் பெயர்:- அத்தி, கெசம், நாகம், பத்திரத கரி, வாரணம், குஞ்சரம், தந்தி, மதங்கபுஷ்பி, களிறு, வேழம், இருள் மருப்பு,*

நானான நவ்வி யாம்கன் றூட்டுங் கவரி
நாகினம் பிறைதவழு மயிர்க்கற்றைக்கவரி
ஈனான யிருபுற முருக் கின்ற மருப்பு
யிணை விழைய தடப்புள்ளி தூங்கு மானாமே. (174)

*மான் பெயர்:- சுவர்னப் பிறஷ்டம்இனாங்கம், சாருலோசன சுற்றதம், நெடுங்கோட்டுக்கலை (பெரிய கொம்பை உடையமான்) புல்வாய், நவ்வி, கன்றூட்டுங் கவரி, இற்கத்தை கவரி, இருபுஷம் முருக்குகின்ற மருப்பு. நாகினம், பிறை, தவழுமயிர்க்கற்றைக்கவரி.*

### ஆட்டுக்கடாவின் பெயர்

ஆட்டுக்கடாப் பெயர்தனையே யறியக்கேளு
அசாதகா சாகலோ பவ ரோசசாகி
சாட்டான சலவாதத் திரிவாசாகஞ்
சாகளமான் பசுவுமாகும்
தாட்டான அகோவறுகச் சா கலை
கவச்சரு சாசியா மலங்கர ணச்சமாகும்
வேட்டான வேள்விப்பிர சங்கியாகு
மிடுக்கான ஆட்டுக்கடாய் விபரமாமே. (175)

*ஆடு பெயர்:- அசவாதகா, சல வாதத்திரி, வாசாகம், சாகளமான் பசு, அசோவாறு கச்சா, சகுசாகியா, மலங்கலனச்சம், வேள்விப் பிரசங்கி.*

### தகரின் பெயர்

தகரினுட பெயர்தனையே சாற்றக்கேளு
சமர்த்தான யோடோவாகுமே டோவாகும்
குகரினுட காமந்த கருணாவாகுங்
கொடிதான கருணத்தா சலிலோ வாகும்
முகுருனுட வத்துதாதேவேர் யேடகமாகு
மற்கடப் பிறதாக் கமுமாகுந்
திகுருனுட செயலரி பிறடோவாகுஞ்
செப்பியதோர் தகருட சீருமாமே. (176)

தகருவின் பெயர்:- வோடாவா, மேடோவா, காமந்தகருனா, கருணத்த தாசலிலோ, வத்துதா, வேல்யேடகம், மற்கடம், பிற தாக்கம், செயவரிபிற டோவா.

### பன்றியின் பெயர்

பண்ணியுடப் பெயர்தனையே பகரக்கேளு
பரிதான கரிமாவே யெறுழி கேழல்
வண்ணியாஞ் சூகரம் வக் கிரந்தட்டிரம்
வராகமாம் ரோம காரியுமாகும்

குண்ணியாக் கோலமாங் குரோடங்கோணி
கிரீடியாம் போத்திரி அரிகீடம் போர்த்
தண்ணிதந் தாயுதங் குரோ டாவியாகுந்
தக்கதோர் பேரெல்லாம் பன்றிப்பேரே. (177)

*பன்றியின் பெயர்:- கரிமா, வேயெறுதி, கேழல், சூகரம், வக்கிறந்தட்டிறம், வராகம், ரோமகாரி, குரோடாகேரணி, போத்திரி, அரிகீடம், போர்த்தண்ணிதம், தாயுதம், குறோடோவியா.*

### நாயின் பெயர்

நாயினுடப் பெயர்தனையே நவிலக்கேளு
நறுகியாஞ் சாரமெ ச்சமாகும்
சூயான பீஷ்ணசூ சுணங்கமாகுஞ்
சூரனோர் ய ஈசுணங் முகரோபல்லூகம்
ராயான ராத்திரிசா கரமுமாகும்
ரவுத்திரி பரமயோ கரசியாகும்
தாயான சுணங்கமாங் குக்கலாகும்
துஷ்டமாம் விருக்கமாம் நாயின்பேரே. (178)

*நாயின் பெயர்:- சாரமெச்சம், பீஷண சுணகம், சுணங்கரோ பல்லுகம், ராத்திரி சாகரம், யோகரகசி, சுணங்கம், குக்கல்.*

### நரியின் பெயர்

நரியினுட பெயர்தனையே நவிலக்கேளு
நாத்தமறி சிறகால சம்புவாகும்
குரியான சொகுரோஷ்டிராகோ மாயுவாசங்
கோம்மாயுயி சல்ன சம் பூகமாகும்
பரியான பல்லாகோ மிருகானத்தம்
பாவியாங் குலோதந்தி திரிடகமாகும்
புரியான பூரியான் மாபுக்குரோட்டா
போதமை நரியினுட பேருமாமே. (179)

*நரியின் பெயர்:- சிறகாலசம்பு, சொகுரோஷ்டா, கோமாயுவாசம், இசவனசம்புகம், கோமிருகானந்தம், குலோதந்தி திரிடகம், புரியாமா, புக்குரோட்டம்.*

### குரங்கின் பெயர்

குரங்கினுடப் பெயர்தனையே கூறக்கேளு
கூகமாங் க்ரியகுரங் கூகமாகும்
வரங்கான மர்க்கடோ வானரோ மேஷோ
மகத்தான அரிசாகா மிருக் கபியாகும்

மயிலின் பெயர்:- மயூரம், கோபருகி, நீலகண்டன், சர்ப்பசத்துரு, சங்கரன் மகன் குமாரன் ஏறும் வாகனம், சினித்துவசன், மேகநாதன், திறபு காசகம், அஞ்சுவர்ணத்தோன் நர்த்தகோ,

### கிளியின் பெயர்

கிளியினுட பேர்தனையே கீறக்கேளு
கீர்த்தினா சுத்திகரோ ருகத்துண்டாகு
மிளிப்பிள்ளை மேதாவிப் பாரியதெரிசினமாம்
மினி யாகாரச்சு கதபத்திரோவாம்
அளிப்பிள்ளை யாடகக்கிண் ணத்தமுதூட்டும்
அழகான சிவந்தநிற மூக்கியாகுஞ்
சுளிப்பிள்ளை மழலைச்சொல் சுகதுண்டமாகுஞ்
சொன்னத்தைச் சொல்லுங்கிளிப் பிள்ளையாமே. (186)

கிளியின் பெயர்:- கீர்த்தனாசுத்தி, கரோருகத்துண்டன், மேதாவி, பாரிய தெரிசனம், ஆகாரச் சுததபத்திரோ ஆடகக்கிண்ணத்த முதூட்டும் அழகான சிவந்த நிற மூக்கி, மழலைச் சொல், சுகதுண்டம்.

### நாணுவானின் பெயர்

நாணுவான் பெயர்தனையே நவிலக்கேளு
நாகரிகமான தோர்கெவுரி பிதாவாங்
கோணுவான் கோபிகாச கவுரியாகுங்
குறியான காகல்அப் பிரியாவாகும்
நீணுவா னிசாரி மே ஷாதி யாகும்
நீக்கான காசியதூகிழி கார்ப் பிரியாவாம்
பாணுவான் பாதினி பாலியாகும்
பகரமாம் நாணுவான் பண்புமாமே. (187)

நாணுவானின் பெயர்:- கெவுரி, பிதா, கோபிகாசகவுரி, காகல் அப்பிறியா, நிசாரி, மேஷாதி, காரியா, தூதிகாப்பிரியா பாதினி பாலி.

### சக்கரவாகத்தின் பெயர்

சக்கிரவாகப் பெயரைச் சாற்றக்கேளு
சக்கிரவா கத்து சக்கி ராங் கோவாகுந்
தக்கிரமாஞ் சக்கினார தாரதியாகுஞ்
சலுவான நாதாங் கான மாதியாகுங்

குக்கிரமாங் கோகாமி சக்கிரோதமாகுங்
குடிலமா மகாபில சாலியாகும்
பக்கிரமாம் பராக்கிரம மதிரியாகுங்
பாடியதோர் சக்கிரவாகப் பேருமாமே. (188)

*சக்கரவாகப் பெயர்:- சக்கிராங்கோவா, சக்கினார், தாரதி, நாதாங்கா, நாமாதி, கோகரமி, சுக்கிரோதம், மகாபிலசாலி, பராக்கிரமதிரி.*

### அன்னத்தின் பெயர்

அன்னத்தின் பெயர்தனையே யறையக்கேளு
அஞ்சமாம் அஞ்சம்பா பீதமாகும்
நன்னமா மரத்தபர தோயமாகும்
ராசவங் கசமான தாத்திராஷ்டிரஞ்
சின்னமாஞ் சிறையன்னஞ் சிவலோகத்தன்னஞ்
செழுமுளரிப் பொகுட்டி லன்னமாகும்
புன்னபூ வன்னம் புனலிவன்னம்
புலம்புகிற வன்னமாம் அன்னப்பேரே. (189)

*அன்னத்தின் பெயர்:- அஞ்சகம், அஞ்சம் பாபிதம், மரத்த பரதோயம், தாத்திராஷ்டிரம், சிறையன்னம், சிவலோகற்றன்னம், செழுமுளரி, பொகுட்டிலன்னம், பூவன்னம், புனலிவன்னம்.*

### காக்கையின் பெயர்

காக்கையின் பெயர்தனையே கருதக்கேளு
காகோதம் வாயசோ காகோரிஷ்டம்
ஊகையாம் வுலூரசிது வாங்கஷாவாகும்
உண்மையாம் பலிபுத்திர சிவிசமாகும்
நீக்கை தூர தேசங்கேள் நிமித்தகிருதுவாகும்
நியம்பட்சிப் பறையனாம் நீசன்தானாஞ்
சாக்கை சனி வாகனன் தான்கருமுகிலா தனாஞ்
சாவமாங் காக்கையின் றன்பேராமே. (190)

*காக்கையின் பெயர்:- காகோதம், வாயசோகா, கோரஷ்டம், உலூறிசிது, வாங்ககூரம், பலிபுத்திர சினிசம், தூரதேசம் கேள் நிமித்த கிருது, பட்சிப்பறையன், நீசன், சனிவாகனன், கருமுகிலோதன்.*

### காட்டுப்புறாவின் பெயர்

காட்டுப்புறாப் பெயர்தனையே கருதக்கேளு
கனக பாராவாஞ் சக்கர நேத்திரம்
நீட்டான நீலாங்கக் கபோத காகும்
நேரான உருக்கிராங் கீரசுவாகு
மீட்டான ரோககசுவீரது மிருதுவாகுங்
மிகுந்தகண்ட மாமது கப்பியாகும்
பாட்டான ப்ண்பாகும் பாலினியாகும்
பரிவாகுங் காட்டுப்புறாப் பண்புமாமே. (194)

*காட்டுப்புறாப் பெயர்:- சக்கிரகேத்திரம், நீலாங்கசக போதகம், உருக்கிராம், கீரசுவாகு, ரோககசுகவாது, மிருதுவா, மதுக்கபி, பண்பா, பாலினி.*

### வீட்டுப்புறாவின் பெயர்

வீட்டுப்புறாப் பெயர்தனையே விளம்பக்கேளு
மிக்கான கோபுர வாசி யாகும்
பாட்டான பகரமாஞ் சிறிக்கி யாகும்
பரிவான குருக்காதி யுருக்கி யாகும்
நாட்டான நடைச்சியாம் பராக்கிரமி யாகும்
நலத்தஞ்சு வர்ணத்தி கபோ தொனியாகுந்
தூட்டான தூதியத்துச் சுகந்தோவாகுஞ்
சுவேதோ யுகச்சச்சம் வீட்டுபுறாவாமே. (195)

*வீட்டுப்புறாப் பெயர்:- கோபுரவாசி, பகரம், சிறிக்கி, குருக்காதி, உருக்கி, நடைச்சி, பராக்கிரமி, அஞ்சவற்ணத்தி, கபோதொனி, துதியத்துச் சுகந்தோ.*

### தாராவின் பெயர்

தாராவின் பெயர்தனையே சாற்றக்கேளு
சாய்ந்தன்ன நடக்கியாஞ் சாயலாகும்
ஆராவி னழகுள்ள பேடையாகும்
ஆழமாங் குளந்தன்னி லாடுங்கன்னி
பாராவின் பன்னகச் சிறகியாகும்
பருந்தைத் தின்பவள் தான் பாங்கியாகுங்
கூராவின் கூட்டன்ன பெடைச்சியாகுங்
கொடுமஞ்சள் மூக்கிதான் தாராப்பேரே. (196)

*தாராவின் பெயர்:- சாய்ந்த நடச்சி, அழகுள்ள பேடை, குளத்தில் ஆடும் கன்னி, பன்னகச் சிறக்கி, பகுந்ததைத்தின் பவள், பாங்கி, கூட்டன்னப் பெடைச்சி, மஞ்சள் மூக்கி.*

### ஊர்க்குருவியின் பெயர்

ஊர்க்குருவிப் பெயர்தனையே உரைக்கக்கேளு
ஊனான காயத்தை வலுவதாக்கி
பார்க்குருவி பட்டணத்தில் வாசியாகும்
படவையாஞ் சிறிக்கிதான் பாசக்காரி
கார்க்குருவி கட்டளைக் குந்தியாகுங்
கடுங்கிரக வாசினி கடிச்சியாகும்
ஆர்க்குருவி அட்டணைச் சீவனாகும்
அடைக்கலக் குருவியூர்க் குருவியாமே. (197)

*ஊர்க்குருவியின் பெயர்:- காயத்தை வலுவாக்கி, பட்டணத்தில்வாசி, படவையாஞ் சிறுக்கி, பாசக்காரி, கட்டளைக் குந்தி, கிரகவாசினி, கடிச்சி, அட்ட ணைச் சீவன், அடைக்கலக் குருவி.*

### அளுங்கின் பெயர்

அளுங்கினிடப் பெயர்தனையே யறியக்கேளு
ஆனையுடன் போராடி யதிரக்கொல்லி
சிளுங்குனிட சில்லுப்போல் செடத்தியாகுஞ்
சிறுமலையில் வாசியாந் திறத்தியாகு
மளுங்குனுட மல்லுப்போல் சுருளியாகு
மாட்டி னெருத் தின்னியாம் வச்சிரதேகி
களுங்குனுட கல்லுப்போல் புகச்சியாகுங்
கமசான சதிரத்திய ளுங்குமாமே. (198)

*அளுங்கின் பெயர்:- ஆனையுடன் போராடி, அதிரக்கொல்லி, சில்லுப்போல் செடச்சி, சிறுமலையில் வாசி, திறத்தி, மல்லு போல் சுருளி, மாட்டினெருத்தின்னி, வச்சிரதேகி, கல்லுப்போல் புடச்சி, கடிசான சதிரத்தி.*

### உடும்பின் பெயர்

உடும்பினுட பெயர்தனையே யுரைக்கக்கேளு
யுறுதியாங் காயத்துக் குரமு மானோன்
படும்பினுட வானகச் சூலியாகும்
மலையிருக்குங் கறட்டானா மார்க்கியாகுங்
கடும்புனுட கானகக் குன்றில்ராசா
கடுங்குகை வாசினி கபோதியாகும்
உடும்பான ஊனகச் சத்தியாகும்
உயர்ந்தவளை தானிருக்கு முடும்புமாமே. (199)

*உடும்பின் பெயர்:- காயத்துக்கு உறமானோன், வானக சூலி, கானகக் குன்றில் ராசா, கடுங்குகை வாசினி, கபோதினி, ஊனகச்சத்தி.*

**முதலையின் பெயர்**

முதலையுட பெயர்தனையே மொழியக்கேளு
மூர்க்கமா மடுவுக்குள் நாயகியாகு
மதனையாங் கரிமாலாங் கியாகுங்
வச்சிர தகரில்தண் டிச்சிதானாஞ்
சிவளையாஞ் சிறுபட் சணியுமாகுஞ்
செலவாசி யிரவில் மலந்தள்ளிதானாம்
நதளையாம் நாயகி நகரியாகும்
நலமான முதலையி னாமமாமே. (200)

*முதலையின் பெயர்:- மடுவுக்குள் நாயகி, கரிமாலாங்கி, வச்சிர தகரில் தண்டிச்சி, சிறுபக்ஷணி, செவ்வாசி, (இரவில் மலத்தள்ளி) நாயகி, நகரி.*

**ஆமையின் பெயர்**

ஆமையுடப் பேர்தனையே யறியக்கேளு
அழகான கச்சபம் நியமகாவாகும்
நாமையாம் ரசப்பிரதி விடயமாகும்
நலமான கூர்மமாம் வட்டசக்கிரி
காமையாங் கடலுக்குள் சிறிக்கியாகுங்
காரணமா முடலுக்குள் தியானியாகும்
ஊமையா மொருநொடிக்குள் ஒட்டிலுறங்கி
உத்தமமாம் யோகிதா னாமைப்பாரே. (201)

*ஆமையின் பெயர்:- கச்சபனியங்காவா, ராசப்பிறதிஷ்டி, கூர்மம், வட்டசக்கிரி, கடலுக்குள் சிறிக்கி, உடலுக்குள் தியானி, ஒரு நிமைக்குள்ளோட்டில் உறங்கி, உத்தமயோகி.*

**கல்லாமையின் பெயர்**

கல்லாமையின் பேர்தனையே கருதக்கேளு
கல்குகை தாமோதரன் கரியவர்ணன்
பல்லாமை பஞ்சவரி யா வர்ணத்தோன்
பாங்கான வுருண்டதோர் வடிவனாகும்
நல்லாமை நாயகன் சக்கரனாகும்
நலமான காங்கயன் கடுங்கூர்மனாகுஞ்
சுல்லாமை கரடகன் துரிசு கூர்மன்
சுயம்பான கல்லாமைப் பேருமாமே.

*கல்லாமைப் பெயர்:- கல்குகை தாமோதரன், சூரியவர்ணன் பஞ்சவரியாம் வர்ணத்தோன், உருண்ட தோர்வடிவன், (உருண்டை வடிவன்) நாயகன், சக்கரன், காங்கயன், கடுங்கூர்மன், கரடகன், துரிசு கூர்மன்.*

## கட்டெறும்பின் பெயர்

கட்டெறும்பின் பெயர்தனையே கருதக்கேளு
கடுக்கும்நடு மணியாகுங் கடுத்துவானாம்
முட்டெறும்பு முடுகிய நடையோனாகு
முனையாகு மருவிய சிறியோனாகும்
மட்டெறும்பு மாபில முள்ளவனாம்
மரபுக்கு வுரியன் சுரையனாகுந்
தட்டெறும்பு தன்னிடத்தில் திறத்தன்மையானோன்
தண்சாந்தனாங் கட்டெறும்பின் தன்மையானே. (203)

*கட்டெறும்பின் பெயர்:- கடுக்குங் கடுமணி, கடுத்துவா, முடுக்கிய நண்டயோன், மருவிய சிறியோன், மாபலம் உள்ளவன், மரபுக்குமுரியவன், சுரையன், தன்னினத்தில் தன்மையானோன், சாந்தன்.*

## பூநாகத்தின் பெயர்

பூநாகப் பேர்தனையே பொருந்தக்கேளு
பூமியி னரம்புமாம் புத்துக்குள் பார்த்து
சாநாகஞ் சஞ்சீவி தானுமாகுந்
தனித்தகடு நாகத்துக் கிரையுமாகுந்
தூநாகஞ் சுடர்கோம சுரும்பியாகுஞ்
சொல்லான பூமிக்குள் நாதமாகும்
மீநாகம் பிருத்தசஞ் சீவினியுமாகு
மிடுக்கான பூநாக மேன்மையாமே. (204)

*பூநாகத்தின் பெயர்:- பூமியின் நரம்பு, புத்துக்குள் புத்து, சஞ்சீவி, கடுனாகத்துக் கிரை சுடர் கோமசுரும்பி பூமிக்குள் நாதம், விருத்த சஞ்சீவினி.*

## இந்திரகோபத்தின் பெயர்

இந்திரகோ பப்பெயரை யியம்பக்கேளு
எழிலான மேகத்தின் விந்துவாகுந்
தந்திரமா மன்னனுட நாதமாகுந்
தாக்கான யிடியினுட துளியுமாகும்

அந்திரமாம் அயிராணி ருதுவுமாகும்
அட்சயமாம் பாகத்தினருந் தலாகும்
சந்திரமாஞ் சஞ்சீவி சதிரியாகுந்
தளுக்காகும் யிந்திரக்கோபப் பெயராமே. (205)

இந்திரகோபத்தின் பெயர்:- மேகத்தின் விந்து, மின்னலுட நாதம், *இடியினுடதுளி, அயிராணிருது, அக்ஷயம், பாகத்தி னருந்தல், சஞ்சீவி சதிரி.*

## கருநாகத்தின் பெயர்

கருநாகப் பேர்தனையே கருதக் கேளு
காற்கோடன் சங்கனாங் குளிசனாகுந்
திருநாகஞ் சிவன்கைக்குக் கங்கணமாகுஞ்
செயமான அனந்தனாம் பாந்தளாகும்
விருநாகம் விஷ்ணுவுக்கு மெத்தையாகும்
விளக்கமாம் பூமிக்கு வுறுதியாகும்
பருநாகம் பத்மனாம் வாசுகியாகும்
பகர் தக்கன் கருநாகப் பண்புமாமே. (206)

*கருநாகத்தின் பெயர்:- காற்கோடன், சங்கன், குளிகன், சிவன் கைக்குக்கங்கணம், அநந்தன், பாந்தலள், விஷ்ணுவுக்கு மெத்தை, பூமிக்கு உறுதி, பத்மன், வாசுகி, தக்கன்.*

## பாம்பின் பெயர்

பாம்பினுடப் பெயர்தனையே பகரக்கேளு
பாந்தளாஞ் சற்பதுஷ்டிறோ புசங்கோ
தாம்பினுட சங்கோத சரிசிரபமாகுந்
தகனியாம் வுரகஞ் சனியுமாகும்
வீம்பினுட வியானத்து விசசிங்கோதமாகும்
வேந்தனாம் புஜங்கம வீரியாகும்
நாம்பினுட நாக்கடைபுரட்டி தீயுதி தீர்க்கும்
நஞ்சுழலும் பாம்பினுட நாமமாமே. (207)

*பாம்பின் பெயர்:- சங்கோபசரிசிரபம், சர்ப்பம், துஷ்டிறோ, புசங்கோ, உரகம், சுகி வியானத்து விசங்கோதம், வேந்தன், புசங்கமவீரி, நாக்கடை புரட்டி (நாக்கை புரட்டி) தீயு தீர்க்கு.*

## நாகப்பாம்பின் பெயர்

நாகப்பாம் பின் பெயரை நவிலக் கேளு
ரத்தினமாஞ் சேநாகோ விஷதாரியாகும்
பாகமாங் குண்டலி பன் னகப் பாணியாம்
பரியசட்சு சீரவேரதத் தசூசோரவாகும்

பூகமாம் போகி சாத விஷமுமாகும்
பொரியரவம் பணாடவி விசும்பனக்குமால்
மாகமாம் மணிக்கைவெயில் விரிபணாடவி யாம்
மகாமணியின் றிழந்தமா நாகமாமே. (208)

*நாகப்பாம்பின் பெயர்:- ரத்தினம்பசேனாகோ, விஷதரோ, குண்டலி, பன்னகப் பாணி, போகிசாதவிஷம், அரவம், பணாடவி, விசும்பணக்கு, மணிக்கை வெயில் விரிபனாடவி.*

### சர்ப்பத்தின் பெயர்

சற்பத்தின் பெயர்தனையே சாற்றக்கேளு
சர்பபமாந் தவஷ்டிரோ வாம் புசங் காகியாகுஞ்
சிற்பத்தின் சிங்குவா திறகப்பிறஷ்டி
சிறியதந்தஞ் சூகோ போகி பாகி
உற்பத்தி னுறகமாங் கஞ்சுகி வியாளோ
சங்கமம் விஷநாகோ குண்டலியா
மற்பத்தின் மண்டலு சாக்கோ புதை
யாடாகாள பூதி ஓதியசற்மாமே. (209)

*சர்ப்பம் பெயர்:- சற்பம், தனுஷ்டிறோ, புசங்காகி, சிங்குவா, திறகப் பிறஷ்டிகம், தந்தகுகோ, போகி, பாகி, உறகம், கஞ்சுகி, விஷனாகோ, குண்டலி, மண்டலி சாக்கோபுதை காளபூதி.*

### மிருகத்தொகுப்பு

ஆமப்பா நடப்பனவுமூர் வனவுஞ் சொன்னேன்
அழகான பறப்பினத்தி னாண்மை சொன்னேன்
தோமப்பா தொகுப்ட பினமுஞ் சொல்லக்கேளு
சொல்லரிய யானையொடு குதிரையொட்டை
காமப்பா கழுதை சிங்கம் ரிஷபம் மானாங்
கதித்ததோ ராட்டுக்கடா வெள்ளாடு பன்றி
நாமப்பா நாய் நரி குரங்கு ஓணான்
நற்கருடன் செம்போத்து மயிலுமாமே. (210)

*நடப்பினம், ஊர்வனம், இவற்றின் தொகுப்பு:- நடப்பினமும் பறப்பினமும், ஊர்வனவுமானவற்றின் பெயர்களையெல்லாம் சொன்னேன் அவற்றின் தொகுப்பை சொல்கிறேன் கேள். ஆனை, குதிரை, ஒட்டை, கழுதை, சிங்கம், ரிஷபம், மான், ஆட்டுக்கடாய், வெள்ளாடு, பன்றி, நாய், நரி, குரங்கு, ஓணான், கருடன், செம்போத்து, மயில்.*

மயிலோடு கிளிப்பிள்ளை நாணுவானா
மகாசக்கிர வாகம்அன்னங் காக்காய் கோழி
அயிலோடு ஆந்தை குயில் காட்டுப்புறா வாகும்
அழகான வீட்டுப்புறா தானூர்க் குருவி
உயிலோடு அளுங்கு உடும்பு முதலை யாமை
உண்மைக்கல் லாமை கட்டெறும்பு பூநாகம்
இயிலோடு யிந்திரகோபப் பூச்சி கருநாகம்
எழில்பாம்பு நாகமாஞ் சர்ப்பமாமே. (211)

*கிளி, நாணுவான், சக்கிரவாகை, அன்னம், காக்கை, கோழி, ஆந்தை, குயில், காட்டுப்புறா, வீட்டுப்புறா, ஊர்க்குருவி, அளுங்கு, உடும்பு, முதலை, ஆமை, கல்லாமை, கட்டெறும்பு, பூநாகம், இந்திரகோபம், கருநாகம், பாம்பு, நாகம், சர்பம்.*

### விலங்கு, பறவை, பூச்சிகளுடைய குணங்கள்

ஆம் யானைத் தந்தமது வெடியுப்புக் கட்டும்
அதியபரிக் குளம்புக்கு அயமுமீயம்
ஓம்ஒட்டை ப்பிச்சுதனில் கெந்தகந்தான் மெழுகாம்
உறக்கழுதை யமுரி தனில் தாது சுத்தியாகும்
தேம்சிங்க மஸ்திதனில் செய சூதமாகுஞ்
சினரிஷபப்பிச்சுதனில் சாதிலிங்க மயினமாம்
மானின்கொம்புதனில் தோஷம் போகும்
மரியாட்டுக் கடாப்பிச்சில் மயினமாமே. (212)

*ஜீவராசிகளின் குணம்:- ஆனைத் தந்தம் வெடியுப்பைக் கட்டும், குதிரை குளம்பால் அயம் ஈயமாகும், ஒட்டகத்தின் பிச்சால், கெந்தகம் மெழுகாகும், கழுதையின் அமுரியில் தாதுக்கள் சுத்தியாகும். சிங்கத்தின் அஸ்தியில் செயசூதம் ஆகும். ரிஷபப் பிச்சில் சாதிலிங்கம் மயினமாகும். மான் கொம்பினால் தோஷங்கள் போகும், ஆட்டுக்கிடாய் பிச்சில் சரக்குகள் மயினமாகும்.*

மரிய வெள்ளாட் டமுரி மகோதரம் போகு
மகாபன்றிக் குட்டிதனில் சூதங் கட்டும்
நரிநாய்கள் மூளைதனில் நாகங்கட்டும்
நரியினுட மாங்கிஷத்தி லீயங்கட்டும்
குரிய குரங்குப்பிச்சில் தங்கம் நீறும்
கொடியவோ ணான்பிச்சி லீடுமாகும்
கெரியகெருடன் முட்டை ரசத்தைக்கட்டும்
கெடியான செம்போத்து ரசமயினமாமே. (213)

வெள்ளாட்டு அமுரியின் மகோதரம் போகும். பன்றிக் குட்டியினால் சூதம் கட்டும். நாய் மூளையில்தனில் நாகம் கட்டும். நரியின் மாமிசத்தில் ஈயம் கட்டும், குரங்குப் பிச்சில் தங்கம் நீறும், ஓணான் பிச்சில் ஈடுமருந்து முறியும். (ஈடு மருந்தாகும்) கெருடன் முட்டை ரசத்தைக் கட்டும், செம்போத்து ரசத்தை மயினமாக்கும்.

மயினமா மயில் நெய்யால் கெந்தி சிவப்பாகு
மகத்தான கிளியிறகி லீயமுருகி யாடும்
நயினமாம் நாணுவாந் முட்டையினில்திலகம்
நற்சக்கிர வாகமது நாகங்கட்டும்
அயினமாம் அன்னத்தில் கவனமாங்குளிகை
அருங்காக்காய் முட்டைதனில் கெந்தி கட்டுங்
குயினமாங் கோழி முட்டை சரக்கெல்லாஞ்சுன்னங்
கொடியாந்தை பாதாளத் திலதமாமே. (214)

மயில் நெய்யால் கெந்தி சிகப்பாகும், கிளியிறகில் ஈயம் உருகி ஆடும், நாணுவான் முட்டையினால் வசியதைலம் பலிதமாகும், சக்கிர வாகத்தால் நாகம் கட்டும். அன்னத்தினால் கெவுன குளிகை முடியும், காக்காய் முட்டையினால் கெந்தி கட்டும், கோழி முட்டையினால் சரக்கெல்லாம் சுண்ணமாகும், ஆந்தையினால் பாதாள அஞ்சனம் சித்தியாகும்.

திலதமாங் குயில்முட்டை பாஷாணஞ்சிவக்கும்
செயநாட்டுப் புறாவெச்சம் குருவுக் காதி
யிலதமாம் வீட்டுப்புறா வெளுப்பாகுஞ் சத்து
மிகத் தாராமுட்டைக்குக்கண் துலக்கமாகும்
உலதமா மூர்க்குருவி தம்பனையாகு
முணர்வான அளுங்குக்குள் சூதங்கட்டும்
பலதமா முடும்பு நெய்யில் பாஷாணங் கட்டும்
பாரமா முதலை நெய்யால் பாலரசமாமே. (215)

குயில் முட்டையினால் பாஷாணம் சிவக்கும், காட்டுப் புறா வெச்சம் குருவுக்கு ஆதியாகும், வீட்டுப் புறா வெச்சத்தால் சத்துகள் வெளுப்பாகும், தாராமுட்டையினால் கண் துலக்கமாகும், ஊர்க்குருவி யால் தம்பனமாகும், அளுங்குவால் சூதம் கட்டும், உடும்பு நெய்யில் பாஷாணம் கட்டும். முதலை நெய்யால் பாலரசம், சித்தியாகும்.

பாலமா மாமைக்குள் சூதங்கட்டும்
பாங்கான கல்லாமை நாகங்கட்டும்
காலமாங் கட்டெறும்பு விஷத்தை தீர்க்கும்
கடியபூ நாகத்தி லீயங்கட்டும்

ஈலமா மிந்திரகோபந் தங்கஞ்செம்பா
மெழிலான கருநாகஞ் சவ்வீரம்மெழுகாம்
தாலமாம் பாம்புக்குள் தாளகந்தான் கட்டும்
சற்பமாம் நாகப்பாம்பு சனவசியமாமே. (216)

*ஆமைக்குள் சூதம் கட்டும், கல்லாமையால் நாகங்கட்டும் கட்டெறும்பு விஷத்தை தீர்க்கும், பூனாகம் ஈயம் கட்டும். இந்திரகோபத்தால் தங்கம் செம்பாகும். கருநாகம் செவ்வீரம் மெழுகாகும். பாம்பினால் தாளகம், கட்டும், நாகப்பாம்பினால் சனவசியமாகும்.*

வசியமா மிருகத்தின் பேரு சொன்னேன்
மகத்தான பறப்பினமு மூர்வனவுஞ் சொன்னேன்
பிசியமாம் பேரதனைப் பிரித்துச் சொன்னேன்
பெருமையாம் பலாபலத்தைப் பிரித்துச் சொன்னேன்
குசியமாம் நாகரச கெந்தியுட குருவை
கூறவே குழந்தைகட்குங் குறிகள் காண
பசியவே பராபரத்தா யாண்மை யாலே
பண்பான குருவதனைப் பரிந்துகேளே. (217)

*மிருகத்தின் பெயர்களையும், ஊர்வனவற்றின் பெயகளையும், பறவைகளின் பெயர்களையும் பிரித்து சொன்னேன். அதனுடைய பயன்களையும் சொன்னேன். இப்பொழுது நாகரச கெந்தி இவற்றின் குருவை குழந்தைகளும் அறியும்படி பராபரத்தாயின் அருளால் கூறுகிறேன் கேள்.*

**சாரசெயநீர்**

பரிவான நாகமது பலந்தானெட்டு
பாங்காக யிலுப்பைநெய் யுருக்கிக்கொண்டு
கரிவான கல்லுருவிச்சாம்பல் பலம்நாலு
கனத்த அண்டத்தோல் சுன்னம் பலமும் நாலு
பிரிவான புளிப்பரலு சாம் பல்பலம் நாலு
பேர்மூன்று மெடைக்கெடைக்குச் சாரஞ்சேர்த்து
அரிவாக வறுசாமம் பழச்சாற்றி லரைத்து
அபமார்க்கச் சாம்பல் வைத்து யெரித்திடாயே. (218)

*நாகசுத்தி:- நாகம் எட்டு பலம் எடுத்து இலுப்பை நெய்யில் உருக்கிச் சாய்த்து எடுத்துக் கொண்டு பின்னர், கல்லுவிச் சாம்பல் நாலுபலம், அண்டத்தோல் சுண்ணம் நாலுபலம், புளிப்பறணி சாம்பல் நாலுபலம், இவை மூன்றின் எடைக்கும் சாரம் சேர்த்து ஆறு சாமம் பழச்சாற்றால் அரைத்து சாம்பலுக்குள் வைத்து எரித்து பனியில் வைத்தால் செயநீராகும்.*

எரித்திட்டுப் பீங்கானில் பனியில்வைக்க
ஏத்தமிட்ட ஆறுபோல் செயநீராகும்
விரித்திட்ட செயநீரில் வீரம்பூரம்
வெள்ளையென்ற பாஷாணம் விராகனெடைதூக்கி
அரைத்திட்ட செயநீரா லரைத்து மைபோல்
ஆண்மையாம் நீரதனில் கலக்கிக் கொண்டு
நரித்திட்ட நாகத்தை யுருக்கிச் சாய்த்து
நலமாக மூவேழு திறமுங் காணே. (219)

வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம், ஒரு விராகன் எடை சேர்த்து செயநீரால் அறைத்து தண்ணீரில் கலக்கி கொண்டு நாகத்தை இருபத்தோர் முறை உருக்கிச் சாய்க்க நாகம் சுத்தியாகும், நாகத்தை அப்பால் வைத்துக்கொண்டு பிறகு சூதசுத்தியை கேள்.

### நாகரச கெந்தகக் குரு

திறமான நாகத்தைப் புறம்பாய்வைத்து
தினைப்புல்லு நிழலுலர்த்திச் சுட்டசாம்பல்
முறமான முள்ளித் தண்டுச்சாம்பல்
மூர்க்கமாம் பிரண்டைசுட்ட சாம்பல் தானும்
வறமான வகைக்கிரண்டு படியளந்து
மாட்டப்பா பசுவினுட வமுரிதானும்
இறமான விருபத்து நாலுபடிவிட்டு
இழுத்து நன்றாய்க் கலக்கியே யிசைநாள் நாலே. (220)

சூதசுத்தி:- தினைப்புல்லு சுட்ட சாம்பல், முள்ளித்தண்டு சுட்ட சாம்பல், பிரண்டை சுட்ட சாம்பல், இவை எல்லாம் வகைக்கு இரண்டு படி எடுத்து பசுவின் அமுரி இருபத்து நாலு படிவிட்டு நன்றாக கலக்கி நான்கு நாள்

நாலாநாள் தெளிவிறுத்துப் பாண்டத்தூற்றி
நலமாக வடுப்பேற்றிக் காயும்போது
தூலான சூதமது பலந்தானெட்டு
தூக்கியே கொதிக்கையிலே கூடயிட்டு
தேலான தீபம்போல் சிறுக வெரியிட்டு
சிரங்கைநீர் நிற்கவே யிறக்கிக் கொண்டு
தாலான தண்ணீரில் கழுவி யெல்லாஞ்
சமர்த்தாக வெடுத்துமே புறம்பாய் வையே. (221)

தெளியவைத்து தெளிவை வேறு பாண்டத்தில் ஊற்றி அடுப்பேற்றி கொதிக்கும் போது எட்டுபலம் சூதம் எடுத்து கொதிக்கும் நீரில் போட்டு நீர் வற்றிய பிறகு சூதத்தை எடுத்து தண்ணீரால் கழுவி அப்பால் வைத்துக்கொள்ளவும். பிறகு கெந்தக சுத்தி முறைகேள்.

### கெந்தகசுத்தி

வைத்த பின்பு கெந்தகந்தான் சேருவொன்று
வளமான பிரண்டைச்சாற்றுத் தண்ணீராலே
அய்த்த பின்பு ஆறுநா ளரைத்து மைபோல்
அடவான ரவிதனிலே யுலரப்போட்டு
வைத்த பின்பு பால்வார்த்துச் சட்டிதன்னில்
பண்பாகச் சீலைகட்டிக் கெந்தகத்தை வைத்து
பொய்த்த பின்பு புடம்போட்டு யெடுத்துப்பார்க்க
பொன்மணிபோல் பாலுக்கு ளிறங்கும்பாரே. (222)

*கெந்தக சுத்தி:- கெந்தகம் ஒரு சேர் எடுத்து பிரண்டைச்சார் விட்டு ஆறு நாள் அரைத்து (மைபோல்) ரவியில் உலரப் போட்டு ஒரு சட்டிக்குள் பால் வார்த்து மேற்படி அரைத்து உலரப் போட்டதை துணியில் கட்டி சட்டிக்குள் வைத்து புடம்போட்டு எடுத்துப் பார்த்தால் பொன்மணிப்போல் சட்டிக்குள் இருக்கும். இதை அப்பால் வைத்துக் கொண்டு தாளகத்தின் சுத்தியை கேள்.*

### தாளகசுத்தி

இறங்கியதோர் கெந்தகத்தை யப்பால்வைத்து
எழிலாகத் தாளகந்தான் பலந்தான்பத்து
பிறங்கியதோர் கிளிபோலத் தளரக்கட்டி
கிளிஞ்சினீர் நடுவைத்து மேலுமூடி
கறங்கியதோர் கள்ளென்ற காடியாலே
கடிதாக நீற்றியே யிருபத்தொன்று
எறங்கியதோர் கழுவியே யெடுத்துவைத்து
ஏத்தமாஞ் சவ்வீரம் பலந்தா னஞ்சே. (223)

*தாளக சுத்தி:- பத்துபலம் தாளகத்தை எடுத்து துணியில் கட்டி கிளிஞ்சல் நீரின் நடுவில் வைத்து மேலே மூடி, காடி நீரால் இருபது முறை நீற்றித் தண்ணீரால் கழுவி அப்பால் வைத்துக் கொள், இனி சவ்வீர சுத்தியை கேள்.*

### சவ்வீரசுத்தி

அஞ்சான சவ்வீரந் துண்டு துண்டாய் வெட்டி
அழுத்தமாஞ் சீலை தன்னை அஞ்சடுக்கு வைத்து
துஞ்சான சவ்வீரம் டோளை போல் கட்டி
சுயம்பான பிரண்டைச்சாறு படியும் நாலு

கஞ்சான் காரைக்கொட்டி யிலையின்சாறும்
கலந்துமே நாலுபடி யொக்கவார்த்து
துஞ்சான சட்டியிலே வட்டம் போட்டு
டோளைகட்டி யெரித்திட்டுச் சுருக்காய் வாங்கே. (224)

*சவ்வீர சுத்தி:- சவ்வீரத்தை துண்டு துண்டாய் நறுக்கிக் கொண்டு அஞ்சுமடிப்பாக மடித்த துணியின் மத்தயில் வைத்து உருட்டி பிரண்டைச்சார் படி நாலும், காரைக்கொடி இலைச்சாறு நாலு படியும் சேர்த்து சவ்வீரத்தை டோலைப்போல் கட்டி எரித்து நீர் சுண்டிய பிறகு எடுத்துக் கொள்.*

வாங்கியே முன் நாகம் பலந்தா னேழு
மாசற்ற சூதமது பலந்தா னைந்து
தேங்கியே ரண்டுமொன்றா யுருக்கிச் சேர்க்க
சிந்தியதோர் மாப்போலப் பொடியுமாகும்
ஓங்கியதோர் கெந்தகமும் பலமு மைந்து
உயர்த்தியாந் தாளகமும் பலமு மூன்று
தாங்கியதோர் சவ்வீரம் ரெண்டரைப் பலந்தான்
சமர்த்தாகக் கல்வத்தில் பொடியாய்ப்பண்ணே. (225)

பாட பேதம் : சவ்வீரத் தொன்றரைப் பலந்தான்

*முன்சுத்தி செய்த நாகம் ஏழுபலம், சூதம் அஞ்சுபலம், இரண்டையும் ஒன்றாய் உறுக்கிக் கொண்டு மாவுப் போல் இடித்து கெந்தகம் ஐந்து பலம், தாளகம் மூன்று பலம், சவ்வீரம் ரெண்டரை பலம் எல்லாவற்றையும் கல்வத்தில் போட்டு இடித்து.*

பண்ணியே கற்றாழஞ் சாற்றினாலே
பரிவாக யிழுத்தரைத்து யெட்டு நாள்தான்
தெண்ணியே அயச்செம்புக் குள்ளே வைத்து
திருவாக அயச்செம்பு மேலே மூடி
நண்ணியே மண்சீலை நாலு செய்து
நலமாக வுலரவைத்துப் புடத்தைப் போடு
மண்ணியே மணல் மறைவி லிருபத் தொன்று
வளமாகப் புடம் போட்டு யெடுத்துப் பாரே. (226)

எட்டுநாள் அரைத்து, அயச் செம்புக்குள் வைத்து அயச்செம்பால் மேலே மூடி, மண்சிலை நன்கு செய்து உலரவைத்து மணல் மறைவில் வைத்து இருபத்தோர் முறை புடம்போட்டு எடுத்துப் பார்த்தால்

எடுத்திட்ட குருபாரு பஞ்சாக்கினி ருத்திரன்
எழிலான நாகாஸ்திரம் பாசுபதாஸ்திரம்
நடுத்திட்ட நடப்பினத்தில் பறப்பினத்தில்
நலமான வூர்வனத்தில் சொன்னபடி பரிட்சை
படுத்திட்ட பணிவிடைதான் குருவைப்போட
பாங்காய்ச் சொன்னபடி சித்தியாகும்
கடுத்திட்ட கட்டினங்க ளுருக்கினங்கள்
கோடிகாய சித்துக் கற்பாந்த மிருத்தும் பாரே. (227)

*பஞ்சாக்கினிருத்திரன், என்ற குரு பஸ்பம் கிடைக்கும், பஞ்சாக்கினி ருத்திரன் என்பது நாகாஸ்திரம், பாசு பதாஸ்திரம் போன்றது இதை நடப்பினத்திலும், பறப்பினத்திலும், ஊர்வனத்திலும் பரிபாஷையில் சொன்ன படி பண எடை போட்டால் சித்தியாகும். கட்டினங்கள் உருக்கினங்கள் எல்லாம் சித்தியாகும் காயசித்தியும் கைகூடும்.*

பாரடா காரசாரப் பேரைச் சொன்னேன்
பாஷாணப் பேர்சொன்னே னுபரசத்தைச் சொன்னேன்
மாரடா மலையிலுள்ள வதிசயத்தைச் சொன்னேன்
மகத்தான பெரியோர்க்கு வணக்கஞ் சொன்னேன்
மூரடா மூலிகையின் பேர் மறைப்புச் சொன்னேன்
முனையான வுப்பினுட கட்டைச் சொன்னேன்
நாரடா நடப்பினமு மூர்வனவுஞ் சொன்னேன்
நலமான பறப்பினமு நாட்டினேனே. (228)

*கார சாரத்தின் பெயரையும் மலையிலுள்ள அதிசயத்தையும் மகரிஷிகளான பெரியோர்க்கு வணக்கத்தையும், மூலிகையின் பரிபாஷை பெயரையும், உப்பினுட கட்டையும், நடப்பினம், ஊர்வனம், பறப்பினம் ஆகியவற்றின் பெயர்களையும் சொன்னேன்.*

### செகசால குருச் செந்தூரம்

நாட்டினேன் நாகரச கெந்தியுட குருவை
நாதாக்க ளொளித்திட்ட குருவைச் சொன்னேன்
தீட்டினே னம்புக்குள் கூர்மை போலச்
செகசாலக் குருவொன்று சொல்லக் கேளு
சூட்டினேன் சூதமது தானும் பத்து
சுத்தித்துப் பீங்கானில் விட்டு வைத்து
வீட்டினேன் வெடியுப்புப் பலந்தான் பத்து
மிடுக்கான சீனமது யிருபத்தஞ்சே. (229)

*செகச்சால குருச் செந்தூரம்:- நாகரச கெந்தியுட குருவையும் நாதாக்கள் மறைவாக வைத்த கருவையும், நான் கூர்மையான அம்பைப்போல் தெளிவாகச் சொன்னேன். இப்பொழுது செகச்சாலகுருவைச் சொல்கிறேன் கேள். சூதம் பலம் பத்து சுத்திசெய்து எடுத்துக் கொண்டு பிறகு ஒரு சட்டிக்குள் வெடியுப்பு பத்துபலம், சீனம் இருபத்தைந்து பலம்*

அஞ்சவே பொடி பண்ணிக் கலயத் திட்டு
அழகான வாலையென்ற சட்டிமூடி
உஞ்சவே யுளுந்தாலே சீலை செய்து
உத்தமமா மடுப்பேற்றித் தீயை மூட்டு
தெஞ்சவே முன்னீரை வேறே வாங்கு
செகப்பான தீநீரை சூதத்தில்விட்டு
மிஞ்சவே மூடிவைக்க மூன்று நாள்தான்
மேலாகப் பற்பத்தை யெடுத்துக் கொள்ளே. (230)

*இரண்டையும் பொடிபண்ணி வாலையில் போட்டு சீலை மண் செய்து அடுப்பேற்றி தீயை மூட்டி தீநீரை வாங்கி இந்த நீரை பீங்கானில் உள்ள சூதத்தில் விட்டு மூன்றுநாள் மூடி வைத்துப்பின் எடுத்துப் பார்த்தால் பற்பமாய் இருக்கும் அதை எடுத்துக் கொண்டு பிறகு,*

எடுத்தபின்பு மறுபடியுந் திராவகத்தை வார்த்து
ஏத்தமாஞ் சூதத்தில் விட்டு விட்டு
படுத்தபின்பு நீறியதோர் பற்ப மெல்லாம்
பாங்கான ரவிதனிலே யுலர விட்டு
கடுத்தபின்பு காசியென்ற மேருக் கேற்றிக்
கணக்காக வாலுகையின் மேலே வைத்து
அடுத்தபின்பு ஆறுநாள் தீயை மூட்டி
ஆறவிட்டு வுடைத்துமே வாங்கிக் கொள்ளே. (231)

*மீண்டும் சூதத்தை பீங்கானில் வார்த்து நீரைவிட்டு நீற்றி பற்பமாக்கி எடுத்துக் கொண்டு ரவியில் காயப்போட்டு காசிக் குப்பியில் அடைத்து வாலுகையின் மேலே வைத்து ஆறுநாள் தீயை எரித்துப்பின்*

வாங்கினால் காவிம்நிறமாகக் காணு
மறுபடியு முன்போலத் திராவகத்தை விட்டு
தேங்கியே மூன்றுநா ளானபின்பு
திறமான ரவிதனிலே காயப் போட்டு

தாங்கியே தங்கத்தில் நாகஞ் சாகத்
தவளமாம் பொடிபோல மாவாய்ப் போகும்
ஏங்கியே எட்டுக்கு வொன்று சேர்த்து
இசை வொன்றாய் மத்தித்து மேருக்கேற்றே. (232)

*ஆறவிட்டு பார்த்தால் காவிநிறமாக இருக்கும். இதனுடன் மீண்டும் தீநீரை விட்டு மூன்றுநாள் ஆன பின்பு ரவியில் காயப் போட்டு பிறகு தங்கத்தையும் நாகத்தையும் சேர்த்தால் தவளம் போல் ஆகும். இந்த தவளம் போல் ஆனதை எட்டுக்கு ஒன்று சேர்த்து நன்றாக மத்தித்து மேருக்கேற்றி*

ஏற்றியே தீமூட்டு ஆறுநாள்தான்
இதமாக முத்தீயுமாட்டு ஆட்டு
ஆற்றியே மேருவைத்தா னுடைத்துக்கொட்டி
அகிலமாங் கிண்டியிட்டுத் திராவகத்தை வாரு
நாற்றியே நாலுநாள் நிழலில் வைத்து
நலம்பெறவே ரவிதனிலே காயப் போடு
காற்றியே காசியென்ற மேருக் கேற்றி
கனமான வாலுகையில் வைத்திடாயே. (233)

*தீமூட்டி ஆறுநாள் எரித்து மேருவை உடைத்து மீண்டும் தீநீரைச் சேர்த்து நாலுநாள் நிழலில் வைத்து ரவியில் காயப்போட்டு காசி என்ற மேருக்கு ஏற்றி*

வைத்திட்டுத் தீயெரிப்பா யாறு நாள்தான்
மறவாமல் முத்தீயு மாட்டு மாட்டு
அய்த்திட்டு ஐந்துமுறை யிப்படியே செய்தா
லணுகிடிலோ நவலோக மேமமாகும்
உய்த்திட்டு ஒருநூற்றுக் கொன்றேயோடும்
ஒன்பதிலுந் தனித்தனியே வேதையாகும்
பய்த்திட்டுப் பணவி டைதான் பாலிலுண்ணப்
பதினாறு வயது போ லிருப்பான் றானே. (234)

*ஆறுநாள் எரித்து உடைத்து வாங்கி மீண்டும் முன்போல் தீ நீரை விட்டு நாலுநாள் நிழலில் வைத்து மேருவில் ஏற்றி எரிக்க வேண்டும். இவ்வாறு ஐந்துமுறை செய்தால் நவலோகமும் தங்கமாகும். இதைப்பணஎடை பாலில் உண்ண வயது பதினாறாரும்.*

தானென்ற செகச்சால குருவைத் தொட்டு
சகலசித்து மாடையிலே தாயே சொல்வாள்
வானென்ற ஆத்தாளை சக நித்தம் பாடு
வஸ்து சுத்தி நிரவியத்துக் கிடந்தான் பண்ணு

தேனென்ற சிவசொத்தை வறுமை போலுண்ணு
செகஜால முருத்தொட்டு செலவுபண்ணு
ஆனென்ற ஆத்தாளைத் தினமும்பூசி
அஷ்டமகா சித்தி யெல்லா மாடலாமே. (235)

இந்த செகசால குருவைத் தொட்டு சகல சித்தும் ஆடலாம். தாயே சொல்வாள் (நேரே வந்து சொல்வாள்) தினமும் ஆதாரத்தை பூசிக்க வேண்டும். வஸ்துவை சுத்தி செய்து பொன் செய்ய வேண்டும். செய்த பொன்னை சிவன் சொத்து போல் காத்து அதை விற்று ஆத்தாளை அனுதினமும் பூசித்து அஷ்டமா சித்தையும் ஆடு.


ஆமென்ற துரைச்சியைத்தான் பூசை பண்ண
அநேக நாள் செய்த தவ பலத்தாற் கிட்டும்
வாமென்ற பிரமனொடு விஷ்ணு ருத்திரன்
மகேசனொடு சதாசிவனுங் கணேசன் கந்தன்
ஏமென்ற விந்திரனும் சந்திரா தித்தர்
எழிலான காமனொடு அங்கிநந்தி
கோமென்ற குபேரனொடு கும்பமுனியுங்
கூரரிய முனிரிஷிகள் பூசித்தாரே. (236)

தாயைப் பூசை பண்ணும் பாக்கியம் பூர்வ ஜென்மத்தில் செய்த தவப்பயனால் தான் அமையும், அப்பேர்பட்ட தாயை பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், சதாசிவன், மகேஸ்வரன், கணேசன், கந்தன், இந்திரன், சூரியன், சந்திரன், காமன், அங்கி, நந்தி, குபேரன், கும்பமுனி மற்றும் சித்தர்கள் ரிஷிகள் எல்லோரும் பூசித்தார்கள்.

பூசித்த குருவென்றால் மூலநாயர்
புகழ்படைத்த காலாங்கி ருஷபதேவர்
தேசித்த மச்சரொடு சின்மயமாந்
தேவர் சிறந்த ரிஷிபதஞ்சலியும் வியாக்கிரபாதர்
கோசித்தி கோரக்கர் கஞ்சமலைச்சித்தர்
கொங்கணருஞ் சங்கிரமாமுனி ராமதேவர்
மாசித்த ரிஷி தேவ ரனேகர் கோடி
மகத்தான தேவியைத்தான் பூசிப்பாரே. (237)

மேலும், திருமூலர், காலாங்கி, ரிஷப தேவர், மச்சமுனி, சின்மயதேவர், பதஞ்சலி, வியாக்கிரமர், கோரக்கர், கஞ்சமலைச் சித்தர், கொங்கணவர் சங்கரமாமுனிவர், ராமதேவர், மஹாசித்தர்கள், முனிவர்கள் எல்லாம் யுகங்கள் கணக்கில் (பூசித்துக் கொண்டும் இருக்கிறார்கள்).

# வாலை பூஜா யந்த்ரம்


57
46
38
56
47
39
50
49
13
8
14
7
3
4
9
12
1
6
10
2
11
5
16
25
17
23
24
32
31
58
55
60
53
54
37
45
52
40
48
41
34
42
57

1.பாலா றீங்காரம், 2. ஐம் திரத்தியம்பாள், 3. க்லீம் பிறிதியம்பாள், 4. ஸௌ, மனோபவா, 5. ஐம், காந்தி சக்தி, 6. க்லீம், கிர்த்தி சக்தி, 7. ஸௌம்: துஷ்டி சக்தி, 8. புஷ்டி சக்தி, 9. க்லீம் லஷ்மி சக்தி, 10. ஸௌ : சரஸ்வதி சக்தி, 11. ஓம், 12. ந, 13, ம, 14, சி, 15, வ, 16. ய, 17. அம், அஸிதாங்கபைரவர், 18. இம் குரு பைரவர், 19. உம், சண்ட பைரவர், 20. ரும் க்ரோத பைரவர், 21. லும் உன்மத்த பைரவர், 22. ஐம் கபால பைரவர், 23. வும் பீஷண பைரவர், 24. [ ஹம் ] சம்ஹார பைரவர், 25. ஆம், பிரம்மி, 26. ஈம் மஹேஸ்வரி, 27. ஊம், கௌமாரி, 28. ரூம் வைஷ்ணமி, 29. லூம் வராஹி, 30. ஐம் மகேந்திரி ( இந்திராணி ) 31. ஔம் சாமுண்டி, 32. அ : லஷ்மி, 33. அம் அணிமா, 34. மம் மஹிமா, 35. லம், லகிமா, 36. கம் கரிமா, 37. ஈம் ஈஸத்துவம், 38. வம் வஸித்துவம், 39. பம் பரகாமியம், 40. பும், புத்திமுத்தி, 41. ஸரஸ்வதி, 42. கிருபா, 43. சேர்ந்திருந்தா, 44. மாயா, 45. வனதுற்கி, 46. காளிகா, 47. ஸ்வாஹா, 48. சுமங்கலா, 49. இந்திரன் (லம்), 50. ரம் அக்னி, 51. யம் யமன், 52. க்ஷம், நிருதி, 53. வம், வருணன், 54. யம் வாயு, 55. ஸம், ஸோமன், 56. ஹம் ஈசானன், 57. கணேசன், (கங்), 58. தும், துர்கா, 59. ஸம் ஸரஸ்வதி, 60. க்ஷம், சேஷத்தபாலம்.

| | |
|---|---|
| 1. அனங்க குசுமா, | 2. அனங்க மேகலா, |
| 3 அனங்கமதனா, | 4. அனங்க மதனதாரா, |
| 5. அனங்க ரேகா, | 6. அனங்க வேகினி, |
| 7. அனங்காங்குசா | 8. அனங்க மாலினி |

படத்தில் உள்ள எண்களில் அந்தந்தப் பெயர் களை எழுதி தியானிக்க வேண்டும். சக்கரத்தில் பெயர்களையே எழுத வேண்டும்.

பூசித்த சக்கரத்தின் போக்குகேளு
புகழான நடுமையம் விந்து விட்டு
மூசித்த முக்கோண மேலே யிட்டு
முயற்சியது மேலேயறு கோண மிட்டு
வாசித் தவளைய மொன்று யிதழ்தானெட்டு
வாகாக மூன்று வரை வாசல் நாலு
மாசித்த மாயி யவளி ருந்த வீடு
வரிசையாய்க் கீறிடவே வண்மை யாமே. (238)

*சக்கரபூசை:- சக்ரபூசை சொல்கிறேன் கேள். முதலில் ஒரு விந்து இட்டு அதன்மேல் ஒரு முக்கோணத்திற்கு மேல் அறுங்கோணம் வரைந்து வட்டம் இடவேண்டும். அந்த வட்டத்தின்மேல் எட்டு இதழ் வரைந்து பிறகு நான்கு வாசல்கள் கொண்ட மூன்று அரைகள் வரையவேண்டும் இதுதான் ஆயியான தாய் இருக்கும் வீடாகும்.*

வண்மையாஞ் சொர்னமென்ற தகட்டுக்குள்ளே
வரைந்திடுவா யில்லாட்டால் பிம்பம்பண்ணு
பண்மையா யில்லாட்டால் பலகைதனில்கீறு
பலகையது யில்லாட்டால் பற்பத்திற்கீறு
விண்மையாம் விந்துவிலே றீங்காரமாகும்
விசைந்த திரி கோணத்தில் மூலமாகும்
அண்மை யறு கோணத்தில் மூலத்தை மாறு
அதற்கிடையில் ஓம்நமசி வாயமாமே. (239)

*இந்த சக்கரத்தை தங்கத் தகட்டிலே அல்லது பலகையில் அல்லது பஸ்மத்திலே (விபூதியிலே) வரையல்வேண்டும். விந்துவான நடுவில் (றீங்காரம்) இட்டு முக்கோணத்தில் மூலமான ஓங்காரத்தை (அங்-உங்-மங்) நாட்டி அதன் மேல் உள்ள அறுங்கோணத்தில் ஓம்-ந-ம-சி-வ-ய என்ற அக்ஷரங்கள் இட்டு, பிறகு*

**வயிரவர்**

ஆமென்ற வெட்டிதழி லஷ்டவயிரவரை
அமர்த்தியே யவரவர்கள் பீசம்வைத்து
கோமென்ற வீதிதனில் சத்தியுண்டு
கொள்கும்நால் வாசல்தனில் தேவதைகள் உண்டு
வேமென்ற அவரவர்கள் பீசம்விட்டு
மீறாம லேழுவா வரணத்துள்ளும்
காமென்ற பூசைசெய்து கற்பங்கொண்டு
கடிதான சிவ[illegible]ாசங் கருதிப்பாரே. (240)

*எட்டு இதழ்களில் அ[illegible]-வயிரவர்களின் பீசத்தை இட்டு அரைகளிலும், நான்கு வாசல்[illegible] அந்த அந்த தேவதைக்கு உரிய பீசங்களை*

இட்டால் ஏழு ஆவரணங்கள் கொண்ட தேவியின் சக்கரமாகும். இந்த சக்கரத்தை பூசை செய்து கற்பம் மேகாண்டு சிவயோகம் புரிய வேண்டும்

பாரென்று விந்துவிலே பாலாசத்தி
பரையினுட வம்மென்ன பகரப்போறேன்
சேரென்ற மொழியாட்கு வயதோ பத்து
சூரியனுஞ் சந்திரனு மகா திலதத் தோடு
கோரென்ற ஞழிகொடி மேனிக்காந்தி
கூறியதா அத்தத்தில் குறிப்பைக்கேளு
ஆரென்ற அபயமொடு வரதமாகும்
அழகான திருமுறையுஞ் செபவடமுந்தானே. (241)

விந்துவில் (பிந்துவில்) உள்ள பாலா சத்தியை பற்றி கூறுகிறேன் கேள். சத்தியானவள் பத்து வயதை உடைய பெண் உருக்கொண்டவள், சூரிய சந்திரர்கள் அவள் காதில் உள்ள தோடுகளாகும்.

அவளுடைய மேனி கோடி சூரிய காந்தியை கொண்டது. மேலும் வேதபுஸ்தகம், செபமாலை ஆகியவற்றை கையில் ஏந்தியவளாகவும், அபய வரத முத்திரைக் கரங்களை உடையவளாகவும், இருப்பாள்.

தேவியென்ற மனோ பாலாதேவி தன்னை
செபித்துமே மூலத்தால் தியானம் பண்ணி
பூவினொடு புஷ்பமே யர்ச்சித் தேத்தி
போற்றி செய்து வறுகோணப் பிரிவைக் கேளு
காவினொடு காந்திசத்தி கீர்த்தி சத்தி
கனதுஷ்டி சத்தியொடு புஷ்டிசத்தி
ஈவியென்ற யிலட்சுமியாஞ் சத்தியோடு
எழிலான சரஸ்பதியாஞ் சத்திதானே. (242)

வாசனை திரவியம், சந்தனம் ஆகியவற்றை பூசிய மேனி கொண்டவளாகவும் விளங்குவாள் விந்துவிலே (பிந்துவிலே) நின்று பிரகாசிக்கும் தாயின் மகிமையை எவரும் காணார். அதன்பின் முக்கோணத்தின் உள்ளே நிற்கும் சக்திகளைப் பற்றிக் கூறுகிறேன். காந்தி சத்தி, கீர்த்தி சத்தி, துஷ்டிசத்தி, புஷ்டி சத்தி, லட்சுமிசத்தி, சரஸ்வதி சத்தி.

தானென்ற சந்தனமுஞ் சாந்தும்பூவுஞ்
சகலரத்தி னாபரணந் தரித்துவிம்மி
வேனென்ற விந்துவிலே விரைந்துநின்ற
விளங்கியதோர் தாயினுட விரிவுகாணார்

மானென்ற முக்கோணத் துள்ளேநிற்கும்
வண்மையாஞ் சத்தியுட வளப்பங்கேளு
தேனென்ற திரியம்பா தேவியோடு
செம்மையாம் பிருதிவியம்பா தேவியாங்காணே. (243)

*முக்கோணத்தில் நிற்பார்கள் அந்த தேவிகளை அவர்களுடைய மூலமந்திரத்தால் தியானம் பண்ணி புஷ்பத்தால் அர்ச்சனை செய்யவாயாக. இவர்களும் மூலசக்தியான அன்னையின் பெருமையை உணரமாட்டார்கள். முக்கோணத்தில் நிற்கும் சத்திகள் திரியம்பா. பிறிதியம்பா தேவிகளாவர்.*

### அட்டமாசத்திகள்

காணப்பா ஆறுவரை சத்திதன்னால்
கடைத்தேற வேணுமென்று தியானம்பண்ணு
பூணப்பா மூலத்தால் செபத்தைப்பண்ணி
போற்றிசெய்து அடிவணங்கி புஷ்பந்தூவி
தாணப்பா வட்டவிதழ் காம்பில்நிற்குந்
தனித்துநின்ற வாவரண சத்திகேளு
ஆணப்பா அனங்ககுசுமா சத்தியாகும்
அனங்கமே கலைசத்தி யப்பாற்கேளே. (244)

*இந்த ஆறுசத்திகளையும் நான் கடைத்தேற வேண்டும் என்று தியானம் பண்ணி பிறகு அவரவர் (மூலமந்திரத்தால்) செபம் செய்து போற்றி அடிவணங்கி, புஷ்பம் தூவி வணங்க வேண்டும். பிறகு எட்டு எட்டு இதழின் காம்புகளில் வசிக்கும்ஆவரண சத்திகளைப் பற்றி கூறுகிறேன் கேள்: அனங்குஸுமா, அனங்க மேகலா,*

கேளென்ற அனங்கமதனா சத்தியாகும்
கிளரனங்க மதனதாரா னங்கரேகா
வேளென்ற அனங்கவேகினி சத்தியாகு
மிடுக்கான அனங்கிசையோ டனங்கமாலினியாம்
ஏளென்ற யெண்மர் சத்திதன்னைப் போற்றி
யேற்றமா மூலத்தால் செபத்தைப்பண்ணி
போளென்ற புஷ்பத்தா லர்ச்சித்தேத்தி
போற்றிசெய்து பின்புசெய்யும் பிரிவுபாரே. (245)

*அனங்கமதனா, அனங்க மதனாதாரா, அனங்கரேகா, அனங்க வேகினி, அனங்காங்கிசா, அனங்கமாலினி, இந்த எட்டு சத்திகளும் எட்டு இதழ்களின் காம்பில் வசிக்கும் சத்திகளாகும். இவர்களை போற்றி மூலமந்திரத்தால் செபம் பண்ணி புஷ்பத்தால் அர்ச்சனை செய்து வணங்க வேண்டும்.*

**தேவதைகள்**

பிறிவான வெட்டிதழாம் நடுவினுள்ளே
    பேர்பெரிய வயிரவ சத்தியெண்மர்
சிறிவான பிராமணி சத்தியோடு
    செயமான மயேஸ்பரி சத்தியாகும்
கறிவான கவுமாரி வைஷ்ணவி வராகி
    கனமான யிந்திராணி சாமுண்டி லட்சுமி
அறிவான சக்தியெண்மர் சத்திபீசம்
    அஷ்டயிதழ் நடுவுக்கு ளமர்த்தி வையே. (246)

*எட்டு இதழ்களின் நடுவில் இருக்கும் எட்டு விதமான வயிரவ, சத்திகளைப் பற்றிக் கூறுகிறேன். பிராமணி (பிராஹ்மீ), மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி, லஷ்மி இந்த எட்டு விதமான சத்திகளின் பீசத்தை எட்டு இதழ்களில் எழுது.*

அமர்த்தியே தேவியுட மூலத்தாலே
    யர்ச்சித்து அடிபணிந்து புஷ்பந்தூவி
சமர்த்தியே யிதழ்நுனியில் நிற்குகின்ற
    தரியமாம் வடுகனுட பேரைக்கேளு
கிமர்த்தியே யசிதாங்க வயிரவரோடு
    சீரான குருவயிரவர் தானுமாகும்
குமர்த்தியே சண்டவயிரவர் தன்னோடு
    குரோத பயிரவரோடுவுன் மத்தராமே. (247)

*அவரவர் மூல மந்திரத்தால் செபம் செய்து புஷ்பம் தூவி அர்ச்சித்து அடி வணங்க வேண்டும். பிறகு இதழ்களின் நுனியில் நிற்கின்ற வடுகனுட பெயர்களைக் கூறுகிறேன். (வடுகள் என்றால் பயிரவர் என்று பொருள்) அசிதாங்க பயிரவர், குருவயிரவர், குரோத பயிரவர், உன்மத்த பயிரவர்,*

ஆமென்ற கபாலபயி ரவரு மிருக்க
    அழகான பீஷ்மவயி ரவரு மாகும்
சாமென்ற சண்டபயிரவர் சங்கார பயிரவர் தன்னைத்
    தனித்தனியே இதழினுட னுள்நிறுத்தி
ஏமென்ற பீசத்தா லிருத்தி வைத்து
    ஏத்தமாம் வடுகனுட தியானம் பண்ணி
போமென்ற மூலத்தால் செபத்தைப் பண்ணி
    போற்றி செய்து அடிபணிந்து புட்பந் தூவே. (248)

*கபால பயிரவர், பீஷ்ம பயிரவர், சண்டபயிரவர், சங்கார பயிரவர் இந்த எட்டு பயிரவர்களின் பீஜத்தை இதழ்களின் நுனியில் எழுதி,*

*அவர்களைப் போற்றி மூலமந்திரத்தால் தியானம் செய்து புஷ்பம் தூவி அர்ச்சனை செய்து அடிபணிதல் வேண்டும்.*

தூவியே அசிதுரங்க பிராமணியாகுஞ்
சுத்த குரு பயிரவ மயேஸ் பரியுமாகுந்
தாவியே சண்ட வயிரவர் கவுமாரி
தனிக்கு ரோத வயிரவர் வைஷ்ணவி யுமாகும்
ஊவியே யுன்மத்த பயிரவர் வராகி
உத்தமமாங் கபாலவயிரவர் யிந்திராணி
ஏவியே பீஷ்ணவயிரவர்சாமுண்டி
பெரியசங் காரவயிரவர் லட்சுமிதானே. (249)

*1. பிராமணி என்ற சத்தியுடன் அசிதாங்க பைரவரும், 2. மயேசுவரி என்ற சத்தியுடன் குரு பயிரவரையும், 3.கவுமாரியுடன் சண்ட பயிரவரையும் 4. வயிஷ்ணவியுடன் குரோத பயிரவரையும், 5. வராகியுடன் உன்மத்த பயிரவரையும், 6. இந்திராணியுடன் கபால பயிரவரையும், 7. சாமுண்டியுடன் பீஷ்ண பயிரவரையும்,8. லஷ்மியுடன் சங்கார பயிரவரையும்,*

தானென்ற வயிரவர் பேர்தனி லொக்க
தனித்த வயிரவர்சத்தி தன்னைக் கட்டி
தேனென்ற மூலத்தா லர்ச்சித் தேத்தி
தெண்ட னிட்டு அடி பணிந்து தியானம் பண்ணி
வேனென்ற சதுரமுதல் வீதிநிற்கும்
மிடுக்கான தேவதையின் விவரங் கேளு
ஆனென்ற அதிகஅணி மா சத்தியாகும்
அதி மயிமா சத்தி லகிமா சத்தி யாமே. (250)

*அந்தந்த பயிரவரை அந்த சத்தி பீஜத்துடன் கூட்டி மூல மந்திரத்தால் தியானம் செய்து அர்ச்சித்து அடிபணிந்து வணங்க வேண்டும். பிறகு முதல் சதுர வீதியில் நிற்கும் தேவதையின் விவரங்களைப் பற்றிக் கூறுகிறேன். அணிமா சத்தி, லகிமா சத்தி, மகிமா சத்தி,*

சத்தி கிரிமா சத்தி யீ ஸத்துவா சத்தி
தனித்த வஸ்துமயி சத்தி பிரகாமிய சத்தி
நித்தியம் புத்தி முத்தி சத்தி யோடு
நேசித்து அவரவர் தான் பீசமிட்டு
பத்தியாம் பணிந்தேத்தி புஷ்பந் தூவி
மகாதேவி மூலத்தால் செபத்தைப் பண்ணி
அத்தியா சதுர.த்தில் ரண்டாம் வீதி
யமர்ந்திருந்த சத்தியுட வாண்மைகேளே. (251)

கரிமா சத்தி, ஈஸத்துவ சத்தி, வசித்வசத்தி, ப்ரகாம் யசத்தி, புத்திமுத்திசத்தி என்ற எட்டு வகை சத்திகளின் ஸ்தானத்தில் அவரவர் பீஜத்தை இட்டு புஷ்பம் தூவி மூலமந்திரத்தால் செபம் செய்து அஞ்சலித்து வணங்க வேண்டும். இதன் பிறகு இரண்டாம் சதுர வீதியின் சத்திகளைப் பற்றிக் கூறுகிறேன்.

ஆண்மையாஞ் சரஸ்பதியாந் தேவியோடு
அதிய கிருபா தேவி சேர்ந் திருந்த தேவி
வாண்மை யாந் தேவி வன துர்க்கி தேவி
மகாபத்திர காளிதேவி சுவாகாதேவி
தாண்மையாஞ் சுமங்கலா தேவியோடு
தனியெட்டுச் சத்தியுட தன் பீச மிட்டு
மேன்மையாய்ப் போற்றிப் புட்பந்தூவிப்
பேர்பெரிய மூலத்தால் செபத்தைப் பண்ணே. (252)

இரண்டாம் சதுர வீதியில் சரஸ்வதி தேவி, கிருபா, வனதுர்க்கி, பத்திரகாளிதேவி, சுவாகா தேவி, சுமங்கலா தேவி, அவரவர் ஸ்தானத்தில் அந்தந்த தேவிகளின் பீஜத்தையிட்டு புஷ்பம் தூவி அர்ச்சனை செய்து மூலமந்திரத்தால் செபம் செய்து அஞ்சலி செய்து அடிவணங்கவேண்டும்.

பண்ணியபின் எட்டிதழ் தான் வடுகனுட தளத்தில்
பண்பாகச் சார்ந்த வெளி யஷ்ட திக்குப் பாலர்
உண்ணியதோர் போதனையே யுரைக்கக்கேளு
வுதிட்டான விந்திரனோ டக்கினியாகும்
எண்ணியதோ ரேமனொடு நிருதிவருணன்
ஏற்றமாம் வாய்வோடு குபேரனீசானியன்
அண்ணியதோ ரவரவர்கள் பீசத்தாலே
யமர்த்தியே யர்ச்சித்துச் செபத்தைப்ண்ணே. (253)

வணங்கிய பிறகு எட்டு இதழ் கொண்ட வடுகனுட தளத்தில் நிற்கும் அஷ்டதிக்கு பாலர்களின் பெயர்களைச் சொல்கிறேன், இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்ற எட்டு திக்பாலர்களைப் போற்றி அவர்களுடைய இடத்தில் போட்டு புஷ்பம் தூவி அர்ச்சனை செய்து மூலமந்திரத்தால் செபம் செய்தல் வேண்டும்.

செபம் பண்ணிச் சதுரமாம் வாசலில் நிற்குந்
தேவதைகள் பேர்தனையே செப்பக் கேளு
கிபம் பண்ணிக் கிழக்கான வாசலுக் குள்ளே
கணேசனுட மந்திரங்க ளர்ச்சித் தேத்தும்

துபம்ண்ணித் தெற்கான வாசலுக் குள்ளே
    துர்க்கையைத் தானர்ச்சித்துத் தியானம்பண்ணி
மிபம்பண்ணி மேற்கான வாசலுக் குள்ளே
    வித்தை தருஞ் சரஸ்வதியைத் தியானித் தோதே. (254)

செபம் பண்ணிய பிறகு நான்கு புரம் உள்ள வாசலில் நிற்கும் தேவதைகளின் பெயர்களை சொல்கிறேன். கிழக்குப் புரம் உள்ள வாசலில் கணேசன், தெற்குப் புரம் உள்ள வாசலில் துர்க்கை, மேற்குப் புரம் உள்ள வாசலில் சரஸ்வதி,

ஓதியே வடக்காகும் வாசற்குள்ளே
    யுறுக்ஷேத்திர பாலரை த்தா னர்ச்சித் தேத்தி
வீதியே யவரவர்கள் பீசமிட்டு
    மிளிரான புட்பத்தா லர்ச்சித்தேத்தி
மூதியே மூலத்தால் செபத்தைப்பண்ணி
    மிகநிருதி மூலையிலே பிர்மதேவர்
பாதியே யவர்க்கான அட்சரத்தாலும்
    பணற்காயத் திரியாலு மர்ச்சித் தேத்தே. (255)

வடக்குப்புரம் உள்ள வாசலில் க்ஷேத்திர பாலரை அர்ச்சித்து த்தியானம் செய்து எந்திரத்தின் நான்கு வாசலில் அவரவர்கள் இடத்தில் அந்தந்த தேவதைகளின் பீஜத்தை எழுதி புஷ்பத்தாலும் காயத்திரியாலும் போற்றி வணங்க வேண்டும் நிருது மூலையில் பிரம்ம தேவரையும்,

ஏற்றியே வாயுவென்ற மூலைக் குள்ளே
    யிறுத்தியே விஷ்ணுவைத் தான் தியானம் பண்ணி
போற்றியே யவர்தமையே புகழ்ச்சி செய்து
    புஷ்பத்தா லர்ச்சித்து வுபசரிக்க
காற்றியே யீசான்ய மூலைக் குள்ளே
    காலாக்கினி ருத்திரரை ஆவா கித்து
தேற்றியே காளகண்ட சிவாய நமாவென்று
    செபித்துமே வுபசாரஞ் செய்திடாயே. (256)

வாயு மூலைக்குள்ளே விஷ்ணுவை தியானம்பண்ணி அவருடைய மந்திரத்தால் செபம் செய்து புஷ்பத்தால் அர்ச்சனை செய்து பிறகு ஈசான மூலைக்குள்ளே காலாக்கினி ருத்திரரை தியானம் பண்ணி, காளகண்டா சிவாயநம வென்று செய்ய வணங்க வேண்டும்.

செய்திடவே யக்கினியாம் மூலைக்குள்ளே
    செழித்தபற் பாசானத்தில் கந்தரைத்தான்
வைத்திடவே வள்ளிதெய் வானைபங்கன்
    மகத்தான பஞ்சாட்சுர மூலஞ் செபித்து

அய்த்திடவே யர்ச்சித்து புஷ்பந்தூவி
யடிவணங்கி யசுரர்குல காலாவென்று
உய்த்திடவே வள்ளிதொய் வானையைப் பூசித்து
உற்றுமே சோடசத் தாலுபசாரம் பண்ணே. (257)

*பிறகு அக்கினியின் மூலைக்குள்ளே பத்மாசனத்தில் சுந்தரை வள்ளி, தெய்வானை சமேதராய் வணங்கி சரவணபவாய நம என்று செபம் செய்து அசுரர் குலகாலா என்று போற்றி புஷ்பம் தூவி அர்ச்சனை செய்து உபசாரம் செய்ய வேண்டும்.*

பண்ணியே தெற்கான வாசல்முன்னே
பாதாள கிலீங்காரமன் மதனு மாகும்
வண்ணியே மேற்கான வாசல்முன்னே
மகத்தான யிறீங்காரம் வீர பத்திரர்க்கும்
அண்ணியே வடக்கான வாசல் முன்னே
அங்அரியர புத்திரராங் கிழக்கு
சண்ணியே சண்டேஸ்வ ராயாவென்று
சமர்த்தாக வர்ச்சித்துத் தியானம் பண்ணே. (258)

*பிறகு தெற்கு வாசலில் மன்மதனைப் போற்றி, மேற்கு வாசலில் வீரபத்திரரை போற்றி வடக்கு வாசலுக்குள்ளே அரிஹரபுத்திரரை போற்றி கிழக்கு வாசலில் சண்டேசுராய நமஹ என்று அர்ச்சித்து தியானம் செய்யவேண்டும்.*

தியானித்து அஷ்டயோனி அஷ்டகெருடன்
செய அஷ்ட மாநாகம் அஷ்டகெசங்கள்
தியானித்து அஷ்டபர்வதம் அஷ்டவசுதேவர்
அக்கினி யாதித்த சந்திர மண்டல மாகும்
மியானித்து மேக மண்டலம் வாய்வு மண்டலம்
மிக்க நட்சத்திர மண்டலம் நட்சத்திராதி
கயானித்துக் கைகுவித்து அஞ்சல் பண்ணிக்
கடாட்சிக்க வேணுமென்று அர்ச்சித் தேத்தே. (259)

*அதன்பிறகு அஷ்ட யோனி, அஷ்ட கருடன், அஷ்ட மாநாகம், அஷ்ட கெசங்கள், அஷ்ட பருவதம், அஷ்ட வசுதேவர், அக்கினி மண்டலம், ஆதித்த மண்டலம், சந்திர மண்டலம், வாயு மண்டலம், நக்ஷத்திர மண்டலம், நட்சித்திராதி இவையாவற்றையும் தியானம் பண்ணி கைகூப்பி அஞ்சலித்து கடாட்சிக்கு மாறு வேண்டி அர்ச்சனை செய்து*

அர்ச்சித்துக் கொள்ராசி சருவசக்கராதியாம்
அழகான சருவகெந் தருவர் அட்சர்
கெர்ச்சித்துக் கின்னரர் சருவசித்தர்
கெடியான சருவரிஷி சர்வயோகி
தர்ச்சித்துச் சர்வீ தேவர் நவக்கிரகங்கள்
சுர்வாண்ட லோகர் தமை யர்ச்சித்தேத்தி
சுர்ச்சித்துச் சோடசமா முபசாரத் தோடே
தியானித்து மூலமாஞ் செபத்தையோதே. (260)

*பிறகு இராசி மண்டலம், கெந்தருவர்கள், யட்சர்கள், கின்னரர்கள், சர்வ சித்தர்களையும், சர்வ ரிஷிகளையும், சர்வ யோகிகளையும், சர்வ தேவர்களையும், நவக்கிரகங்களையும், சர்வ அண்ட லோகங்களையும், அர்ச்சனை செய்து சோடச உபசாரம் செய்து செபம் செய்ய வேண்டும்.*

## தேவிபூசை

ஓதியே வுத்தமியைப் பூசை பண்ணி
யுகந்துநான் கேட்டவர மருளவென்று
சேதியே சொன்னாக்கா லாயி கேட்பாள்
செகசால மாட்டு வித்த திருட்டுத் தாய்தான்
போதியே தெட்சணத்தால் போற்றவேண்டாம்
பேரான வாமத்தால் போற்றிப் பூசி
சாதியே யிரண்டொழிய வேறே யில்லை
தாக்கிப்பா ரறுசமையச் சண்டிதானே. (261)

*தேவியை பூசை பண்ண:- செபம் செய்து உத்தமியான தேவியை பூசை பண்ணி, நான் கேட்ட வரம் அருள் என்று வேண்டினால் வரம் தந்து செகச்சாலத்தை சொல்லிக் கொடுப்பாள். தெக்ஷணத்தால் போற்ற வேண்டாம் வாமத்தால் போற்றி பூசிக்க வேண்டும். சாதி இரண்டே, இதைத் தவிர வேறு சாதிகள் இல்லை. சாதியைக் கொண்டு பிறசமயவாதிகள் தர்க்கிப்பார்கள்.*

தானென்ற வுட்சமய மாற துண்டு
தாண்டியபின் புறச்சமய மாற துண்டு
பானென்ற பனிரெண்டுக் கவளே தெய்வம்
பாதகர்தான் பெண்ணோடே பரிந்து மாய்வார்
தேனென்ற வஸ்து வைத்துப் பூசைபண்ணார்
செக மெல்லாங் கூத்தாடித் திரிவார்பாவி
வானென்ற வறுமை வந்து சுற்றிக் கொண்டு
வஸ்து சுத்தி கிடையாமல் மாளுவாரே. (262)

உள்சமயம் ஆறு, புறச் சமயம் ஆறு ஆக பன்னிரண்டு சமயத்திற்கும் அவளே தெய்வம். பாதகர்கள் பெண்ணோடு பரிந்து சாவார்கள். தேன் போன்ற வஸ்துகளை வைத்துப் பூசை செய்ய மாட்டார்கள். உலகம் எல்லாம் சுற்றித் திரிந்து வஸ்து சுத்தி கிடைக்காமல் மாளுவார்கள்.

மாளாம லிருக்க வல்லோ கற்பஞ்சொன்னேன்
வறுமைவந்து தாக்காமல் வாதஞ் சொன்னேன்
மீளாம லிருக்க வல்லோ யோகஞ் சொன்னேன்
மிரட்சியாய்த் திரியாமல் ஞானஞ் சொன்னேன்
கேளாமல் கெவன மெல்லாந் திரிவதற்கு
குளிகையுட குண மெல்லாங் குறிப்பாய்ச் சொன்னேன்
நாளான அம்பரத்தை யறிவதற்கு
நாட்டினேன் தேவியுட பூசை தானே. (263)

மாளாமல் இருக்கத்தான் கற்பம் சொன்னேன். வறுமை அண்டாமல் இருக்க ரசவாதம் சொன்னேன். மிரட்சி வராமல் இருக்க ஞானம் சொன்னேன். மனம் அலையாமல் நிற்க யோகம் சொன்னேன். உலகமெல்லாம் சுற்றிவர இரச குளிகை சொன்னேன். அம்பரத்தை அறிவதற்குத் தேவியின் பூசையைச் சொன்னேன்.

**பூசைக்கானதிரவியங்கள்**

பூசைக்காந் திரவியத்தைப் புகலக் கேளு
பெரியதொரு கிரகத்தை ச்சுத்தி பண்ணி
தேசைக்காந் திசைக ளெட்டும் பெந்தம் பண்ணித்
திரிமூன்று கலசங்கள் பூசை பண்ணி
தூசைக்காந் தசங்கத்தைப் பூசை பண்ணி
துய்ய சடங்க நித்திய கர்ம முடித்துக் கொண்டு
ஆசைக்காம் ஐந்துபாத் திரத்தைப் பூசி
யாராதனைத் திரவியங்கள் சாபம் போக்கே. (264)

பூசைக்கான திரவியங்கள்:- பூசைக்கு வேண்டிய திரவியத்தை சொல்கிறேன் கேள். ஒரு பெரிய வீட்டை சுத்தம் பண்ணி, அஷ்டதிக் பந்தனம் செய்து, மூன்று கலசங்கள் ஸ்தாபித்து, பூசை செய்து சங்கை பூசை பண்ணி, பிறகு நித்திய கருமத்தை முடித்துக் கொண்டு ஐந்து பாத்திரத்தை பூசை பண்ணி ஆராதனை திரவியங்களின் சாபத்தை அகற்ற வேண்டும்.

போக்கியே யரிசி மாங் கனியுங் காயும்
பொருந்திய நெருப்பு நீர் விறகு வுப்பு
நோக்கியே நெய் பாலு ந்ததியுந் தேனும்
நியமமாம் பசுவுனிட கோமியந்தான்

தேக்கியே கணபதிக்கு அபிஷேகஞ்செய்து
திறமான தீட்சைவிதி தெளிந்து வோது
தாக்கியே நூற்றெட்டு வுருவு மேத்தி
தப்பாமல் மயேஸ்வரியைப் பூசை யோதே. (265)

*அரிசி மாங்கனி, மாங்காய், நெருப்பு, நீர், விறகு, உப்பு, நெய், பால், தயிர், தேன், பசு, வராகி, ஞானி, மச்சம், அண்டம், தோசை, பணியாரம் முக்கோண தீபம் இவை எல்லாவற்றையும் பரப்பி வைத்து மந்திரத்தால் சாபம் தீர்த்து பின்னர் சந்திர சூரிய அக்னி இவை மூன்றையும் போற்றி குடத்திற்கு ஆதாரம் போட்டு தேவியை தியானித்து அஞ்சலி பண்ணி, சக்கரத்தின் சாபத்தினை போக்கி அஞ்சு பாத்திரத்தை வைத்து சூரியன், சந்திரன் இரண்டையும் பூசித்து பலவித சாபத்தை அகற்ற வேண்டும்.*

பாடபேதம் : சில நூல்களில் பின் இரண்டு வரிகள் கீழ் கண்டவாறு உள்ளன.

மாக்கியே மச்சமொடு அண்டந்தோசை
வடையோடு பணியாரஞ் சுசியன்தானும்
பாக்கியே பாதாளஞ் சுற்றி முக்கோணதீபம்
பரப்பிவைத்து மந்திரத்தால் சாபம் போக்கே.

**சாபம் போக்க**

சாபம்போம் வஸ்துவுக்கு மந்திரத்தால்
சந்திரர்கள் சூரியர்கள் சோதிச்சேறி
ஆபம் போங் கடத்துக்கு ஆதாரம் போட்டு
ஆயியைத்தான் தியானித்து அஞ்சல் பண்ணி
கோபம் போஞ்சக்கிர சாபத்தைப் போக்கி
சுப்பிரமாஞ் சுபாத்திரத்தை வைத்து
பாபம்போம் பானுமதி ரெண்டு பூசி
பலபலவாஞ் சாபங்கள் பரிந்துபோக்கே. (266)

*பின்னர் சந்திர, சூரிய, அக்னி இவை மூன்றையும் போற்றி குடத்திற்கு ஆதாரம் போட்டு தியானித்து அஞ்சலி பண்ணி, சக்கரத்தின் சாபத்தை போக்கி, அஞ்சு பாத்திரத்தை வைத்து சூரியன், சந்திரன் இரண்டையும் பூசித்து பலவித சாபத்தை அகற்ற வேண்டும்.*

பரிந்திடவே குருவொன்று வாதார மொன்று
பரிவான போகமென்று பெலிதா னொன்று
சரிந்திடவே சத்தியுட பாத்திர மொன்று
சார்வாகப் பூரித்து வெத்திலையால் மூடி

புரிந்திடவே புஷ்பமொடு அக்ஷதையைப் போட்டு
பேரான சடங்க விதி நியாசம் பண்ணு
மரித்திடவே மாதுற்கை நியாசம் பண்ணி
மகத்தான காமகண்ட நியாசம் பண்ணே. (267)

*பின்னர் குருவுக்கு ஒன்று ஆதாரத்துக்கு ஒன்று, போகத்திற்கு ஒன்று, பலிக்கு ஒன்று, சத்திக்கு ஒன்று, ஆக ஐந்து பாத்திரத்தை நீரால் நிரப்பி, பால்மூடி புஷ்பமும் அக்ஷதையும் போட்டு, சடங்கு நியாசம் செய்து, மாதுற்கா நியாசம் செய்து, காமகண்ட நியாசம் செய்ய வேண்டும்.*

நியாசமாம் அஞ்சுடா நியாசம் பண்ணு
நேரான கௌராகி நியாசம் பண்ணு
அயாசமாம் அங்கதனியாசம் பண்ணு
ஆதார நியாச மொடுங்குமா நியாசம்
பயாசமாம் நியாசங்களான பின்பு
பரிவான விந்தில் நிற்கும் பாலா சத்தி
தியாசமாம் சிறுபிள்ளை யிருந்த வீட்டில்
திரியக்ஷரந் திரிசதையா லருச் சித்தேத்தே. (268)

*பின்னர் அஞ்சுடா நியாசமும், அங்க நியாசமும், கரன் நியாசமும், விந்துவில் நிற்கும் பாலா சக்தியை சிறு பிள்ளை வடிவில் தியானித்து அக்ஷதையால் அர்ச்சிக்க வேண்டும். (அதன் பின்னர் ஆதார நியாசம் மற்றும் குங்கும நியாசம் செய்து)*

யேத்தியே மந்திர பிரதிஷ்டை பண்ணி
யேமாந்திரப் பிரதிஷ்டையொடு பிராணப்பிரதிஷ்டைபண்ணு
ஆற்றியே அபிஷேகம் அற்கியம் பாவித்து
ஆண்மையா மூலத்தாலற் சினை பண்ணி
தோத்தியே சுகந்த கெந்தந் தரித்து
தேனுவென்ற முத்திரை நமஸ்கார முத்திரை
மாத்தியே விபூதி தரித்து சோடச வுபசாரம்
மனது களங்கில்லாம லற்சிப்பாயே. (269)

*பின்னர் மந்திர ப்ரதிஷ்டையும் செய்து அபிஷேகம் பண்ணி அற்கியம் அளித்து மூலமந்திரத்தால் அர்ச்சனை செய்து சுகந்த பரிமள புஷ்பங்கள் சாற்றி, சந்தனம் பூசி, தேனு முத்திரையும் நமஸ்கார முத்திரையும் போட்டு விபூதி தரித்து, சோடசவுபசாரம் செய்து மனது களங்கமில்லாமல் அர்ச்சனை செய்ய வேண்டும்.*

அற்சித்துத் திறிகோணத் துள்ளேநின்ற
ஆதியாஞ் சத்திகட்கு வஸ்து சுத்தியீந்து
தற்சித்து சந்தனங்கள் சுகந்த நித்திய
தீபங்கள் தூபங்கள் பணிகள் மாறி
துற்சித்துத் தம்பன முத்திரையைக் காட்டி
துரிசான முதலாகும் பானமாகும்
வற்சித்து அறுகோணத்துள்ளே நின்ற
மாயியைத்தான் பூசித்து மாலைசூட்டே. (270)

*பின்னர் திரிகோணத்தில் நிற்கும் ஆதி சத்திகளைப் போற்றி வஸ்து சுத்தி யீந்து, சுகந்த பரிமளங்கள் தூப தீபங்கள் போன்ற உபசாரம் செய்து தம்பன முத்திரையைக் காட்டி, பிறகு அறுகோணத்தில் நிற்கும் தாயைப் போற்றி மாலை சாற்றி,*

சூட்டியே வஸ்துசுத்தி பதார்த்தம் வைத்து
தோத்தரித்துத் துரிய முத்திரையைக் காட்டு
வாட்டியே வட்டயிதழ் காம்பில் நிற்கும்
மாதாக்களைத் தோத்தரித்துப் புஷ்பஞ்சாத்தி
பாட்டியே பதார்த்தமொடு வஸ்துசுத்தி
பலதூப தீபங்கள் பணிகள் மாறி
ஆட்டியே அடிவணங்கி செபத்தைப் பண்ணி
அடந்த மச்ச முத்திரையை யழகாய்க் காட்டே. (271)

*வஸ்து, சுத்தி பதார்த்தம் போன்றவற்றை வைத்து துரிய முத்திரையைக் காட்டி, பிறகு அறுங்கோணத்தில் நிற்கும் தாயையும் எட்டு இதழ்காம்பில் நிற்கும் மாதாக்களையும் பூசித்து தோத்திரம் செய்து புஷ்பம் சாத்தி, பதார்த்த வஸ்து சுத்தி போன்றவைகளை வைத்து தூப தீபங்கள் காட்டி, அடி வணங்கி செபம் செய்து மச்ச முத்திரையைக் காட்டவேண்டும்.*

காட்டியே மூன்றாகும் பாணந்தாண்டி
கடிய அஷ்டஇதழ் நடுவில் நிற்குஞ் சத்தி
வாட்டியே வஸ்து சுத்தி பதார்த்தம் வைத்து
வட மாலை தீப தூப மாறி
கூட்டியே கோமுக முத்திரையைக் காட்டி
குவிந்து நின்று தோத்தரித்துச் செபத்தைப் பண்ணி
நாட்டியே நாலாகும் பாணந்தாண்டி
நலத்தயிதழ் நுனியில் நிற்கும் வயிரவராமே. (272)

*மூன்றாவது ஆவரணத்தை தாண்டி எட்டு இதழ் நடுவில் நிற்கும் சத்தியை போற்றி வஸ்து சுத்தி பதார்த்தம் வைத்து வடமாலை தூப தீபம்*

போன்றவைகளைக் காட்டி குவிந்த மனதுடன் செபம் செய்ய வேண்டும். பின்னர் நாலாவது ஆவரணத்தைத் தாண்டி இதழ் நுனியில் நிற்கும் வயிரவரைப் போற்றி

வயிரவற்கு வஸ்து சுத்தி யன்னம் வைத்து
மணமான சுகந்தாதி புஷ்பந் தூவி
தயிரவற்குத் தாம்புலச் சுருளமத்தித்
தண்மையாய்த் தோத்தரித்துத் தெண்டன் பண்ணி
கயிரவற்குச் சத்தியோ டொக்கப் பூசி
கனமான யோனி முத்திரையைக் காட்டி
அயிரவற்கு அஞ்சாகும் ஆபரண மாகும்
அப்பரமாஞ் சதுர முதல்வீதி சத்தியாமே. (273)

வஸ்து, சுத்தி அன்னம் வைத்து சுகந்த புஷ்பம் தூவி தாம்பூலம் வைத்து தோத்திரம் பண்ணி நமஸ்காரம் செய்ய வேண்டும். அதுமட்டும் இன்றி ஒவ்வொரு பைரவரையும் அவரவர்களுடைய சத்திகளுடன் சேர்த்து பூசிக்க வேண்டும். பிறகு யோனி முத்திரையை காட்டி அஞ்சாவது ஆவரணத்தைத் தாண்டி அதற்கடுத்துள்ள சதுரவீதி சத்திகளை பூசிக்க வேண்டும்

### ஆமென்ற வஸ்துக்கு

ஆமென்ற சத்திக்கு வஸ்துசுத்தி
அழகான புஷ்பத்தா லற்சித் தேத்தி
தேமென்ற தூப வுபசாரஞ் செய்து
செபம் பண்ணி சதுரத்தில் ரெண்டாம்வீதி
வமுமென்ற சக்திக்கு வஸ்துசுத்தி
வடையோடு மாங்கிஷங்கள் மாப்பண்டங்கள்
ஓமென்றே ஒக்க வைத்து புஷ்பந்தூவி
உறுதியாஞ் செபம் பண்ணி மூலமோதே. (274)

சதுர வீதியில் உள்ள சத்திக்கு வஸ்து சுத்தி வைத்து புஷ்பத்தால் அர்ச்சனை செய்து தூப திப உபசாரம் செய்து மூலமந்திரத்தை செபம் பண்ணி., பிறகு இரண்டாம் வீதியில் உள்ள சத்திகளை போற்றி வஸ்து சுத்தி, வடை, மாமிசங்கள், மாவுப் பண்டங்கள் எல்லாம் வைத்து புஷ்பத்தால் அர்ச்சனை செய்து மூலமந்திரத்தை செபம் பண்ண வேண்டும்.

ஓதிடவே யேழாகும் பாண மாகும்
உத்த நால் வாசலுக்குள் கிழக்கு வாசல்
காதிடவே கணபதிக்கு வஸ்து சுத்தி
கரும்போடு யிளநீருங் கதலி வைத்து

பாதிடவே பாத்திரத்தா லற்சித் தேத்திப்
பங்குரங்குங் கணபதிமந் திரஞ் செபித்து
கோதிடவே தோத்தரித்துத் தெண்டன் பண்ணித்
துடியாகுந் தெற்கான வாசல்தானே. (275)

ஏழு ஆவரணத்தை பூசித்த பிறகு நான்கு வாசலில் உள்ள தேவதைகளை பூசிக்க வேண்டும். முதல் வாசலான கிழக்கு வாசலில் கணபதிக்கு பூசை செய்து வஸ்து சுத்தி, கரும்பு இளநீர், வாழைப் பழம் இவைகளை வைத்து புஷ்பத்தால் அர்ச்சனை செய்து மூல கணபதி மூல மந்திரத்தை செபித்து தோத்திரம் பண்ணி சேவிக்க வேண்டும். பிறகு தெற்கு வாசலை பூசிக்க வேண்டும்.

தெற்கான வாசலுக்குள் துர்க்கை நிற்பாள்
செபம்பண்ணி வஸ்துசுத்தி யன்னம் வைத்து
அழகான புஷ்ப்த்தா லற்சித் தேத்தி
யதற்கடுத்த மேல்வாசல் சரஸ்வதியாகும்
வற்கான சோடசமா முபசாரம்பண்ணி
வஸ்துசுத்தி வடையோடு மகா புஷ்பங்கள்
தற்கான சகலவித்தை தருந்தாயே யென்று
தயாளமாய் தெண்டனிட்டு வடக்கிற்கேளே. (276)

தெற்கு வாசலில் துர்க்கையை பூசிக்க வேண்டும். அந்த துர்க்கைக்கு வஸ்துசுத்தி, அன்னம் இவைகளை வைத்து புஷ்பத்தால் அர்ச்சனை செய்து பிறகு மேற்கு வாசலில் உள்ள சரஸ்வதிக்கு பூசை பண்ண வேண்டும். சரஸ்வதிக்கு சோடச உபசாரம் செய்து வஸ்துசுத்தி வடை இவைகளை வைத்து நல்ல புஷ்பத்தால் அர்ச்சனை செய்து சகலவித்தை தருந்தாயே என்று அஞ்சலித்து வணங்கவேண்டும் பிறகு.

வடக்கான வாசலுக்குள் க்ஷேத்திர பாலர்
வடையோடு பணியாரம் வஸ்து சுத்தி
புடக்கான புஷ்பத்தா லருச்சித் தேந்தி
பெரியவு பசாரத்தா லாவாகித்து
நிடக்கான நிருதி யென்ற மூலைக் குள்ளே
நேமமாம் பிரமனைத் தான் அர்ச்சித்தேத்தி
கடக்கான காயத்திரி யிருபத்து நாலுங்
கனமாக வுச்சரித்துத் தியானம் பண்ணே. (277)

வடக்கு வாசலில் உள்ள க்ஷேத்திர பாலரை வடை பணியாரம் வஸ்துசுத்தி, இவைகளை வைத்து புஷ்பத்தால் அர்ச்சனை செய்து உபசாரங்கள் செய்து ஆராதித்து பின்னர் நிருதி மூலைக்குள்ளே பிரம்மனை அர்ச்சனை செய்து அவருடைய காயத்திரி மந்திரத்தால் தியானம் செய்து பின்னர்,

தியானமொடு வஸ்து சுத்தி பலகாரம் வைத்து
தீர்க்க வுப சாரசோ டசங்கள் செய்து
மயானமாம் வாயுவென்ற மூலைக்குள்ளே
மகா கெருடத் துவச விஷ்ணு வைச் செபித்து
பயானமாம் பஞ்சாயுதத் தியானம் பண்ணி
பானமொடு சுத்தி பல காரம் வைத்து
அயானமா மர்க்கிய பாத் திரங் கொடுத்து
அஞ்சலிபந் தனம் பண்ணி யப்பாற் கேளே. (278)

பலகாரம், வஸ்துசுத்தி, இவைகளை வைத்து சோடச உபசாரம் செய்து பிறகு வாயு மூலையில் உள்ள விஷ்ணுவைப் போற்றி அவருடைய பஞ்சாயுதங்களையும் தியானம் செய்து வஸ்துசுத்தி, பலகாரம் இவைகளை வைத்து அர்க்கியமும் பாத்தியமும் அளித்து அஞ்சலிக்கவேண்டும்.

அப்பாலா மீசான்ய மூலைக்குள்ளே
ஆலமுண்ட ருத்திரரை அப்பால்வைத்து
நப்பாலாம் பானமொடு சுத்தி திரவியம்
நலம் பெறவே பூசித்து அஞ்சலி பண்ணி
கப்பாலா மக்கினி யா மூலைக் குள்ளே
கந்தரொடு வள்ளி தெய் வானை தம்மை
முப்பான மொடு சுத்தித் திரவியம்
நலம் பெறவே பூசித்து சுத்திவையே. (279)

பிறகு ஈசான மூலையில் உள்ள ருத்திரரை தியானம் பண்ணி, பால், பானம், வஸ்துசுத்தி, திரவியம் இவைகளை வைத்து நலம் பெற பூசித்து வணங்க வேண்டும். பிறகு அக்கினி மூலைக்குள்ளே உள்ள முருகரையும், வள்ளி தெய்வானையையும், முப்பானம், வஸ்து சுத்தி திரவியம் இவைகளை வைத்து பூசிக்க வேண்டும்.

சுத்தியே தூபமொடு தீபமாறி
சோடசமா முபசாரந் தோத்தரித்து
அத்தியே ஆவாகனஞ் செய்த பின்பு
அதன் பிறகு வாசலுக்கு தெற்கே கேளு
மத்தியே மன்மதனை மந்திரத்தால் நிறுத்தி
வகை வகையாம் நைவேத்திய முபசரித்து
வெத்தியே வாசலுக்கு மேற்கே தானும்
வீரபத்திரர் தமக்கு யென்று வஸ்து ஈயே. (280)

மேலும் தூபதீபம் காட்டி, உபசாரம் செய்து தோத்தரித்து ஆவாகனம் செய்து பிறகு தெற்கு வாசலுக்கு முன்னே இருக்கும் மன்மதனை மந்திரத்தால்

ஆவாகனம் செய்து நைவேத்தியம் வைத்து உபசாரம் செய்து மேற்கு வாசலின் முன்னே உள்ள வீரபத்திரரைப் போற்றி, வஸ்துசுத்தி ஈந்து பின்னர்,

ஈய்ந்துமே வடக்குக்கு அரிஹர புத்திரர்
இயலாக அவர் தம்மையே பூசை செய்து
சாய்ந்துமே கிழக்குக்குச்ண் டேசுரர்தம்மைத்
தன்மையாய்ப் பூசை செய்து வுபசரித்து
ஆய்ந்துமே வஷ்ட தளஞ் சார்ந்த வெளிதன்னில்
அஷ்ட திக்குப் பாலர் தம்மை யர்ச்சித் தேத்தி
பாய்ந்துமே யஷ்ட யோனி யஷ்ட கெருடன்
பண்பான அஷ்டமா நாகந்தானே. (281)

வடக்கு வாசலின் முன்னே அரிஹர புத்திரனை பூசிக்க வேண்டும். கிழக்கு வாசல் முன்னே சண்டகேஸ்வரரை பூசை செய்து உபசாரம் செய்து பின்னர் அஷ்டதளத்தின் வெளியே நிற்கும் அஷ்டதிக்பாலர், அஷ்டகருடன், அஷ்டயோனி, அஷ்டமாநாகம்,

தானென்ற அஷ்ட கெஜம் அஷ்ட பர்வதம்
சமர்த்தான அஷ்ட வசு தேவராகும்
ஆனென்ற மண்டலங்க ளேழும்பூசித்
தப்பாலாய்க் கோள்ராசி தன்னைப்பூசி
சானென்ற சர்வ சாகர ராசியைப் பூசி
சர்வகெந் தருவருடன் றன்னைப் பூசி
பானென்ற அஷ்டாட்சரந் தன்னைப் பூசிப்
பண்பான கின்னரரைப் பூசித் தேத்தே. (282)

அஷ்ட கெஜம், அஷ்ட பர்வதம், அஷ்டவசு இவர்களை பூசித்து பின்னர் ஏழு மண்டலங்கள், கோள், ராசி, சர்வசாகரராசி, சர்வ கெந்தர்வருடன், அஷ்டாட்சரம், கின்னரர்கள் போன்றவர்களை பூசிக்க வேண்டும்.

ஏத்தியே சர்வசித்தர் தன்னைப் பூசி
யெழிலான சர்வ ரிஷி சர்வ யோகி
சாத்தியே சர்வதேவர் நவக்கிரக பதாயர்
சர்வண்ட லோகரொடு தம்மைப் பூசி
தோத்தியே சோடசமா முபசாரத்தால்
தோத்தரிச்சு வஸ்து சுத்தி பலகாரம் வைத்து
ஆத்தியே யடிவணங்கி தெண்ட னிட்டு
ஆன பின்பு தேவியைத்தான் தியானம் பண்ணே. (283)

*சர்வசித்தர், சர்வரிஷி, சர்வயோகி, சர்வதேவர், நவக்கிரகங்கள், சர்வாண்ட லோகத்தில் உள்ளவர்களை பூசித்து சோடச உபசாரம் செய்து வஸ்துசுத்தி, பலகாரம் இவைகளை வைத்து தெண்டன் இட்டு வணங்க வேண்டும். பின்னர் தேவியை தியானம் செய்ய வேண்டும்.*

பண்ணியே சக் கரத்திலமைத் திருந்த தையல்
பரையினுட வடிவமாய்த் தியானஞ் செய்து
வண்ணியே வாம காம பாத்திரம் வைத்து
வகையான தெட்சணை தாம் பூலம் வைத்து
திண்ணியே தியானித்து யர்ச்சித் தேத்தி
திரிமூர்த்தி மூன்று விரல் பாத்திர மேந்தி
குண்ணியே சுத்தியொடு குருவுக் கீய்ந்து
குணமான தூலமொடு சூட்சங் கேளே. (284)

*சக்கரத்தின் மத்தியில் உள்ள திருதாயாரான பராபரையை தியானம் செய்து வாம, காம, பாத்திரம் வைத்து தெட்சணை வெற்றிலை பாக்கு இவை எல்லாம் வைத்து தியானம் செய்து திரிமூர்த்திக்கு மூன்று வித பாத்திரம் வைத்து குருவாக தியானித்து சுத்தி வைத்து தூலத்தின் உண்மையும் சூட்சத்தின் உண்மையும்,*

கேளுநீ காரணமா மூன்ற தோதி
கெடியான சத்தியைநீ யலங்கரித்து
தாளுநீ யவள் கையிலே கடங் கொடுத்து
சாங்கமாய் அர்ச்சித்து கடத்தை வாங்கி
ஏளுநீ சத்தி யென்ற பாத்திரத்தை யீய்ந்து
ஈய்ந்த தொரு சேஷத்தைப் பானம் பண்ணி
நீளுநீ மூலத்தில் மனதை யூன்றி
நியம மதுபுரிந்து நிலைத்து வுண்ணே. (285)

*காரணத்தின் உண்மையும் கேட்டு ஆராய்ந்து சத்தியை அலங்கரித்து அவர் கையில் கடங்கொடுத்து அவளுடைய ஆசியுடன் கடத்தை வாங்கி பின்னர் சத்தி பாத்திரத்தை ஈந்து (பான பத்ரம்) கொடுத்த பாத்திரத்தில் உள்ள பானத்தை பிரசாதகமாக நினைத்து மூலத்தில் மனதைவைத்து உட்கொள்ள வேண்டும்.*

உண்டுமே யானந்த மான பின்பு
வுகந்துமே அன்னமொடு பலகாரம் பண்ணி
இண்டுமே சக்கரத்தை யிருதயத் துள்ளே
எழுந்தருள பண்ணியே யசையாமற் றான்

தண்டுமே சமாதிகொண்டு மூலத்தூதி
தாக்கான புருவமையங் கடந்து யேறு
கண்டுமே யெளிதாக மூலங் காணுங்
கன்னிய ரெட்டு லகிரியிலே காட்டுவாளே. (286)

உட்கொண்டால் மனது ஆனந்தக் களிப்பு அடையும், அதன்பிறகு அன்னம் மற்றும் பலகாரங்கள் போன்றவற்றை சாப்பிட்டு மேற்படி சக்கரத்தை இருதயத்தில் எழுந்தருளப் பண்ணி அசையாமல் சமாதியில் நின்று மூலாதாரம் முதல் ஆக்கினை வரை ஏற வேண்டும். இவ்வாறு பார்க்கும் போது மூலாதாரம் எளிதாகக் காணும் எட்டு சத்திகளும் மூலாதாரத்தில் பிரகாசிப்பார்கள்.

காட்டையிலே பளிச் சென்று மூலத்தி யானங்
கருதியதோர் சிகாரமது கோடி பானு
மூட்டையிலே பிறசத்தங் கேட்டு தானால்
மூலமது வெளியாக முறிந்து போகும்
நாட்டையிலே வற்சித்து நழுவிற் றானால்
நலமான தமர்வாசல் மூடிப் போகும்
ஓட்டையிலே யொரு நினைவாய்த் தாண்டி யேற
உகாந்தவரை சடமிருத்து முத்தியாமே. (287)


இந்த மூலத்தியானங் கோடி சூரியனைப் போல் பிரகாசிக்கும் இவ்வாறு சமாதியில் நிற்கும்போது சுற்றுப்புறங்களில் உள்ள சத்தம் கேட்டால் மூலாதாரம் பிரகாசிக்காது, வாசியின் சத்தம் கேட்காவிட்டால் மூலவாசல் மூடிக்கொள்ளும். இவ்வாறு இல்லாமல் ஒரு மனதாய் நின்று ஒவ்வொரு ஆதாரமாக ஏறினால் இந்த தேகமானது நிலைத்து நின்று முத்தி கிட்டும்.

முத்திக்கு வித்தான தாயைப் பூசி
மூவுலகுஞ் சஞ்சரித்துத் திரிய லாகும்
சத்திராந் தயாபரியின்கிருபை பெற்றால்
சாகாத கல்விகற்றுத் தேவனாவாய்
பத்தியாம் பஞ்சாட்சரம் பெற்று வாழ்வாய்
பலகாலுந் திரிந்தாலும் கிட்டா தப்பா
சித்திக்கு அறுபத்து நாலு மாகுந்
திரியலா மென்தாயார் பூசைவிதி முற்றே. (288)


முத்திக்கு ஆதிகாரணியான தாயை பூசிக்க வேண்டும். தாயாரரைப் பூசித்தால் மூன்று உலகும் சஞ்சரித்து திரியலாம். அறுபத்து நாலு சித்தும் ஆடலாம். கெவுனசித்தி கைகூடும். சித்தர்களுடன் திரியலாம். தாயாரின் மீதுள்ள பத்தியால் ஞானம் கிட்டும். மாயை அழிந்து விடும். எல்லாத்திக்கும் சுற்றித் திரியலாம் என் தாயாரின் பூசைவிதி முற்று.

# நாற்பத்து முக்கோண சக்கரம்


முதல் ஆவரணம்




1. அணிமா
2. லகிமா
3. மஹிமா
4. ஈசத்வம்
5. வசித்வம்
6. ப்ரகாம்யம்
7. புத்திஸித்தி
8. இச்சாசக்தி





| பைரவர்களின் சக்திகள் | பைரவர்கள் |
|---|---|
| 1. ப்ரம்மி | அஸிதாங்க பைரவர் |
| 2. மகேஸ்வரி | குரு " |
| 3. கௌமாரி | சண்ட " |
| 4. வைஷ்ணவி | க்ரோத " |
| 5. வராஹி | உன்மத்த " |
| 6. மஹேந்த்ரி | கபால " |
| 7. சாமுண்டா | பீஷண " |
| 8. மஹாலஷ்மி | சம்ஹார பைரவர் |





1. ஸர்வஸம் க்ஷோபினி
2. வித்ராவிணி
3. ஸர்வாகர்ஹிணி
4. ஸர்வவஸங்கரி
5. ஸர்வோன்மாதினி
6. மாஹாங்குசா
7. ஸர்வகேசரீ
8. ஸர்வ பீஜமுத்ரா
9. ஸர்வயோ நிமுத்ரா
10. த்ரிகண்டா

## இரண்டாவது ஆவரணம்





1. காமாகர்ஷிணி
2. புத்யாகர்ஷிணி
3. அஹங்காராகர்ஷிணி
4. சப்தாகர்ஷிணி
5. ஸ்பர்சாகர்ஷிணி
6. ரூபாகர்ஷிணி
7. 'ரஸாகர்ஷிணி
8. கந்தாகர்ஷிணி
9. சித்தாகர்ஷிணி
10. தைர்யாகர்ஷிணி
11. ஸ்ம்ருத்யாகர்ஷிணி
12. நாமாகர்ஷிணி
13. பீஜாகர்ஷிணி
14. ஆத்மாகர்ஷிணி
15. அம்ருதாகர்ஷிணி
16. சரீரா கர்ஷிணி.

## மூன்றாவது ஆவரணம்




1. அனங்க குஸுமா
2. அனங்க மேகலா
3. அனங்க மதனா
4. அனங்க மதனதுரா
5. அனங்க ரேகா
6. அனங்க வேகினி
7. அனங்காங்குசா
8. அனங்க மாலினி.


## நான்காவது ஆவரணம்




| | |
|---|---|
| 1. ஸர்வ ஸம் சேஷாபிணி | சக்தி |
| 2. ஸர்வவித்ராவிணி | " |
| 3. ஸர்வாகர்ஷிணி | " |

| | |
|---|---|
| 4. ஸர்வாஹ்லாதினீ | சக்தி |
| 5. ஸர்வ ஸம் மோஹணீ | " |
| 7. ஸர்வ ஜ்ரும்பினி | " |
| 8. ஸர்வ வசங்கரீ | " |
| 9. ஸர்வ ரஞ்சனீ | " |
| 10. ஸர்வவோன் மாதினி | " |
| 11. ஸர்வார்த்த ஸாதினி | " |
| 12. ஸர்வ ஸம்பத்திபூரணி | " |
| 13. ஸர்வ மந்த்ர மயீ | " |
| 14. ஸர்வ த்வந்த்வ க்ஷயங்கரீ | " |

## ஐந்தவாது ஆவரணம்







வெளிப் பத்துக் கோணம்

| | |
|---|---|
| 1. ஸர்வ ஸித்திப்ரதா | தேவீ |
| 2. ஸர்வ ஸம்பத்ப்ரதா | " |
| 3. ஸர்வ ப்ரியங்கரீ | " |
| 4. ஸர்வ மங்கள காரணி | " |
| 5. ஸர்வ காமப் ப்ரதா | " |
| 6. ஸர்வ துக்க விமோசனீ | " |
| 7. ஸர்வ ம்ருத்யுப் பிரசமணி | " |
| 8. ஸர்வ விக்ன நிவாரிணி | " |
| 9. ஸர்வாங்க ஸுந்தரா | " |
| 10. ஸர்வ ஸௌபாக்கிய தாயினி | " |


## ஆறாவது ஆவரணம்




உள் பத்துச் கோணம்


| | |
|---|---|
| 1. ஸர்வக்ஞா | தேவீ |
| 2. ஸர்வ சக்தி | " |
| 3. ஸர்வைச்வர்யப்ரதா | " |
| 4. ஸர்வக்ஞானமயீ | " |
| 5. ஸர்வவ்யாதி விநாசனீ | " |
| 6. ஸர்வாதார ஸ்வரூபா | " |
| 7. ஸர்வ பாபஹரா | " |
| 8. ஸர்வானந்தமயீ | " |
| 9. ஸர்வாரக்ஷா ஸ்வரூபிணி | " |
| 10. ஸர்வே: ப்ஸித பலப்ரதா | " |

## ஏழவாது ஆவரணம்




| | |
|---|---|
| 1. வசனியம்பா | சக்தி |
| 2. காமேஸ்வரி | " |
| 3. மோர்கினி | " |
| 4. விமலா | " |
| 5. அருணா | " |
| 6. ஜயினி | " |
| 7. ஸர்வேஸ்வரி | " |
| 8. கவுனி | " |

## எட்டாவது ஆவரணம்




முக்கோணம்

## ஒன்பதவாது ஆவரணம்

பிந்து லலிதாமஹா திரிபுரசுந்தரி

1. பாண சக்தி
2. தனு(சாபினி) சக்தி
3. பாச ஸக்தி
4. அங்குச ஸக்தி
1. மஹா காமேஸ்வரீ
2. மஹா வஜ்ரேச்வரீ
3. மஹா பகமாலினி
4. மஷாதிரிபுரஸுந்தரி,

# நாற்பத்து முக்கோண சக்கரம்



முழுத் தோற்றம்

முத்தான தாயாரைப் பூசை பண்ண
மூர்க்கமாம் நாற்பத்து முக்கோண மாகும்
சத்தான சிவன் தானும் நந்திக்குச் சொன்னார்
சார்பான நந்தியுமே மூலர்க்குச் சொன்னார்
சித்தான திருமூல நாயனார் தாமுஞ்
செப்பினார் காலாங்கி தேவருக்குத் தான்
கத்தான காலாங்கி நாயனார் சொன்ன
கடாக்ஷத்தால் கருணையாய் பாடினேனே. (289)

*தாயாரைப் பூசை பண்ண நாற்பத்து முக்கோண சக்கரம் வேண்டும். இந்தச் சக்கரத்தை சிவபெருமான் நந்திக்கு சொன்னார். நந்தி திருமூலருக்கு சொன்னார், திருமூலர் காலாங்கி நாதருக்கு சொன்னார், காலாங்கி நாதர் கடாக்ஷம் வைத்து எனக்கு சொன்னார். நான் இந்த நிகண்டிலே அதைச் சொன்னேன்.*

கருணையாங் காமாட்சி யிருந்த வீடு
கடிதான நாற்பத்து மூன்று கோணம்
வருணையாம் ரிஷி தேவர் சித்தர் யோகி
மகத்தான பஞ்சகர்த்தா ளக்கினி யாதித்தன்
அருணையாம் அகஸ்தியருங் கணேசன் கந்தன்
ஆத்தாளைப் பூசித்து அதிகார மானார்
கருணையாம் பூசித்துச் சமாதியிலேநின்று
தாயளிக்கச் சகல சித்துந் தரித்திட்டேனே. (290)

*கருணையுள்ளம் கொண்ட காமாட்சி இருக்கும் வீடு இந்த நாற்பத்து முக்கோண சக்கரமாகும். ரிஷிகள், முனிவர்கள், தேவர்கள், சித்தர்கள், பஞ்ச கர்த்தாக்கள், அக்கினி, ஆதித்யன், அகத்தியர், கணேசன், கந்தன் போன்றவர்கள் இந்த சக்கரத்தை பூசித்துதான் சகல அதிகாரமும் பெற்றார்கள். நானும் அவ்வாறே பூசித்து சமாதியில் நின்று சகல சித்தையும் அறிந்து கொண்டேன்.*

தரித்திட்ட சக்கரத்தைச் சாற்றக் கேளு
தண்மையாய் வளையம்போல் கீறிக்கொண்டு
அரித்திட்ட குறுக்கை யிட ரேகை தானும்
ஆதித்தன் ரேகையொன்று சோம னொன்று
தெரித்திட்ட செவ்வாயின் ரேகை யொன்று
செம்மையாம் புதனுடைய ரேகை யொன்று
குரித்திட்ட குருவினுட ரேகை யொன்று
குணமான சுக்கிரன்றன் ரேகை யொன்றே. (291)

சக்கரத்தை வரைகின்றமுறையைச் சொல்கிறேன். முதலில் ஒரு வட்டம் வரைந்து கொண்டு குறுக்காக ஒன்பது ரேகைகள் கீறவேண்டும். முதல் ரேகை ஆதித்தன் ரேகை, இரண்டாவது சோமன்ரேகை, மூன்றாவது செவ்வாயின் ரேகை, நான்காவது புதனின் ரேகை, ஐந்தாவது குருவின் ரேகை, ஆறாவது சுக்கிரன் ரேகை.

ஒன்றான காரியிட ரேகை யொன்று
    உத்தமமாம் ராகுவுட ரேகை யொன்று
கன்றான கேதுவுட ரேகை யொன்று
    கைம் முறையா யொன்பதையுங் குறுக்கே கீறி
வன்றான செவ்வாயின் ரேகை முனை ரண்டும்
    வாங்கியல்லோ கீழாகும் வளையத் தூடுந்
தன்றான சனியினுட ரேகை முனை ரண்டுந்
    தாக்கியல்லோ மேல்முகத்தின் வளையத் தூட்டே.(292)

ஏழாவது சனிரேகை, சனி, எட்டாவது! ராகுவின் ரேகை, ஒன்பதாவது கேதுவின் ரேகை. இந்த ஒன்பது ரேகையும் கீறிக் கொண்டு செவ்வாயின் ரேகை முனைரெண்டையும் வட்டத்தின் கீழ் வளையத்திலுள்ள சனியின் ரேகை முனைரெண்டையும் வட்டத்தின் மேல் வளையத்திலும் சேர்க்கவேண்டும்.

ஊட்டியே சோமனுட ரேகைமுனைரண்டும்
    உணர்வான கேதுவுட நடுமையத்தூட்டு
பூட்டியே கேதுவுட ரேகை முனைரண்டும்
    பிரிவான செவ்வாயின் மையந்தாக்கு
நாட்டியதோ ராகுவுட ரேகைமுனை ரண்டும்
    நலங்காமல் மேல்நோக்கி ரவிமையத்தூட்டு
ஆட்டியே ஆதித்தன் ரேகை முனை ரண்டும்
    அழகான சுக்கிரனார் மையத் தூட்டே. (293)

சோமனுட ரேகை முனை ரெண்டையும் கேது ரேகையின் மையத்திலும் கேது ரேகை முனை இரண்டையும் செவ்வாயின் மையத்திலும், ராகு முனை ரெண்டையும் ரவியின் மையத்திலும் ஆதித்தியன் ரேகை முனை ரெண்டையும் சுக்கிரனின் மையத்திலும் சேர்க்க வேண்டும்.

ஊட்டிடுவாய் சுக்கிரனாம் ரேகை முனை ரண்டும்
    உறுதியாந் திங்களுட மையத்தில் சேரு
பூட்டிடுவாய் புதனுடைய ரேகை முனை ரண்டும்
    புகழாக ராகுவுட மையத் தூட்டு

நாட்டிடுவாய் ராகுவின் ரேகைமுனைரண்டும்
நலியான சனி மையத் தூட்டிப் பாரு
ஆட்டிடுவா யாதித்தன் வளையத்துள்ளே
அதின் கீழே சோமனுட ரேகையாமே. (294)

*சுக்கிரனின் முனை ரெண்டையும் சோமனுட மையத்திலும் புதனுட ரேகை முனை ரெண்டையும் ராகுவின் மையத்திலும், குருவின் ரேகை முனை ரெண்டையும் சனியின் மையத்திலும் சேர்க்க வேண்டும். ஆதித்தின் ரேகையை வளையத்துள்ளே வட்டத்தை ஒட்டினாற்போல் கீற வேண்டும். அதன் கீழே சோமனும்.*

ஆமென்ற வதின் கீழே செவ்வாய் ரேகை
அழகாக வதின் கீழே புந்தி ரேகை
கோமென்ன வதின் கீழே குருவின் ரேகை
கூர்மையா யதின் கீழே வெள்ளி ரேகை
சாமென்ன வதின் கீழே சனியின் ரேகை
சதிரான வதின் கீழே ராகு வாகும்
வாமென்ன வதின் கீழே கேது ரேகை
வகுத் திந்தப் படி கீறி முனையிற் பாரே. (295)

*அதன்கீழே செவ்வாயும் அதன் கீழே புதனும், அதன் கீழே குருவும், அதன் கீழே வெள்ளியும், அதன் கீழே சனியும், சனிக்கு கீழே ராகுவும், ராகுவின் கீழே கேதுவின் ரேகையும் முறையாகக் கீறிப் பார்க்கவேண்டும்.*

பாரிந்தப் படிகீறி முனையின் மையம்
பகுத்த றிந்து முனையோடு முனைகள்கூட்டு
தூரிந்தப் படியறிந்து கீறிப் பார்த்தால்
சக்கரம்போல் திரிகோண முனைகள்காணும்
வாரிந்த நாற்பத்து முக்கோணத்தை
மகத்தான ஈசுரன்தான்பூசித்த மார்க்கம்
நாரிந்த் நந்தி குரு மூலர்க்குச் சொன்னார்
நாயனார் உரைத்தபடி நான் சொன்னேனே. (296)

*முறையாக கீறி ரேகையின் மையத்தினை அறிந்து முனையோடு முனைகள் சேர்த்துப் பார்த்தால் சக்கரம் போல் முக்கோண முனைகள் காணும். இந்த நாற்பத்து முக்கோண சக்கரத்தை சிவ பெருமான் தான் பூசித்து நந்திக்குச் சொன்னார். நந்தி திருமூலருக்குச் சொன்னார். திருமூலர் உரைத்தபடி நான் சொன்னேன்.*

சொன்னதோர் சக்கிரத்தின் கீழே கேளு
சுத்தமா யெட்டிதழ் ரெட்டிதழுமிட்டு
வின்னதோர் வளைய மிட்டு வெவ் வேறப்பா
மிக்கதோர் பூரேகை சதுரமாகும்
முன்னதோர் மூன்று வரை வரைந்து நீயும்
மிக்கதோர் வாசலது நாலு மிட்டு
அன்னதேர் திரிகோண மையத் துள்ளே
யழகாக விந்து விட்டு நடுவே கேளே. (297)

*சக்கரத்தின் கீழே (அதாவது புறம்பாக) எட்டு இதழ்களும் அதற்கு மேல் பதினாறு இதழ்களும், அதைச்சுற்றி வெவ்வேறு வளையங்கள் இட்டு அதன் மேல் சதுர ரேகை வரைந்து அதற்கு மேல் மூன்று வரை நான்கு வாசலும் இட்டு திரிகோண மையத்தில் விந்து இட வேண்டும்.*

கேளப்பா விந்துவிலே யிறீங்கார மாகும்
கெடிய சரு வானந்த மயச் சக்கர மாகும்
கேளப்பா திரிபுர மகா சுந்தரியாகுந்
தீயான விந்துவிலே விரைந்து நின்றாள்
தாளப்பா திரிகோணத் துள்ளே கேளு
தாயான திரிபுராம்பராள் சக்கர மாகும்
வேளப்பா விஷ்ணு சேவித்த விதமு மாகும்
வீற்றிருந்தாள் திரிகோணத் துள்ளே தானே. (298)

*இந்த விந்துவிலே 'றீங்' காரம் நிற்கும். இது சர்வ ஆனந்த மய சக்கரமாகும். திரிபுர மகா சுந்தரியாகப்பட்டவள் இந்த விந்துவிலே நிற்கிறாள் (திரிகோணத்துள்ளே) விந்துவின் மேலே நிற்கும் திரிகோணம் திரிபுராம்பாள் சக்கரம் என்று அழைக்கப்படும். விஷ்ணு சேவிதம் என்று வழங்கப்படும் இதில் தேவியானவள் வீற்றிருக்கிறாள். சர்வ சித்திப் பிரதாயகமான இதை சர்வ உபசாரம் கொண்டு பூஜிக்க வேண்டும்*

தானென்ற சர்வசித்திப் பிரதாயகமான
சக்கரமாஞ் சர்வவுபசார பூசிதமாம்
ஆனென்ற வஷ்ட மாங் கோணத் துள்ளே
அழகான சர்வ ரோக அர சக்கர மாகும்
தேனென்ற திரிபுரா சித்தர் சக்கர
சேிதசுவரி செகமெல்லாஞ் சிருஷ்டியாகும்
பூனென்ற பிரமசே விதமு மாகும்
பெரியவஷ்ட கோணத்தின் பிரிவுமாமே. (299)

அடுத்துள்ள அஷ்டகோணம் சர்வ ரோக ஹரசக்கிரம் என்று பெயர். மேலும் இதற்கு திரிபுரா சித்தர் சக்கரம் என்றும் பெயர். இதிலிருந்து தான் செகமெல்லாம் சிருஷ்டியாயிற்று. மேலும் இதற்கு பிரம சேவிதம் என்றும் பெயர் வழங்கப்படுகிறது.

பிரிவான வுள்பத்துக் கோணத் துள்ளே
பேரான சர்வாட்கர் காஞ் சக்கிரமாகும்
திரிவான திரிபுரா மாலினி யாகும்
சிருஷ்டி திரோபவ அனுபவ சங்காரி யாகும்
வெறிவான வெளி பத்துக் கோணத் துள்ளே
மிகுத்தசர் வார்த்த சாதக சக்கிரமாகும்
அறிவான திரிபுராசிரிச் சக்கிரமாகும்
ஆண்மையாம் பதி னான்கு கோணங் கேளே. (300)

இதற்கு அடுத்து உள்ள பத்துகோணம் உள்ள சக்கிரத்திற்கு ஸர்வ ரக்ஷாகர சக்கிரம் என்று பெயர். திரிபுரமாலினி என்றும் அழைக்கப்படும். மேலும் சிருஷ்டி திரோபவ அனுசங்காரி என்றும் இந்த பத்து கோண சக்கரத்தை அழைப்பார்கள்.

கேளுநீ சர்வ சௌபாக்கிய சக்கர மாகுஞ்
கீர்த்தியாந் திரிபுர வாகினி தானிற்கும்
ஆளுநீ யஷ்டதளத்துள்ளே கேளு
அழகான சர்வ சங்க்ஷோபமான சக்கர மாகும்
தேளுநீ திரிபுர சுந்தரி தானாகுந்
திடமான பதினாறு தளத்தி னுள்ளே
தாளுநீ சர்வாசா பரிபூரக சக்கர மாகுந்
தாயான திரிபுரசுந் தரியு மாமே. (301)

அதற்கு அடுத்துள்ள பதினாறு கோணங்கள் கொண்ட சக்கரத்தை சர்வ சௌபாக்கிய சக்கரம் என்று அழைப்பார்கள். திரிபுரவாகினி நிற்கும் அஷ்ட தளத்தை சர்வ சங்க்ஷபண சக்கரம் என்று அழைப்பார்கள். இதற்கு அடுத்துள்ள பதினாறு தள சக்கரம் சர்வாசா பரிபூரகசக்கரம் என்று அழைக்கப்படும்.

ஆமென்ற சதுரசீர் மூன்றுவரைக் குள்ளே
ஆண்மையாந் திரி லோக்கிய மோகன சக்கரம்
தேமென்ற திரிபுரா பர மேஸ்பரி யாகுஞ்
செப்பரிய நால் வாசல் தேவதை களுண்டு

போமென்ற பீடத்தின் தேவதையைக் கேளு
பெரியவாதார சத்தியாதி கூரம்
வாமென்ற யோகிகள் கணங்கள் சுற்றிநிற்கு
மகத்தான பீடத்துள் நிற்குஞ்சத்தி. (302)

பாடபேதம் : மாமென்ற அஷ்டமாநாக மொடு கிரியும் மாசத்த சமுத்திரமும் மருவிக் காணே

*அதற்கு அடுத்துள்ள மூன்று வரை கொண்ட சதுர கீற்றுக்கு திரிலோக மோகன சக்றுரம் என்று பெயர். மேலும் திரிபுர பரமேஸ்வரி என்று வழங்கப்படும் சதுரகீற்றிலுள்ள நான்கு வாசலிலும் தேவதைகள் உண்டு. இந்த சக்கரத்தின் பீடத்திலும் தேவதைகள் உண்டு. அவை ஆதாரசத்தி, அஷ்டமாநாகம் அஷ்டகிரி, சத்த சமுத்திரம் என்பவையாம்.*

மருவியே மாணிக்க மண்டபமு மாகு
மகாரத்தின் தீப மொடு கற்பக விருட்சம்
திருவியே சிந்தாமணி நந்தனத்தியானஞ்
செயலான மணிபூம் மரத்தின்வேதி
நரு விரத்திந சிங்கா தனஞ் சுவேத சத்திரம்
ஞானமொடு தர்மவை ராக்கிய மாகும்
அருவியே யயிஸ்வரியம் தர்மம் ஞானம்
அவ்வயி ராக்கியமொடு அயிசுவரியமாமே. (303)

*மாணிக்க மண்டபம், ரத்தின தீபம், கற்பக விருக்ஷம், சிந்தாமணி, மணி பூமரத்தின் வேதி, வீர சிங்காசன், சுவேதச் சத்திரம், ஞானம், தருமம், வயிராக்கியம், அயிசுவரியம்,*

ஆமேவன்னி மண்டலம் சூரிய மண்டலம்
அதிசோம மண்டலம் சத்துவாயமாகும்
நாமோசம் தாமசம் அஞ் ஞானம்மாயை
நல்ல கலாத்தும் நம் வித்தியாத்தும் னமுமாகும்
தரமேதுர்க் கா வித்தி யாயைப்பத்தும்
நாணமதத்து வரூபகரணிகம் பிரம்மரூபம்
வீமேவிஷ்ணு ரூபகம் ருத்திரை ரூபகம்
மிகையீசுர ரூபைகஞ் சதா சிவமு மாமே. (304)

*தர்மம் அக்னிமண்டலம், சூரிய மண்டலம், சோம மண்டலம், சமதாம சமஞ்ஞானம், மாயை, கலாத்துமனம், வித்தியாத்து மனம், துற்காவித்தியாயை, தத்துவரூப கறணிகம், பிரம்மரூபம் விஷ்ணுரூபகை, ருத்திர ரூபகை, ஈசுவர ரூபகை, சதாசிவ ரூபகை.*

ஆமென்ற அங்கிசத்து விகா தல்பமாகும்
அடுக்கான மகோத்துங்கவூபகமு மாகும்
வேமென்ற வமிர்தவாபி விமறதவாபி
மிக்க வானந்த வாபி தாய மாகும்
நாமென்ற மகாதிரங்க பரி காயை யாகும்
நல்லமிர்த வாரவம் போ தாம்புரசம்
தேமென்ற தேவியாத்மஞ் சர்வ சக்கிராசஞ்
செயசர்வ மந்திராச னாயந்தானே. (305)

*அங்கிஷத்து விகாதல்பம் மகோத்துங்கவூசும்பம், அமிர்த வாபி, விறசவாபி, ஆனந்தவாபி, மகாதிறங் கபரிகாயை, அமிதா வாரவம் போதபூசா, தேவியாத்துர் மஞ் சர்வ சக்கிராசம், சர்வ மந்திராசம்*

தானென்ற பீடத்தைச் சுத்தி நிற்குஞ்
சமர்த்தான தேவதைகள் பேருமாகும்
வானென்ற யோகினி கணங்கள் சுற்றிநிற்கு
மகத்தான பீடத்துள் நிற்குஞ்சத்தி
வேனென்ற மேற்புரத்தில் அணிமாசத்தி
மிக்கான வூத்தரத்தில் லகிமாசத்தி
கோனென்ற கீழ்ப் புறத்தில் மகிமா சத்தி
கிளர்ந்த யீ சத்து வசத்தி தெக்கணத்தில் தானே. (306)

*இவை எல்லாம் பீடத்தை சுத்தி நிற்கும் தேவதைகளின் பெயர்களாகும். முதல் கீற்றில் நிற்கும் சத்திகளின் பெயர்களை சொல்கிறேன். மேல் புறத்தில் அணிமா, உத்தரத்தில் லகிமா, கீழ்ப்புறத்தில் மகிமா தெக்ஷணத்தில் ஈசத்துவ சத்தி.*

சணவாய்வு மூலையிலே வசித்துவ சத்தி
தணவான யீசானியம் பிறகாமிய சத்தி
அணவக்கினி மூலையிலே புத்தி சத்தி
அணவான நிறுதியிலே யிச்சா சத்தி
குணதேவி கோட்டத்துள் நிற்குஞ் சத்தி
குறிப்பான வயிரவர்பே ரசினிதா ங்கராகும்
கெணபிரா மணி சத்தி கிழக்கே யாகுங்
கெடி யக்கினி மூலை குரு பயிரவ ராமே

*வாயுமூலையில் வசித்துவ சத்தி, ஈசான மூலையில் பிரகாமியசத்தி, அக்கினி மூலையில் புத்திசித்திசத்தி, நிருதி மூலையில் இச்சாசத்தி, இவை எல்லாம் முதல் பீடத்தில் நிற்கும் சக்திகளாகும். தேவி கோட்டத்துள் நிற்கும் சத்திகளின் பெயர்களை கூறுகிறேன். (அதாவது இரண்டாவது ரேகை) கிழக்கே அஸிதாங்க வயிரவருடன் பிராம்மணி சத்தி, அக்கினி மூலையில் குரு வயிரவருடன்.*

ஆமென்ற பயிரவர்க்கு மகேசியாகு
மடுக்கவே யமமூலைச் சண்டராகும்
நேமென்ற சண்டருக்கு கௌமாரி யாகும்
நிருதியா மூலைக்குள் குரோத பயிரவர்
சேமென்ற குரோதருக்கு வைஷ்ணவிதான்
கொடிதான மேற்குக்கு வுன்மத்தராகும்
வாமென்ற மத்தருக்கு வராகியாகும்
வாயுவுட மூலைக்குக் கபாலர்தானே. (308)

*மகேஸ்வரி சத்தி, யம மூலையில் சண்ட வயிரவருடன் கவுமாரி சத்தி, நிருதி மூலைக்குள் குரோத வயிரவருடன் வயிஷ்ணவிசத்தி, மேற்கு திசையில் உன்மத்த வயிரவருடன் வராகிசத்தி, வாயு மூலைக்குள் கபால வயிரவருடன்.*

கபாலருக்கு இந்திராணி கருதிப்பாரு
கனமான பீஷ்ண வயிரவர் சாமுண்டி
வபாலமாம் வடக்கினுட கோஷ்ட மாகு
மகத்தான யீசானம் சங்கர வயிரவர்
இபாலமா மிலட்சுமியாஞ் சத்தி யாகும்
என்தாயார் கோட்டத்தின் பீட சத்தி
கெபாலமாங் கிழக்கான பீடம் பேரு
கெடியான காமரூப பீட மாச்சே. (309)

*இந்திராணி சத்தி, வடகோஷ்டத்தில் பீஷ்ண வயிரவருடன் சாமுண்டிசத்தி, ஈசானத்தில் சங்கார வயிரவருடன் இலஷ்மி சத்தி, இவை எல்லாம் என்தாயாரின் கோட்டத்து பீடசத்திகளாகும். கிழக்கான பீடத்துக்கு காமரூப பீடம் என்று பெயர்.*

ஆச்சென்ற தெற்கான பீடத்துக்கு
அழகான குலாந்த ரச பீடமாகும்
வேச்சென்ற மேற்கான பீடத்துக்கு
மிடுக்கான காலாந்திச பீடமாகும்
வாச்சென்ற வடக்கான பீடத்துக்கு
மகத்தான வொட்டியாண பீடமாகும்
தாச்சென்ற சதுரசீர் மூன்றுவீதி
தையலுட பேர்தனையே சாற்றக் கேளே. (310)

*தெற்குப் பக்கமுள்ள பீடத்திற்கு குலாந்தரசபீடம் என்று பெயர். மேற்கு பக்கமுள்ள பீடத்திற்கு கலாந்திச பீடம் என்று பெயர். வடக்கு பக்கமுள்ள பீடத்திற்கு ஒட்டியாண பீடம் என்று பெயர். இதன் பிறகு சதுரக் கீற்றின் மூன்றாவது வீதியில் உள்ள தேவதைகளின் பெயர்களைச் சொல்கிறேன்.*

கேளப்பா மேல்முகத்தில் சர்வ சங்க்ஷோபிணியாங்
கெடியான வடமுகத்தில் சர்வ வித்திரா வணியாம்
தாளப்பா கீழ்முகத்தில் சர்வாக்ருக்ஷ்ணியாகுஞ்
சதிரான தென்புறத்தில் சர்வ சங்காரணி
வாளப்பா வாயுவுக்குள் சர்வவுன்மாதனியாம்
மகத்தான யீசானிய மகரங்கு சாவாம்
தேளப்பா வருணனிலே திரிகண்டாவாஞ்
செப்பரிய நிருதியிலே பீசமாமே. (311)

*மேல் முகத்தில் சர்வ ஸம்க்ஷோபிணி, வட முகத்தில் ஸர்வ வித்ராவிணீ, கீழ் முகத்தில் சர்வாகர்ஷினி, தென் புறத்தில் சர்வ சங்காரி, வாயு மூலையில் சர்வ உன் மாதனி (ஸர்வோன் மாதினீ) ஈசான்னியத்தில் மகராங்குசா, வருண மூலையில் திரிகண்டா, நிருதி மூலையில் பீஜமா,*

பீசமா மூர்த்து வத்தில் கேசரியாகும்
பெருமையாங் கீழுக்குள் யோனியாகும்
பாசமா மிதுப்பத்து முத்திரையாகும்
பண்பாக மூன்றுவரை யிருக்குஞ் சத்தி
ஏகமா மிதை விட்டு சோடசமாந் தளத்தில்
இருக்கின்ற சத்தியுட வியல்பு கேளு
காசமாங் காமாக்ருஷிணி யம்பாவாகுங்
கனத்த புத்தி யாகருஷணி யம்பாவாமே. (312)

*ஊர்த்வத்தில் கேசரி, கீழுக்குள் யோனி போன்ற பத்து முத்ரா சக்திகள் நிற்பார்கள். மூன்று வீதியில் உள்ள சக்திகளை பற்றி சொல்லிவிட்டேன். இதற்கு அடுத்துள்ள பதினாறு தளத்தில் உள்ள சக்திகளைப் பற்றிக் கூறுகிறேன். முதலில் காமா।கர்ஷிணி இதற்கு அடுத்து புத்யா கர்ஷிணி.*

அம்பாவாம் ஆங்காரா கருஷணியாகும்
அணிசத்தா கருஷிணி பரிசாகருஷணி
தும்பாலா ம்ரூபா கருஷணியுமாம்
நேயரசாக ருஷணி கெந்தாகருஷணி
திம்பாவாஞ் சித்தரகருஷணி தன்னோடு
சிரியதயிரியா கருஷணி மிருத்தியாகருஷணி
நம்பாவா நாமாகருஷணி பீசாகருஷணி
நலமான ஆத்துமா கருஷணியுமாமே. (313)

*அதன் பிறகு ஆங்காராகர்ஷிணி, அதற்கடுத்து சப்தா கர்ஷிணி, அதற்கடுத்து ஸ்பர்சாகர்ஷிணி, அதற்கடுத்து ரூபாகர்ஷிணி, அதற்கடுத்து*

ரஸாகர்ஷிணி, அதற்கடுத்து கெந்தா கர்ஷிணி, அதற்கடுத்து சித்தாகர்ஷிணி, அதற்கடுத்து தைர்யாகர்ஷிணி, அதற்கடுத்து ஸ்ம்ருத்யா கர்ஷிணி, அதற்கடுத்து நாமாகர்ஷிணி, அதற்கடுத்து பீசாகர்ஷிணி, அதற்கடுத்து ஆத்மாகர்ஷிணி.

அணியமிர்தா கருஷணி சரீராகருஷணி
ஐயுமாங் கிலியொடு சவ்வு மாகும்
தணியான அட்சரத்தை தளத்தில் சாத்தித்
தாய்மாரை யஞ்சல் பண்ணிச் சாற்றக் கேளு
பணியான பதினாறு தளத்தில் நின்ற
பரமான தேவதையைப் பணிந்து போற்றி
எணியெட்டுத் தளத்தில் நிற்குஞ் சத்திப்பேரை
யியம்பிடக் கேளி ரண்டாம் ஆவரணமாச்சே. (314)

அதற்கடுத்து அம்ருதாகர்ஷிணி, அதற்கடுத்து சரீராகர்ஷிணி என்று பதினாறு சக்திகள் நிற்பார்கள். இந்த பதினாறு தளத்தில் ஐம்-க்லீம்-ஸௌம் என்ற அக்ஷரத்துடன் எழுதி தாமரையில் உள்ள சத்திகளை அஞ்சலித்து போற்ற வேண்டும். பின்னர் எட்டு தளத்தில் உள்ள சத்திகளின் பேரைச் சொல்கிறேன் கேள். இதுவரை இரண்டு ஆவரணங்கள் முடிந்தது மூன்றாவது ஆவரணத்தைக் கூறுகிறேன் கேள்.

ஆச்சென்ற அங்குசமாஞ் சத்தி கிழக்கு
அனங்க மே கலாசத்தி தெட்சணத்தில்
மேச்சென்ற அனங்க மதனா மேற்காகும்
மேவிய வனங்க மதன துராவடக்கு
நேச்சென்ற வனங்க ரேகா வா மக்கினி
நிருதியிலே அனங்கவே கினியுமாகும்
வாச்சென்ற வாயுவிலே யனங்காங்கு சாவா
மகாவனங்க மாலினியீ சானிய மாமே. (315)

கிழக்கில் அங்குமாங் தெக்ஷணத்தில் அனங்கமேகலா மேற்கில் அனங்கமதனா, வடக்கில் அனங்க மதனாதுரா, அக்கினி மூலையில் அனங்கு ரேகா, நிருதியில் அனங்க வேகினி, வாயுவில் அனங்காங்குசா, ஈசானியத்தில் அனங்க மாலினி.

ஆகுமே யஷ்டதளத் திருக்குஞ் சத்தி
அட்சதை யங்கங்கே மாத்தி வைப்பாய்
தேகுமே சிறிங்குறிங் கிலியுமாகுஞ்
செபஞ்செய்து தோத்தரித்து தெண்டம் பண்ணி
மூகுமே மூன்றாகும் ஆவரணங் கண்டு
மூலத்தை யுச்சரித்து அப்பாற் கேளு
பாகுமே பதினாலாங் கோணத் துள்ளே
பதிவாக யிருந்தசத்தி பண்பு கேளே. (316)

*அஷ்ட தளத்தில் நிற்கும் சத்திகளின் அக்ஷரத்தை அந்தந்த இடத்தில் எழுதி, சிறீங் குறீங் கிலீம் என்று தோத்திரம் செய்து செபம் பண்ணி மூன்றாவது ஆவரணத்தின் பூசையை முடித்துக் கொண்டு பதினாலு கோணங்களைக் கொண்ட நான்காவது ஆவரண சத்திகளைப் போற்ற வேண்டும்.*

கேளுமே சர்வசங்கேஷாபிணி சத்தியோடு
கிளர்சர்வ விந்தி ராணி சத்தியாகும்
தாளுமே சர்வாக ருஷ்ணசத்தி
சர்வயிலாதன சத்தி யுமாகும்
நாளுமே சர்வசம் மோகினியாஞ்சத்தி
நளினசர்வ ஸ்த்தம்பன ரூபிணியாகும்
வாளுமே சர்வசிரம்பண சத்தி யோடு
மகாசர்வ சங்காரண சத்திதானே. (317)

*கோண சத்திகளின் பெயர்களைச் சொல்கிறேன் (இது நாலாவது ஆவரணமாகும்) சர்வஸம் க்ஷோபிணிசத்தி, ஸர்வ விந்திரா விணி சத்தி, ஸர்வாகர்ஷண சத்தி, சர்வாயுலாதன சத்தி சர்வசம் மோகினி, சர்வஸ்தம் பன சத்தி, ஸர்வ சிரம்பண சத்தி, ஸர்வ வசங்காரண சத்தி.*

சத்தியாஞ் சர்வாசன சத்தியோடு
சர்வவுன் மாத சுருபிணி சத்தியாகும்
நித்தியாஞ் சர்வார்த்த சாதகி சத்தி
நிகழ் சர்வ சம்பத்தி பூரணி சத்தி
பத்தியாஞ் சர்வ மந்திர மீசத்தி
பகர் தொந்த க்ஷயங்கரி சத்தியாகும்
அத்தியாம் பதினான்கு கோணத்துள்ளே
யமர்ந்திருந்த சத்தியரை யர்ச்சித்தேத்தே. (318)

*சர்வரஞ்சன சத்தி, ஸர்வவுன் மாதினி சத்தி (சர்வவுன் மாதசுருபிணி) ஸர்வார்த்தஸாதகி சத்தி, ஸர்வ ஸம்பத்தி பூரணி, சர்வ மந்திரமீ சத்தி, ஸர்வத்தொந்தவ க்ஷயங்கரி (தொந்த க்ஷயங்கரி) போன்ற பதினாலு சத்திகளை*

ஏத்தியே யட்சரத்தை யிலவுங் கிலியும்
இசவ்வும் என்றெழுதி யேற்றமாக
வாற்றியே நாலாகும் ஆவரணங்கண்டு
மயங்காதே மூலத்தால் செபத்தைப் பண்ணி
தோற்றியே சோடசமா முப சாரத்தால்
தொழுதிறைஞ்சி வெளிப்பத்துக் கோணத்துள்ளே
பாற்றியே பதித்திருந்த சத்தியான
பரையினுட பேர்தனையே பகரக்கேளே. (319)

*அந்தந்தக் கோணத்தில் அமர்த்தி ஐம்-க்லீம்-ஸௌம் என்று எழுதி மூலத்தில் செபித்து அர்ச்சனை செய்து சோடச உபசாரங்கள் செய்து அதன் பிறகு வெளிப்பத்து கோணங்களில் உள்ள சத்திகளை வணங்க வேண்டும்.*

பகரவே சர்வசித்தி பிறதாதேவி
பண்பான சர்வ சம்பத்து பிற பூரணிசத்தி
தகரவே சர்வப் பிரியங் கரிதேவி
சர்வ மங்கள காரணி சத்தியாகும்
நகரவே சர்வகாமப் பிரதாதேவி
நலத்த சர்வதுக்கவி மோ சனியுமாகும்
புகரவே சர்வமிறுத்தியுப் பிரகமணியாகும்
பெரியசர்வ விக்கினநிவா ரணியுமாச்சே. (320)

*வெளிப்பத்து கோணங்களில் உள்ள சத்திகளின் பெயர்கள் என்னவென்றால் ஸர்வஸித்திப்பிரதா தேவி, சர்வ ஸம்பதப்ர பூரணி, ஸர்வப்பிரியங்கரி தேவி சர்வமங்கள காரணி சத்தி, ஸர்வகாமப் பிரதா, ஸர்வ துக்க விமோசனி, ஸர்வம் ருத்யுப் பிரசமணி ஸர்வ விக்கின நிவாரணி.*

ஆச்சென்ற சர்வாங்க சுந்தராதேவி
அதிக சௌ பாக்கியதா யினியுமாகும்
வேச்சென்ற வெளிபத்துக் கோணத்துள்ளே
விரைந்து நின்ற தேவியைத் தான் அர்ச்சித் தேத்தி
பாச்சியே யட்சரத்தைப் பத்துக் குள்ளே
பதியிசவ் வுங்கிலியும் யிசவ்வுமாகத்
தோற்றியே செபம்பண்ணித் தொழு திறைஞ்சிச்
சோடசமா முபசாரம் பண்ணு பண்ணே. (321)

*ஸர்வாங்க சுந்தரா தேவி, ஸர்வ சௌபாக்கிய தாயினி, போன்ற பத்து தேவிகளை அந்தந்த இடங்களில் நிறுத்தி (ஹ்ஸைம்-ஹ்ஸ்க்லீம்-ஹ்ஸ்-ஸௌம்) என்று ஜெபித்துப் போற்றி சோடச உபசாரம் செய்வாயாக*

பண்ணியே பஞ்சவா பரணங்கண்டு
பகரரிய வுள பத்துக் கோணத் துள்ளே
எண்ணியே யிருக்கின்ற சத்திகளைக் கேளு
எழிலான சர்வஞ்ஞாம்பர தேவியாகும்
தண்ணியே சர்வசத்தி யம்பாவாகுஞ்
சர்வஅயிஸ் வரியப் பிர தாயினி சத்தி
கண்ணியே சர்வக்கியானமயி சத்தி யாகுஞ்
சர்வவியாதி விநாசன சத்திதானே. (322)

*ஐந்தாவது ஆபரண பூசையை முடித்துக்கொண்டு உள்பத்து கோணத்தை பூசை பண்ண வேண்டும். உள்பத்து கோணத்தில் உள்ள சத்திகளின் பெயர் ஏதென்றால் ஸர்வஞ்ஞம்பரதேவி, ஸர்வ சத்தி தேவி, ஸர்வ அயிஸ்வர்ய பிரதாயினி சத்தி, சர்வக்யான மயீசத்தி சர்வ வியாதி விநாசினி சத்தி,*

தானென்ற சர்வாதார சுருபாசத்தி
சர்வபாவ ஹராசத்தி தேவியாகும்
கானென்ற சர்வானந்த மயிசத்தியாகுங்
கடியசர்வாட்சர சுரூபிணி யாகும் சத்தி
பானென்ற சர்வேப்பி சித பலப் பிரதாசத்தி
பாங்கான வுள்பத்தில் பதியவைத்து
தேனென்றே யர்ச்சித்துப் புட்பந்தூவி
சோடசமா முபசாரஞ் செய்திடாயே. (323)

*ஸர்வாதார ஸ்வரூபா தேவி, ஸர்வ பாவஹரா சத்தி, ஸர்வானந்த மயீதேவி, ஸர்வேப் பிசித பலப் பிரதாசத்தி, இந்தப்பத்து சத்திகளையும் உள்பத்து கோணத்தில் எழுதி அர்ச்சனை செய்து புஷ்பம் தூவி, சோடச உபசாரம் செய்ய வேண்டும்.*

செய்திடவே சூழ்ந்திருக்கு மட்சரத்தைக் கேளு
செயமான இறீங்கிலிங் பிலேங்கவுமாகும்
முய்திடவே மூலத்தால் செபத்தைப்பண்ணி
முயற்சியா யாறுவா பரணமாகும்
எய்திடவே யெட்டாகுங் கோணத்துள்ளே
யிருக்கின்ற சத்திதனை யியம்பக்கேளு
வெய்திடவே வசனியம்பா தேவியாகும்
மகாகாமே ஸ்பரியம்பா தேவியாமே. (324)

*இந்த ஆவரணத்தை சூழ்ந்திருக்கும் அக்ஷரம் என்ன வென்றால் ஹ்ரீம்-கிலீம்-ப்லேம். இதை செபித்து பூசை பண்ணவேண்டும். இது ஆறாவது ஆவரணமாகும். இனி ஏழாவது ஆவரணமான எண்கோணத்தைப் பற்றிக் கூறுகிறேன். இந்த எட்டுக் கோணங்களில் உள்ள சத்திகளின் பெயர்களைக் கூறுகிறேன் வசனியம்பா தேவி, காமேஸ்வரிதேவி.*

தேவியாம் மோகினி சத்தி யாகுஞ்
செயவி மலா சத்தியொடு அருணா் சத்தி
ஆவியாஞ் செயினி சத்தி சர்வேஸ் வரியாகு
மழகான கவுனி சத்தியாகும்

தூவியா மெண்கோணத் துள்ளே நிற்கும் சத்தி
சத்திசுயீம்பான் வட்சரத்தைச் சூட்டக்கேளு
ஏவியாம் இறிங்கிலிங் சவ்வுமாகும்
ஏத்தமாய்த் தொழுதிறைஞ்சி யர்ச்சிப்பாயே. (325)

*மோகினி சத்தி, விமலா சத்தி, அருணா சத்தி, ஜயிநி சத்தி, சர்வேஸ்வரி, கவுளினி போன்ற எட்டு சத்திகள் எட்டுக் கோணத்தில் நிற்பார்கள். அவர்களை அர்ச்சிக்கும் அக்ஷரம் என்னவென்றால் ஹ்ரீம்-கிலீம்-ஸௌம் என்ற அக்ஷரத்தால் பூஜிக்க வேண்டும்.*

அர்ச்சிக்க வேழுவா பரணமாகு
மழகான திரிகோணத் துள்ளேகேளு
பர்ச்சிக்கப் பாணிநி சாபினியாகும்
பாசினி அங்குசனி சத்தியாகும்
கர்ச்சிக்கக் காமேஸ்பரி மாதுவாகுங்
கடாட்சித்த வச்சிரே ஸ்பரி பக மாலினி யாகும்
துர்ச்சிக்க ஆயுர்தே வதைதான் தன்னைச்
செபம்பண்ணித் தொழுதிறைஞ்சித் தெண்டம் பண்ணே. (326)

*எட்டாவது ஆவரணமாகிய தி... ...ணத்தில் நிற்கும் சத்திகளைக் கூறுகிறேன். பாணசத்தி, சாபினி சத்தி (தனுசத்தி) பாசினி (பாசசத்தி) அங்குசனி, காமேசுவரி, வஜ்ரேச்வரீ, பகமாலினி போன்ற ஆயுத தேவிகளை போற்ற வேண்டும் அவர்களுடைய மந்திரத்தால் செபம் செய்ய வேண்டும்.*

பண்ணியே அட்சரத்தைச் சொல்லக்கேளு
பரிவான யாங் ராங் லாங் வாங் சாங் வாகும்
திண்ணியே திராங் திறிங் கிலிங் புலூங் சவ்வாகும்
பேரான வூங் இறிங் குரொங் குரொங் வுமாகும்
அண்ணியே யட்சரங்கள் தியானித்தோதி
அட்டமா வாபரணந் தாண்டிப் பின்பு
விண்ணியே விந்துவினில் விரைந்து நின்ற
விளங்கியதோ ரட்சரத்தின் விவரங்கேளே. (327)

*அவர்களைத் தியானிக்க வேண்டிய அக்ஷரம் என்ன வென்றால் யாம்-ராம்-லாம்-வாம்-ஸாம்-த்ராம்-த்ரீம்-க்லீம்-ப்லூம்-ஆம்-ஹ்ரீம்-க்ரோம்-க்ரோம் என்று தியானித்து சபிக்க வேண்டும். பின்னர் இந்த எட்டாவது ஆவரணத்தை தாண்டி ஒன்பதாவது ஆவரணமான விந்துவை அர்ச்சிக்கும் முறையைக் கூறுகிறேன் கேள்.*

விவரங்கேள் அசிஇறையுங் அசிற்கிலியும் அசிறவ்வும்
விரைந்தெழுதி யர்ச்சிக்கும் விவரங்கேளு
திவரங்கேள் தெட்சணத்தா லர்ச்சிக்க வேண்டாஞ்
செயந்தரவே வாமத்தால் செபித்துப் பூசி
புவரங்கேள் வஸ்து வென்ற கடத்தை வாங்கிப்
புகழான திரிகோணம் விந்து விட்டு
அவரங்கேள் அதின்மேலே கடத்தை வைத்து
ஆதிவன்னிக் கலைக ளெல்லாஞ் சோதிச்சேரே. (328)

*விந்துவில் நிற்கும் சத்தியின் அக்ஷரமாகபட்டது ஹ்ஸ்ரைம் ஹ்ஸ்க்லீம்-ஹ்ரவ்வும் இந்த அக்ஷரத்தால் தியானித்து செபம் செய்ய வேண்டும். செபத்தைத் தெக்ஷணத்தால் அர்ச்சிக்க வேண்டாம். வாமத்தால் அர்ச்சிக் கவும் அதன் பிறகு ஒரு திரிகோணம் வரைந்து அதன் நடுவில் விந்து இட்டு அதன்மேல் குடத்தை வைத்து ஆதித்த மண்டலம், அக்னி மண்டலம், ஸோம மண்டலம் போன்றவை எல்லாவற்றையும் ஆவாஹனம் பண்ண வேண்டும்.*

சோதிச்சே சித்தருட சாபம் போக்கி
சக்கிரசாப விமோ சனமும் பண்ணி
வாதிச்சே மாதுருகா நியாசம் பண்ணி
மகத்தான வஞ்செழுத்தைத் தியானம் பண்ணி
பாவிச்சே காமகளாய நியாசம் பண்ணி
பரிவான சடங்க மென்ற நியாசம் பண்ணி
காவிச்சே வெகு சோடா நியாசம் பண்ணி
காபதமு மங்கமுமே நியாசம்பண்ணே. (329)

*சித்தருட சாபமும், சக்கரத்தின் சாபமும் போக்கி அதன் பிறகு மாத்ருகா, நியாஸம் செய்து பிறகு பஞ்சாக்ஷர நியாஸம் பண்ணி, அதற்கடுத்து காமகளா, சடங்கம், சோடஸாக்ஷரீ போன்ற நியாஸங்கள் செய்து, பிறகு அங்கன் நியாஸம் செய்ய வேண்டும்.*

பண்ணடா பாத்திரங்கள் பரப்பி வைத்து
பரிவாகச் சங்கம் வைத்து வஸ்து பூரி
துண்ணடா சுத்தியது பாத்திரத்தில் வைத்து
செபித்துமே மூலத்தால் விபூதி போட்டு
விண்ணடா வெற்றிலையால் பாத்திரத்தை மூடி
வேதாந்த சின்மயமாங் குருவைப் போற்றி
அண்ணடா சக்கரத்தை யபிஷேகமாடி
யர்ச்சித்துச் சந்தனங்கள் புஷ்பம் போடே. (330)

*பிறகு பஞ்ச பாத்திரங்கள், மேலும் பூசைக்கு வேண்டிய பாத்திரங்களை பரப்பி வைத்து சங்கு மற்றும் பூஜா திரவியங்கள் வைத்து பாத்திரத்தில் நீரை நிரப்பி, மூலமந்திரத்தை செபித்து விபூதி போட்டு வெற்றிலையால் பூஜாபாத்திரத்தை மூடி சின்மயத்தில் இருக்கும் வேதாந்த குருவை வணங்கி, சக்கரத்தை அபிஷேகம் செய்து அர்ச்சனை செய்து சந்தனங்கள் பூசி - புஷ்பம் போட வேண்டும். (புஷ்பம் சாற்ற வேண்டும்.*

போட்டுமே பலகாரம் பழவர்க்கங்கள்
பேரான சடையன் பாதாளசுத்தி
கூட்டுமே குக்குடங்க ளண்ட மச்சங்
குறைவில்லாப் பசுவோடு பரமானங்கள்
ஆட்டுமே யன்னமொடு பாலுந் தேனும்
அடுக்கடுக்காய்க் கறிவகைக ளெல்லாம்வைத்து
நாட்டுமே யஷ்ட திக்குப் பந்தனம் பண்ணி
நற்றீப தூபமொடு பணிகள் மாறே. (331)

*அதன்பிறகு, பலகாரம், பழவர்க்கங்கள், கோழி, முட்டை, மீன், பால் மற்றும் பரமானங்கள் தேன், நெய், அன்னம். காய்கறிகள், வைத்து அஷ்டதிக்கு பெந்தனம் செய்து தூபதீபம் போன்ற உபசாரங்கள் செய்ய வேண்டும்.*

மாறியே விந்துவினில் திரிபுர சுந்தரியாம்
மாதாவைத் தோத்தரித்து தெண்டம் பண்ணி
தேறியே திரிசதையன் சக்கிர நர்மந்
துதித்துமே மூலத்தால் செபத்தைப் பண்ணி
நாறியே யிருந்தசடம் மோட்சம்வேண்டி
நமக்கருள வேண்டு மென்று தியானம் பண்ணி
வீறியே வேண்டிய தெல் லா மளிக்க
வேணு மென்று கைகூப்பி விரும்பிடாயே. (332)

*சக்கரத்தின் நடுவில் நிற்கும், மாதாவான திரிபுர சுந்தரியை வணங்கி ஸ்தோத்திரம் பண்ணி, அசபா மந்திரம் செபித்து மற்றும் மூலமந்திரமும் செபித்து சடமான இந்த உடலுக்கு மோக்ஷம் வேண்டும் என்று பிராத்தித்து கொண்டு (வேண்டிக் கொண்டு) மேலும் எனக்கு வேண்டியதெல்லாம் அளிக்க வேண்டும் தாயே என்று கைகூப்பி வணங்கி தியானிக்க வேண்டும்.*

விரும்பியே காமகலா ரூபி யென்று
விந்துசக் கிர விபவயே பிரம்ம சக்கிரே
வரும்பியே மகேட்டியான பீடசக்கிறே
மகாமகபரப்பிர்மாத்து சத்திமா தாநீயே

திரும்பியே திரிபுரசுந்தரிய ம்பாவே
செகச்சால மாட்டு.வித்த திரிபுரசுந்தரியே
உரும்பியே யோனிமுத்தி ரையைக் காட்டி
உற்றவர மருளவென்று வுரைத்திடாயே. (333)

*மேலும் தாயே காமகலாரூபியே சக்கிர விபவயே பிர்ம சக்ரேஸ்வரியே பரப்பிரம்மாத்மக சத்திமாதா நீயே. திரி புரசுந்தரியாம்பாவே (திரிபுர சுந்தரியே) செகத்தை ஆட்டி வைக்கும் திரிபுர சுந்தரியே என்று போற்றி யோனி முத்திரையைக் காட்டி வேண்டிய வரம் அருள வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.*

உரைத்த பின்பு திரிகோணத் திரிபுரை யம்பா சக்கரம்
உதவுவாய் சர்வ சித்திப் பிறதாயினி யென்று
விரைத்த பின்பு விஷ்ணுவாதி சேவிதம் நீயே
மிக்கபரா பர ரகசிய யோகினி யாயே
வரைத்தபின்பு வஸ்து சுத்தி பல வகைகள் வைத்து
வகை வகையாய்த் தீப தூபங்கள் மாறி
கரைத்த பின்பு பீசமுத் திரையைக் காட்டி
கடாட்சிக்க வேணு மென்று கருதிடாயே. (334)

*அடுத்து திரிகோணமான திரிபுரையம்பா சக்கரத்தைப் போற்றி சர்வசித்திப்பிரதாயினி அடியேனுக்கு உதவிட வரவேண்டும் தாயே மேலும் விஷ்ணுவாதி சேவிதம் நீயே! பராபரா ரஹஸ்யயோகனி நீயே என்று போற்றி வஸ்து சுத்தி, மற்றும் பலவகைகனிகள் வைத்து தீப தூபங்கள் காண்பித்து பீசமுத்திரையைக் காட்டி, தாயே கடாட்சி என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.*

கருதியே வெண்கோணத் துள்ளேநின்று
காரணமாஞ் சத்திகட்கு வஸ்து சுத்தி வைத்து
சுருதியின் வாக்கியத்தால் துதித்துப்பூசி
தொழு திறைஞ்சித் தூப தீபங்கள் மாறி
கருதியே காமேஸ்வரி காமேஸ்வரனோ பவியோ நமவென்று
காமேஸ்வரி காமேஸ்வர சாபாப் பிரியா
அருதியே காமேஸ்வரி காமேஸ்வர பாசப் பிரியா
அதிக காமேஸ்வரி காமேஸ்வர அங்கு சாவே (335)

*பிறகு எண்கோணத்துள்ளே நிற்கின்ற சத்திக்கு வஸ்து சுத்தி ஈந்து வேதத்தால் துதித்து போற்றி (வேதமந்திரத்தால் துதிக்க வேண்டும்) வணங்கி, தூப தீபங்கள், பின்னர், காமேஸ்வரி, காமேஸ்வரனே பவியோ நம. காமேஸ்வரி*

*காமேஸ்வர சாபாப்பியா காமேஸ்வரி-காமேஸ்வர பாசாப்பியா, காமேஸ்வரி-காமேஸ்வர அங்குசாவே நம. என்று அடிவணங்கி கேசரி முத்திரையைக் காட்டி வணங்க வேண்டும்.*

அங்குசா நமாவென்று அடிவணங்கி
யழகான கேசரிமுத்திரை யைக்காட்டி
பங்குசாஉள் பத்துக் கோணத் துள்ளே
பரிவான சத்திகட்கு வஸ்து சுத்தி வைத்து
துங்குசா மூலத்தால் செபத்தைப்பண்ணி
தொழு திறைஞ்சிச் சோடசமா முபசாரஞ் செய்து
மங்குசாமகாங்குசா முத்திரையைக் காட்டி
வாதமொடு வசியங்கள் வகையைக் கேளே. (336)

*பிறகு உள்பத்து கோணத்தில் நிற்கும் சக்திகளுக்கு வஸ்து சுத்தி வைத்து மூலமந்திரத்தால் செபம் செய்து வணங்கி சோடச உபசாரங்கள் செய்து மங்குசாமகாங்குசா முத்திரையை காட்டி, வாதங்களும், வசியங்களும் கைகூட வேண்டும் என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.*

வகையான வெளி பத்துக் கோணத் துள்ளே
மருவி நின்ற சத்திகட்கு வஸ்து சுத்தி வைத்து
தகையான தீப தூபங்கள் மாறி
செடத்திலுள்ள வினையகல வேணு மென்று
முகையான மூலத்தால் செபத்தைப் பண்ணி
மிக்க சர்வோன் மாதினிமுத் திரையைக் காட்டி
பகையர்ன ததுநீக்கி வசியம் தாவென்று
பாதமது பணிந்தேத்திப் பரவிடாயே. (337)

*இதன்பிறகு வெளிப்பத்துக் கோணங்களில் நிற்கின்ற சத்திகளுக்கு வஸ்துசுத்தி வைத்து தீப தூபங்கள் காட்டி, உடலில் உள்ள வினைகள் அகலவேண்டும் என்று வேண்டிக்கொண்டு மூலமந்திரத்தால் செபம் செய்து சர்வோன்மாதினி முத்திரையைக் காட்டி, சகல விதமான பகைகள் நீக்கி, வசியம் சித்திக்க வேண்டும் என்று பாதத்தில் பணிந்து வணங்க வேண்டும்.*

பரவியே பதினாலு கோணத்துள்ளே.
படையான சத்திகட்கு வஸ்து சுத்தி வைத்து
புரவியே புஷ்பத்தா லர்ச்சித் தேத்திப்
போக்கான தீப தூபங்கள் மாறி
சருவியே சர்வ சங்கரி முத்திரை காட்டி
தாயான திரிபுர வா சினியைப் போற்றி
அரிவியே யறுபத்து நாலு சித்தி
ஆடுதற்கு வகைசொல்லு அம்மா வென்னே. (338)

இதன்பிறகு பதினாலு கோணத்தில் நிற்கும் சத்திகளுக்கு வஸ்து சுத்தி வைத்து புஷ்பத்தால் அர்ச்சனை செய்து தோத்திரம் பண்ணி தூபதீபங்கள் காண்பித்து சர்வசங்கரி முத்திரையைக் காட்டி திரிபுர வாசினியைப் போற்றி அறுபத்து நாலு சித்தும் ஆடுவதற்கு வகை சொல்ல வேண்டும் தாயே என்று வேண்டிட வேண்டும்.

என்னவே யெட்டிதழி னுள்ளே நின்று
    யேத்தமாஞ் சத்திக்கு வஸ்து சுத்தி வைத்து
பன்னவே பழவகைகள் பலவர்க்கங்கள்
    பாயசங்கள் பலதீபம் பணிகள் மாறி
முன்னவே மூலத்தால் செபத்தைப்பண்ணி
    முயன்றசர்வா கருஷணி முத்திரை காட்டி
பன்னவே மோட்சமெனக் களித்திடு நீயென்று
    பாலையே திரிபுர மீனாட்சி யென்னே. (339)

இதன்பிறகு எட்டிதழினுள் நிற்கின்ற சத்திக்கு வஸ்துசுத்தி வைத்து பலவகையான பழவர்க்கங்கள் பாயசங்கள் வைத்து தீபதூபம் காட்டி மூலத்தால் செபத்தை செய்து சர்வாகர்ஷிணி முத்திரையை காட்டி பாலையே திரிபுரை மீனாட்சியே எனக்கு மோக்ஷத்தை அருள்வாய் என்று வேண்டிட வேண்டும்.

ஆட்சியென்ன மாயாசத்தி தளத்தினுள்ளே
    யமர்ந்திருந்த சத்திகட்கு வஸ்து சுத்தி வைத்துப்
பாட்சியாம் பழவகைகள் பதார்த்த மன்னம்
    பலபல வாந் தீபங்கள் பணிகள்மாறி
காட்சியாஞ் செபம்பண்ணி மூலந்தன்னால்
    கடாட்சிப் பாயே யென்று கருத்தையுன்னி
தாட்சியாஞ் சர்வவித்திரா வணி முத்திரை
    சமரசமாய்க் காட்டியே யஞ்சல் பண்ணே. (340)

அதன்பிறகு பதினாறு தளத்தில் நிற்கும் சத்திகளுக்கு வஸ்து சுத்தி வைத்து பழவகைகள் பதார்த்தம் அன்னம், போன்றவைகள் வைத்து தீப தூபங்கள் காண்பித்து மூலமந்திரத்தால் செபம் செய்து ஸர்வ வித்ராவணி முத்திரையை காண்பித்து தாயே கடாட்சிப்பாய் என்று அஞ்சலி பண்ண வேண்டும்.

பண்ணியே சதுரவரை மூன்றுவீதி
    பராபரியாந் தையலுக்குப் பானஞ் சுத்தி
கண்ணியே கனிவர்க்கங் கறிகா யன்னங்
    கருத்தூன்றிப் பூசித்துக் கருணை கூர்ந்து

திண்ணியே மூலத்தால் செபத்தைப்பண்ணி
திரிசதையா லர்ச்சித்துத் தெண்டன்பண்ணி
சண்ணியே சர்வசம்ஷோ பிணியாம் முத்திரை
சமர்த்தாகக் காட்டியே தாயைப் போற்றே. (341)

*அதன்பிறகு சதுரவீதியில் உள்ள சத்திகளை வணங்க வேண்டும். மூன்றாவது வரையில் நிற்கும் முத்ரா சத்திகளுக்கு வஸ்துசுத்தி வைத்து கனி வகைகள், கறிகாய் அன்னம் போன்றவைகள் வைத்து மனஒருமையுடன் பூசித்து மூலமந்திரத்தால் செபத்தை பண்ணி அக்ஷதையால் அர்ச்சித்து தெண்டம் செய்து வணங்கி சர்வ சம்க்ஷோபிணியா முத்திரையைக் காட்டி தாயை போற்ற வேண்டும்.*

போற்றியே தேவியுட கோட்டத்துள்ளே
பேர்பெரிய வயிரவர்கள் வயிரவர்சத்தி
ஏற்றியே கடத்துடனே வஸ்து வைத்து
இலமாகச் சுத்தியொடு மதுக்கள் கள்ளு
வாற்றியே வடை தோசை மூவிளக்கு
மாவிளக்கு அன்னமொடு மாங்கிஷங்கள்
பாற்றியே பாலோடு பழங்கள் பானம்
பயரோடு பணியாரம் பத்தும்வைத்தே. (342)

*தேவியுட கோட்டமான இரண்டாவது சதுரவீதியில் நிற்கும் வயிரவர்களுக்கும் வயிரவ சத்திகளுக்கும் வஸ்து சுத்தி வைத்து மது, கள்ளு, வடை, தோசை, மூவிளக்கு, மாவிளக்கு, அன்னம், மாமிசங்கள், பால், பழம், பானம், பணியாரம் போன்றவைகள் வைத்து*

பத்தவே வைத்துமே தியானம் பண்ணி
பண்பாகத் தேவியுட மூலந் தன்னால்
நத்தவே செபம்பண்ணித் தோத்தரித்து
நமக்கான வரமருள வேணு மென்று
சுத்தவே தோத்தரித்துத் தெண்டம்பண்ணித்
துடியான சோடச வுப சாரஞ் செய்து
தித்தவே திரிசண்டமுத் திரையைக்காட்டி
செபம் பண்ணிச் செய்தபவந் தீர்ப்பாயென்னே. (343)

*தியானம் செய்து மூலமந்திரத்தால் செபம் செய்து தோத்திரம் பண்ணி, வேண்டிய வரம் அருள வேண்டும் என்று வணங்கிப் போற்றி, சோடச உபசாரங்கள் செய்து திரிசண்டா முத்திரையை காட்டி, நான் செய்த பாவங்களை எல்லாம் தீர்ப்பாய் என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.*

தீர்க்கவே முன்கோட்ட முகவரைக் குள்ளே
சுத்தி நிற்குஞ் சத்திக்கு வஸ்து சுத்தி
பார்க்கவே பழ வகைகள் பதார்த்த மன்னம்
படைத்து மூலத்தால் செபத்தைப் பண்ணி
ஏர்க்கவே யோக சித்தி ஞான சித்தி
யெளிதிலோ வாத சித்தி கெவுன சித்தி
ஆர்க்கவே யளித் தருள வேணு மென்று
அடிவணங்கி யஞ்சலிபந் தனம் பண்ணே. (344)

*இதன்பிறகு தேவி கோட்டத்தில் முதல் வரையில் நிற்கும் சத்திக்கு வஸ்து சுத்தி பழம், பதார்த்தம், அன்னம், போன்றவைகள், வைத்து மூல மந்திரத்தால் செபம் செய்து யோகசித்தி, ஞானசித்தி, வாதசித்தி, கெவுனசித்தி, போன்ற சித்திகளை அளிக்கவேண்டும் என்று வேண்டி வணங்க வேண்டும்.*

பண்ணியே மூன்றுவரை கோட்டத் திப்பால்
பண்பாகச் சத்திநிற்குஞ் சத்தி கேளு
எண்பான யிந்திரசத்தி யக்கினிசத்தி
யெமன்சத்தி நிருதிசத்தி வருணன் சத்தி
விண்பான வாய்வு சத்தி சோம சத்தி
மகத்தான யீசான சத்தி யோடு
விண்பான பிரம சத்தி விஷ்ணு சத்தி
மிக்கான சத்தி தன்னை யர்ச்சித் தேத்தே. (345)

*தேவியின் கோட்டத்திற்கப்பால் சுத்தி நிற்கின்ற சத்திகளை கூறுகிறேன் கேள். இந்திரசத்தி, அக்கினி சத்தி, நிருதிசத்தி, வாயுசத்தி, சோமசத்தி, ஈசான சத்தி, பிரம்மசத்தி, விஷ்ணு சத்தி இந்த சத்திகளை முறையாக அர்ச்சிக்க வேண்டும்.*

அர்ச்சித்து அதிரசங்கள் வடை பணியாரங்கள்
அசம்சசம் ஞானியொடு வஸ்து வைத்து
துர்ச்சித்துச் சோடசமா முபசாரஞ் செய்து
தோத்தரித்து மூலத்தால் செபத்தைப் பண்ணி
கெர்ச்சித்து கெவுனவழி தெரிய வேணும்
குளிகை சித்து வாத சித்து வரவே வேணும்
தர்ச்சித்து வளித்தருளுந் தாயே யென்று
சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணிடாயே. (346)

*அர்ச்சனை செய்து வடை, பணியாரம், வஸ்து சுத்தி போன்றவைகள் வைத்து சோடச உபசாரம் செய்து மூலமந்திரத்தால் செபம் செய்து கெவுன வழி தெரிய வேண்டும் என்றும் மேலும் குளிகை சித்தும், வாத சித்தும் கை வரவேண்டும் என்று கேட்டு சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணவேண்டும்.*

பண்ணியே தேவதைகள் தன்னைப் போற்றிப்
பாங்காக அட்சரங்கள் பதிந்து தேக்கி
எண்ணவே அட்சரமாம் இரியும் சிரியும்
உற்பனமாய்ச் சுற்றிலும் உகந்து சாத்தி
வன்னியே திக்குவிட்டு வாசல்தன்னில்
மகத்தான தேவதையின் பேருகேளு
கன்னியே கீழ்முகத்து வாசல்தன்னில்
கலங்காத ஷேத்திரனும் வடுகன் தானே. (347)

*தேவதைகளின் அக்ஷரங்களை அந்தந்த இடத்தில் பதித்து ஓம்-ஹ்ரீம்-க்ரீம் என்று செபித்து புஷ்பங்கள் சாத்தி, வணங்க வேண்டும். பின்னர் நான்கு திக்குகளில் உள்ள வாசலில் நிற்கும் தேவதைகளின் பெயர்களைக் கூறுகிறேன் கேள். கிழக்கில் க்ஷேத்திரபாலன், வடுகனும்,*

தானென்ன மேல்முகத்தில் கணபதியுங்கந்தன்
தளுக்கான வடவாசல் சூலியொடுதுர்க்கி
தேனென்ற தென்வாசல் வீரபத்திரன் காளி
துடியாக வாசலிலே நிற்பார்பாரு
கானென்ற வவரவர்க்கு வெவ்வேறாகக்
கனமான வஸ்துசுத்தி கனிகள் காய்கள்
பானென்ற பதார்த்தமொடு பலகார மன்னம்
பரிந்து வைத்து சோடசம்பா வ.னைகள் பண்ணே.(348)

*மேற்கில் கணபதியும் கந்தனும், வடக்கில் சூலியும், துர்க்கியும் தெற்கில் வீரபத்திரனும் காளியும் நிற்பார்கள். அவரவர்க்கு தனித்தனியாக வஸ்து சுத்தி, கனிகள், காய்கள், பதார்த்தம், பலகாரம் அன்னம் போன்றவைகள் வைத்து சோடச உபசாரங்கள் பண்ண வேண்டும்.*

பண்ணப்பா அகாரமுதல் க்ஷகார வரை தானும்
பாங்கான வாசல் சுத்தும் பதித்து வைத்து
தெண்ணப்பா திரிகண்ட முத்திரையைக் காட்டி
செபம்பண்ணி மூலத்தால் செபித்துப் பின்பு
குண்ணப்பா சக்கரத்தைச் சூழ்ந்து நின்ற
குறிப்பான தேவதையின் பேருங் கேளு
தெண்ணப்பா தென்புறத்தில் தட்சணாமூர்த்தி
தெளிவான வடபாகஞ் செப்பக் கேளே. (349)

உபசாரங்கள் செய்து அகாரம் முதல் க்ஷகாரம் வரை வாசலில் சுற்றி பதித்து வைத்து திரிகண்ட முத்திரைக் காட்டி, மூலமந்திரத்தால் செபம் செய்ய வேண்டும். பின்னர் சக்கரத்தைக் சூழ்ந்து நிற்கும் தேவதைகளின் பேர்களை சொல்கிறேன் கேள். தென்புறத்தில் தெக்ஷணாமூர்த்தியும்,

கேளுநீ சண்டகேசனுந் தானு மாகும்
கெடிதான யீசானியம் ஆதித்தனோடு
வாளுநீ வயிரவனும் நிற்பாரையா
மகத்தான கீழ்முகத்ததில் சுரர்தேவர்பிருங்கி
வேளுநீ மேல்முகத்தில் துவாரபாலாள்
மிடுக்கான யிவர்களுக்கு வஸ்துசுத்தி வைத்து
கேளுநீ சோடசமா முபசாரஞ் செய்து
செபம் பண்ணி மூலத்தால் தெண்டம் பண்ணே. (350)

*வடபாகத்தில் சண்டகேசரும், ஈசானத்தில் ஆதித்தனும், வயிரவரும் கிழக்கில் அசுரர், தேவர், பிரிங்கியும், மேற்கில் துவாரபாலர்களும் நிற்பார்கள். இவர்களுக்கு வஸ்துசுத்தி வைத்து சோடச உபசாரம் செய்து செபம் செய்து தாள்தொட்டு வணங்க வேண்டும்.*

செய்யடா திக்குவிட்டு பீட சத்தி
தேவதைக்கு வஸ்துசுத்தி பானம் பண்ணி
பண்ணடா பாலன்னம் பதார்த்தந் தேனும்
பயரோடு பழவகைகள் பல தீபங்கள்
அய்யடா வர்ச்சித்துப் பணிகள் மாறி
யஞ்சலி பந் தனம் பண்ணி யடியேன் செய்த
பொய்யடா பிழை பொறுக்க வேணு மென்று
போற்றியே செபம் பண்ணிப் பெலிதான் போடே.(351)

*இதன்பின்னர் பீடத்தைச் சுற்றிநிற்கும் சக்திகளுக்கு வஸ்து சுத்தி வைத்து பானங்கள், பாலன்னம், பதார்த்தம் தேன், பயர், பழவகைகள், போன்றவை வைத்து தீப தூபங்கள் காட்டி, அர்ச்சனை செய்து அஞ்சலித்து அடியேன் செய்த பிழைகளைப் பொருத்தருள வேண்டும் என்று வேண்டிக்கொண்டு செபம் செய்து பலி கொடுக்க வேண்டும்.*

போடவே வயிரவரைத் தியானம்பண்ணிப்
புகழ்வடுகன் மூலத்தால் செபத்தைப்பண்ணி
காடவே பதார்த்தம் வைத் தர்ச்சித் தேத்தி
கடந்த யீசானத்தில் பெலிதான் போடு
தேடவே சிறிவிசார ராசேசுராய
திறமாக வம்பிடு சுவாகா வென்று
ஆடவே யக்கினியா மூலைக் குள்ளே
யடவான யோகினிக்குப் பெலிதான் போடே. (352)

*வயிரவரை தியானம் செய்து அவருடைய மூலத்தால் செபத்தைப் செய்து பாத்திரம் வைத்து அர்ச்சனை செய்து ஈசான மூலையில் பலி கொடுக்க*

*வேண்டும். பலிபோட்டு பின்னர் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வராய ஹூம் பட் ஸ்வாஹா! என்று மந்திரத்தை செபித்து பலி கொடுக்க வேண்டும். அக்கினி மூலையில் சர்வ பூதேப்யா ஹூம் பட் என்ற மந்திரத்தால் யோகினிக்கு பலி கொடுக்க வேண்டும்.*

பெலியோடு பூதபெலி சர்வ பூதேப் பியோ
பேராக வும்படு சுவாகா வென்று
நெலியோடு நிருதியுட மூலைக் குள்ளே
நேரான சிறிராச ராச சேசுபராய வும்படு சுவாகா வென்று
உலியோடு லட்சமுரு வோதித் தீரு
உத்தமாம் வாயு வுட மூலைக் குள்ளே
நலியோடு நட்சத்திர பெலியுமாகும்
நலமான சக்கரத்தின் தெட்சணத்தில் கேளே. (353)

*நிருதிமூலைக்குள் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வராய ஹூம் பட் ஹவாஹா என்று பலிகொடுக்க வேண்டும். வாயு மூலையில் நக்ஷத்திரத்திற்கு பலி கொடுக்க வேண்டும்.*

தெட்சணத்தில் தெண்டனிக்குப் பூசை பண்ணு
சியாமளையை உத்திரத்தில் பூசை பண்ணு
மட்சணத்தில் மச்சமுத் திரையைக்காட்டு
மகத்தான சோடசமா முபசாரம் பண்ணு
உட்சணத்தில் மத்தியிலே யோகினிக்குப் பூசை
உண்மையா ம்பேர்தனையே யுரைக்கக் கேளு
பிட்சணத்தில் பிண்டகுண யோகினியம்பா
பெரும்பாத குள யோகினி யம்பா தானே. (354)

தட்சணத்தில் தண்டனிக்கும் பூசை செய்

*உத்தரத்தில் சியாமளையை பூசை பண்ண வேண்டும். பூசை செய்த பிறகு மச்ச முத்திரையை காட்ட வேண்டும் பிறகு சோடச உபசாரம் செய்து நடுவில் யோகினிகளுக்கு பூசை பண்ண வேண்டும் யோகினியின் பெயர்களைக் கூறுகிறேன் கேள். பிண்ட குணயோகினியம்பா, பாதகுண யோகினியம்பா.*

தானான ரூபகுள யோகினி யம்பா
தமிருபா திதகுள யோகினி யம்பா
ஆனான யோகினி யாஞ் சத்தி தன்னை
அந்தரத்தில் தியானித்துப் பூசை பண்ணு
கோனான கிழக்கே தான் மாதங்கிபூசை
கொடிமேற்கில் சாமளா பூசை பண்ணு
வானான வாய்வினுட மூலைக் குள்ளே
மகத்தான சத்தியைநீ யலங்கரித்து வையே. (355)

ரூபகுள யோகினி, மிருபாதிதகுள யோகினி

*போன்ற யோகினி சக்திகளை அந்தரத்தில் பூசை பண்ண வேண்டும் கிழக்கே மாதங்கியை பூசை பண்ண வேண்டும். மேற்கில் சாமளையைப் பூசைபண்ண வேண்டும். வாயுமூலையில் சக்தியை அலங்கரிக்க வேண்டும்.*

வைத்துமே பாதத்தில் நீராட்டித் தான்
மலர் தூவிச் சுகந்தங்கள் விரைந்துசாத்தி
பைத்துமே பரையாகத் தியானித்துத் தான்
பாகமாங் கடத்துக்கு விபூதி சாத்தி
கைத்துமே யவள்கையிலே கடங் கொடுத்து
கடந்தனையே வாங்கியே சிரசில் வைத்து
தைத்துமே சந்திரனி னமுர்தமாகச்
சாதித்து ஐந்தெழுத்துஞ் சோடசமு மோதே. (356)

*சக்தியை அலங்கரித்து பாதத்தில் நீராட்டி சுகந்த மலர்கள் தூவி பராபரையை தியானித்து கடத்துக்கு விபூதி சாத்தி, அந்த கடத்தை தாயின் கையில் கொடுத்து, பின் கொடுத்தகடத்தை வாங்கி சிரசில் வைத்துக்கொண்டு அமுர்தம் கசிவதுபோல் பாவனை செய்து கொண்டு ஐந்தெழுத்தையும் சோடச மந்திரத்தையும் செபிக்க வேண்டும்.*

ஓதியே கடத்துள்ளே தாய்தான் தன்னை
யுண்மையாய்ப் பாவித்துச் சங்கு நீர் கொண்டு
சாதியே சகல மெல்லாஞ் சுத்தி செய்து
சதுராகப் பிராணாயம் பண்ணித் தீர்ந்து
போதியே சர்வாங்கம் விபூதி பூசி
புலித்தோலின் மேலிருந்து செபத்தைப் பண்ணி
காதியே கடத்துக்குள் களையவோட்டி
கனமான பாத்திரத்தைப் பரப்பி வையே. (357)

*அந்தக் கடத்தினுள்ளே தாய் இருப்பது போல் பாவித்து சங்கு நீரால் எல்லாவற்றையும் சுத்தி செய்து பிராணாயாமம் செய்து உடல் முழுவதும் விபூதி பூசி புலித்தோல் மேல் அமர்ந்து கொண்டு கடத்திற்குள் உள்ள தேவியை தியானம் பண்ணி பூஜா பாத்திரத்தை பரப்பி வைக்க வேண்டும்.*

பரப்பியே பாத்திரத்தின் பேரைக் கேளு
பாலிப்பாய் சங்க மொன்று குருத்தா னொன்று
புரப்பியே யோக மொன்று ஆதார மொன்று
பெலியோடு ஐந்து வைத்துப் பின்பு கேளு
வரப்பியே வஸ்து வைத்தான் ஆதாரத் தூட்டி

வரப்பியே வஸ்து வைத்தான் ஆதாரத் தூட்டி
மைந்தனே நாகவல்லி யிலையால் மூடி
குரப்பியே கெந்தமொடு புஷ்பஞ் சாத்திக்
கெடியான தியானமொடு செபத்தைப்பண்ணே. (358)

*பாத்திரத்தின் பெயர்களை சொல்கிறேன் கேள். சங்கு. குருபாத்திரம், போக பாத்திரம், ஆதார பாத்திரம், பலிபாத்திரம் ஆக ஐந்து பாத்திரங்களை வைத்துக்கொண்டு நீரால் நிரப்பி நாகவல்லி இலையால் மூடி கெந்தம் புஷ்பம் போன்றவற்றைச் சாத்தி தியானமும் செபமும் செய்ய வேண்டும்.*

பண்ணிமூ லாதாரம் பிர்ம்மரந்திர மட்டும்
பாழ்போன வாசி யெல்லாஞ் சோதித் தேறி
அண்ணியே தளத்தில் நிற்குஞ் சத்தி சிவ மெல்லாம்
அர்ச்சித்து அவரவர்க்கு அஞ்சல்பண்ணி
தண்ணியே வலக்கரத்தில் புஷ்பம் வாங்கிச்
சாதகமா யிடக்கரத்தைச் சுத்திவஸ்து வாங்கி
குண்ணியே குருபதத்தில் குருவை நோக்கிக்
குருவினுட பாத்திரத்தைக் குணமாய்க் கொள்ளே. (359)

*தியானம் பண்ணி மூலாதாரம் முதல் பிரமாந்திரம் வரை வாசி கொண்டு ஒவ்வொரு ஆதாரமாக ஏறி ஒவ்வொரு தளத்தில் உள்ள தேவதைகளையெல்லாம் போற்றி அவரவர்களை அஞ்சலித்து வலக்கரத்தில் புஷ்பத்தை எடுத்து தேவியின் இடக்கையில் சமர்ப்பிப்பதுபோல் பாவனை செய்து வாங்கி குருவிடம் சமர்ப்பிக்க வேண்டும். இல்லையேல் குருவின் பாத்திரத்தில் சேர்க்க வேண்டும்.*

கொள்ளவே சிவதத்தவம் வித்தியா தத்துவம்
குணமான பரதத்துவம் தெரிந்து கொள்ளு
துள்ளவே சமாதிகற்பம் செப்பக் கேளு
தூலதேக சுகித காரண தேகமுணர்ந்து ஓதி
விண்ணவே குண்டலியில் வாசிவைத்து
விளங்கியொரு பாத்திரத்தை வாங்கிக் கொண்டு
தெள்ளவே சிவசத்தி யிருவரையும்
நோக்கிதிரி மூர்த்தி பாத்திரமாய் வாங்கிக்கொள்ளே. (360)

*பின்னர் குருவை தியானித்து தத்துவ சோதனம் செய்ய வேண்டும். சிவதத்துவம், வித்தியா தத்துவம், ஆத்தும தத்துவம் போன்றவைகளை அறிந்து தூல தேகத்தையும் சூட்சும தேகத்தையும் காரண தேகத்தையும் உணர்ந்து குண்டலினி சக்தியில் வாசி வைத்து ஆதார பாத்திரத்தை எடுத்து சிவ சக்தி இருவருக்கும் காண்பித்து அதை திரிமூர்த்தி பாத்திரமாக பாவனை செய்து வாங்கிக் கொள்ளவேண்டும்.*

வாங்கியே சத்திக்குப் பாத்திரத்தை யீந்து
மகத்தான அன்னமொடு பானம் பண்ணி
ஆங்கியே ஆலத்தி கற்பூர தீபம்
ஆட்டியே ஆயியைத்தா னஞ்சல் பண்ணி
தேங்கியே சேகரப் பெலியைப் போடு
தெண்டநிட்டு அடி வணங்கிச் செபத்தைப் பண்ணு
ஓங்கியே வுச்சிஷ்ட பயிரவத்தின் பெலியை
வ்ட்போட்டுப் புரோட்சித்து வுரைக்கக் கேளே. (361)

*சக்திக்கு தனியாக பாத்திரம் கொடுத்து பின்னர் அன்ன பானம் கொடுத்து கற்பூர ஆரத்தி காட்டி ஆயியை அஞ்சல் செய்து பலிகொடுத்து அடிவணங்கி செபம் செய்து பரிசேஷத்தை உண்டு எல்லாப் பொருள்களையும் அகற்றிப் ரோக்ஷணம் செய்து சுத்திபடுத்த வேண்டும்.*

உரைக்கவே சக்கரத்தை யிருதயத் துள்ளே
யுகந்துமே யெழுந்தருளப் பண்ணுவித்து
தரைக்கவே சருவருக்கும் வஸ்து சுத்தி
சாங்கமாய்ப் பதார்த்த மொடு அன்ன மீந்து
துரைக்கவே சுகா சனத்தி லிருந்து கொண்டு
சுயாதீ தவானந்த புளக மாகி
அரைக்கவே ஆதார தெரிசனம் பண்ணி
அரகரா சிவசிவா அம்மா வென்னே. (362)

*இந்த சக்கரத்தை இருதய கமலத்தின் உள் .எழுந்தருளச் செய்து அனைவருக்கும் வஸ்து சுத்தி ஈந்து பதார்த்தம் அளித்து அன்னம் ஈந்து சுகாசனத்தில் இருந்து கொண்டு ஆனந்த புளகாங் தாகிதம் கொண்டு ஆதாரத்தை தெரிசனம் செய்து சிவ சிவா! தாயே! என்று மனப்பூர்வமாகப் பிரார்த்திக்க வேண்டும்.*

என்னவே பரா சத்திமகா சத்தி யாகும்
எங்குமுள்ள தையலம்பா தேவி யாகும்
அன்னவே யளியொத்த பெண் பிள்ளை யாகும்
ஆனந்த சுந்தரியா மின் னொளியா ளாகும்
தென்னவே சிவகதிக்கு வழி காட்டும் தெய்வஞ்
சிறுபிள்ளை பேசுகிலாள் மவுனியப்பா
முன்னவே முக்கண்ணிவேதாகம நூலின்
விளங்கும் பரா பரியாகும் மெல்லி யாமே. (363)

*மேலும் பராசக்தி! மகாசத்தி! எங்கும் உள்ள தையலம்பாதேவி! ஆனந்த சுந்தரியே! மின்னொளியாளே! சிவ்கெதிக்கு வழி காட்டும் தெய்வமே! முக்கன்னியே! வேதாகமசாஸ்திரங்களால் உணர்த்தப்படுப்வ்ளே! பராபரையே!*

மெல்லியே மேதினிக்குள் விளங்குஞ்சத்தி
மிக்கான காரணியே வியன் சூழ்வாமம்
தல்லியே சக மனைத்தும் தாயாய் நின்ற
தயா நிதியே சச்சிதா னந்த வெள்ளத்
தெல்லியே யெங்குமா யிருக்கின்றாளே
எனை யளிக்கும் தெய்வமே யேழை பங்கில்
செல்லியே திரிபுரசுந்தரி யம்பாளே
செகமீன்ற கன்னியே தெய்வமின்னே. (364)

*உலகத்துள் உறையும் சக்தியே! அனைத்துக்கும் காரணமானவளே! ஆழிசூழ் உலகத்திற் கெல்லாம் தாயாய் விளங்குபவளே! தயாநிதியே! சச்சிதானந்த ரூபியே! எங்கும் வியாபித்து நிற்பவளே! எனை காக்கும் தெய்வமே! ஏழையிடம் இரக்கம் காட்டுபவளே! திரிபுர சுந்தரியம்பாளே! செகத்தை ஈன்ற கன்னியே! தெய்வமே!*

என்னவே யிப்படித்தான் பூசைசெய்வார்
ஏத்தமாஞ் சிவயோகத் தசதீட்சைபெற்றோர்.
நன்னவே ஞானசத்தி நிர்த்தஞ்செய்வாள்
ஞானமொடு வாதசித்தி யோகசித்தியீவாள்
வன்னவே யிதுபூட்டு வாமத்துக்கு
வகையறியக் குரு பதத்தில் தொண்டு பண்ணு
பொன்னவே வாமிகள் தான் வெறும் பூசைபண்ணி
போதவே பாணித்து அலைவார் தானே. (365)

*சிவயோகம் புரிவோரும் தசதீட்சை பெற்றவரும் இவ்வாறு பூசை செய்வார்கள். இவ்வாறு பூசை செய்தால் நாதசக்தி நிர்த்தம் செய்வாள். ஞானசித்தி, யோகசித்தி, வாதசித்தி போன்றவைகளை அளிப்பாள். வாமத்தை அறிய குருபதத்தில் தொண்டு பண்ண வேண்டும். வாமிகள் இவ்வாறு செய்யாமல் வெறும்பூசை செய்து அலைந்து மாள்வார்கள்.*

அலைந்த தினா லாமோ தா னாதார சித்தி
யலையாமல் சமாதி தனில் பொருந்தி வாழும்
உலைந்ததினால் வாதமொடு குளிகையாமோ
வுற்பன மாஞ் சாத்திரத்தி லுரைத்தா லாகும்
துலைந்ததினால் சித்தாமோ காய சித்தியாமே
சூட்சமெல்லா முட்புகுந்து சோதித்தாலாகும்
குலைந்ததினால் மனமங்கே ஞான மாமோ
கூடினால் பெண்ணோடே எல்லாம்போச்சே. (366)

*அலைந்தால் ஆதார சித்தி கூடாது அலையாமல் ஒரு மனதாய் சமாதியில் நிற்க வேண்டும். மேலும் அலைவதினால் வாதமும் குளிகையும்*

சித்தியாகாது சாஸ்திரத்தில் சொன்னபடி செய்தால்தான் பலிதமாகும். இங்கும் அங்கும் ஓடுவதினால் சித்து பலிக்காது. காயசித்தியும் ஆகாது. எல்லா வகையான சூக்ஷத்தை சோதித்தால்தான் ஆகும். மனதை அலையவிட்டால் ஞானம் கிட்டுமா கிட்டாது. மனம் அலைபாயாமலும், சமாதியில் நின்று ஆதார பூசை செய்தும் வாதமும், குளிகையும் சித்தியும் காய சித்தியும் அடைந்தபோதிலும் பெண்ணுடன் கூடினால் அனைத்து சித்தியும் நம்மைவிட்டுப் போய்விடும்.

போச்சென்று விடுகாதே மவுனப் பிரமை
  போக்கோடே விட்டு விட்டு அறிவிற் கூட்டு
நீச்சென்று விடுகாதே காய சித்தை
  நிலையாறு தலங்களெல்லாம் நினைவாய்ச் சோதி
ஆச்சென்று விடுகாதே வாதந்தன்னை
  யடங்காத சரக்கெல்லா மடக்கிக் கட்டு
தீச்சென்று படர்ந் தாப்போ லட்சரங்க ளெல்லாஞ்
  சோதிக்க பூசைவிதி முற்றுமாமே (367)

அதனால் மனதை அலையவிடாமலும் பெண்மேல் மோகம் கொள்ளாமலும் அந்த சிந்தனைகளை அழித்து மனதை அறிவில் நிறுத்திவிட வேண்டும். மேலும் காயசித்தியை மிகவும் கடினம் என்று விட்டுவிடக்கூடாது. ஒரு மனதாய் ஆதாரங்கள் அனைத்தும் கண்டு ஏறவேண்டும். வாதத்தை விடாமல் சரக்கை எல்லாம் அடக்கி கட்டி வாதம் புரிதல் வேண்டும். இத்துடன் நாற்பத்து முக்கோண பூசை விதிமுற்றுப் பெற்றது.

## நாற்பத்து முக்கோண பூஜா வதி முற்றும்

### ஏழாயிரத்தைப் பார்க்கவும்

ஆமப்பா வஷ்டகர்ம வித்தை யெல்லா
  மசையாத மவுனத்தி னேர்மை யெல்லாந்
தேமப்பா தீட்சை விதி பிராணா யாமஞ்
  செயலான வாத சித்தி காய சித்தி தானும்
வாமப்பா சிங்கி யொடு குளிகை மார்க்கம்
  மகத்தான முத்தியின் வழிக ளெல்லாம்
ஏமப்பா சாஸ்திரமே ழாயிரத்தி
  லெழுதினேன் போக்கோடே யிதமாய்ப் பாரே. (368)

அஷ்டகரும் வித்தையும், அசையாமல் மௌனத்தில் நிற்கும் முறையும், தீக்ஷை விதியும், பிராணாயாமமும், காயசித்தியும், வாதசித்தியும், சிங்கிவித்தையும், முத்திரைகளின் வழியும், நான் எழுதியுள்ள ஏழாயிரம் என்ற நூலில் சொல்லி உள்ளேன். எனவே அந்த சாஸ்திரத்தையும் பார்க்கவும்.

## வெடியுப்புக் கட்டு

போக்கான வெடியுப்புக் கட்டைக் கேளு
போடுகிறேன் கெடியாரம் நிகண்டுக் குள்ளே
நோக்கான வுற்பனங்க ளிதனாலாச்சு
நொடிக் குள்ளே வோடுகிற குளிகை யாச்சு
வாக்கான வாத சித்திகாய சித்தி யாச்சு
வகை வகையாய்க் கட்டுகிற குருவு மாச்சு
நீக்கான சாத்திரங்கள் மெத்தவுண்டு
நினைக்க வென்றால் வெகுகடினம் நினைவாய்ப் பாரே.(369)

வெடியுப்புக் கட்டு சொல்கிறேன் கேள். இந்த நிகண்டில் அதைப் பற்றிக் கூறுகிறேன். இந்த உப்புக் கட்டினால் சகல விதமான வேலைகளும் முடியும். குளிகைகள் முடியும், காயசித்தி பலிக்கும். வாதசித்தியும் ஆகும். கட்டுவகைக் கெல்லாம் குருவாகும். இதைப் பற்றிக் கூறும் சாஸ்திரங்கள் நிறைய உண்டு. அதைப் பற்றி நினைத்துப் பார்ப்பதே மிகவும் கடினமாகும்.

கடினமாந் தலையான வெடியுப்பைத் தான்
கட்டரிது கட்டினா லவனே வாதி
படினமாம் வெடியுப்பு பலந்தா னாலு
பழம்புளிதா னஞ்சுபத்து பலமு மாகும்
கடினமாங் கல்லுரலில் போட்டுக் கொண்டு
மகத்தான வுலக்கையா லிடித்துநைய
அடினமா யாறுநா ளிடித்துமை போல்
அகல்போல வில்லை பண்ணி யுலரப் போடே. (370)

ஆதி உப்பான வெடியுப்பைக் கட்டுபவனே வாதி, அதன் முறை எவ்வாறெனில் நூறு பலம் வெடி உப்பை எடுத்து அதனுடன் பழம் புளி ஐம்பது பலம் சேர்த்து கல்லுரலில் போட்டு இரும்பு உலக்கை கொண்டு ஆறுநாள் நைய இடித்து மைபோல் ஆக்கி வில்லை செய்து உலர வைக்க வேண்டும்.

உலர்ந்த பின்பு புதுச்சட்டி யடுப்பி லிட்டு
யுசிதமா யெரியிட்டு ஒவ்வொன்றிய
அலர்ந்தபின் னெரிந்த தெல்லாம் தவளம்போல
ஆக்கிரமாய் தம்பித்து அடங்கி நிற்கும்
கலந்துமே கத்தியால் சுரண்டிவாங்கிக்
காரியமாம் பீங்கானில் பரப்பி வைக்க
சிலந்துமே யிஷ்டியெல்லாம் செயநீராகும்
தீச்சுடராம் நீர் தன்னின் சிறப்பைக் கேளே. (371)

பின்னர் புதுச்சட்டி கொண்டு வந்து அடுப்பில் வைத்து தீ மூட்டி ஒவ்வொரு வில்லையாகப் போட்டால் எரிந்து தவளம் போல் தம்பித்து அடங்கி நிற்கும். அதைக் கத்தியால் சுரண்டி பீங்கானில் பரப்பி வைத்தால் செயநீராகும். இந்தச் செயநீரின் சிறப்பைக் கூறுகிறேன் கேள்.

**வெடியுப்புச் செயநீர் எல்லாவற்றையும் கட்டும்**

சிறப்பான நீர் தன்னின் மகிமை சொல்ல
சிவனாலு முடியாது மற்றோர் காணார்
கறப்பான வழலை யென்று கருதாலாகும்
காரணமாஞ் சித்தரெல்லாங் கரு மறைத்தார்
விறப்பான வேராகும் பூமி நாதம்
இரண்டாகும் பூநாதமூ சரத்தின் குருத்தான்
குறப்பான விது ரண்டால் வாதமாச்சு
கொள்கி யிதை விட்டாக்கால் கூடப்போச்சே. (372)

இந்த செயநீரின் மகிமை சொல்ல சிவ பெருமானாலும் முடியாது. இதுவழலைக்கு நேராகும். இதை சித்தர்கள் மறைத்தார்கள். பூமி நாதம், ஊஷரத்தின் குரு, இவை இரண்டால் வாதம் பலிதமாகும். இந்த இரண்டையும் விட்டால் வாதம் பலிக்காது.

போச்சென்று யெண்ணாதே வுப்புக் கட்டும்
பொன்னான துரிசு கட்டுங் காரம் கட்டும்
நீச்சென்று சாரமுதற் பூரங் கட்டும்
நிலைக்க மட்டுங் கைமுறையாய் நினைவாப் பாரு
ஆச்சென்று மடபதிகள் முன் பின்னாய்ச் சொன்னார்
அதனாலே வாதமெல்லாந் தலை கீழாச்சு
மூச்சென்ற தது வடங்கில் சடம்நி ல்லாது
முனையான சுழி முனையின் வழியிற் போவே. (373)

இந்த செயநீரால் உப்பு கட்டும், துரிசு கட்டும், காரம் கட்டும், பூரம் கட்டும், கட்டுமுறையை ஒழுங்காகப் பார்க்க வேண்டும். இந்த முறையை மடபதிகள் முன்பின்னாய் சொன்னார்கள். அதனால் வாதம் தலைகீழாய் மாறிப்போச்சு. வாதம் சரியாகப் புரியாவிட்டால் இந்தச் சடம் அழிந்து விடும் ஆகையால் சுழிமுனையைக் கண்டு அங்கே நிற்க வேண்டும்.

**சாரச் செயநீர்**

வழியோடே சென்றேறி யாறுதலம் புக்கி
மகத்தான நிராதாரத் துள்ளே சொக்கி
சுழியோடே தமர்வாசல் வழியை நீக்கி
சுகாதீத பூரணத்தில் சொக்கினாப் போல்

விழி யோடே வேறான தீச்சலத்தில்
வீரம் விட்டு பூரம் விட்டு விரைவாய் வைத்து
தழியோடே சாரமது பலந்தா னைந்து
சமர்த்தாகக் கல்வத்தில் போட்டிடாயே. (374)

*சுழி முனை வழியாக ஆறுதளம் ஏறி நிராதாரத்துள்ளே நின்று ஆதார சக்கரத்தின் வாசல் வழியை அடைந்து வாசலில் உள்ள தடையை நீக்கி பூரணத்தில் லயிக்க வேண்டும்.*

போட்டுமே பூநாகச் செய நீராலே
பொடித்திட்டு அரைத்துமே யேழு நாள் தான்
ஆட்டுமே செயநீரை விட்டு விட்டு
அதட்டியரை யகலாமல் வழித்துப் போட்டு
வீட்டுமே வில்லை பண்ணிக் காயப் போட்டு
மிடுக்கான குகையி லிட்டு புடத்தைக் போடு
தூட்டுமே நிரை சரியாய்ச் சுண்ண மாகும்
சுகமான பீங்கானில் பரப்பி வையே. (375)

*முன் செயநீரில் (தீநீரில்) வீரம், பூரம் இவை இரண்டையும் போட்டு பின்னர் சாரம் பலம் ஐந்து வாங்கி கல்வத்திற் போட்டு பூமி நாத செயநீர் விட்டு ஏழுநாள் அதட்டி அரைத்து பின்னர் வழித்துவில்லை செய்து காயவைத்து குகையில் வைத்துப் புடம் போட்டால் நீறிச் சுண்ணமாகும். இந்தச் சுண்ணத்தை பீங்கானில் பரப்பி வைக்க வேண்டும்.*

## சாரக் கட்டு

பரப்பி வைக்கப் பல பலெனச் செயனீ ராகும்
பாங்கான யின்னீரில் வீரம் பூரம்
உரப்பி வைக்க யிட்டுமே ஒருநாள் தானும்
உருட்சியாய் சாரமது கட்டி வாங்கி
அரப்பி வைக்க அண்டம் போல் ஒரு பலத்தைச் சீவி
ஆண்மையாம் நீர் தோச்சி ரவியில் போட்டு
நிரப்பி வைக்க பட்சமொன்று போட்டு வாங்கி
நேர்மையாங் கவசத்தின் நிலமை கேளே. (376)

*பரப்பி வைத்தால் செயநீராகும். இந்த செயநீரில் வீரம், பூரம் சேர்த்து ஒரு நாள் ஆன பின்பு சாரம் ஒரு கட்டி எடுத்து அதை அண்டம் போல் சீவி செயநீரில் தோய்த்து ஒரு பக்ஷம் ரவியில் போட்டு வைத்து பிறகு அதை எடுத்து வைத்துக்கொண்டு.*

கேளுமே சீனமொடு வளைய லுப்பு
கெடியான சவுட்டோடு கல்லுப்பு விந்து
வாளுமே வகைக்கு ஒரு பலந்தான் தூக்கி
வகையான வெடியுப்பு நீராலாட்டி
யேளுமே யேழுநா ளரைத்த பின்பு
யிதமாக ஓட்டி லிட்டு ஊதிப் போடு
சூளுமே சுண்ணாம்பாம் சாரத்தின் மேல்
சுகமாக லேபித் துக் கவசங்கட்டே. (377)

*பின்னர் சீனம், வளையலுப்பு சவுட்டுப்பு, கல்லுப்பு இந்துப்பு இவை ஐந்தும் வகைக்கு ஒரு பலம் எடுத்து வெடி உப்புச் செயநீர் விட்டு ஏழுநாள் அரைத்து ஒரு வோட்டில் வைத்து குகையிலிட்டு ஊதினால் சுண்ணமாகும். இந்த சுண்ணத்தை மேற்படி சாரத்துக்கு கவசம் கட்ட வேண்டும்.*

கட்டுவது வெடியுப்பு நீரினாலே
காய்ந்த பின்பு கவுதாரிப் புடமாய்ப் போட்டு
குட்டுவது குக்குடத்தின் புடத்தைப் போடு
கொள்கியபின் கவசத்தை உடைத்து வாங்கி
தட்டுவது தந்தம்போல் சாரங் காணும்
சகலதுறை யிதுக்குள்ளே தயங்கிப் போகும்
ஒட்டுவது பூரத்தை ஓட்டியோடு
ஒடுக்கமிது தொந்தமிது ஊணிப்பாரே. (378)

*சுண்ணத்தை வெடியுப்பு செயநீரில் சேர்த்து கவசம் கட்ட வேண்டும். பின்னர் கவசித்த சாரத்தை கவுதாரிபுடம் போட்டு அதன் பிறகு கோழிப் புடம் ஒன்றும் போட்டு கவசத்தை உடைத்துப் பார்த்தால் சாரமாகப்பட்டது தந்தம் போல் இறுகிக் கட்டி நிற்கும். இந்த சரக்கால் சகலவிதமான வேலைகளும் செய்யலாம். சரக்கை ஒடுக்குவதும், எழுப்புவதும் இந்தக் கட்டால் ஆகும்.*

ஊணியே அஞ்சு சுண்ணக் குகையில் வைத்து
வூதிடவே சுண்ணாம்பாம் வுண்மை கேளு
பாணியே பனியில் வைக்கச் செயநீராகும்
பருவமாம் நீர் தன்னில் வீரம் பூரம்
காணியே கலக்கி வைத்து கருவைக் கேளு
கைவிட்ட சூத்திரந்தான் கருவாய்ப் பாரு
ஆணியே யேமவித்தை யிதுக்குள் ளாகும்
அரகரா ஞானவழி அடுத்த தன்றே. (379)

கட்டிய சாரத்தை பஞ்ச சுண்ண குகையில் வைத்து ஊதினால் சுண்ணமாகும். இந்த சுண்ணத்தை பனியில் வைத்தால் செயநீராகும். இந்த செயநீரில் வீரம், பூரம் இரண்டையும் சேர்த்து கலக்கி வைத்துக் கொண்டு யேம வித்தை செய்தால் பலிக்கும்.

### கல்லுப்புக்கட்டு

அடுத்ததோர்வர்மஞ் சொல்வேன் லவணக்கூறு
அப்பனே கல்லுப்புப் படிதான் பத்து
கடுத்த கடலுப்பு நீர் நாலு பத்துப்படி தான்
கரைச்சுமே பாண்டத்திலெடுத்துக் கொண்டு
படுத்த தோர டுப்பில் வைத்துப் பருவமாக
பாங்காகப் யெரியிட்டுப் பாக்குப் போலுடைத்து
தொடுத்து செயநீர் தனிலே தோச்சுத் தோச்சு
துரிசான ரவிதனிலே காயப்போடே (380)

கல்லுப்பு பத்துபடி எடுத்து அதை நாற்பதுபடி கடல் நீரில் போட்டுக் கரைத்து ஒரு பாண்டத்தில் விட்டு அடுப்பில் வைத்துப் பக்குவமாக எரித்து அந்த உப்பை வாங்கி பாக்குப்போல் சிவிக்கொண்டு அதை வெடியுப்பு செயநீரில் தோய்த்துத் தோய்த்து ரவியில் காயப்போட வேண்டும். ஏழுநாள் கழித்து அந்த உப்பை எடுத்துக்கொண்டு பின்னர்.

காய்ந்துமே யேழுநாளான பின்பு
கடல்நுரையு மிந்துப்புஞ் சவுட்டு வில்லை
வாய்ந்துமே சூடனொடு வெடி யுப்புத் துரிசு
வகைக்கு ஒரு பலந்தானுங் கல்வத் திட்டு
சாய்ந்துமே சாரனீர் தன்னினாலே
தாக்கியரைத் தஞ்சு நாளகலில் இட்டு
கேய்ந்துமே கெசப் புடமாய்ப் போட்டு வாங்கி
கெடிசாக சாரனீர் விட்டுக் குழப்பிக் கொள்ளே. (381)

கடல்நுரை, இந்துப்பு, சவுட்டுப்பு சூடன் வெடியுப்பு துரிசு இவை எல்லாம் வகைக்கு ஒரு பலம் எடுத்து கல்வத்தில் போட்டு சார செயநீர் விட்டு ஐந்துநாள் அரைத்து அகலில் இட்டு கெசபுடம் போட்டு எடுத்தால் நீரும் அதைச் சார செயநீர் விட்டு குழப்பிக்கொண்டு.

கொள்ளவே முன் காய்ந்த வுப்பில் தோய்ச்சு
குறட்டிலே பிடித்து மெள்ளகரியில் வாட்டு
அள்ளவே அடுக்கடுக்க அதட்டிவாட்டு
அப்புறந்தான் அக லிலிட்டுக் கெசபுடமாய் போடு

கள்ளவே கவசத்தை வாங்கி வைத்துக்
காரமொடு சவ்வீரம் லிங்கந் தானும்
துள்ளவே வகைக்கு அரை பலந்தான் தூக்கி
துடியான சாரநீர் விட்டு ஆட்டே (382)

முன்காயவைத்துள்ள உப்பை இந்த நீரில் தோய்த்து குறட்டில் பிடித்துக்கொண்டு கரியோட்டில் வைத்து வாட்டி எடுத்து கெசபுடம் போட வேண்டும். புடம் போடுவதற்கு முன் கவசம் செய்ய வேண்டும். அது எவ்வாறெனில் காரம், செவ்வீரம், லிங்கம் இவை எல்லாம் வகைக்கு அரைப்பலம் எடுத்து சாரநீர் விட்டு அரைக்க வேண்டும்.

ஆட்டியே யேழுநா ளரைத்து மைபோல்
ஆண்மையாம் நீர்தன்னில் குழப்பிக் கொண்டு
காட்டியே கல்லுப்பில் தோச்சு வாட்டி
கவசம்போல் பிடித்த பின்பு முன்னீக்கும் கவசம்
நீட்டியே நீர்தன்னில ரைத்து மைபோல்
நிலவரமா யதின் மேலே கவசம் கட்டி
தாட்டியே உலர்ந்த பின்பு சவுட்டு மண் தான்
தாக்கான கலையத்தில் பாதி போடே. (383)

இவ்வாறு ஏழுநாள் அரைத்து செயநீரில் குழப்பிக் கொண்டு அதில் மேற்படி உப்பைத் தோய்த்து வாட்டி கவசம் போல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டபின்னர் மேலும் கவச மருந்தை பூசி உலர வைத்து பின்பு ஒரு கலையத்தை எடுத்து அதில் பாதிவரை சவுட்டு மண்போட்டு.

பாதி மேல் உப்பை யெல்லாம் பரப்பி வைத்து
பாங்கான அதின் மேலே மண்ணைப் போட்டு
மீதி யெல்லாம் மேலோடு கொண்டு மூடி
மிடுக்கான சீலை செய்து குழியில் வைத்து
ஆதியே அன்பதெரு அடுக்கிப் போடு
ஆரவிட்டு யெடுத்துப்பார் தந்தம் போலாம்
வாதியாம் வாய் வாதம் கேட்டுச்சுட்டால்
வருமோதான் யிந்த உப்பின் வளப்பங் கேளே. (384)

அதன்மேல் உப்பை வைத்து அதன்மேல் மீண்டும் மண்ணைக் கொட்டி சீலை செய்து குழியில் வைத்து ஐம்பத்தொரு எரு அடுக்கிப் புடம் போட்டு ஆறிய பின் எடுத்துப் பார்த்தால் தந்தம் போல் கட்டி நிற்கும். வாய்ப் பேச்சால் இந்த உப்பின் வளப்பம் சொல்லவராது.

வளப்ப மெல்லாம் உப்பாலே மைந்தா கேளு
வருகு மப்போ மெஞ் ஞான வாதமாகும்
தளப்ப மென்று யெண்ணாதே சமுசயங் களில்லை
சங்கற்ப் விகற்ப மென்ற சட்டை நீங்கும்
யிளப்ப மென்றும் வாராது யேம சித்தி யாகும்
இமுக்கான சரக்கை யெல்லாம் சணமாய்க்கட்டும்
அளப்பமன்ற ஆதார சித்தி யாகும்
அறிவிலே புக்கி நின்று அன்னத்துண்ணே. (385)

இந்த உப்புக் கட்டினால் மெய்ஞானமும் வாதமும் பலிதமாகும் இதில் ஒரு சந்தேகமும் இல்லை. சங்கல்பம், விகல்பம் என்ற சட்டைகள் நீங்கும். இதில் தவறே வராது. யேமசித்தி பலிதமாகும். இதனால் சரக்கெல்லாம் கட்டும். ஆதாரங்கள் சித்தியாகும். மனதை அறிவில் அடக்கி இந்த உப்பை அன்னத்துடன் சேர்த்து உண்ண வேண்டும்.

உண்ணவே உப்பைவிட்டால் ருசியோ போச்சு
ஓடுகிற காலுக்கு உறுதி போச்சு
கண்ணவே கைபோச்சு காயசித்தி போச்சு
கருத்தூணி ஓடுகிற வாசி போச்சு
பண்ணவே பரந்தோடும் குளிகை போச்சு
பயமென்ற நாசமது பஞ்சாய்ப் போச்சு
அண்ணவே உப்பில்லாக் கரும மெல்லாம்
அமும்பாச்சு ஆதியுப்பின் ஆண்மைதானே (386)

இந்த உப்பு இல்லாவிட்டால் ருசி இருக்காது. காலுக்கு உறுதி இருக்காது, காயசித்தி பலிக்காது, வாசி நிலைக்காது, குளிகைகள் பலிக்காது, சித்தன் என்ற பெயர் அகன்று விடும். இந்த உப்பில்லாமல் செய்யும் எந்த ஒரு கருமமும் விழலாய்ப் போகும்.

ஆண்மையாம் உப்படக்கி கட்டி னாக்கால்
அறுபத்து நாலு சித்தும் ஆடலாகும்
வாண்மையாம் வாதமது ஏவல் கேட்கும்
மகத்தான யோக சித்தி காய சித்தி யாகும்
கேண்மையாங் கெவுனத்தில் ஓ்டலாகும்
கெவுனத்தில் சித்தருக்குள் கீர்த்தி யாகும்
தாண்மையாம் சமாதிக்கு ளிருக்க லாகும்
சரக்கெல்லாம் கால் வாரி யடிக் கலாமே. (387)

உப்பு அடங்கி கட்டினால் அறுபத்து நாலு சித்தும் ஆட வலிமை உண்டாகும், வாதம் நம் சொற்படி கேட்கும், யோகம் சித்திக்கும் காயசித்தி

—

*பலிதமாகும், கெவுன குளிகை பலிதமாகும். (ஆகாயத்தில் சஞ்சரிக்கும் குளிகை) சித்தருடைய கீர்த்தி உண்டாகும். எவ்வளவு காலம் வேண்டுமானாலும் சமாதிக்குள் அசையாமல் நிற்கலாம். சகல சரக்கையும் காட்டி சித்துகள் விளையாடலாம்.*

அடிக்கலாங் கட்டின தோர் கல்லுப் பாலே
அறுபத்து னாலான பாஷா ணங்கள்
உடிக்கலாம் உபரசங்கள் நூத்தி ரண்டு
உப்பாகும் யிருபத்து அஞ்சுதானும்
நொடிக்கலாம் நிமிஷத்தில் கட்டிப் போகும்
நொருங்கிய தோர் சத்தெல்லாம் மெதுவுதானும்
படிக்கலாம் வேதாந்த கூட்டத்தோடு
பராபரைத்தாய் முன்வந்து பாஷிப்பாளே. (388)

*கட்டின உப்பினால் அறுபத்து நாலு பாஷாணங்கள், நூற்று இருபது உபரசங்கள் லவண வகை இருபத்தைந்தும் ஒரு நிமிடத்தில் கட்டிப் போகும். எல்லா சரக்கில் இருந்தும் சத்தை வெகுசுலபமாக எடுக்கலாம். வேதாந்த கூட்டத்தோடு சேர்ந்து படிக்கலாம். அது மட்டும் இன்றி பராபரைத்தாயும் முன்நின்று பேசுவாள்.*

பாஷித்தால் சகலகரு வெல்லாந் தோற்றும்
பராபரைக்கு வஸ்த்து சுத்தி பான மீய்வாய்
தூஷித்தால் துரைகளெல்லாம் பொய்யாப் போகும்
துரோகியாய்க் கெட்டலைந்து சூட்சங் காணான்
பூஷித்தால் வாமத்தைப் பொருளுங் காண்பான்
பூதசித்தி பொன்சித்தி யாகும் பாரு
ரோஷித்தால் குளிகையுமாம் குறிகள் காணும்
கூர்மையா முப்புனுட குணந்தான் காணே. (389)

*தாயார் பேசிவிட்டால் சகல விதமான கருவெல்லாம் தானே தோன்றும். தாயாருக்கு வஸ்துசுத்தியும் பானமும் ஈந்து பூசித்தால் வாமப் பொருளும், பூதசுத்தியும் வாதமும் சித்தியாகும். குளிகைகள் மற்றும் அந்தக் கரணங்கள் ப்ரகாசிக்கும் தாயாரை தூஷித்தால் (அவமதித்தால்) எல்லா விதமான கருமமும் பொய்யாய்ப் போகும். சரக்கெல்லாம் சுட்ட லைந்து சூட்சங்கள் காணாமல் தவிப்பாய். ஆகவே மணியைக் கொண்டு தாயாரை போற்ற வேண்டும். இந்த மணியின் குணம் அப்பேற்பட்டது (கட்டிய கல்லுப்புக்கு மணி என்று பெயர்).*

காணப்பா கல்லுப்பு மணியை வாங்கி
கரியிலே மெள்ள வைத்து உருக்கிப் பாரு
பூணப்பா பொன் போலே உருகி யாடும்
புகழாக நிரையதுவும் சரியாய் நிற்கும்

தோணப்பா கம்பியே யுருக்கி னாக்கால்
சுகமாக பூனீறு காரம்வீரம்
தாணப்பா சாரநீர் விட்டு ஆட்டி
தவளமா மணிமேலே பூசிப்போடே. (390)

கட்டிய கல்லுப்பு மணியை எடுத்து உருக்கினால் பொன்போல் ப்ரகாசிக்கும். எடை குறையாது. இந்த மணிக்கு மேலே பூனீறு, காரம், வீரம், இவை மூன்றையும் சாரநீர் விட்டு அரைத்து கவசம் போல் பூசி.

மணிமேலே பூசியே உலர்ந்த பின்பு
வளையலுப்பு பலம் பத்து பொடியாய்ப் பண்ணி
கணிமேலே கலையத்தில் பாதி வைத்து
கல்லுப்பு நடு வைத்து மேலும் போட்டு
திணிமேலே சில்லிட்டுச் சீலை செய்து
செப்பமாய் நூறெருவில் புடத்தைப் போடு
அணிமேலே ஆறவிட்டு யெடுத்துப்பாரு
அரகரா வயிரம்போல் மணியு மாமே. (391)

உலர்ந்தபின்பு ஒரு கலையத்தில் சவுட்டுப்பு பலம் பத்து பொடி பண்ணி பாதி வரை போட்டு நடுவில் கவசம் செய்த மணியை வைத்து மேலும் உப்பைப் போட்டு சில்லிட்டு வாயை மூடி சீலை செய்து நூறு எருவில் புடம் போட்டு ஆற விட்டு எடுத்துப் பார்த்தால் மணி வயிரம்போல் கட்டி ப்ரகாசிக்கும்.

வயிரமா மணி நின்று உருகும் போது
மாட்டு நீநாலுக்கு ஒன்று தங்கம்
தயிரமாம் தங்கம் எடை நாகம் போடு
தன்நாகத் திடை போடு சூதம் தன்னை
துயிரமாஞ் சூத யிடை கெந்திபோடு
சூட்டயிலே காரத்தை ஒக்க விட்டு
கயிரமாம் எடுத்துடனே களங்க மாகும்
கணக்கான நவலோகம் நூற்றுக் கொன்றே. (392)

இந்த மணியை உருக்க வேண்டும். உருகும்போது நாலுக்கு ஒன்று தங்கமும் தங்கத்தின் எடைக்கு நாகமும் நாகத்தின் எடை சூதமும் சூதத்தின் எடை கெந்தியும் போட்டு காரமிட்டு உருக்கினால் களங்காகும். இதை நவலோகத்தில் நூற்றுக்கு ஒன்று கொடுத்தால் பொன்னாகும்.

ஒன்றான களங்கத்தைக் குன்றி யுண்ணு
உத்தமனே யுகாந்தவரை யிறுத்துந் தேகம்
த்ன்றான சட்டைக்கு பாலை யாகும்
சந்திரன் போல் சூரியன் போல் தேக மாகும்

குன்றான மலை தனிலே குத்தினாக் கால்
குமுங்கியே தவிடு பொடி மாவு மாகும்
உன்றான உப்பினுட வுறுதிபோல
ஒன்றுக்கு மில்லை யில்லை உத்துப்பாரே. (393)

இந்த களங்கை குன்றி எடை கொண்டால் (உட் கொண்டால், தேகம் யுகாந்தம் வரை நிலைக்கும். அது மட்டும் இன்றி சட்டை கக்கும். வளமை உண்டாகும். (சட்டை கக்குதல் என்றால் பழைய தோல் முடி நகம் போன்றவை அகன்று புதியதாக வளரும்.) தேகம் சூரியன் போல் ப்ரகாசிக்கும். மேலும் மலையை கையால் குத்தினால் தவிடு பொடியாகும். இந்த உப்பைப் போல உறுதி அளிப்பது உலகத்தில் வேறு ஒன்றும் இல்லை.

உத்துப்பார் உப்பான மணியை வாங்கி
உறுதியாம் வீரமொடு புழுகு சீனம்
தத்துப்பார் சாரநீர் விட்டுஆட்டி
தன்மணிமேல் பூசியல்லோ உலர விட்டு
புத்துப்பார் புளிப்பரணி சாம்பல் தன்னில்
புதைத்துமே புடம் போட பூப்போ லாகும்
கொத்துப்பார் குருவென்ன நாம மாச்சு
கொள்கி யிந்த குரு வறியார் குருடர் தானே. (394)

உப்பு மணியை எடுத்து வீரம், புனுகு, சீனம் இவை மூன்றையும் சாரநீர் விட்டு அரைத்து மணியின் மேல் பூசி உலர வைத்துப் புளிப்பரணி சாம்பலில் புதைத்து புடம்போட சுண்ணமாகும். இதற்கு குரு என்று பெயர் இந்த குருவை அறியாதவர்கள் குருடராவார்.

குருடர்தான் குருவறிந்து செய்ய மாட்டார்
கூகூகூ யிதினுடைய கூர்மை மெத்த
திருடர்தான் குருவாச்சு செய னீராச்சு
செந்தூர மாச்சு தென்பார் திருட்டு வாதி
அருடான லோகமெல்லாம் வேதை யாகும்
அப்பனே அதீத வித்தை யாருஞ் சொல்லார்
புருடர்தான் உப்புனுட குருவைக்கண்டால்
போக்கான கோடிதொழில் உப்பிலாச்சே. (395)

குருடர்தான் குருவறிந்து செய்ய மாட்டார்கள். திருடர்தான் குருமுடித்தேன் செயநீர் முடித்தேன். செந்தூரம் முடித்தேன் என்று கூறுவார்கள். திருட்டு வாதிகள் வாதம் முடித்தேன் என்பார்கள். இவர்களில் யாரும் உப்பினுட உண்மையை அறியாதவர்கள். உண்மையான புருஷர்கள் உப்பைக் கொண்டு கோடி தொழில் புரிவார்கள்.

உப்பான குரு வதுவும் பலந்தான் பத்து
உறவான சாரமது பலந்தான் பத்து
கப்பான கல்வத்தி லிதனைப் போட்டு
கணக்காக யேழுநா ளாட்டு ஆட்டு
அப்பான அகலி லிட்டு புடத்தைப் போடு
ஆறவிட்டு பனியில் வைக்க செயநீராகும்
செப்பான செயநீரின் மகிமை சொல்ல
சிவன்தானும் முன் பின்னும் தியங்கி னாரே. (396)

*உப்பு குரு பலம் பத்து, சாரம் பத்து இரண்டையும் கல்வத்தில் போட்டு ஏழுநாள் அறைத்து அகலில் இட்டுப் புடம் போட்டு பனியில் வைத்தால் செயநீராகும். இந்த செயநீரின் பெருமையைச் சொல்ல முடியாமல் சிவனும் தியங்கி நின்றார்.*

தியங்கினார் இதினுடைய ஆட்டைப் பார்த்து
சின் மயமாய் குரு வோடு சித்த ரெல்லாம்
மயங்கினார் யிதினுடைய மர்மம் காணா
ஆயி சொல்ல யான் கண்டு மகிழ்ந்தே னையா
கலங்கினார் காலாங்கி நாயனாரும்
கருத் துரைத்த பின்பு சொல்ல கருணை கூர்ந்து
தயங்கினார் சதுர்யுகம் பார்த்து பார்த்து
சாத்தினேன் நிகண்டுக்குள் சாத்தினேனே. (397)

*இதனுடைய ஆட்டத்தைப்பார்த்து சொல்ல முடியாமல் தியங்கினார். சிவன் மட்டும் இன்றி மற்ற சித்தர்களும் இதனுடைய மர்மம் தெரியாமல் நின்றார். தாயார் சொல்லக்கேட்டு நான் இங்கே சொல்லி வைத்தேன். அது மட்டும் இன்றி காலாங்கி நாதர் கருணை கூர்ந்து சொன்னதை யுகயுகமாக பார்த்து இந்த நிகண்டில் சொல்லி வைத்தேன்.*

சாத்தினதோர் நிகண்டுக்குள் வாதம் பொய்யோ
சதாசிவன்தான் ஒளித்திருந்த மூலம் பொய்யோ
ஆத்தினதோர் அஷ்டாங்க யோகம் பொய்யோ
அண்ட ரண்டம் கடந்தோடும் குளிகை பொய்யோ
மாத்தின. தோர் வாத சித்தி காயசித்தி பொய்யோ
மறைத்து வைத்த சவுக்காரஞ் சுண்ணம் பொய்யோ
தூத்தினதோர் உப்புனுட குருதான்பொய்யோ
சுணங்கவே சுண்ணத்தின் சூட்சம் பாரே. (398)

*இந்த நிகண்டில் சொல்லி உள்ள வாதம், மூலநூல் அஷ்டாங்க யோகம், அஷ்டம் கடந்து போகும் குளிகை, வாத சித்தி, காயசித்தி, சாரச் சுண்ணம்*

உப்பு, குரு போன்றவைகள் பொய்யாய் இருக்குமோ என்று மலைக்காமல் முழுமையான நம்பிக்கை கொண்டு சவுக்கார சுண்ணத்தின் சூக்ஷத்தை பார்.

**சவுக்காரம்**

பார்க்கவே சித்தான சவுக்காரந் தான்
பாடுகிறேன் சாத்திரத்தில் பண்பா யில்லை
யேர்க்கவே யிடும்பாகச் சொன்ன ரென்று
யீசனிடம் கோள் சொல்வார் சித்த ரெல்லாம்
சூர்க்கவே யீசனுக்கு கோபமாகும்
குணமான சட்டைமுனி தீட்சைவிதி சொன்னார்
சேர்க்கவே சித்தரெல்லாம் கூடிக்கொண்டு
தீட்சைவிதி யிருநூறும் கிழித்தார் காணே. (399)

*சவுக்காரத்தை பற்றி எந்த சாஸ்திரத்திலும் ஒழுங்காக இல்லை. இதைப்பற்றி முழுமையாய் சொன்னால் சிவபெருமான் கோபம் கொள்வார் என்று சித்தர்கள் சொல்லாமல் போனார்கள். மேலும் சட்டை முனி தீக்ஷை விதியில் இதைப்பற்றி கூறியதால் சித்தர்கள் எல்லாம்கூடி அதைக் கிழித்துப் போட்டார்கள்.*

காணப்பா சவுக்கார மர்மஞ் சொன்னால்
கயிலாய சின் மயமும் கோப மாகும்
பேணப்பா துட்டருக்கு கோபமாகும்
பேர்பெரிய சித்தரெல்லாம் கோபமாகும்
ஆணப்பா ஆனந்தர் சொல்லுவோமா
அசட்டென்று விடுவோமா ஐயா சொல்லு
தோணப்பா தொழு திரஞ்சி தெண்டம் பண்ணி
சுகாதீத ஆனந்தர் சொல்லுவாரே. (400)

*சவுக்காரத்தின் மர்மம் சொன்னால் சிவனுக்கும், திருமூலருக்கும் அது மட்டும் இன்றி சித்தர்களிடமும் சண்டை உண்டாகும். ஆகையால் என் சிஷ்யனான ஆனந்தனே சொல்வதா விடுவதா என்று எனக்குத் தெரியவில்லை என்று சொன்னபோது, என்னை வணங்கித் தொழுது போற்றி என் சீடன் ஆனந்தர் பின்வருமாறு கூறினார்.*

சொல்லுகின்ற யென் குருவே பூரணமே அய்யா
சித்தானால் சகலருந்தான் துதி செய்வார்கள்
அல்லுமையா ஆதிசிவன் கோப மானால்
அனுசரிச்சு அஞ்சலி பெந் தனங்கள் பண்ணி

கல்லுமையா கரைத்த தோர் விசேஷஞ் சொல்லி
கடாட்சிக்க வேணு மென்றால் கருணை கூர்வார்
வில்லுமையா வளைத்தாலோ அம்பு தைக்கும்
வெறுமரத்தில் அம்புதையா விதம்போலாமே. (401)

சித்தர்கள் கோபம் கொண்டால் அவர்களை துதி செய்தால் கோபம் அகன்றுவிடும். சிவபெருமான் கோபம் கொண்டால் அவரை அஞ்சலித்து வந்தனங்கள் செய்து கல்லும் கரையும் அளவிற்கு சொல்ல வேண்டிய விதத்தில் எடுத்துச் சொல்லி கடாக்ஷம் புரியவேண்டும் என்று வேண்டினால் கருணை காண்பிப்பார் வில் வளைந்தால் தான் அம்பு செல்லும். வெறும் அம்பு மட்டும் ஒன்றும் செய்ய முடியாது. அதேபோல நாம் பணிந்து சென்றால் மற்றோர் கோபமும் தணிந்து விடும்.

விதமான சவுக்காரம் தன்னை சொன்னால்
வெகுசெனத்துக் குபகார மானா லென்ன
திதமான சுகுர்தம்வந்து லபிக்கு மையா
திருட்டான சவுக்காரம் நீர்தான் சொன்னால்
பதமான பாபம் வந்து பரவிப்போகும்
பாஷித்தால் வெகுசித்தர் நூலுக் குள்ளே
அதமான தீயிலிட அகன்று போகும்
ஆகையால் வாதமெல்லாம் அசடாய்ப்போச்சே. (402)

முறையான சவுக்காரத்தை சொன்னால் மக்களுக்கு உபகாரமாக இருக்கும். அதுமட்டும் இன்றி நமக்கு புண்யங்கள் கிட்டும். பொய்யான சவுக்காரத்தை சொன்னால் பாவம் வந்து சூழ்ந்து கொள்ளும். பல சித்தர்கள் பல நூல்களில் சவுக்காரத்தைப் பற்றி கூறி வைத்துள்ளார்கள் ஆனால் அது சரியாக இல்லாததால் வாதம் பொய்யாய்ப் போச்சு.

அசடாக போகாமல் வழலைமார்க்கம்
அறைகிறேன் ஆனந்தா அறிவாய்க் கேளு
திசடான சித்திரை வை காசிக் குள்ளே
செங் கதிரோன் ரவிதன்னில் பொங்கி நீறாம்
பசடாக பூனிரு பதக்குவாரி
பாண்டத்தி லிட்டுமே தண்ணீர்வாரு
திசடாக ஒன்றுக்கு ரெண்டுதண்ணீர்
சிறப்பாக வார்த்துமே கலக்கிடாயே. (403)

வாதம் பொய் ஆகாமல் இருக்க வழலையான சவுக்காரத்தை கூறுகிறேன் கேள். சித்திரை வைகாசி மாதங்கள் பூக்கும்பூநீரைக் கொண்டு வந்து ஒரு பாண்டத்தில் கொட்டி ஒருபங்கு பூநீருக்கு இரண்டு பங்கு தண்ணீர் விட்டு கலக்கி வைக்க வேண்டும்.

## பூநீர்ச் சுன்னம் சீனச் சுன்னம்

கலக்கியே மூணுநா ளானபின்பு
கசகாமல் தெளி விறுத்து காச்சு காச்சு
புலக்கியே பொடியான பதத்தில் வாங்கி
பேரான வெடியுப்பு நீரால்கட்டி
விலக்கியே வில்லைபண்ணிக் காயவைத்து
மீறாதே புடம் போட்டு யெடுத்து வைப்பாய்
துலக்கியே சீனத்தை கல்வத் திட்டு
துடியான வெடியுப்பு னீரா லாட்டே. (404)

*கலக்கி வைத்து மூன்று நாள் ஆனபிறகு நீரை கலக்காமல் தெளிந்த நீரை எடுத்து மற்றொரு பாண்டத்தில் கொட்டி அடுப்பு மூட்டி காய்ச்சினால் கட்டி உப்பாக மாறும். அந்த உப்பை வெடி உப்பு செயநீரால் அறைத்து வில்லை செய்து காயவைத்து புடம் போட்டால் சுண்ணமாகும்.*

ஆட்டியே அஞ்சுநாள் வில்லைபண்ணி
அகலிலிட்டு அன்பதெரு அடுக்கிப்போடு
தூட்டியே ஆறவிட்டு யெடுத்துப் பாரு
சுப்பிரமாய் வெள்ளையாயச் சுண்ணமாகும்
காட்டியே வுலைவைத்து கல்லுப்புத் தானும்
கணக்காக வெடியுப்பு நீராலாட்டி
வாட்டியே அகலிலிட்டு புடத்தைப்போட
வயிரம்போல் சுண்ணாம்பு ஆகும்பாரே. (405)

*அதன் பிறகு சீனத்தை கல்வத்தில் போட்டு வெடி உப்புச் செயநீரால் ஐந்து நாள் அரைத்து வில்லை பண்ணி காய வைத்து ஐம்பத்தொரு எருவில் புடம் போட சுண்ணமாகும். பிறகு கல்லுப்பை கல்வத்தில் போட்டு வெடியுப்பு செயநீரால் அறைத்து வில்லை செய்து புடம் போட சுண்ணமாகும்.*

ஆகுமே பூனீறுச் சுண்ணம்நாலு
அரிதான சீனத்தின் சுண்ணம் ரெண்டு
யேகுமே கல்லுப்பு சுண்ணம் வொன்று
யேத்தமாங் கல்வத்தி லிதனைப் போட்டு
போகுமே பொடிபண்ணி வெடியுப்பு நீரால்
பேசாம லரைத்திட்டு வில்லை பண்ணி
தேகுமே குக்குடத்தின் புடத்தைப் போட்டு
சீதளமாய் ஆறவிட்டு யெடுத்துக் கொள்ளே. (406)

சுண்ணமாகக் செய்து வைத்த பூனீறுச் சுண்ணம் நான்கு பலமும் சினத்தின் சுண்ணம் இரண்டு பலமும், கல்லுப்புச் சுண்ணம் ஒரு பலமும் எடுத்து கல்வத்தில் போட்டு பொடி பண்ணி வெடி உப்பு செயநீரால் அறைத்து வில்லை செய்து கோழிப்புடம் போட்டு ஆறிய பிறகு எடுத்து.

யெடுத்துமே வெடியுப்பு நீராலாட்டி
யிழுத்தரைத்து வீரமது பலம் கால் போட்டு
விடுத்துமே வில்லை பண்ணி காய வைத்து
மீராதே புடம்பாட்டு யெடுத்து வாங்கி
கடுத்துமே கல்வத்தி லிதனைப் போட்டு
கடிசான வீரமது பலங்கால்போட்டு
தடுத்துமே வெடியுப்பு நீராலாட்டி
சாதகமாய் அஞ்சு புடம் போட்டிடாயே. (407)

இதை மீண்டும் வெடி உப்பு செயநீரால் அறைத்து அதனுடன் கால்பங்கு வீரம் போட்டு வில்லை செய்து காய வைத்து புடம் போட்டு எடுத்துக் கொண்டு மீண்டும் அதனை கல்வத்தில் போட்டு கால்பங்கு வீரம் சேர்த்து வெடியுப்பு செயநீரால் அறைத்து புடம் போட வேண்டும். இவ்வாறு ஐந்து புடம் போட வேண்டும்.

### சவுக்காரச் சுன்னம்

அஞ்சுமே புடம்போடச் சுண்ண மாகும்
ஆண்மையாஞ் சவுக்காரம் சுண்ண மாச்சு
கெஞ்சுமே சரக்கெல்லாம் கட்டிப் போகும்
கெடியாரம் போடலாம் வாதமாட்டு
துஞ்சுமே வாய் திறந்து பேச வேண்டாம்
சொல்லாதே ஒருவரிடம் சூட்ச மெத்த
தஞ்சுமே விளாங்காய் போல் உண்டை பண்ணி
சாந்தமாம் ரவிதனிலே காயப்போடே. (408)

இவ்வாறு ஐந்து முறைபுடம் போட்டால் சவுக்காரம் சுண்ணமாகும். இதனால் சரக்கெல்லாம் கட்டிப்போகும். இதனால் சகலவிதமான வாதமும் ஆட்லாம். வாய் திறந்து பேசாமல் மௌனமாக இருந்து கொண்டு ஒருவருக்கும் இந்த முறையை சொல்லாமல் விளாங்காய் போல் உருண்டை செய்து ரவியில் காயவைத்து பத்திரமாக பதனம் பண்ணி வைத்துக் கொண்டு.

காய வைத்து யெடுத்து வைப்பாய் பதனமாக
கருத்து வைத்து கைம் முறையாய் வளமாய்ப் பண்ணு
ஆயவைத்து சாத்திரத்தில் சொன்னா ரில்லை
அறுபத்து நாலான மரபில் தானும்

சாயவைத்து வெவ்வேறாய்ச் சொல்லிப் போட்டார்
சனங்க ளெல்லாம் சித்து மய மாகு மென்று
ஓயவைத்து நம்முடைய நிகண்டிற் சொன்னேன்
உத்தமமாம் சவுக்காரச் சுண்ண மாச்சே. (409)

*பின்புகேள் நான் சொன்னபடி முறையாகச் செய்தால் எல்லாம் பலிதமாகும். இதைப்போல் எந்த சாஸ்திரத்திலும் இல்லை அறுபத்து நாலு மடபதிகளும் தங்கள் நூலில் மறைத்து சொல்லி வைத்தார்கள். ஏனெனில் உலகமெல்லாம் சித்தர்கள் மயம் ஆகும் என்று, நான் அதைப்பற்றி கவலைப்படாமல் என்னுடைய இந்த நிகண்டில் வெளியாகச் சொல்லி விட்டேன்.*

சவர்க்கார வித்தை தனைச் சொன்னா ரென்று
சதாசிவனு மென்மேலே கோப மானார்
மவுக்கமா மவுனிகளும் கோப மானார்
வாய்திறக்கார் சித்தர்கள்தான் யென்னோ டப்பா
குவர்க்காரம் நிகண்டுதனை குகையில் வைத்தால்
கோபம் வந்தால் சித்தர்தான் கிழிப்பா ரென்று
வுவர்க்கமாம் வுலகத்தோர் கீய்ந்துக் விட்டேன்.
உத்தமித்தாய் சொல்லிடவே வுரைசெய்தேனே. (410)

*சவுக்கார வித்தையை சொன்னதால் சதாசிவனும், மவுனிகளும் சித்தர்களும், என்மீது கோபம் கொண்டார்கள். அதனால் நூலை குகையில் வைத்தால் சித்தர்கள் கிழித்து விடுவார்கள் என்று எண்ணி உலகத்தில் உள்ள மக்களுக்கு கொடுத்து விட்டேன். சவுக்காரமுறையை உத்தமியான மனோன்மணித்தாய் சொல்லக்கேட்டு எழுதினேன்.*

செய்திட்டேன் சிவகாமி சொல்லக் கேட்டு
சித்தரெல்லாம் சினேகம் விட்டு கோபமாகி
வைத்திட்டா ரென்று சொல்லி வெளியில் போட்டேன்
மறைத்து வைத்த கருவிது தான் வழலை மார்க்கம்
கொய்திட்ட குருவாலே கோடி கவராகும்
கூகூகூ யிதுஅரிய கொள்ளை கொள்ளை
நைதிட்ட சரக்குக்கு நமன் போலாகும்
நாமறியோ மிதுபோலே போக்குதானே. (411)

*சிவகாமி சொல்லக் கேட்டு எழுதியதால் சித்தர்கள் எல்லாம் என்மீது கோபம் கொண்டு வைத்திட்டார்கள். ஆகையால் நூலை வெளியில்*

போட்டேன். (உலகத்தில் உள்ள மக்களுக்கு கொடுத்துவிட்டேன்) சித்தர்கள் மறைத்து சொன்ன சவுக்காரம் இதுதான் இந்த கருவால் கோடி வித்தை பலிக்கும். இந்த சவுக்காரம் சரக்கெல்லாவற்றிற்கும் எமன் போல் ஆகும். இதனுடைய போக்கை எவரும் அறிந்ததில்லை.

போக்கான கருவெல்லா மெதினா லாச்சு
புகழான ஊசரத்தின் குருவா லாச்சு
தாக்கான சாத்திரத்தில் சித்த ரெல்லாம்
சாதகமாய்ச் சொல்லாதே போனா ரென்று
போக்கான நிகண்டுக்குள் வெளியாய்ச் சொன்னேன்
புகழ்நுட்ப மென்னூல் போல் யெதுவும் சொல்லார்
வாக்கான சவர்க்காரம் குருத்தான் செய்யும்
மார்க்கத்தை வழியோடே வழுத்து வேனே. (412)

எல்லா விதமான கருக்களும் இதனால் முடியும். (சவுக்கார குருவால் முடியும்) இந்த முறையை சாஸ்திரத்தில் சித்தர்கள் மறைத்து வைத்தார். நான் இந்த நிகண்டிற்குள் வெளியாகச் சொன்னேன். இந்த நிகண்டைப் போல் எதுவும் சொல்லாது. மேலும் சவுக்காரக் குரு செய்யும் மார்க்கத்தை வழிமுறையாய்ச் சொல்கிறேன் கேள்.

வழுத்துவேன் முன்வைத்த சவர்க்கார ந்தான்
வாகாகப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
எழுத்தவே யெருக்கம்பால் படிதான் ஒன்று
யிசைந்த அண்ட சுண்ணமது பலந்தா னொன்று
விழுத்தவே வெடியுப்பு சுண்ண மொன்று
மிடுக்கான சீனத்தின் சுண்ண மொன்று
தழுத்தவே வங்கத்தின் சுண்ண மொன்று
சவுட்டு வில்லை பலமொன்று தூக்கிக் கொள்ளே.(413)

முன்செய்த சவுக்காரத்தை பத்து பலம் நிறுத்துக் கொண்டு மேலும் எருக்கம் பால் ஒருபடி, அண்டச்சுண்ணம் ஒரு பலம், வெடியுப்புச் சுண்ணம் ஒரு பலம், சீனச்சுண்ணம் ஒரு பலம், வங்கச் சுண்ணம் ஒருபலம் சவுட்டுவில்லை ஒரு பலம்.

தூக்கியே கற்சுண்ணம் பலன்தா னாலு
துப்புரவாம் நல்ல தண்ணீ ரெண்டு சேரு
நீக்கியே நீர்தன்னில் கற்சுண் ணத்தை
நிகழாமல் கலக்கியே நீரிறுத்துக் கொண்டு

வாக்கியே முன்சொன்ன அஞ்சு தானும்
வகைக்கு ஒரு பலம் நிறுத்துக் கலக்கிக் கொண்டு
தாக்கிய வீரமது காசு ரெண்டு
சாரமது காசு ரெண்டு பூர ம்ரெண்டே. (414)

கல்சுண்ணம் ஒரு பலம் எடுத்துக் கொண்டு, நல்ல தண்ணீர் இரண்டு சேர் எடுத்து அதில் கல் சுண்ணத்தை கலக்கி கரைத்து கொண்டு முன்கூறிய ஐந்து வகையான சுண்ணத்தையும் போட்டு கலக்கி, அதில் வீரம் இரண்டு காசு அளவு சேர்த்து மேலும் சாரமும், பூரமும் வகைக்கு இரண்டு காசு அளவு போட்டு.

ரெண்டோடு கருநாபி காசு ரெண்டு
நிச்சயமாம் புனுகதுவும் காசு ரெண்டு
பண்டோடு குக்குடவெண் மலமும் ரெண்டு
பாங்கான குருவண்டு அன்பத் தொன்று
தண்டோடு வெள்ளுறமும் காசுரெண்டு
தளுக்கானச் சூதமுது காசுரெண்டு
துண்டோடு சுண்ணாம்பு நீரினாலே
சுழட்டியரைத தொன்றாகக் கலக்கிக் கொள்ளே. (415)

கருநாபி ரெண்டு காசும், புனுகு இரண்டு காசும், கோழி மலம் இரண்டு காசும், ஐம்பத்தொரு குருவண்டும், வெள்ளுறம் இரண்டு காசு அளவும், சூதம் இரண்டு காசு அளவும் எடுத்து மேல் கூறிய சுண்ணாம்பு நீரில் கலக்கிக் கொண்டு.

கலக்கியே ஒன்றாக வைத்துக் கொண்டு
கடிசான யெருக்கம்பால் படிதான் விட்டு
அலக்கியே அண்டமது அன்பத்தொன்று
அப்பனே வெண்கருவை கூடவிட்டு
குலக்கியே குச்சியினால் மத்திச்சு வைக்க
கொப்பளிக்குங் கடுங்கார செய நீராகும்
திலக்கியே தெளிவாக யிறுத்துக் கொண்டு
செயமான சவுக்கார மதனிற் போடே. (416)

ஒன்றாக கலக்கிய நீரில் எருக்கம் பால் ஒரு படி விட்டு ஐம்பத்தொரு அண்டமும் சேர்த்து வெண்கருவும் கூடவிட்டு குச்சியினால் மத்திச்சு வைத்தால் கடுங்கார செயநீர் கொப்பளித்துக் கொண்டு வரும் அதைத் தெளியயிறுத்துக் கொண்டு அதில் சவுக்காரம் சேர்த்து.

போட்டுமே கவர் கழியால் கடைய வெண்ணை
பொருமிவரும் வழித்தெடுத்து போடுபீங்கான்
மூட்டுமே மூனுநாளா கமட்டும்
முயர்ச்சியாய்க் கடைந்தெல்லாம் வெண்ணை வாங்கு
நாட்டியே ரவியிலிட்டு காயப் போட்டு
நவாச்சாரம் சரியிடைக்கி நாட்டிப் பின்பு
ஆட்டியே அஞ்சுநா ளரைத்து மைபோல்
அகலிலிட்டு மூடியே புடத்தைப் போடே. (417)

*ஒரு குச்சியில் கடைந்தால் வெண்ணெய் போல் திரண்டு வரும். அதை வழித்து எடுத்து பீங்கானில் போட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு மூன்று நாள் வரை தினமும் கடைந்து வெண்ணை எடுத்து பீங்கானில் இட்டு ரவியில் காயவைத்து அந்த எடைக்கு நவச்சாரமும், சேர்த்து அஞ்சு நாள் அரைத்து மைபோல் வாங்கி அகலில் இட்டுப் புடத்தைப் போட வேண்டும்.*

மூடியே புடம் போடச் சாரங் கட்டி
முத்துப்போல் வெள்ளையு மாம் பனியில் வைப்பாய்
சாடியே சலந்தானும் சிவந்திருக்கும்
தன்னுக்குள் வீரமொடு பூரம்போட்டு
பாடியே யெடுத்து வைப்பாய் பதனமாகப்
பருவமாய்க் கம்பிவுப்பு தோச்சுப் போடு
சீடியே சீனத்தைத் தோச்சுப் போடு
தேசுவாம் வெண்காரம் தோச்சுப் போடே. (418)

*புடம் போட்டால் சாரம் கட்டி முத்துபோல் வெள்ளையாய் நிற்கும். அதைப் பனியில் வைத்தால் சிவந்த நிறம் உள்ள சலமாய் நிற்கும். அந்த சலத்தில் வீரம், பூரம் சேர்த்து பத்திரமாக வைத்துக் கொண்டு பின்னர் அந்த நீரில் கம்பி உப்பு, சீனம் வெண்காரம்.*

தோச்சிடவே பாறையுப்பு சூடன் வெள்ளை
சூதமொடு சவ்வீரம் சோதி லிங்கம்
ஆச்சிடவே அறுபத்து நாலுங் கட்டும்
அஞ்சாம லவணமது கட்டிப் போகும்
ஓச்சவே உபரசங்கள் நூத்திரண்டு பத்தும்
உர்ப்பனமாய் சுருக்கிட்டு வாட்டுவாட்டு சத்தாம்
தாச்சிடவே சவர்க்காரம் கடைந்த நீரில்
சரக்கான வளையலுப்பை யரைத்துக்கட்டே. (419)

*பாறையுப்பு, சூடன், வெள்ளை சூதம், செவ்வீரம், கெந்தி, லிங்கம் ஆறு மட்டும் இன்றி அறுபத்து நாலு சரக்கும், லவணம் உபரசம் நூற்றி ரெண்டு*

பத்தும் தோய்த்து சுருக்கிட்டால் கட்டிப் போகும். முதலில் சவுக்ரரத்தை கொண்டு கடைந்த நீரில் வளையலுப்பை அரைத்து கட்ட வேண்டும்.

கட்டுவதற்கு முன்பே தான் உள் கருவைக் கேளு
காரமொடு சவ்வீரம் லிங்கந் தானும்
மட்டுதற்கு வகைக்கு ஒரு விராக னிடை தூக்கி
மகத்தான சவுக்காரங் கடைந்த நீரில்
ஒட்டுதற்கு அரைத்துமே உள் கருவாய்ப் பூசி
உலர்ந்த வளைய லுப்ப தனைக் கவசங் கட்டி
மட்டுதற்கு மணல் மறைவில் புடத்தைப்போட
மகத்தான முழுவயிரக் கட்டுமாமே. (420)

கட்டுவதற்கு முன் காரம், செவ்வீரம், லிங்கம் இவை எல்லாம் வகைக்கு ஒரு வராகன் எடுத்து சவுக்காரம் கடைந்த நீரில் அரைத்து உள்கருவாய் பூசி வளையலுப்பைக் கவசங்கட்டி மணல் மறைவில் புடம் போட்டால் வயிரம் போல் சரக்குகள் கட்டும்.

கட்டியதோர் சரக்குகளில் வேதை கோடி
கசடற்ற சத்துகளோ மெழுகு கோடி
தெட்டியதோர் செயநீரும் சுண்ணங் கோடி
செந்தூரம் குருவோடு களங்குகோடி
எட்டியதோர் குளிகை வகை கோடா கோடி
யெடுத்தோடும் குளிகையிலே விந்தை கோடி
பட்டியதோர் பழுப்பினமும் கெடுப்பினமும் கோடி
பகராரிது சவர்க்கார நீரினாட்டே. (421)

இம்முறையில் கட்டிய சரக்கினால் வேதையும், சத்துகளும் மெழுகும், செயனீரும், சுண்ணமும், குருவும், களங்கும், குளிகையும் ககன குளிகையும், பழுப்பினமும், கெடுப்பினம் போன்ற வகையில் கோடி வித்தைகள் புரியலாம். அப்பேர்ப் பட்டது இந்த சவுக்கார நீரின் பெருமை.

சவுக்கார மறப்பை யெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
தாய் சொல்ல யான் கண்டு சந்தோஷித்து
எவுக்கமாய் ஏழுகோடி யுகமும்பார்த்து
யேழையாஞ் சித்தருக்கு யியல் பாய்ச் சொல்லி
தவுக்கமாய் நற்சீடன் பார்த்துத் தேடி
சவுர்க்கார மறைப்பையெல்லாம் சாத்தினேன் யான்
உவுக்கமாம் சவர்க்காரம் பார்த்து தேர்ந்த
உயர்சீஷர் நாற்பத்து மூவ ராச்சே. (422)

*சவுக்காரத்தின் மறைப்பை எல்லாம் வெளியில் சொன்னேன். தாயாரான தேவி தன்வாயால் சொல்லக்கேட்டு சந்தோஷம் அடைந்து ஏழு கோடி யுகம் சொன்னதை பரீட்சித்து பார்த்து நல்ல குணம் உள்ள சித்தர்களுக்குச் சொன்னேன், நல்ல பல சிஷ்யர்களைத் தேடிச் சென்று மறைத்து வைத்த சவுக்கார மார்க்கத்தை எல்லாம் வெளிப்படையாகச் சொன்னேன். இதில் தேர்ச்சி அடைந்த சிஷ்யர்கள் மொத்தம் நாற்பத்து மூன்று பேராகும்.*

ஆச்சப்பா நாற்பத்து மூணு பேரும்
அண்டத்து சித்தருடன் வாது போட்டு
கூச்சப்பா குளிகையுட வேகங் காட்டி
குருவான துரிசிநீர் கூர்மை காட்டி
தாச்சப்பா சவர்க்கார மகிமை காட்டி
சடாதார தெரிசனத்தில் சார்வு காட்டி
யேச்சப்பா சிலம்பொலியி னியக்கம் காட்டி
என்போலே சமாதியிலே யிருந்தார்காணே. (423)

*இந்த நாற்பத்து மூன்று பேரும் உலகத்தில் உள்ள சித்தர்களிடம் விவாதம் புரிந்து குளிகையின் வேகத்தைக் காட்டியும் துருசு குருவின் கூர்மையான தன்மையை காட்டியும், சவுக்காரத்தின் மகிமையைக் காட்டியும் ஆறாதாரத்தின் தரிசனத்தை காட்டியும், சிலம் பொலியின் இயக்கத்தைக் காட்டியும் என்னைப்போன்றே சமாதியில் இருந்தார்கள்.*

### அயக் களங்கு

இருந்திட்ட சவர்க்கார செயநீர் தன்னில்
இதமாக வீரமொடு பூரம் போட்டு
கருந்திட்ட கார மொன்று சவ்வீர மொன்று
கருதிய தோர் தாளகமும் துருசி ஒன்று
திருந்திட்ட சூதமொன்று கல்வத்திட்டு
சிறப்பாகச் செயநீரை விட்டு ஆட்டி
நருந்திட்ட நாலுநா ளரைத்து மைபோல்
நலமாக மூன்று பங்கு பண்ணி வையே. (424)

*முன்செய்த சவுக்கார செயநீரில் காரம், வீரம், தாளகம், துருசு சூதம் இவை எல்லாம் வகைக்கு ஒரு பலம் எடுத்து செயநீரை விட்டு நான்கு நாள் தொடர்ந்து அரைத்து மைபோல் ஆக்கி அரைத்த மருந்தை மூன்று சம பங்காகப் பண்ண வேண்டும்.*

பண்ணியதோர் சரக்கதுவும் பலந்தான் ஒன்று
பரிவான அரப்பொடி தான் பலந்தான் போட்டு
எண்ணியதோ ரெலு மிச்சம் பழச்சாறு விட்டு
யிதமாக மூன்று நாளூர வைத்து

கண்ணியதோர் கழுவி யெல்லாங் காயப் போட்டு
கனத்ததோர் முன்பங்கு ஒண்ணு கூட்டி
குண்ணியதோர் குகையிலிட்டு உருக்கியாட்டு
கொட்டியே உடைத்தெடுத்து மறுபங்குகூட்டே. (425)

*அரைத்த மருந்து ஒரு பலம் எடுத்து அதனுடன் அரப்பொடி பலம் ஒன்று போட்டு எலுமிச்சம் பழச்சார் விட்டு மூன்று நாள் ஊற வைத்து பின்பு அதைக் கழுவி அதனுடன் முன் மருந்தின் ஒரு பங்கும் காரமும் சேர்த்து உருக்கி மணியாக்கி எடுத்துக் கொண்டு.*

கூட்டியே பின்பொருக்கால் குமுறவூது
குகைநறுக்கி சத்தெல்லாம் பொருக்கிக் கொண்டு
மாட்டியே பின்பொருக்கால் மருந்து கூட்டி
மறவாம லூதிடவே சத்துமாகும்
சாட்டியே சத்தெல்லாம் காரமிட் டுருக்கி
தரித்தயிடை நாலுக்கு ஒன்று தங்கம்
ஊட்டியே யொன்றாக வுருகும் போது
உயர்கின்ற நாகத்தை ஊட்டக் கேளே. (426)

*மீண்டும் மற்றொரு பங்கு மருந்து சேர்த்து உருக்க வேண்டும். உருக்கி சத்தையெல்லாம் பொருக்கி மற்றொரு பங்கு மருந்து சேர்த்து உருக்கி சத்தாக எடுத்துக்கொண்டு அந்த சத்துடன் காரம் சேர்த்து உருக்கி உருகும்போது நாலுக்கு ஒன்று தங்கம் சேர்த்துப் பிறகு நாகம் சேர்க்கும் விதம் கூறுகிறேன் கேள்.*

**நாகக் கட்டு**

நாகத்தைக் கட்டுவதோர் மார்க்கங்கேளு
நலமாக சுத்திபண்ணி வில்லை வார்த்து
ஆகத்தை யிருக்குகின்ற அப்பிரகங் காந்தம்
அதிகமாம் வளையலுப்பு சத்தி சாரம்
வேகத்தை நவாச்சாரம் வீரமொடும் கார
மிடுக்காக வகைக்கு அரைப் பலந்தான் கூட்டி
பூகத்தை வெடியுப்பு நீரினாலே
புகழாகத் தினமூன்று அரைத் திடாயே. (427)

*நாகத்தை சுத்தி செய்து வில்லையாக வார்த்துக் கொண்டு பின்னர் அப்பிரகம் காந்தம், வளையலுப்பு, சத்திச்சாரம், நவச்சாரம், வீரம், காரம் இவை எல்லாம் வகைக்கு அரைப் பலம் கூட்டி வெடிஉப்பு செயநீரால் மூன்று நாள் அரைக்க வேண்டும்.*

தினமூன்று அரைத்தபின்பு வெடியுப்பு நீரில்
சேறுபோல் குழப்பியே வைத்துக் கொண்டு
அனலாக வில்லையது ஆறு பலமாகும்
அழகாகக் குழப்பியே அதட்டி வாட்டு
பனமாக குழம்பையெல்லாம் பதியவாட்டு
பண்பான வளையலுப்புக் கவசங்கட்டி
அன்பாக அன்பதெரு அடுக்கிப்போட
அரகரா முழுக்கட்டு ஆகும் பாரே. (428)

அரைத்த மருந்தை வெடியுப்புச் சேர்த்து செயநீர்விட்டுக் குழப்பிக் கொண்டு அதில் ஆறு பலம் நாக வில்லைகள் போட்டு அதட்டி வாட்டி குழம்பெல்லாம் வில்லையுடன் சேர்த்து ஒட்டிக் கொண்ட பிறகு வளையலுப்பைக் கவசமாக கட்டி ஐம்பத்தொரு எருவில் புடம் போட நன்றாக கட்டிப் போகும்.

## லிங்கக்கட்டு

கட்டவே லிங்கமது கருதக்கேளு
காரணமாம் சவர்க்கார செயநீராலே
துட்டியே துருசு அஞ்சு பலத்தை வாங்கித்
துடியான கல்வத்தி லதனைப் போட்டு
அட்டவே அஞ்சுநா ளரைத்து மைபோல்
அகலி லிட்டுப் புடம் போடச் சுண்ணமாகும்
கட்டவே சுண்ணத்துக் கிடைதான் சாரம்
கட்டியரைத் தஞ்சுநாள் புடத்தைப் போடே. (429)

துரிசு ஒரு பலம் எடுத்து அதைச் சவுக்கார செயநீர் கொண்டு அஞ்சுநாள் அரைத்து மைபோல் ஆக்கி அகலில் இட்டு புடம்போட சுண்ணமாகும். இந்த சுண்ணத்திற்குச் சரி எடை சாரம் சேர்த்து அஞ்சுநாள் அரைத்துப் புடம்போட சுண்ணமாகும்.

போட்டுவா பீங்கானில் பனியில்வைப்பாய்
பெருகுகின்ற ஆறுபோல் செயநீராகும்
தீட்டுவாய் செயநீரில் பூரம்வீரம்
சிறப்பாகப் பொடித்திட்டு வறுத்துக்கொண்டு
காட்டுவாய் கம்பிலிங்கம் பலத்தைவாங்கி
கனகமா முலைப்பாலும் பழச்சாறும்சேர்த்து
ஒட்டுவாய் ஒட்டிலிட்டு சுருக்குப்போடு
உறுதியாய் செயநீரை சுருக்குப்போடே. (430)

இந்த சுண்ணத்தை ஒரு பீங்கானில் இட்டுப் பனியில் வைத்தால் ஆறுபோல் செயநீராகும். இதில் வீரம், பூரம், பொடித்துப் போட்டு லிங்கம் ஒருபலம் வாங்கி எலுமிச்சம் பழச்சாறும் முலைப்பாலும் சேர்த்து, ஓட்டில் இட்டு கருக்கு போட்டு பிறகு செயநீராலும் சுருக்குப்போட வேண்டும்.

சுருக்கிட்டு நால் சாம மான பின்பு
சுத்தமாம் சவாதோடு காரம் வீரம்
அருக்கிட்ட செயநீரா லரைத்துப் பூசி
ஆண்மையாம் வளையலுப்பு சத்திச் சாரம்
கருக்கிட்ட வெடியுப்பு நீராலாட்டி
கனமாக மேல் கவசம் கட்டி வாட்டு
உருக்கிட்டு உறுதியாய் வாட்டி வாட்டி
உண்மையா மண்மறைவில் புடத்தைப் போடே. (431)

நான்கு சாமம் சுருக்குபோட்ட பின்னர் காரம், வீரம், இவற்றை செயநீரால் அரைத்துப் பூசி வளையலுப்பையும், சத்திசாரத்தையும், வெடியுப்பு நீரால் அரைத்து மேலே கவசம் கட்டி, மெதுவாக தணலில் வாட்டி கவசம் கெட்டியான பிறகு மணல் மறைவில் வைத்துப் புடம் போடக் கட்டும்.

## சவ்வீரக்கட்டு

மறைவிலே புடம்போட்டு வெடுத்து வைத்து
மகத்தான சவ்வீரப் பலகைதானும்
அரவிலே யரைப் பலந்தான் தூக்கிக் கொண்டு
ஆண்மையாம் பறி ரேக்கை மேலே சுத்தி
கரவிலே கர்ப்பூர தீபந் தன்னில்
கனமான சவர்க்கார செயநீர் தோச்சு
துரவிலே நால் சாமம் வாட்டு வாட்டு
துரிசாக வாட்டிடவும் கட்டிப் போமே. (432)

சவ்வீரம் அரைப்பலம் வாங்கி அதன்மேல் தங்க ரேக்கைச் சுற்றி கற்பூர தீபத்தில் சவுக்கார செயநீரால் தோய்த்து நான்கு சாமம் வாட்ட வேண்டும். வாட்டிய வுடன் சவ்வீரம் கட்டிப் போகும்.

வாட்டியே மேல்கவசம் சத்திச்சாரம்
வளையலுப்பு வெண்காரம் துருசிகூட
நீட்டியே வெடியுப்பு நீராலாட்டி
நிலவரமாய் உட் கருதான் பூசிக்கொண்டு

காட்டியே அதின் மேலே கவசம் கட்டி
காரியமாய் மணல் மறைவில் புடத்தைப் போட்டு
தீட்டியே அம்புக்கு கூர்மைபோல
சிரசான வீரமது மணியுமாமே. (433)

*பிறகு சத்திச்சாரம், வெண்காரம், துரிசு, வளையலுப்பு, இவை நான்கையும், வெடியுப்பு செயநீரால் அரைத்து மேலே கவசமாக கனமாகப் பூச வேண்டும். மணல் மறைவில் புடத்தைப் போட கெட்டியாகி மணியாகும்.*

**அயக்களங்கு**

மணியான அயம் நின்று உருகும் போது
மாட்டுநீ நாலுக்கு ஒண்ணு தங்கம்
தணியான தங்கமிடை நாகம் போடு
தனிநாகத் திடை போடு லிங்கம் தன்னை
விணியான லிங்க மிடை வீரம் போடு
மீளாம லடிக்கடிக்கு காரந் தாக்கு
கணியான அயந் தானும் களங்க மாகும்
காட்டிடவே நவ லோகம் யேமமாமே. (434)

*முன்சொன்ன அயமணியை எடுத்து குகையில் வைத்து உருக்கும் போது, அதன் நாலில் ஒரு பங்கு தங்கமும், தங்கத்தின் இடை நாகமும் நாகத்தின் இடை லிங்கமும் லிங்கத்தின் இடைவீரமும் சேர்த்து உருகும் போது அடிக்கடி காரம் சேர்த்தால் அயம்களங்காகும். இந்த களங்கால் நவலோகம் யேமமாகும்.*

ஏமமாம் நூற்றுக்கு ஒண்ணு யீவா
யென்மகனே யெட்டரைதான் ஆணிக் கொக்கும்
ஓமமாம் புடத்துக்கு உப்புக் கேகா
உண்மையா யிரும்பாட்டி சீவனத்தைப் பண்ணு
காமமாம் பெண்ணாசை தன்னை விட்டுக்
கசிப்போடு புளியுப்பு யெண்ணைவிட்டு
சேமமா யிரும்புதான் செந்தூரித்து
செகச்சால வித்தையெல்லாம் துரும்பாயெண்ணே. (435)

*நவலோகத்தில் நூற்றுக்கு ஒன்று தாக்கினால் எட்டரை மாற்று காணும், இது புடத்தாலும், உப்பாலும் ஒன்றும் ஆகாது. இரும்பை அரைத்து சீவனத்தைச் செய்துக்கொள். பெண்ணாசையும் புளியும், உப்பும் எண்ணையும், தள்ளிவிட்டு இரும்பை செந்தூரித்து உண்டால் சகல வித்தையும் துரும்புப்போல் எண்ணலாம்.*

எண்ணி யெண்ணி மனஞ் செயித்து விட்ட ஞானி
யெங்கெங்கே யிருந்திடிலென் யெவிடம்போயென்
அண்ணி அண்ணிக்கற்ப முண்டு காய சித்திசெய்து
அங்கென்று அடுக்காறு தளத்தில்சென்று
நண்ணி நண்ணிதுவா தெசத்தின் தலத்தில் புக்கி
நடனமாஞ் சிலம்பொலியின் நாட்டங் கண்டு
ஒண்ணிஒண்ணி மவுனத்தி லறிவுதாக்கி
ஒருவருடன் பேசாதே வூமை யாவே. (436)

இவ்வாறு எண்ணி மனதை செயித்து எங்கு சென்றாலும் எங்கு இருந்தாலும் கற்பமும், காயசித்தியும் செய்து கொண்டு ஆறாதாரம் ஏறி துவாதசாந்தத்தில் சென்று சிலம்பொலியைக் கேட்டு மனதை அறிவில் சேர்த்து ஒருவருடனும் பேசாமல் மௌனமாக இருக்க வேண்டும் என்கிறார் முனிவர்.

ஊமையா மிரும் பாட்டி சீவனத்தைப் பண்ணு
ஒரு பலந்தா னிரும்பு தன்னை காசாய் விற்பார்
ஆண்மையா யிரும் பதுவும் ஆத்தா ளாத்தாள்
ஆட்சியாய்ச் செந்தூர மன்பாய்ப் பண்ணில்
நுண்மையா மிரும்புதனில் நுணுக்கம்மெத்த
நொய்தென்பரி ரும்பினிட நுட்பங்காணார்
வண்மையாம் புடசெயத்தின் மார்க்கங் காணார்
மகத்தான சித்தி யெல்லா மிரும்பா லாச்சே. (437)

இரும்பை அரைத்து சீவனத்தை செய்துகொள், ஒரு பலம் இரும்பை காசாய் செய்து விற்றுக்கொள், இரும்பை மாத்தாக்கி செந்தூரம் செய்து உண்ண வேண்டும். இரும்பின் உண்மையையும் அதன் நுட்பத்தையும் உலகோர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். அதை புடம்போடவும் அறிய மாட்டார்கள் எல்லாவிதமான சித்தியும் இரும்பால் ஆகும்.

இரும்பான செந்தூரம் குன்றி யுண்ணு
யேத்தமா மண்டலந்தான் பத்திய மாகும்
கரும்பான கல்லாகும் தேகந் தானும்
கரத்தாலே மலை தனையே குத்தினாக்கால்
துரும்பாகும் தூளாகுந் தவிடு பொடி யாகும்
சுக்கிலந்தான் மேலோடும் கீழோடாது
எரும்பான யெண்பதுக்குள் கொள்ளவாகும்
இருக்குமடா யிரும்பதுவும் ஏத்தமாமே. (438)

இரும்பை செந்தூரம் செய்து தினமும் குன்றி அளவு ஒரு மண்டலம் வரை உட்கொண்டால் தேகம் இரும்புப் போல் ஆகும். (பத்தியத்தை கடைபிடிக்க வேண்டும்.)மலையைகையால் குத்தினால் மலை தவிடு பொடியாய்ப் போகும். சுக்கிலம் கீழ் நோக்கி இறங்காது மேல் நோக்கி செல்லும். இந்த செந்தூரத்தை எண்பது வயதுக்குள் உண்ண வேண்டும். உட்கொண்டால் தேகம் நிலைத்து நிற்கும்.

இரும்பான களங்குக்கு நாலத் தொன்று
யேத்தமாங் கெந்தகத்தை சுத்தித்து கூட்டி
பொரும்பான பொற் றலையின் சாற்றா லாட்டி
போட்டுவா புடம் பத்து செந்தூர மாகும்
மரும்பான நவ லோகத் தெட்டி யோடும்
மாற்றதுவும் பதினாறு மருவிக் காணும்
துரும்பு தான் தூணான வாறு போல
சொல்முறைகள் மறவாதே சூட்டுசூட்டே. (439)

இரும்புக் களங்கில் நாலுக்கு ஒன்று கெந்தகத்தை வாங்கி சுத்தி செய்து சேர்த்து பொற்றலைச் சாற்றினால் அரைத்துப் பத்துப் புடம் போட்டால் செந்தூரமாகும். செந்தூரத்தை நவலோகத்தில் நூற்றுக்கு ஒன்று போட்டால் பதினாறு மாற்றுகாணும். சாதாரணமான துரும்பு பல சேர்ந்துதான் ஒரு தூணாகிறது. அதேபோல முறையாகச் செய்தால் சொன்னதெல்லாம் சித்தியாகும்.

### சவர்க்கார வழலையைத்துறவாதே

மறவாதே சவர்க் கார சுண்ணந் தன்னை
மாட்டுகிற கருவிது தான் வழலைமார்க்கம்
துறவாதே ஆருக்கும் கெர்ச்சிக்காதே
செய் தொழிலை மறவாதே திருட் டெண்ணாதே
பறவாதே கன்னி தனை பார்த் திடாதே
பரத்திலே மன தூன்றிப் பாரு பாரு
இறவாதே காய சித்தி யோக சித்தி பண்ணி
யேத்தமாஞ் சமாதியிலே யிருந்திடாயே. (440)

சவுக்காரம் செய்யும் சிறப்பான முறையை ஒரு காலும் மறவாதே. இதற்கு தான் வழலை என்று பெயர். இதை யாருக்கும் சொல்லிக் கொடுக்காதே செய்யும் தொழிலை மறந்து திருட்டு தொழில் செய்யாதே. எந்த பெண்ணையும் கண்ணெடுத்தும் பார்க்காதே. காயசித்தியும் யோகசித்தியும் பெற்று சமாதியில் நில் என்கிறார் போக முனிவர்.

சமாதியிலே யிருக்க வல்லோ சவர்க் காரத்தை
தவறாமல் வெளியாகச் சொன்னேன் மக்காள்
வமாதியிலே மழலை தனை சித்த ரெல்லாம்
மாச்சலாய் மகா கடின மாகச் சொன்னார்
எமாதியிலே எண்ணைதனை வார்த்துப் பண்ணி
யேத்தமாஞ் சுண்ணத்தில் நீற்றச் சொன்னார்
கமாதியிலே கனபாடு பட்டு பட்டு
காணாம லிறந்தவர்கள் கோடி தானே. (441)

*சமாதியில் நின்று தியானிப்பதற்குத்தான் சவுக்காரம் சொன்னேன். இந்த சவுக்காரத்தை செய்ய சித்தர்கள் மிகவும் கடினமான தயாரிப்பு முறைகளை சொல்லி வைத்தார்கள். வழலையில் இருந்து எண்ணை வாங்கிய பிறகே அதை சுண்ணமாக நீற்ற வேண்டும் என்று கூறி வைத்தார்கள். அந்த முறையில் சவுக்காரத்தை செய்ய பலபேர்கள் பாடுபட்டு முடியாமல் இறந்தே போனார்கள்.*

தானென்ற சவர்க்காரம் சொன்ன தர்மம்
தாயான மணித்தாய்க்கு குருவுக் காச்சு
யேனென்றால் நிகண்டுக்குள் திறந்தேனையா
யெளிதமாஞ் சித்தருக்கு யிலக்காய்ச் சொன்னேன்
கோனென்ற சித்த ரெல்லாம் வழலை தன்னை
கூறினார் வெகுகடினம் குணமொன் றில்லை
தேனென்ற யேழுலக்ஷம் சிவன் சொன்னத்தில்
செப்பவில்லை யென்றுநான் திறந்திட்டேனே. (442)

*இந்த சவுக்கார மார்க்கத்தை வெளிப்படையாக சொன்னதால் ஏற்படும் எந்தப் பலனும் என் தாயாரான மனோண்மணியையும் என் குருவையும் சென்று அடையும். இந்த நிகண்டில் சொன்னது போல் வேறு எந்த நூலிலும் சொல்லவில்லை. சித்தர்கள் பலபேர் தங்கள் நூலில் இந்த வழலை மார்க்கத்தை வெகு கடினமாகப் பாடி வைத்தார்கள். அதன் பலனும் அற்பமாக இருந்தது. மேலும் சிவ பெருமான் சொன்ன ஏழு லெட்சம் என்ற நூலிலும் இந்த சவுக்கார மார்க்கத்தைப் பற்றி கூறவில்லை.*

திறந்திட்டே னென்றுசொல்லி சவர்க்காரத்தை
சித்தரெல்லாம் யென்மேலே சினமுமாச்சு
மறந்திட்ட வழலைதான் வெளியில் போட்டார்
மலையெல்லாம் சித்தர்மய மாச்சு தென்றே
கறந்திட்ட பால் போல வெளியாச்சென்று
கயிலாச பாட்டர் முன்னே கருதிச் சொன்னார்
அறந்திட்ட பாட்டரது கேட்ட போதே
யரைச்சணத்தி லென்னை யங்கே யழைத்தார்பாரே.(443)

நான் சவுக்கார முறையை வெளிப்படையாக சொன்ன காரணத்தால் சித்தர்கள் என்மீது கோபம் கொண்டு திருமூல நாயனாரிடம் சென்று சவுக்கார முறையை போகர் வெளிப்படையாக கூறியதால் எங்கு பார்த்தாலும் சித்தர்கள் கூட்டம் அதிகமாய் விட்டது என்று கூறினார்கள். திருமூலர் உடனே ஒரு வினாடியில் கூப்பிடு அவனை என்றார் (அழைத்து வாருங்கள் என்றார்.)

அழைத்துமே கூர்மமுனி கூட்டிப் போனார்
அதிகமாம் போகரே சவர்க் காரத்தை
விழைத்துமே வெளியாகச் சொல்லு வானேன்
மேதினியெல் லாம் சித்தர் மயமாய்ப் போகும்
பழைச்சுபரி கரித்து போடு யென்றால்
பாட்டர்சொல்ல யான்கேட்டு புகலவந்து
உழைச்சுமே நிகண்டு தனை யொளித்து வைத்து
உலக்த்துக் கீய்ந்துவிட்டே னுண்மை தானே. (444)

என்னை அழைத்துப் போக கூர்ம முனி வந்தார். திருமூலரிடம் சென்ற உடன் போகரே ஏன் சவுக்காரத்தை வெளிப்படையாக சொன்னாய், சொன்னதால் உலகத்தில் செந்தூரங்களும் தங்கமும் அதிகமாகி மதிப்பு குறைந்து விடும். ஆகையால் அதை மறைத்து வை என்றார். அவர் சொன்னதைக் கேட்டு விடைபெற்றுக் கொண்டு அப்பால் (வெளியே) வந்து நிகண்டை மறைத்து வைக்காமல் மக்களுக்கு கொடுத்து விட்டேன்.

உண்மையாய் நிகண்டு தனை வைத்துப் பூசி
உத்தம மாம் சீஷருக்கு நிகண்டு யீவாய்
அண்மையாய் அழும்பான சீஷ னானால்
அவன் முகத்தைப் பாராமல் அப்பாற் செல்லு
வண்மையாங் குணம் பாரு வணக்கம்பாரு
மனது நன்றாய் சோதித்து வழலை போதி
தண்மையாஞ் சீஷரென்றால் நிகண்டே யீவாய்
தருதுரும்ப னானாக்கால் தவிர்த் திடாயே. (445)

உலகத்தோர்க்கு ஈந்து விட்டுப் பின் வருமாறு உபதேசம் செய்தேன். நிகண்டை பத்திரமாக வைத்துக் கொணடு நல்ல உத்தமமான சீடனுக்கு கொடு. சீடனின் வணக்கத் தன்மையையும் குணமும் பார்த்து நன்றாக சோதித்து அதன் பிறகு அவனுக்கு இந்த நூலை கொடு நடத்தை சரியில்லை என்றால் அவனை விலக்கிவிடு என்று கூறினேன்.

தவிழ்த்திடாச் சவர்க்காரச் சுண்ணமில்லா
சரக்கெல்லாம் ஊர் கடக்கத் தள்ளிப் போடு
அவிழ்த்திடா உப்பில்லாக் கட்டை யெல்லாம்
ஆரார்க்கு அப்பாலே அகத்திப்போடு

குவித்திடா தங்கமில்லாச் செந்தூரமெல்லாம்
குப்பையிலுங் குணமில்லை கூர்ந்துநன்றாய்
யவிழ்த்திடா மகாவீர மில்லா சுண்ணம்
வாசலிலே போட்டிடவு மிகநன்றாச்சே. (446)

*சவுக்கார சுண்ணம் இல்லாத சரக்கை அகற்றி விடு உப்பில்லாக் கட்டையெல்லாம் அப்பாலே அகற்றி விடு தங்கம் இல்லாத செந்தூரத்தை நல்ல குணமில்லை என்று அகற்றித் தள்ளிவிடு. மகாவீரம் இல்லாத சுண்ணத்தை வாசலில் தூர எறிந்துவிடுதலே மிகவும் நன்று.*

## அஞ்சனக்கல் சத்து

நன்றான சவர்க்காரச் செயநீராலே
நாகரீகமா காரம் வீரம் லிங்கம்
குன்றான துரிசியது நாலுங்கேளு
குறிப்பாக வகைக்கு ஒரு பலந்தான் கூட்டி
அன்றான நீர்விட்டு அரைத்து அஞ்சு நாள்தான்
அணிமூன்று பங்காகப் பண்ணி வைத்து
தின்றான அஞ்சனக்கல் பலந்தானெட்டு
சிறுகவே நறுக்கியே காடி தனிற் போடே. (447)

*காரம், வீரம், லிங்கம், துரிசு, இவை எல்லாம் வகைக்கு ஒரு பலம் எடுத்து சவுக்கார செயநீர் விட்டு அஞ்சுநாள் அரைத்து அதை மூன்று பாகமாகச் செய்து கொண்டு அஞ்சனக்கல் எட்டு பலம் எடுத்து அதை நறுக்கி காடியில் போட்டு.*

காடிதனில் போட்டுமே மூணு நாள்தான்
காச்சியே கொதிக்கவைத்து யிறக்கிக் கொண்டு
கோடிதனில் கொள்ளுக்குள் வேக வைத்து
குறிப்பாக யெடுத்துமே முன்மருந்து கூட்டி
போடிதனில் பிசறியே குகையில் வைத்து
பொருக்கியே சத்தெல்லாம் மறுபங்கு கூட்டி
ஓடிதனி லுருக்கிய மருந்திட்டு பிசரி
உண்மையாய் மூன்றுதிர முருக்கிடாயே. (448)

*மூன்று நாள் சென்றபிறகு அதைக்காய வைத்து கொதிக்க வைத்து இறக்கிக் கொண்டு அதைக் கொள்ளுக்கு உள்ளே வைத்து வேகவைத்து எடுத்து முன்மருந்தை ஒரு பங்கு கூட்டி குகையில் வைத்து உருக்கி சத்தெல்லாம் பொறுக்கிக் கொண்டு மற்றொரு பங்கு மருந்துக்கூட்டி பிசரி உருக்க வேண்டும். இதேபோல் மற்றொரு பங்கு மருந்து சேர்த்து உருக்கினால்.*

### அஞ்சுவித அஞ்சனக்கல்

உருக்கிட்ட சத்தினிட நிறந்தான்கேளு
உயர்கின்ற சரிகை வெள்ளி போலக் காணும்
தருக்கிட்ட சிவன்தானும் திரிபுரத்தை
தகனந்தான் பண்ணிடவே நகையே செய்தார்
கருக்கிட்ட காடோடு நாடுமலை யெல்லாம்
கருகியே பத்தியே முப்புர மெரிந்து
மருக்கிட்ட மலைவெந்து வுருகித் தாதாய்
மகத்தான அஞ்சுவித அஞ்சனக்கல் லாச்சே. (449)

உருக்கிய சத்தின் நிறம் வெள்ளிச் சரிகைபோல் இருக்கும். சிவன் ஒருசமயம் திரிபுரத்தை எரிப் பதற்காகச் அப்பொழுது அவர் சிரித்த போது காடு, மலை, நாடு எல்லாம் எரிந்து முப்புரமும் எரிந்தது. அப்பொழுது மலை உருகி அஞ்சுவிதமான அஞ்சனக்கல் லாயிற்று.

### அஞ்சனக்கல் கிண்ணி

கல்லான சத்துக்குள் கிண்ணி பண்ணி
கனமாக அடித்தூரில் சீலை செய்து
வல்லான வாலுகையின் மேலே வைத்து
வார்த்திடுவாய் சுத்தித்த சூதம்நாலு
புல்லான பொற்றலையின் சாறுவார்த்து
போக்காக யெண்சாமம் யெரித்தா யானால்
அல்லான அட்டைபோல வெண்ணையாகி
ஆற்றீக மாய்க்கட்டி யாகுந்தானே. (450)

இந்த அஞ்சனக்கல் சத்தால் ஒரு கிண்ணி செய்து கிண்ணியின் அடியில் சீலை செய்து கிண்ணியில் சுத்தித்த சூதம் நாலு பலம் வார்த்து பொற்றலைச் சாறு விட்டு எட்டு சாமம் எரித்தால் அட்டை போல் வெண்ணையாகிக் கட்டி நிற்கும்.

கட்டியாம் சூதத்தை மத்தங் காயில்
கருகாமல் புடம் பத்துப் போட்ட பின்பு
துட்டியாம் சூடனுட தீயில் வாட்டி
துடியாக கரண்டிதனில் வெண்ணை குத்திஉருக்க
கெட்டியாய்த் திரண்டுமணி யாகும் பாரு
கேசரத்தி லோட வென்றால் சாரணையே தீரு
வட்டியாய் வாதத்தில் தங்கம் சேரு
மாசற்ற செந்தூரம் பண்ணிடாயே. (451)

கட்டிய சூதத்தை ஊமத்தங் காய்க்குள் வைத்து பத்து புடம் போட வேண்டும். பின்னர் அதை கற்பூர தீபத்தில் வாட்டி ஒரு கரண்டியில் வெண்ணை குத்தி இந்த சூதத்தை போட்டு உருக்கினால் மணியாகும். இந்த மணியைக் கொண்டு ககன ப்ரவேசம் செய்ய வேண்டுமானால் சாரணை தீர்க்க வேண்டும். வாதம் செய்ய தங்கம் சேர்க்க வேண்டும். பின்பு அதை செந்தூரம் செய்யவேண்டும்.

### களங்கு வேதை

பண்ணவே தம்பனைக்கு லாகிரியை ஊட்டு
பாங்கான குருவுக்கு வீரம்சீனம்
புன்னவே புழுகோடு பூரங்கூட்டு
பூப்போலே மலர்ந்துமே குருவுமாகும்
கண்ணவே காயசித்தி சுருக்கிலாகும்
காமத்தை தள்ளியே செந்தூர முண்ணு
நன்னவே நரைமாறி வாலை யாகும்
நாதாந்த அஞ்சனக்கல் சத்துதானே. (452)

தம்பன குளிகை செய்ய வேண்டுமானால் லாகிரியில் ஊட்ட வேண்டும். குரு செய்ய வீரம், சீனம், புனுகு, பூரம் சேர்க்க வேண்டும். இவை எல்லாம் சேர்ந்து குருவாகும். இதனால் காயசித்தி சுருக்கில் முடியும். காமத்தை அகற்றி செந்தூரம் செய்து உண்டால் (உட்கொண்டால்) நரைதிரை மாறி இளமைப் பருவம் உண்டாகும் இவை எல்லாம் அஞ்சனக்கல்லின் பெருமைகளாகும்.

அஞ்சனக்கல் சத்ததுவும் பலந்தா னெட்டு
அதிகமாம் பறியதுவும் பலந்தா னொன்று
குஞ்சனக்கல் குகையில் நின்று உருகும் போது
1 முன்கட்டு லிங்கமொரு பலந்தான் போடு
2 செஞ்சனக்கல் முப்பூவும் கழஞ்சிபோடு
3 சிறப்பாக வழலையுட பெருமைமெத்த
தஞ்சனக்கல் சவ்வீரம் பலந்தான் போடு
சாத்தியெல்லாங் காரமிட்டு உருக்கிடாயே. (453)

பாடபேதம் : 1. கொடுத்திரு நீ பலம் ரெண்டு முன் நாகந்தான்.
2. முஞ்சனக்கல் மூன்று மொன்றாய் உருகும் போது.
3. முன் கட்டி லிங்கமொருபலந்தான்போடு.

அஞ்சனக்கல் சத்து எட்டு பலம், தங்கம் ஒரு பலம், அஞ்சனக்கல்லை குகையில் வைத்து உருக்கி அதனுடன் தங்கமும் நாகமும் சேர்த்து உருக்க வேண்டும். இவை மூன்றும் உருகும் போது லிங்கம் ஒரு பலம் சவ்வீரம் ஒரு பலம் போட்டு காரமிட்டு உருக்கினால் களங்காகும்.

### களங்குச் செந்தூரம்

இட்டு நன்றாய் உருக்கிடவே களங்கு மாகும்
யினமானரவிமதியில் னூத்துக் கொன்றீய
பட்டு ஒன்றாய் மாத்த துவும் பதினாறாகும்
பாங்கான களங்குக்கு னாலத் தொன்று
கெட்டு ஒண்ணாய் கெந்தியது பொடித்துக் கூட்டி
கிளர்ந்த பொற்றலைச் சாற்றில் அஞ்சு நாளாட்டி
விட்டு ஒன்றாய் வில்லை பண்ணி அகல் வைத்து மூடி
மேன்மையாய் புடம் போடச் செந்தூர மாமே. (454)

*ரவி மதியில் நூற்றுக்கு ஒன்று ஈந்தால் பதினாறு மாற்றுடைய தங்கம் கிடைக்கும். களங்குக்கு நாலில் ஒரு பங்கு கெந்தி சேர்த்து பொடித்து கூட்டி பொற்றலை சாற்றினால் அஞ்சு நாள் அரைத்து இரண்டு வில்லையாகப் பண்ணி அகலில் வைத்து மூடிப்புடம் போட செந்தூரமாகும்.*

செந்தூரம் தினம் குன்றி பாலி லுண்ணு
சிறுகதிர் போல் மேனியுமோ சிகப்பே யாகும்
எந்தூரம் சூரியனின் கிரணத்துள்ளே
யெழும்பலாஞ் சடத்துக்கு யிருக்க மில்லை
தந்தூரம் சந்திரனில் குளிர்ச்சி யில்லை
தாக்கான யிடிக்குள்ள பயமு மில்லை
மந்தூர மாருதத்தில் சுழலொட் டாது
வாய்திறக்காச் சித்தியுமா மாட்டிக் காணே. (455)

*இந்த செந்தூரத்தை குன்றி எடை தினமும் பாலில் உட்கொண்டால் மேனி சிகப்பாகும். சூரியனைப் போல் ப்ரகாசிக்கும். இதனால் சூரியனுடைய வெப்பத்தாலும் சந்திரனுடைய குளிர்ச்சியாலும் இடியினாலும் பயம் இல்லை. சகல சித்தியும் உண்டாகும் என்கிறார் முனிவர்.*

### கோடா சோரி வைப்பு

மாட்டவே கோடாசூரி வைப்புக்கேளு
வகையான வெடியுப்புச் செயநீராலே
ஆட்டவே வெடியுப்புப் பலந்தான் ரெண்டு
அரைத் திடுவாய் அஞ்சுநாள் அகலாமல் தான்
வீட்டவே வில்லைப் பண்ணி காய வைத்து
மிடுக்கான சட்டியிட்டு யெரிப்பாயானால்
சூட்டவே சுழன்ற துவும் சுண்ண மாகும்
சுரண்டியெல்லாம் யெடுத்துமே பீங்கான் வையே. (456)

கோடா சோரி வைப்பு:- ரெண்டு பலம் வெடியுப்பை வெடியுப்பு செயநீரில் அஞ்சுநாள் அரைத்து வில்லை செய்து காயவைத்து சட்டியில் வைத்து எரித்தால் சுண்ணமாகும். அதை எடுத்து பீங்கானில் வைத்துக் கொண்டு.

**சாரக்கட்டு**

வையப்பா சாரமது பலந்தான் ரெண்டு
மாட்டியே கல்வத்தில் வெடியுப்பு நீரால்
மையவே அஞ்சுனா ளரைத்து தானும்
மடக்கி விட்டு மூட்டியே புடத்தைப் போடு
கையவே சாரமது கட்டிப் போகும்
கனமான பீங்கானில் யெடுத்து வைத்து
செய்யவே சீனமது பலந்தான் ரெண்டு
சிறப்பாக னீர்விட்டு அரைத்திடாயே. (457)

*ரெண்டு பலம் சாரத்தை வெடியுப்பு செயநீரால் அஞ்சு நாள் அரைத்து எடுத்துச் சட்டிக்குள் வைத்து மூடி தீமூட்டி எரிக்க சாரம் கட்டிப் போகும். அதைப் பீங்கானில் எடுத்து வைத்துக் கொண்டு பிறகு சீனம் ரெண்டு பலம் எடுத்து அதை வெடியுப்பு செயநீரால் அரைத்து.*

அரைத்துமே அஞ்சுனா ளான பின்பு
அகலி விட்டு கெச புடமாய் அனலிற் போடு
துரைத்துமே துரிசியது பலமும்னாலு
சுருக்காக வெடியுப்பு நீராலாட்டி
திரைத்துமேதின மஞ்சு ஆன பின்பு
செப்புக்கு ளடைத்துமே புடத்தைப் போடு
புரைத்துமே பூனீறு பலந்தான் ரெண்டு
புகழ்பெரிய வெடியுப்பு நீராலாட்டே. (458)

அஞ்சுநாள் அரைத்த பின்னர் அகலில் இட்டு கெசபுடம் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு பின்னர் துரிசு ஆறு பலம் எடுத்து அதை வெடியுப்பு செயநீரால் அஞ்சுநாள் அரைத்து செப்புக்குள் அடைத்துப் புடம் போட்டு எடுத்துக் கொண்டு பிறகு பூனீறு இரண்டு பலம் எடுத்து வெடியுப்பு செயநீரால் அரைத்துப் புடம் போட்டு எடுத்துக் கொண்டு.

**சீனம், அன்னபேதி**

ஆட்டியே புடம்போட்டு யெடுத்து வைப்பாய்
யன்ன மென்ற பேதியது பலந்தான் ரெண்டு
வீட்டியே வெடியுப்பு நீராலாட்டி
மீறாமல் புடம் போட்டு யெடுத்து வைத்து

காட்டியே கல்லுப்புப் பலந்தா னாலு
கனமான வெடியுப்பு நீரா லாட்டி
நீட்டியே வில்லை பண்ணிக் காயவைத்து
நிலவரமாய்ப் புடம் போட்டு யெடுத்துக் கொள்ளே.(459)

*பிறகு அன்னபேதி இரண்டுபலம் எடுத்து வெடியுப்பு செயநீரால் அரைத்து புடம் போட்டு எடுத்துக்கொண்டு. பின்னர் கல்லுப்பு நான்கு பலம் எடுத்து வெடியுப்பு செயநீரால் அரைத்து வில்லை செய்து காயவைத்து புடம் போட்டு எடுத்துக் கொண்டு.*

## சூதம்

கொள்ளவே சூதமது பலந்தா னெட்டு
கூறவே கல்லுப்பு குமரிச் சாறு
முள்ளவே மூன்று னாள் விட்டரைத்து
முடுக்காகக் கழுவி யெல்லாம் யெடுத்து வாங்கி
அள்ளவே அயக்கரண்டிக் குள்ளே வைத்து
ஆர்க்கமாம் வெடியுப்பு நீரினாலே
நள்ளவே னால்சாமம் சுருக்குப் போட்டு
நாட்டி அரைத் தேநன்றாய் கழுவி வாங்கே. (460)

*சூதம் எட்டு பலம் எடுத்து கல் உப்பும் குமரிச்சாறும் (கற்றாழை) விட்டு மூன்று நாள் அரைத்து அலம்பி எடுத்துக் கொண்டு அதை இரும்புக்கரண்டியில் விட்டு வெடியுப்பு செயநீரால் நான்கு சாமம் சுருக்குப் போட்டு கழுவி எடுத்துக் கொண்டு.*

கழுவியே வாங்கியபின் சொல்லக் கேளு
கனமான சத்தி யென்ற சாரந் தானும்
நழுவியே நாலுபலம் கல்வத் திட்டு
நலமான செயநீரா லரைத்து மைபோல்
அழுவியே அகலி லிட்டு புடத்தைப் போடு
அம்மம்மா கடுஞ்சுண்ண மாகும் பாரு
வழுவியே பலம்ரெண்டு கல்வத்திட்டு
மாட்டிடுவாய் சாரமது பலந்தான்ரெண்டே. (461)

*பிறகு சத்திசாரம் நான்கு பலம் கல்வத்தில் போட்டு வெடியுப்பு நீரால் மைபோல் அரைத்து அகலில் இட்டு புடம்போட்டால் சுண்ணமாகும்.*

சாரமது பலம் ரெண்டு கூடப் போட்டு
தாக்கியரை யஞ்சுனாள் நெட்டடங்குமட்டும்
ஆரமது அகலி லிட்டுச் சீலை செய்து
அழகான கவுதாரிப் புடமாய்ப் போடு
சோரமது ஆறவிட்டுப் பனியில்வைக்க
சிவந்துமே செயனீரு மாகு மாகும்
பூரமது வீரமது பொடித்துப் போட்டு
புகழாமல் சூதத்தில் சுருக்கப்போடே. (462)

*இந்த சுண்ணம் இரண்டு பலமும், காரம் இரண்டு பலமும் கூட்டி அஞ்சுநாள் அரைத்து அகலில் இட்டு சீலை செய்து கவுதாரிப் புடம் போட்டு ஆறியபின் பீங்கானில் இட்டு பனியில் வைக்க செயநீராகும். இதில் வீரம் பூரம் பொடித்துப்போட்டு சூதத்தை சுருக்கு போட்டு அலம்பி எடுத்துக் கொண்டு பின்பு.*

சுருக்கிட்டு கழுவி யெல்லாம் வாங்கி வைத்து
துரிசியது பலமெட்டு கல்வத்திட்டு
வெருக்கிட்டு வெடியுப்பு நீராலாட்டி
மிக்கான அஞ்சுநாள் வில்லை பண்ணி
அருக்கிட்டு அகலி லிட்டு மேலு மூடி
அசகாமல் சீலை செய்து புடத்தைப் போட
நருக்கிட்ட சுண்ணாம்பாஞ் சமனாய்ச்சாரம்
நாட்டி யரைத் தஞ்சுனாள் புடத்தைப் போடே. (463)

*துருசி எட்டு பலம் கல்வத்திட்டு வெடியுப்பு செயநீரால் அஞ்சுநாள் அரைத்து வில்லை பண்ணி அகலில் இட்டு மேல்மூடி சீலைசெய்து புடத்தைப் போட சுண்ணமாகும். இந்த சுண்ணத்திற்கு சமமாக சாரம் சேர்த்து அஞ்சுநாள் அரைத்து புடம் போட்டு.*

### துரிசுச்சுன்னச் செயநீர்

போட்டுமே பனியில் வைக்க செய நீராகும்
பேரான னீரிலே வீரம் பூரம்
நாட்டுமே நால் சாமம் சுருக்குப் போட்டு
நலமாக கழுவியே சூதத்தை வாங்கி
மூட்டுமே மூன்றாகும் பீங்கானில் வைத்து
முனையான திராவகத்தை விட்டு நீற்றி
காட்டுமே கல்வத்தில் போட்டுக் கொண்டு
காரியமாம் அஞ்சுசுண்ணம் கூடப் போடே. (464)

ஆறிய பின் எடுத்து பீங்கானில் வைக்க செயநீராகும். இந்த செயநீரில் பூரம், வீரம் போட்டு சூதத்தை நான்கு சாமம் சுருக்கு போட்டு கழுவி எடுத்து வேறோரு பீங்கானில் போட்டு திராவகத்தை விட்டு நீற்ற வேண்டும்.

### கடுங் காரம்

கூடவே போடுகிற சுண்ணங்கேளு
குறிப்பாக வெடியுப்பு சுண்ணம்ரெண்டு
நாடவே நவச்சாரச் சுண்ணம்ரெண்டு
நலமாகும் பேதியென்ற சுண்ணம்ரெண்டு
ஆடவே சீனத்தின் சுண்ணம்ரெண்டு
அழகான பூனீறு சுண்ணம்ரெண்டு
காடவே கல்லுப்புச் சுண்ணமாறு
கடினமாம் துரிசினுட சுண்ணம்நாலே. (465)

பிறகு இதை கல்வத்தில் போட்டு (நீற்றிய சூதத்தை) இதனுடன் முன் செய்து வைத்துள்ள ஐந்து சுண்ணங்களைச் சேர்க்க வேண்டும். சேர்க்க வேண்டிய சுண்ணத்தின் அளவு என்னவென்றால், வெடியுப்புச் சுண்ணம் இரண்டு பலம், சாரச்சுண்ணம் இரண்டு பலம், சீனத்தின் சுண்ணம் இரண்டு பலம், அன்னபேதி சுண்ணம் ரெண்டு பலம், பூனீறு சுண்ணம் இரண்டு பலம் கல்லுப்புச் சுண்ணம் ஆறுபலம், துரிசு சுண்ணம் நான்கு பலம்.

நாலாக நிறுத்துமே கல்வத்தி லிட்டு
நமனாகும் திராவகத்தா லரைத்து நையப்
பாலாக பரும்பீங்கான் தன்னி லிட்டுப்
பக்குவமாந் தணல் மேலே வறுத்துப் போடு
காலான காசி யென்ற மேருக் கேற்றி
கனமான வாலுகையில் பதித்து வைத்து
யேலாக யெட்டு னாள் தீயைப் போடு
யிதமாக ஆற விட்டு யெடுத்துப் பாரே. (466)

இவை எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டு திராவகத்தால் அரைத்து பருத்தபீங்கானில் போட்டு தனலில் வாட்டிப் பின்பு காசி என்ற மேருக்கு ஏற்றி வாலுகையின் மேலே் வைத்து எட்டுநாள் தீயைப் போட்டு எரித்து ஆற விட்டு எடுத்துப் பார்க்க சிவந்த சூரியனைப் போல் பிரகாசிக்கும்.

### வீரம் சகலத்துக்கும் ஆதி

எடுத்துடனே சிவந்தனிற மாகத் தானும்
யிருந்திடுமே அடிதனிலே பருதிபோல
கடுத்துடனே நவலோகம் னூற்றிலீய
கண்டிடுமே தசமாத்து கருதிப்பாரு

அடுத்துடனே யிவ்வீரம் சுண்ணத்துக் கெல்லாம்
அணுகாட்டால் யேம சித்தி காய சித்தி யில்லை
தொடுத்துடனே சித்த ரெல்லாம் சொன்னா ரில்லை
சூட்சாதி சூட்சமெல்லாம் நிகண்டிலாச்சே. (467)

சிவந்த நிறம் கொண்ட செயவீரத்தை நவலோகத்தில் நூற்றுக்கு ஒன்று போட்டால் பத்துமாத்து உள்ள பொன் கிடைக்கும். இவ்வாறு மாறாவிடில் வீரச் சுண்ணத்தால் காயசித்தியும் யேமசித்தியும் ஏற்படாது இதைப்போல் எந்த சித்தரும் சொன்னதில்லை. எல்லா விதமான சூக்ஷங்களும் இந்த நிகண்டால் வெளிப்படையாகிவிடும்.

நிகண்டோடு சாத்திரமும் சூஸ்திரமும் பாரு
நேர்ப்பெல்லாம் வெட்டவெளி யாகச் சொன்னேன்
பகண்டான சோர மென்ற வீரத்துக்கு
பரிட்சையது பண்பாகச் சொல்லக் கேளு
கிகண்டான கறுத்த மயிர் மேலே பூசி
காஞ்சவுடன் வெளுத்த மயி ராகும் பாரு
திகண்டான சிவந்தத்தின் மேலேபூசினாக்கால்
க்ஷணத்திலே வெளுப்பாகும் ரோமந்தானே. (468)

நிகண்டு சாத்திரத்தையும் மேலும் சூத்திரத்தையும் பார்க்க வேண்டும். இந்த கோடாசோரி வீரத்துக்கு பரீட்சை ஒன்று சொல்கிறேன் கேள். இந்த மருந்தை கருத்த மயிரின் மேலே பூசிக் காய்ந்தவுடன் பார்த்தால் வெளுத்த நிறத்துடன் காணப்படும். சிவந்த முடியின் மேல் பூசினால் வினாடியில் வெளுப்பாகும்.

சோரமென்ற வீரத்தில் சித்தரெல்லாம்
திருட்டு வித்தை திலக வித்தை பண்ணி னார்கள்
கார மென்றால் யிது மேலே கார மில்லை
கடிதான சத்தெல்லாம் மெது சத்தாகும்
தூரமென்ற சுண்ணத்துக் கிதை விட்டா லில்லை
சூட்சமா யாடுகிற துறை தான்காணும்
பாரமென்ற துரிசியின்மே லிந்த வீரம்
பட்டாக்கால் செம்புசெத்து பரிசமாமே. (469)

இந்த வீரத்தால் சித்தர்கள் எல்லாம் திருட்டு வித்தையும் திலகவித்தையும் பண்ணினார்கள். இதை மிஞ்சிய காரவஸ்து எதுவும் இல்லை. கடிவுப் பொருள்களையும் மெது சத்தாக மாற்றும் சுண்ணத்திற்கு இதைவிட்டால் வேறு முறை கிடையாது. இதை துரிசின் மேல் தடவினால் பரிசவேதை ஏற்படும்.

பரிசமாம் பேதிக்கு யிதுதான் வேண்டும்
பாங்கான செந்தூரத் திதுவே யாகும்
சரிசமாந் தயிலத்துக் கிதுவே யாதி
சாற்றுகிறேன் மாணாக்கள் கோடிகோடி
கரிசமாஞ் சத்துக்கு யிதுவே யாதி
கனமான செயநீருக் கிதுவே யாதி
புரிசமாம் மெழுகுக்கு களங்குக்கேயாதி
பொன்னான நீரெல்லாம் வீரத்தாட்டே. (470)

*பரிசவேதைக்கு இந்த வீரச் சுண்ணம் வேண்டும். எல்லா வகையான செந்தூரத்திற்கும் இது வேண்டும். சாரணைக்கும் இது வேண்டும், தயிலத்திற்கு இது வேண்டும். சத்துக்கு இந்த வீரசுண்ணம் வேண்டும், மெழுகும், களங்கும் இந்த வீரத்தால் சித்தியாகும்.*

வீரமென்றால் வெகு வீரன் சுத்த வீரன்
வேதைக்கோ ரண வீரன் மகத்தாம் வீரன்
பாரமென்றால் செயவீரன் விற்பன்ன வீரன்
பாதைக்கோ பலவீரன் பாரவீரன்
தூரமென்றால் யெட்டுகிற சுயம்பாம் வீரன்
சுயவீரன் சுருக்கான காரவீரன்
கோரமென்றால் கொடுங்கோபன் குரூர வீரன்
கூர்மையாம் வீரனுட கூத்துத் தானே. (471)

*இந்த வீரத்தை வெகுவீரன், சத்த வீரன், வேதையில் ரணவீரன், மகத்தான வீரன், செயவீரன், விற்பன்ன வீரன், பலவீரன், பாரவீரன், சுயம்பான காரவீரன், கொடுங்கோபன், தாரவீரன், போன்றவை கோடாசோரி வீரச் சுண்ணத்தில் பெருமைக்குரிய பெயர்களாகும்.*

கூத்தான வீரத்தை சித்த ரெல்லாம்
கூறினா ரில்லை யென்று கோபத்தோடே
வித்தான வீரத்தை வெளியில்போட்டேன்
வெளியாச்சு உலகமெல்லாம் பொன் மயமாய்ப் போச்சு
நீத்தான நிகண்டு தனை மறைத்து வைத்து
நேர்ந்த பச்சை வீரத்தை நீட்டு நீட்டு
மாத்தான்போல் செயவீரம் சரக்கில் பட்டால்
வாதமெல்லாம் வெளியாகும் மசக மாமே. (472)

*இந்த வீரத்தை சித்தர்கள் சொல்லவில்லை என்று வெகு கோபத்தோடு நான் இந்த நிகண்டில் சொன்னேன். இதனால் உலகமே பொன்மயமாய்ப் போகும். அதனால் இந்தநிகண்டை மறைத்து வைத்துக்கொண்டு வீரத்தை*

செய்து கொள். இந்த வீரத்தால் வேதைகள் ஒரு வினாடியில் கைகூடும். செயவீரம் சரக்கில் பட்டால் உடனே வேதையாகும்.

மசகமென்று யெண்ணாதே செய வீரத்தை
மாட்டிடவே நாகமது கட்டிப் போகும்
விசகமென்ற தங்கமது நீறு மாகும்
காரசா ரங்க ளெல்லாம் படுமுன் கட்டும்
உசகமென்ற உபரசங்கள் சத்து மாகும்
ஊட்டினால் சாரணைதான் வெகுதூர மோடும்
பசகமென்ற நாகத்தின் செயநீர்க் கெல்லாம்
பாங்கான செயவீரம் போட்டிடாயே. (473)

இந்த செயவீரத்தால் நாகம் கட்டிப்போகும். தங்கம் நீறும். காரசாரங்கள் எல்லாம் படும் முன்னே கட்டும். உபரசங்கள் சத்தாகும். சாரணைகள் வெகுதூரம் ஓடும். நாகத்தின் செயநீர்க்கெல்லாம் இந்த செயவீரத்தைச் சேர்க்க வேண்டும்.

போட்டிந்த வீரத்தை செயநீர் பண்ணி
பொன்ரேக்கு சுத்தியே தீபத்தில் வாட்டி
நீட்டிந்த ரேக்குதனை சுழித்து வாங்கி
நிமிஷத்தில் பூப்போல செந்தூர மாகும்
நாட்டிந்த நாகத்தின் செயநீருக்கு
நலத்தபச்சை சவ்வீரம் விட்டாயானால்
சேட்டிக்கு சேருபோல் குழம்பாய்நிற்கும்
தீபத்தில் செந்தூர மாகா தென்னே. (474)

இந்த செயவீரச் சுண்ணத்தை செயநீர் பண்ணி பொன்ரேக்கை செயநீரால் கட்டிய சரக்கின் மேல் சுற்றி தீபத்தில் காட்டினால் உடனே பூப்போல் பூத்து செந்தூரமாகும். நாக செயநீர்க்கு வெறும் பச்சை வீரம் போட்டால் செயநீர் சோறு போல் குழம்பாய் நிற்கும். தீபத்தில் செந்தூரம் ஆகாது.

ஆகாது செயவீர 'மிட்டாயானால்
ஆறுபோல் செயனீராம் செந்தூர மாகும்
தாகாது உலகத்தோர் சரக்கைக் கட்டி
தங்கத்தின் ரேக்கதனைக் கவசமூடி
நாகாது வீரத்தின் செயநீர் தோய்ச்சு
நலமாக வாட்டினால் செந்தூரமாகா
சாகாது சாத்திரங்கள் பொய்யோ யென்பார்
சாதகமாய்ச் சொல்லிவிட்டார் சித்தர்தானே. (475)

செயவீரத்தை விட்டால் எதுவும் சித்தியாகாது. உலகத்தோர்கள் செயநீர் செய்ய அதில் சரக்கை கட்டி அதன் மேல் தங்கரேக்கை சுற்றி தீபத்தில் வாட்டி செந்தூரம் வராவிட்டால் சாஸ்திரத்தை பொய் என்பார்கள்.

சித்தர்தான் சாஸ்திரத்தை சொல்லா விட்டால்
செக மெல்லாஞ் சாஸ்திரத்தை நம்பா ரென்று
நத்தான ரிஷிசித்தர் நாமம் போகும்
நம்முடைய மரபுக்குக் கீர்த்தி யில்லை
வித்தான குளிகை யில்லை காயசித்தி யில்லை
மேன்மையாய் வாத மொடு ஞான மில்லை
நித்தான யோகசித்தி யில்லை யென்று
நிகண்டுக்குள் நிசமெல்லாஞ் சொன்னேன் காணே. (476)

சித்தர்கள் அவர்களுக்கு சாதகமாய் சொல்லிவிட்டார்கள் என்று கூறுவார்கள். மேலும் ரிஷிகளின் பெருமையும் அழியும். மரபுக்கு கீர்த்தி இல்லாமல் போகும். மேலும், காயசித்தியும் ஞானமும் வாரதமும் இல்லாமல் அழிந்து விடும். ஆகையால் நல்ல எண்ணம் கொண்டு நான் இந்த நிகண்டில் வெளிப்படையாகச் சொல்லி விட்டேன்.

நிசஞ் சொன்னேன் காலாங்கி அய்யர் சொல்ல
நேர்மையாய் ஆயி சொல்ல சிவன்தான் சொல்ல
நுசஞ் சொன்னேன் சித்தருக்குள் கீர்த்தியாக
நெடிதான சவுக்கார வர்மம் சொன்னேன்
திசஞ்சொன்னேன் செயவீரப் பூட்டைச் சொன்னேன்
சொல்லாத உள்க்கருவு புறக்கருவுஞ் சொன்னேன்
பசஞ்சொன்னேன் பாடியதில் ஒன்றும் பொய்யா
பராபரத் தாய் சொன்னபடி பகர்ந்திட் டேனே. (477)

காலாங்கி நாதரும், மனோன்மணி தாயாரும், சிவபெருமானும் சொல்ல அதைக் கேட்டு நான் இந்த நிகண்டில் சொன்னேன். மேலும் வாதத்துக்கு சிரசான சவுக்காரம் செய்யும் மார்க்கம் சொன்னேன். செயவீரம் செய்யும் மார்க்கத்தையும் சொன்னேன். மேலும் அதன் உள் புதைந்து நிற்கும் சூக்ஷத்தையும் சொன்னேன். நான் பாடியதில் ஒன்றும் பொய்யாகாது ஏன் எனில் பராபரைத்தாய் சொன்னபடி எழுதியுள்ளேன்.

பகர்ந்திட்டேன் சாஸ்திரமும் சூஸ்திரமும் பாரு
பரிபாஷைக் கருவுக்கு நிகண்டைப்பாரு
தகர்ந்திட்ட சாஸ்திரம் யேழாயிரத்தில்
சவுக்கார வித்தை சொன்னேன் செயவீரஞ் சொன்னேன்

நிகர்ந்திட்ட நிகண்டுக்குள் சொல்லிப் போட்டேன்
நேரப்பா நினவாக நீதான் செய்வாய்
வகர்ந்திட்ட வாதமது கைக்குள் ளாகும்
வரிசையாஞ் சாரத்தின் வைப்புக்கேளே. (478)

*நான் சொன்ன சாஸ்திரத்தையும், சூஸ்திரத்தையும் முதலில் பார். பரிபாஷைக்கு நிகண்டை பார், சாத்திரம் ஏழாயிரத்தைப் பார். சவுக்கார வித்தையும் செயவீர வித்தையும் இந்த நிகண்டில் சொல்லி விட்டேன். நான் சொன்னபடி முறையாக பார்த்தால் வாதம் கைக்குள்ளாகும். இனிச் சரக்கு வைப்பு முறையைக் கேள்.*

### சிவப்பு நவச்சார வைப்பு

வரிசையாஞ் சிகப்பான சாரந் தன்னை
வைக்கிறதோர் முறை கேளும் மாணாக்காளே
தரிசையாஞ் சாரமது பலந்தான் பத்து
தங்கம் ரெண்டு சூத மஞ்சு சரியாய்க் கூட்டி
கரிசையாங் கல்வத்தில் பொடியாய்ப் பண்ணி
காரியமாம் வெடியுப்புச் செயநீராலாட்டி
நரிசையாம் பாலிலிட்டு ஆட்டிப் பார்த்து
நாள்சென்று ரவியிலிட்டுக் காயப்போடே. (479)

*சிகப்பு நவச்சார வைப்பு முறையை கூறுகிறேன் கேள். பத்து பலம் சாரத்தையும் ஐந்து பலம் சூதத்தையும், கல்வத்தில் இட்டுப் பொடி பண்ணி வெடியுப்பு செயநீரால் அரைத்து ரவியில் இட்டு உலர்த்தி மீண்டும் அரைத்து ரவியில் உலர்த்தி பத்து நாள் கழித்து எடுத்து.*

ரவியிலிட்டுக் காய்ந்துமே பொடியாய்ப் பண்ணி
நலமான வெடியுப்பு பலம் னாலஞ்சு
சிவியிலிட்ட சீனமும் யிருபத்தஞ்சு
சிறப்பாக பொடிபண்ணி கல்வத்திட்டு
பனியிலிட்டு பாலையாஞ் சட்டிமூடி
பண்பாக உளுந்தாலே சீலைசெய்து
அவியிலிட்டு அடுப்பேற்றிப் பீங்கான் வைத்து
ஆண்மையாந் தீநீரை வாங்கிடாயே. (480)

*பொடி பண்ணி பிறகு வெடியுப்பு இருபது பலம் சீனம் இருபத்தைந்து பலம், இவை இரண்டையும் பொடி பண்ணி கலையத்திற் போட்டு மேல்சட்ட மூடி உளுந்தால் சீலை செய்து அடுப்பேற்றி தீயை மூட்டி தீ நீரை வாங்க வே டும். முதலில் வரும் நீரை வாங்காமல் சிறிது நேரம் பொருத்து வாங்க வே ...*

தீநீரை முன்தள்ளி பின்னீர் வாங்கி
சிறப்பாக முன்காஞ்ச மருந்தில் விட்டு
பாய்நீரி லரைத் திடுவாய் பத்து நாள்தான்
பரும்பீங்கான் தன்னி லிட்டு வறுத்துப் போடு
காய்நீரில் காசியென்ற மேருக் கேற்றி
கனமான வாலுகையில் பதித்து வைத்து
ஏய்நீரில் எட்டுனாள் தீயை மூட்டி
யெடுத்துப்பார் அருணன் நிறத் தோற்றமாமே. (481)

இந்த நீரை முன்காய வைத்துப்பொடி பண்ணிய மருந்தின் மேல் விட்டுப் பத்துநாள் ஊறவைத்து பின்பு பீங்கானில் போட்டு வாட்டி, காசி என்ற மேருக்கு ஏற்றி வாலுகையின் மேலே வைத்து எட்டு நாள் தீ எரித்துப்பின் ஆறவிட்டு எடுத்துப்பார்த்தால் சிகப்பு நிறம் கொண்டதாக இருக்கும்.

### சிவப்பு நவாச்சாரம்

ஏத்தமாஞ் சிகப்பான சாரச்சேதி
யியம்பிடவே யென்னாலு முடியா தப்பா
மாத்தமா மிதுக் கொப்பு ஒண்ணுங் காணேன்
ஆயியுட வடிவுக்கு அதிக மாகும்
காத்தமாம் வேதையின் கணக்குசொன்னால்
கடல்புளுகோ வென்பார்கள் கரையோ யில்லை
ஆத்தமாம் நவலோகம் ஆயிரத்துக் கொன்று
அணுகினால் நவலோகம் ஏமமாமே. (482)

இந்த சிகப்பு நவச்சாரத்தின் பெருமை என்னாலும் கூறமுடியாது இதற்கு நிகரான எதுவுமே கிடையாது. இது என் தாயாருக்கு சமமானது வேதையில் ஏற்படும் மாற்றை (மாத்தை) சொன்னால் மகாபொய் என்று கூறுவார்கள். அந்த அளவிற்கு மாற்று ஏற்படும். இதை நவலோகத்தில் ஆயிரத்துக்கு ஒன்று சேர்த்தால் நவலோகங்கள் தங்கமாகும்.

ஏமமோ ஒன்றாகும் காய சித்தி யாகும்
யிழுத்து ஒரு பொட்டிட்டால் சரக்குங் கட்டும்
தூமமாஞ் சூதத்தை துரத்திக் கொல்லும்
சூதமென்ற ஆட்டுக்கு வேங்கை யாகும்
மாமமாம் பணபேதி பரிசபேதி
பாங்கான க்ஷணபேதி யேமபேதி
நாமமாம் நாதாக்கள் ரிஷிகள் சித்தர்
நாதாந்த சாரத்தைக் கரை காணாரே. (483)

மேலும் இதனால் காயசித்தி ஏற்படும். குழைத்து ஒரு சொட்டு விட்டால் சரக்குகள் கட்டும். சூதத்தைக் கொல்லும் ஆட்டிற்கு எதிர்பட்ட வேங்கை போலாகும். இதனால் பணபேதி பரிசபேதி. க்ஷண பேதி, சத்திபேதி என்றெல்லாம் நாமம் சூட்டி பெருமை சொல்ல முடியாமல் தவித்தார்கள்.

காணாதே சாரத்தின் ஆட்டைத் தானும்
கரையற்ற சித்தான ராமதேவர்
நாண்ணாதே நாலுயுகம் பார்த்துத்தேர்ந்தார்
நற்சிவப்பாம் சாரத்தின் ஆட்டைத் தானும்
ஊணாதே சித்த ரெல்லாம் ஒளித்து விட்டார்
உரைக்கரிது யென்று சொல்லி உலகத் தோர்க்கு
பூணாதே ஒருவருடன் புகன்றிடாதே
பொற்பெண்ணை தொடராதே கற்பமுண்ணே. (484)

இந்த சிகப்பு நவச்சாரத்தை ராமதேவர் என்ற சித்தர் நான்குயுகம் செய்து பார்த்து தேர்ந்தார். இந்த சிகப்பு சாரத்தின் முறையை சித்தர்கள் மறைத்தார்கள். சொல்லுவதற்கு மிகவும் கடினமான இதை உலகத்தோர் நன்மைக்காக சொன்னேன். இதை எவருக்கும் சொல்லாமலும் தங்கத்தின் மேல் ஆசை கொள்ளாமலும் கற்பத்தை உண்ண வேண்டும்.

கற்பமுண்ண சொன்னதுதான் யெதினா லென்றால்
கசடான ஆறுதலம் வெளியாய்க் காண
பற்பமுண்ண நரை திரைக ளெல்லாம் போச்சு
பாழான சடம் தானும் உறுதியாக
உற்பமுண்ண யோகசித்தி நிலமையாக
உலக மெல்லாஞ் சாத்திரத்தை யுகந்து பார்க்க
சிற்பமென்ன செகசாலக் கூத்துப்பார்த்து
செக மெல்லாம் வித்தை யென்று ஒழித்துப் போடே. (485)

கற்பம் எதற்காக உண்ணச் சொன்னேன் என்றால் ஆறாதாரம் மிகவும் எளிதாக வெளியே தெரியும் மேலும், நரை திரைகள் மாறி மூப்பு அகலும். உடல் உறுதியாகும். யோக சித்தியும் பலிதமாகும். உலகத்தில் உள்ள சகல சாஸ்திரத்தையும் பார்க்கலாம்.

### மவுனம் ஞானம்

ஒழித்திட்டு மனது தன்னை யுறுதி யாக்கி
யுவப்பான தீனியின் மே லாசை நீக்கி
அழித்திட்டு பெண்ணென்ற ஆசை நீக்கி
ஆணுவத்தை ஐம்புலனை அறிவால் கட்டி

சழித்திட்டு சங்கற்ப விற்ப்பம் நீக்கி
சாத்திரத்தின் கருவெல்லாம் தரிக்கப் பண்ணி
விழித்திட்டு சைதன்னிய வீட்டுக்குள்ளே
மேன்மையா மவுனத்தின் விரவிக்கூடே. (486)

*பின்னர் அந்த வித்தைகளையெல்லாம் விலக்கி மனதை உறுதியாக்கி உணவின் மேல் உள்ள ஆசையை அகற்றி ஐம்புலனையும் அறிவால் கட்டி சங்கற்பம் விகற்பம் ஆகியவற்றை நீக்கி, சகல சாஸ்திரத்தின் கருவை எல்லாம் அறிந்து சைதன்ய குகையில் சென்று மவுனத்தோடு கூட வேண்டும்.*

கூடுவது யெக்காலம் யெப்போ வென்று
கொள்கிநின்று யலையாதே குறியில் கூடு
நாடுவது குருபதத்தை மனசொன்றி நாடு
நாதாந்தப் பெருவெளியில் நாட்டம் பாரு
ஊடுவது மூலத்தில் அங்கென்றூணு
உத்தமித்தாய் பதம்தன்னில் மனதையூணு
தேடுவது சித்தருக்குள் கீர்த்தி தேடு
சிலம் பொலியின் நாதத்தைத் திறமாய்க் கேளே. (487)

*கூடுவது எப்பொழுது எங்கே என்று கூறுகிறேன் கேள். மனதால் குருபதத்தை நாடி பிறகு நாதாந்த பெருவளியில் நாட்டி மூலாதாரத்தில் 'அங்' என்று ஊன்றி உத்தமியான தாயாரின் பாதத்தில். மனதை வைத்து சித்தர்களுடைய கீர்த்தியை தேடி சிலம்பொலியின் நாதத்தை கேட்க வேண்டும்.*

## துரிசுகுரு

திறமான துரிசினுட குருதா னொன்று
செப்புகிறேன் அண்டரண்டம் துளைத்துஆட
அரமான வெடியுப்பு செய நீரோடே
ஆண்மையாம் சவுக்காரச் செயனீர் பாதி
முரமான ரெண்டுமொன்றாய்க் கலக்கினாக் கால்
முறைமையாம் தயிர்போல வெளுப்பு மாகும்
விரமான யின்னீரில் வீரம் பூரம்
மேதித்து ஒன்றாகக் கலக்கிக் கொள்ளே. (488)

*துரிசு குருவைக் கூறுகிறேன் கேள். வெடியுப்பு செயநீருடன் சவுக்கார செயநீர் பாதி சேர்த்து கலக்கினால் தயிர் போல் வெளுப்பாகும், இதில் வீரம், பூரம் சேர்த்து மத்தித்து வைத்துக் கொண்டு.*

கலக்கியே துரிசியின் மேல் பூசிப் பூசி
கனமான ரவியிலிடு தினந்தான் பத்து
துலக்கியே சுக்கான் போல் கட்டிப்போகும்
சுயம்பான வெள்ளீயம் பலந்தா னொன்று
உலக்கியே ஒட்டிலிட்டு உருகும் போது
ஒருபலந்தான் வெடியுப்புச் சுண்ணம் போடு
திலக்கியே கரண்டி யினால் தேய்க்க தேய்க்கச்
சிறப்பான வங்கமெல்லாம் சுண்ணமாமே. (489)

*துரிசின் மேல் பூசிப் பூசி ரவியில் - இட வேண்டும். இதே போல் பத்துநாள் செய்து பின் எடுத்துப்பார்த்தால் துரிசு சுக்கான் போல் கட்டிப்போகும். பின்பு வெள்ளீயம் ஒரு பலம் எடுத்து ஓட்டில் இட்டு உறக்கி அதனுடன் ஒரு பலம் வெடியுப்பு சுண்ணம் போட்டு அரக்கி தேய்த்தால் வங்கமெல்லாம் சுண்ணமாகும்.*

வங்கமாம் சுண்ணாம்பில் வீரம்போட்டு
மாளமட்டும் அரைத்திட்டு வில்லை பண்ணி
அங்கமாம் அகலிலிட்டு புடத்தைப் போடு
ஆகாகா கடுஞ்சுருக்கு சுண்ணமாகும்
துங்கமாம் துரிசிக்கு உள்கரு தான்பூசி
சுருக்கான வங்கத்தைக் கவசங் கட்டி
கங்கமாம் கவுதாரிப் புடத்தைப் போடு
கடுஞ் சுருக்காய் துரிசியது குருவுமாமே. (490)

*இந்த சுண்ணத்தில் வீரம், பூரம் சேர்த்து அரைத்து வில்லை செய்து அகலில் இட்டு புடத்தைப் போட்டால் சுண்ணமாகும். இந்த சுண்ணத்தை துரிசுக்கு மேலே பூசி, அதன் மேல் வங்கத்தை கவசமாக கட்டி கவுதாரிப் புடம் போட்டால் துரிசு குருவாகும்.*

### துரிசுகுரு

துரிசியது செயகுருவே ஆச்சு தென்றால்
சூதத்தை கால்வாரி அடிக்கும் பாரு
வரிசையாம் விராலிக்குக் குருவையிட்டு
வாகாகா யிடித்துமே பிசைந்து அமுத்தி வைத்து
புரிசையாம் பிழிந்திட்டு அயக் கரண்டி ஊத்தி
புண்ணியமாம் சூதத்தை விட்டுக் காய்ச்ச
கரிசையாம் இட்டலிபோல் வெண்ணையாகி
கண் விட்டு உருகுமே சூதந் தானே. (491)

இந்த துரிசு குரு சூதத்தை கால்வாரி அடிக்கும். இந்த குருவை விராலிக்கு இட்டு அடித்துப் பிசைந்து சா றெடுத்து அயக்கரண்டியில் சூதத்தை விட்டு காய்ச்சினால் இட்டிலிபோல் வெண்ணையாகி கண்விட்டு உருகும்.

உருகின்ற சூதத்தின் முன் னாகத்தை
ஒக்கவே நீட்டிடுவாய் சமனாகத்தான்
அருகின்ற சூதத்துக் கரைவாசி தங்கம்
அந்திடைக்கு தாளகமும் கெந்திகூட்டு
கருகின்ற களங்காகும் நூத்துக் கொன்று
காட்டிடவே தசமாத்தாம் கருதிப்பாரு
வருகின்ற களங்கத்தை மண்டலந்தானுண்ணு
வாலையாம் மன்மதன் போ லாவாய்காணே. (492)

சூதம் உருகும்போது (சூதத்தின் எடைக்கு சமமாக) நாகம் சேர் சூத எடைக்கு அரைவாசி தங்கம் சேர்த்து அந்த எடைக்கு தாளகமும் கெந்தியும் இட்டு உருக்கினால் களங்காகும். இந்த களங்கை நூற்றுக்கு ஒன்று தாக்கினால் நவலோகங்கள் பத்து மாத்து உள்ள பொன்னாக மாறும். இந்த களங்கை ஒரு மண்டலம் உண்டால் தேகம் மன்மதனைப் போல் ஆகும்.

### துரிசி குரு

காணவே துரிசியைனீ கருதக்கேளு
கைகண்ட தொழிலிது தான் கருவாய்ப்பாரு
ஊணவே திராவகத்தால் சவுக்கார சுண்ணம்
உத்தமமா வங்கமென்ற சுண்ணந்தானும்
பூணவே பொற்றலையின் சுண்ணம் வீரம்
பூரமொடு வகைக்கு ரெண்டு விராகன்தூக்கி
தோணவே தீனீரில் கலக்கிக் கொண்டு
துரிசியொரு பலந்தனிலே தோச்சுப் போடே. (493)

துருசியை நீற்றும் விதம் கூறுகிறேன் கேள். சவுக்கார சுண்ணம் வங்கச் சுண்ணம், செயவீரச் சுண்ணம் இவை மூன்றும் வகைக்கு ரெண்டு வராகன் எடைபோட்டு தீநீரில் கலக்கி கொண்டு துரிசு ஒரு பலம் எடுத்து தீநீரில் தோய்த்து.

தோச்சுமே தினம் பத்து காய்ந்த பின்பு
சுயம்பான வங்க மென்ற சுண்ணந் தன்னை
காச்சுமே திராவகத்தால் கவசங் கட்டி
கவுதாரி புடம்போட கண்டர்நீராம்

பாச்சுமே பாட்டரென்ற மூலர்தாமும்
பரிவாக பதினாலு வுலகுமெச்ச
ஆச்சுமே குளிகை கட்டி அண்டமெல்லாம்
அடுக் கடுக்காய் சோதித்து ஆடினாரே. (494)

*தோய்த்து ரவியில் போட்டு பத்து நாட்கள் சென்ற பிறகு எடுத்து வங்க சூண்ணத்தை திராவகத்தால் அரைத்து துரிசுக்கு மேலே கவசமாக பூட்டி கவுதாரி புடம் போட துருசி நீரும். பாட்டரான திருமூலர் பதிநான்கு உலகமும் மெச்சும் அளவிற்கு குளிகை கட்டி சோதித்து அண்டம் எல்லாம் சுற்றி வந்தார்.*

ஆடியே அண்ட ரண்ட பதங்க ளெல்லாம்
அடுக் கெல்லாஞ் சோதிச்சு ஆண்மையாக
ஓடியே துருவனுக்கு அப்பால் சென்றார்
உத்தமமாங் காலாங்கிக்கு உபதேசித்தார்
தேடியே காலாங்கி னாயனாருஞ்
செப்பமாய் சொல்லிடவே சிரசில் வைத்து
நீடியே நிகண்டுக்குள் நேர்மையாக
நிசமாகச் சொல்லி விட்டேன் துரிசி நீரே. (495)

*அண்டரண்ட பதங்கள் எல்லாம் சுற்றி துருவஸ்தானத்திற்கு அப்பாலும் சென்று பின்னர் காலாங்கி நாதருக்கு உபதேசித்தார். காலாங்கி நாதர் அடியேனுக்கு சொன்னார். நான் அதை சிரமேற்கொண்டு இந்த நிகண்டில் அப்படியே கூறிவிட்டேன். இந்த துரிசு நீற்றும் முறையை.*

துரிசினுட நீராலே சித்த ரெல்லாம்
சுருபமணி பண்ணியே வாயில் வைத்து
கெரிசியாம் கேசரத்தி லாடினார்கள்
கெடியான ஆட்டெல்லாம் துரிசி யாட்டு
வரிசியா மற்றொன்றில் சூதஞ் சாகா
வாய்ப்பான வாத மெல்லாம் துரிசி யாச்சு
பரிசியாய்ப் பின்னொன்றே பார்க்க வேண்டாம்
பிரண் டுருண்டு துரிசியை நீ பேணிப் பாரே. (496)

*துரிசி நீறினால் குளிகை செய்து வாயில் வைத்துக் கொண்டு அண்ட சராசரம் எல்லாம் சுற்றி வந்தார்கள். எல்லா வகையான செய்கையும் துரிசால் ஆகும். வாத முதல் எல்லாம் சித்தியாகும். பின்னர் வேறு எதைசும் பார்க்க வேண்டாம்*

துரிசி விட்டால் சூத மொன்றுங் கட்டா தப்பா
சுக்கிலந்தான் காணியினால் பிள்ளை யாகும்
கரிசிவிட்டால் கட் டுமுண்டு தூரவோடாக்
கல்கடித்துத் துரிசியினால் எட்டியோடும்

தரிசிலிட்ட தங்கத்தால் பரியா மெல்லாம்
சங்கல்ப லவணத்தால் தரிக்கும் தூமம்
பரிசிலிட்ட சவுக்காரம் பதையாமல் கொல்லும்
பணபேதி சணபேதி துரிசி தானே. (497)

துரிசை விட்டால் வேறு எதனாலும் சூதம் அடங்காது. சுக்கிலம் காணியினால் பிள்ளையாகும். இதை விட்டு விட்டால் கட்டு உடைந்து வெகுதூரம் ஓடாது. சூதம் துரிசினால் எட்டியோடும். துரிசால் எல்லாம் ஏமமாகும். லவணங்கள் எல்லாம் தெரிந்து வோடும். சவுக்காரத்தை கொல்லும்.

## துரிசு குரு

தானென்ற துரிசுகுரு ஒன்று கேளு
தாண்டுகின்ற யிந்துப்பு பலமு மொன்று
வேனென்ற வெடியுப்பு நீரா லாட்டி
மீறாமல் புடம் போட்டு யெடுத்துக் கொண்டு
பானென்ற பனியில் வைக்க செய நீராகும்
பச்சையாம் கற்பூரம் பலந்தா னொன்று
தேனென்ற பீங்கானில் நிறுத்துப் போட்டு
செயனீர் தான் பலமொன்று அதுக்குள் வாரே. (498)

துருசு குரு:- துருசு குரு ஒன்று சொல்கிறேன் கேள். ஒரு பலம் இந்துப்பு, எடுத்து வெடியுப்பு செயநீரால் அரைத்துப் புடம் போட்டு எடுத்துக் கொண்டு அதை பனியில் வைத்தால் செயநீராகும்.

வாரப்பா வெடியுப்பு நீரோ டொக்க
வளமான சாரனீர் கலந்துகட்டித்
தாரப்பா தயிர் போலே ஆகும்பாரு
தனித்த பச்சைப் பூரத்தில் தளர வாரு
பாரப்பா ரவியில்வைக்க புரண்டுஉப்பாம்
புகழான பட்சந்தான் ரவியில்போடு
காரப்பா காஞ்சபின்பு கிளிஞ்சியிலே வைத்து
கசகாமல். மேல்மூடி சீலை செய்யே. (499)

ஒருபலம் பச்சைக் கற்பூரத்தை ஒரு பீங்கானில் போட்டு அதில் செயநீரை ஊற்றி மேலும் வெடியுப்பு செயநீரும், சார செயநீரும், கலந்து பச்சைக் கற்பூரத்தில் வார்த்தால் வெள்ளையாக திரளும். அதை ஒரு பக்ஷம் ஈவியில் வைத்தால் உப்பாகும், இந்த் உப்பை கிளிஞ்சிலுக்கு உள் வைத்து மேல்மூடி சீலை செய்து.

சீலை செய்து மணல் மறைவில் புடத்தைப் போடு
திற்மையாம் பூரமது சுண்ணமாகும்
பாலைசெய்து பீங்கானில் பனியில் வைக்க
டலபலனச் செயனீராம் பண்பு கேளு
காலைசெய கண்டருக்கு தோச்சு தோச்சு
கடு ரவியில் போட்டிடவும் கட்டிப் போகும்
வாலைசெய்து பத்துநாளான பின்பு
வங்கமென்ற சுண்ணந்தான் கவசம் போடே. (500)

*மண் மறைவில் வைத்து புடம் போட சுண்ணமாகும். இதை பனியில் வைத்தால் செயநீராகும். இதில் துரிசை தோய்த்து தோய்த்து ரவியில் போட்டால் கட்டிப் போகும். இப்படியே பத்துநாள் செய்து வங்க சுண்ணத்தை கவசமாக கட்டி கவுதாரி புடம் போட குருவாகும்.*

கவசமிட்டு கவுதாரி புடத்தைப் போடு
கடுஞ் சுருக்கு யித்துரிசி காலனொக்கும்
பவசமிட்ட பதஞ்சலியார் ஆடும் வித்தை
பண்புள்ளா ரென்று சொல்லி அடியேனுக்கு
புவசமிட்டுப்போதித்தார் புத்தி சொன்னார்
போதரவாற் பார்த்தபடி நிகண்டிற் சொன்னேன்
துவசமிட்ட யிக்குருவால் சூதங் கட்ட
சுருக்கிலே கெவுனவழி ஓடுந்தானே. (501)

*இந்த வித்தை பதஞ்சலி முனிவர் ஆடும் வித்தையாகும். பண்பு உள்ளவன் என்று அடியேனுக்கு சொன்னார் நான் அதை அப்படியே இந்த நிகண்டில் சொன்னேன். இந்த குருவால் சூதத்தைக் கட்டினால் ககன பிரவேசம் சுலபமாக ஏற்படும்.*

ஓடவே யிக்குருவுக் கிடைதான் சாரம்
ஒக்கவிட்டு அரைத்துமே செயனீர் வாங்கி
கூடவே சூதத்தை சுத்தித்துக் கொண்டு
சூட்சமாய் அயக்கரண்டிக் குள்ளே வார்த்து
காடவே சுருக்கிட்டால் செயனீராலே
கட்டியே சூதமது வெண்ணெ யாகும்
தேடவே சூடனுட தீயில் வாட்டி
சிதராமல் உருக்கிடவே மணியு மாமே. (502)

*இந்த குருவுக்கு சரி எடை சாரம் சேர்த்து அரைத்து செயநீராக்கி சூதத்தை சுத்தி பண்ணி அயக்கரண்டிக்குள் வார்த்து செயநீரால் சுருக்கு*

இட்டால் சூதம் வெண்ணையாகும். இந்த வெண்ணை சூடனுட தீயில் வாட்டி உருக்கினால் மணியாகும்.

மணியான சூதத்தில் சாரணை யேற்று
மகத்தான கெவுனவழி சுருக்கா யோடும்
பிணியான தொன்றுமிலை காய சித்தியாகும்
பேரான லோகத்தில் பரிசிக்கச் சொர்னம்
விணியான குளிகைக்கு வெட்குமய்யா
மேல்கடலும் கீழ்கடலும் நிமை முன் தாண்டும்
தனியான தாயோடு சதாசிவனும் காண்பாய்
சதானித்தம் பூரணத்தில் தாக்கியோடே. (503)

இந்த மணிக்கு சாரணை ஏற்றினால் கெவுன மணியாகும். மேலும் காயசித்தி உண்டாகும். பரிச வேதை ஏற்படும். இந்த குளிகையை கொண்டு மேல் கடலும் கீழ் கடலும் தாண்டலாம். ஒரு வினாடியில் உலகத்தை சுற்றி வரலாம். சதாசிவனும் தரிசனம் தருவார். எப்பொழுதும் பூரணத்தில் மனதை லயிக்கச் செய்ய வேண்டும்.

### வியாக்கிரமர் தூரிசு குரு

ஆடவே துரிசி யொன்று சொல்லக் கேளு
அம்பலத்தில் வியாக்கிரமர் அருளிச் செய்தார்
வீடவே சுருக்கான தீநீருக்குள்
வெடியுப்பு சுண்ணமொடு பூனீரும் போட்டு
மூடவே மொலுமொலெனக் கரைந்தபின்பு
மூர்க்கமாம் தீநீரில் துரிசி சேர்த்து
பாடவே பத்துநாள் ரவியிலேபோடு
பாங்காக காய்ந்த பின்பு பருவங்கேளே. (504)

துருசி குரு:- துருசு குரு ஒன்று சொல்கிறேன கேள். இது வியாக்கிரமர் அருளியதாகும். தீநீருக்குள் வெடியுப்பு சுண்ணம் பூனீறு இரண்டையும் போட்டு நன்றாகக் கரைத்து துரிசைத் தோய்த்து தோய்த்து பத்து நாள் ரவியில் போடக் காய்ந்து கட்டிப் போகும்.

பருவமாம் வெங்காரம் சீனாக்காரம்
பாங்கான தீனீரி லரைத் தரைத்து
துருவமாம் துரிசான ரவியில் போடு
சுபதினந்தான் பத்துநா ளானபின்பு

அருவமாம் முன்காஞ்ச துரிசி மேலே
அப்பியே கவுதாரி ப்புடமாய்ப்போடு
கருவமாம் துரிசியது சிவந்த குருவாகும்
செகச்சால மாட்டிவைத்த திரோதைதானே. (505)

*தீ நீருக்குள் வெண்காரம், சீனாக்காரம், இரண்டையும் போட்டு கலக்கி துருசை தோய்த்து பத்துநாள் ரவியில் போட்டு முன் துரிசின் மேலே இந்த துரிசையும் வைத்து கவுதாரி புடம் போட சிவந்த குருவாகும்.*

திரோதையாம் தில்லைப் பால் படிதா னொன்று
செயமான துருசி குரு விராகனிடையொன்று
பரோதையாம் பால்தனிலே போட்டு வைக்கப்
பால் முறிஞ்சு சுத்த சலம் போலாகும்
அரோதையாம் அயச்சட்டிக் குள்ளே வார்த்து
அரைவீசம் சுத்தித்தசூதம்விட்டு
கரோதையாம் அயத்துடுப்பால் கிண்டிக் காச்ச
கண்விட்டு ஆடுமே சூதந்தானே. (506)

*தில்லைப்பால் ஒருபடியும், துரிசி குரு விராகன் எடையும் எடுத்து தில்லைப் பாலில் துரிசை போட்டு வைத்தால் பால் முறிந்து சுத்த சலமாகும். அதை அயச்சட்டிக்குள் விட்டு அரை வீசம் சூதம் விட்டு துடுப்பால் கிண்டிக் காய்ச்சினால் சூதம் கண்விட்டு ஆடும்.*

ஆடுகின்ற சூதந்தான் காய சித்தியாகும்
அன்னூற்று லோகத்துக் கொண்ணே யோடும்
தேடுகின்ற சூதத்தைச் செந்தூரம் பண்ணு
சியமான குருபண்ணு களங்குபண்ணு
வாடுகின்ற வாதமொடு வசிய மாகும்
மகத்தான கெவுன வழி ஓடலாகும்
நாடுகின்ற பெண்ணாசை தன்னை விட்டு
நலமான சிலம்பொலியின் நாட்டங் கேளே. (507)

*இந்த சூதத்தால் காயசித்தி பலிதமாகும். இந்த சூதத்தை செந்தூரம் செய்தும் குரு செய்தும் களங்கு செய்தும் உட்கொண்டால் வாதமும் வசியமும் கைகூடும். கெவுன வழி ஓடலாம். பெண்ணாசையை தள்ளி விட்டு சிலம்பொலியைக் காதில் கேட்கவேண்டும்.*

நாட்டமாந் துரிசி யொன்று சொல்லக் கேளு
நாதாந்த கண்டரது பலந்தான் பத்து
தாட்டமாந் தங்கத்தின் ரேக்குதானும்
தளராதே ரெண்டரையே பலமுமாகும்

தூட்டமாஞ் சூதமது பலந்தான் பத்து
சுத்தித்து கல்வத்தில் போட்டுக் கொண்டு
வேட்டமாம் வெடியுப்பு நீரினாலே
மீளாதே மூன்றையும் தா னரைத்திடாயே. (508)

*துருசி பத்து பலம் எடுத்து தங்க ரேக்கு இரண்டரை பலமும் பத்து பலம் சூதமும் கல்வத்தில் போட்டு வெடிஉப்பு செயநீரால் அரைத்து*

அரைத்திட்டு அஞ்சுநா ளானபின்பு
ஆர்க்கமாய் ரவிதனிலே காயப் போட்டு
கரைத்திட்ட தீனீரில் கெந்தியோடு லிங்கம்
கனமான தாளகமும் சவுக்காரச் சுண்ணம்
மரைத்திட்ட மனோசிலையும் க்ாரீயச் சுண்ணம்
வகைவகைக்கு அரைப்பலந்தான் தீனீரி லிட்டு
யரைத்துஒரு சேரைதான் தீனிரில் போட்டு
பாங்காகத் தெளிவிறுத்துப் பதனம் பண்ணே. (509)

*அஞ்சுநாள் ஆனபின்பு ரவியில் காயப்போட்டு பின்னர், தீநீரில் கெந்தி, லிங்கம் மனோசிலை தாளகம், சவுக்காரசுண்ணம் காரீயச் சுண்ணம் இவை எல்லாம் வகைக்கு அரைபலம் தீநீரில் போட்டு தெளிவிறுத்து*

### துரிசு குரு செந்தூரம்

பண்ணியே முன்காஞ்ச துரிசிக்குளிட்டு
பக்குவமா யரைத்திட்டு அஞ்சு நாள்தான்
தண்ணியே காயவைத்து பொடியாய்ப் பண்ணி
கனமான மேருக்கே பதித்து வைத்து
வண்ணியே வாலுகையி லேத்திநீயும்
மறவாமல் தீமூட்டு யெட்டு நாள்தான்
புண்ணியமே செய்தவர்க்குச் செந்தூர மாகும்
பொற்ச்சிமிளி லடைத்துவைத்து புகலக் கேளே. (510)

*பதனம் பண்ணி முன்காய வைத்து துரிசுக்கு விட்டு அஞ்சுநாள் அரைத்த பின்பு காயவைத்து பொடி பண்ணி மேலுக்கு ஏற்றி வாலுகையின் மேலே வைத்து தீ மூட்டி எட்டு நாள் எரிக்க சிவந்த நிறம் கொண்ட செந்தூரமாக மாறும். இதை பொன் சிமிழில் அடைத்து வைத்துக் கொண்டு*

கேளப்பா நவலோகம் ஆயிரத்துக் கோடும்
கெடியான பன்னிரண்டா மாத்துமப்பா
நாளப்பா போகாமல் பணவிடைதான் உண்ணு
அரனுண்ட கற்பமிது நானு முண்டேன்

தேளப்பா கொட்டியதோர் வேகம்போல
சணத்திலே சட்டை கக்கிப் பாலை யாகும்
வேளப்பா. வுரித்தசிவன் தேவிக்குச் சொன்னார்
மிக்கான நந்திக்கு விளம்பினாளே. (511)

*நவலோகம் ஆயிரத்துக் கொன்று இட்டால் பன்னிரண்டு மாற்று உண்டாகும் இந்த செந்தூரத்தை பணஎடை உண்ண வேண்டும். நானும் இதை உண்டேன். தேள் கொட்டிய வேகம் போல் வினாடியில் தேகம் பாலையாகும். இந்த முறையை சிவன் தேவிக்குச் சொன்னார். தேவி நந்திக்கு உபதேசம் செய்தார்.*

நந்தியுட பிள்ளை கள்தான் யெட்டுப் பேரில்
நலமான சிவயோக முனிதனக்கு
உந்தியெனப் பக்குவத்தி லுப தேசித்தார்
வுத்தம மாஞ் சிவ யோக முனிதான் பார்த்து
மெந்தி யென்ற மேருவினில் தாண்டிப் போற
வேளையிலே காலாங்கிக் குபதேசித்தார்
கந்தியென்றக் காலாங்கி நாயர் தாமுங்
கடாட்சித்து அடியேற்குக் கருதினாரே. (512)

*நந்தி தன் சீடர்கள் எட்டு பேரில் சிவயோக முனிக்கு உபதேசம் செய்தார். சிவயோகமுனி மேருவைத் தாண்டி அப்பால் செல்லுகையில் காலாங்கி நாதருக்கு உபதேசம் செய்தார். காலாங்கி நாதர் அடியேனுக்குச் சொன்னார்.*

கருதியே காலாங்கி னாயர் சொன்ன
கடாக்ஷத் தாலடியேனும் பார்த்துத் தேறி
நிருதியாம் மூலைதனில் பொதிகைக் கப்பால்
நிசமான தாட்சியா மலை தானொன்று
சுருதியா மஞ்ஞூறு காதத் தப்பால்
சுணங்க விருக்ஷ மர்த்தடியில் யேழு கோடி
உருதியாம் யுகந்தானும் உபதேசித்தேன்
உத்தமமாம் பிள்ளை கட்கு உறுதி தானே. (513)

*காலாங்கி நாதர் சொன்னபடி அடியேன் கண்டுதேறி நிருதி மூலையில் பொதிகை மலைக்கு அப்பால் தட்சிண கயிலாச மலையில் ஒரு சுணங்க மரத்தின் கீழ் ஏழுகோடி யுகம் சமாதியில் இருந்து சீடர்களுக்கு உபதேசம் செய்தேன்.*

உறுதியாஞ் சாஸ்திரந்தா னேழு காண்டம்
உசத்தியாஞ் சூஸ்திரந்தான் யெழு நூத்துச் சொச்சம்
பருதியாம் நிகண்டதுவும் பத்தெழுனூறு
பலபோக்கு வுரை காணப் பாடிப் போட்டேன்
திருதியாங் கட்சியிலே செந்தூரஞ் சொன்னேன்
சித்தானவுப் பொன்று திறமாய்ச் சொன்னேன்
சிறுகியாஞ் சிவயோக முனிதான் சொன்ன
செந்தூரத் திறமை யெல்லாஞ் செப்புறேனே. (514)

*அதாவது சாஸ்திரம் ஏழு காண்டமும் சூத்திரம் எழுநூறும், நிகண்டு ஆயிரத்து எழுநூறும் எல்லோரும் எளிதாக புரிந்து கொள்ளும்படி பாடி வைத்தேன். செந்தூரங்கள் சொன்னேன். சிவயோக முனி சொன்ன சருவ சஞ்வீவினி செந்தூரத்தின் மகிமையை கூறுகிறேன்.*

**சூதமணி நூல் கோர்வை**

செப்புறேன் சூதமது சேரு வொன்று
சுத்தித்து அயச்சட்டி தன்னில் வார்த்து
அப்புறேன் அடுப்பேத்தி யெரிக்கும் போது
அதிற்போடு விராகனிடை செந்தூரந் தான்
கொப்புறேன் குடுகண்டு கொதிக்கும் போது
குறிப்பாக துட்டிடை தான் பழச்சாறு
விப்புறேன் மேல்விடவுங் கட்டிப் போகும்
விளக்கெண்ணை தனைவார்த்து வுருக்கிடாயே. (515)

*சூதம் ஒரு சேர் எடுத்து அயச்சட்டியில் விட்டு அடுப்பேற்றி எரிக்கும்போது வராகன் எடை செந்தூரம் போட வேண்டும். சூதம் கொதிக்கும் போது பழச்சாறு வார்த்து விட கட்டிப் போகும். பின்பு விளக்கெண்ணை விட்டு உருக்கி சூதத்தை சாரணை தீர்க்கவேண்டும்.*

உருக்கிட்ட சூதத்தில் சாரணையைத் தீரு
ஒருகோடி தூரந்தான் நிமை முன் தாண்டுங்
கருக்கிட்ட களங்கு பண்ணு செந்தூரம் பண்ணு
கைமுறையாய் குருப்பண்ணு யெட்டி யோடுந்
திருக்கிட்ட சிவயோகமுனி தான்சொன்ன
தீர்கமா முபதேசம் நிகண்டிற் சொன்னேன்
நெறித்கிட்ட நிகண்டு தன்னை வெளியில் போட்டால்
நிச்சயமாய்த் தோஷம் வந்து லபிக்குந்தானே. (516)

கோடி தூரம் ஒரு வினாடிக்குள் செல்லலாம். இந்த சூதத்தைக் கொண்டு களங்கு செந்தூரம் குரு பண்ணினால் அனைத்தும் சித்தியாகும். சிவயோகமுனி சொன்ன அனைத்து வித உபதேசமும் நிகண்டில் சொன்னேன். இந்த நிகண்டை வெளியில் போட்டால் தோஷம் வந்து சேரும்.

தோஷம் வந்து யாருக்கு லெபிக்கு மென்றால்
சீஷனுட குணம் பார்த்துக் கொடுத்திட்டார்க்கு
தோஷம் வந்து யாருக்கு லெபிக்கு மென்றால்
துஷ்டனாஞ் சீஷனுக்கு நிகண்டை யீய்ந்தால்
தோஷம் வந்து யாருக்கு லெபிக்கு மென்றால்
சோம்பலாய்க் குருநிந்தை பண்ணினோர்க்கு
தோஷம் வந்து லெபியாம லிருக்க வென்றால்
சுத்த சைதன்னியமாய் நிகண்டைப் பாரே. (517)

யாருக்கு தோஷம் வரும் என்றால் குணம் பார்த்து கொடுக்காத வர்க்கும் துஷ்ட சீடனுக்கு ஈந்தாருக்கும், குருநித்தை புரிவோர்க்கு ஈந்தாலும் எல்லாம் கொடுத்தால் தோஷம் வந்து சேரும்.

நிகண்டைவிட்டு வாதத்தைப் பார்த்தா னானால்
லெபிக்காது யேமமென்ற வித்தை தானும்
நிகண்டை விட்டுக் காயசித்தி செய்தானானால்
நேராது சடமலைந்து நீங்கிப் போகும்
நிகண்டைவிட்டு ஞானத்தைப் பார்த்தானானால்
நேரான குருபதத்தின் நேர்மை காணார்
நிகண்டைவிட்டு யோகத்தைப் பார்த்தானானால்
நீச்சென்ற காடாகும் நினைவாய்ப்பாரே. (518)

நிகண்டைப் படிக்காமல் வாதம் செய்தால் யேமம் பலிக்காது நிகண்டை விட்டு காயசித்தி செய்தால்சடம் அலைந்து போகும். இதை விட்டு ஞானம் பார்த்தால் குருபதத்தின் நேர்மை தெரியாது. இதை விட்டு யோகம் பார்த்தால் நீச்ச காடாகும்.

## தூரிசுச் செந்தூரத்தில் யாவும் ஜெயமாகும்

நினவான துரிசியுடச் செந்தூரத்தில்
நிச்சயமா யறு பத்து நாலுங் கட்டும்
உணவான வுபரசங்கள் நூத்திரண்டு பத்தும்
வுலர்கின்ற சத்தாகும் சவளை யாகும்

யினமான வுப்புவகை யிருபத் தஞ்சும்
யேத்தமாங் கட்டாகுஞ் சுண்ண மாகுஞ்
சினவான சிவயோக முனிதான் சொன்னத்
திறமான செந்தூரந் தெளிந்து பாரே. (519)

*துரிசு செந்தூரத்தால் அறுபத்து நாலுசரக்கும் கட்டும். உபரசங்கள் நூற்றிண்டு பத்தும், சத்தாகும், உப்பு வகை இருபத்தைந்தும் கட்டாகும் சுண்ணமாகும். அதனால் சிவயோக முனி சொன்ன செந்தூரத்தை முதலில் செய்துபார்.*

## உப்புக்கட்டு

தெளியவே வுப்பான கட்டைக் கேளு
தெக்ஷணா மூர்த்தி சொன்ன வுபதேசந்தான்
களியவே கல்லுப்புப் பலந்தான் பத்து
கனமாகப் பாக்குப்போல் பொறுக்கிக்கொண்டு
யெளியவே யெலுமிச்சம் பழச்சாற்றில் தோச்சு
யேத்தமாம் ரவியிலிடு தினந்தான்மூன்று
வெளியவே வெடியுப்பு நீரில் தோச்சு
மிடுக்கான ரவியிலிடு தினந்தான் மூன்றே. (520)

*உப்புக் கட்டைக் கேள். தெட்சிணா மூர்த்தி சொன்ன உபதேசம் இது. கல்லுப்புப் பத்து பலம் எடுத்து பாக்குபோல் நொறுக்கிக் கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றில் தோய்த்து மூன்று தினம் ரவியில் போட்டு பின்பு வெடியுப்பு செயநீரில் தோய்த்து மூன்று தினம் ரவியில் போட்டு*

மூன்றுநாள் சாரநீர் தன்னில் தோய்ப்பாய்
மிடுக்கான யிந்துப்பு நீரில் மூன்று
கோன்றுனாள் ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
காரமொடு சவ்வீரம் பூரமூன்றும்
வேன்றுனாள் வெடிஉப்பு நீரிலாட்டி.
மிடுக்கான வுப்பிலே பிசறிப்போட்டு
பூன்று நாள் கலசத்திலிட்டு நீயும்
புகழாகப் புடம் போட்டு எடுத்துக் கொள்ளே. (521)

*பின்வர் சாரசெயநீரில் தோய்த்து மூன்று தினம் ரவியில் போட்டு காய்ந்த பின்னர் காரம் சவ்வீரம் பூரம் மூன்றையும் இட்டு புடம் போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.*

எடுத்துமே சவுக்காரச் சுண்ணங்காரம்
யிதமான லிங்கமொடு வகை வகைக்குப் பலந்தான்
விடுத்துமே வெடியுப்பு நீராலாட்டி
மிடுக்கான வுப்புக்குப் பிசறிப் போடு
கடுத்துமே கலையத்தி லிட்டு மூடி
கனமாகப் புடம் போட்டு யெடுத்துக் கொண்டு
தொடுத்துமே சீனமொடு கடல் நுரையுங்கூட
சுயமான சத்தியென்ற சாரந்தானே. (522)

பின்னர் சவுக்கார சுண்ணம் சாரம் லிங்கம் இவை எல்லாம் வகைக்கு ஒரு பலம் எடுத்து வெடியுப்புச் செயநீரால் அரைத்து உப்பிற்கு பிசறி குடத்திற்குள் வைத்து புடம் போட்டு எடுத்துக்கொண்டு பின்னர் சீனம், கடல்நுரை, சத்திசாரம்

தநனென்ற சரக்கதுவும் வகைக்கு வொருபலந்தான்
தனியான வெடியுப்பு நீராலாட்டி
ஊனென்ற உப்புக்கு உலரப் பூசி
உறுதியாய்ப் புடம் போட வுப்புக் கட்டும்
தேனென்ற வுப்புக்குள் கூர்மை மெத்தத்
திறமாகக் கரியில் நின்று ஆடு மாடும்
வானென்ற வுப்பிதுதான் மகத்தாங் கட்டு
மைத்த தெல்லாம் வாருகோல் கட்டுத்தானே. (523)

இவை மூன்றும் ஒரு பலம் எடுத்து வெடியுப்பு செயநீரால் அரைத்து உப்புடன் சேர்த்துப் பிசறி புடம்போட உப்புகட்டும். இந்த உப்பு கரியில் நின்று ஆடும் இந்த கட்டுதான் மாபெரிய கட்டாகும்.

கட்டான உப்பெடுத்து உருக்கிப் பாரு
கசகாமல் பொன்போலே கண் விட்டாடுந்
தட்டான தங்கந்தான் உப்புக்குப் பாதி
சாங்கமாய்க் கட்டுகின்ற நாகம் பாதி
திட்டான கட்டுகின்ற லிங்கம் பாதி
சியமான சவ்வீரம் பாதியப்பா
ஒட்டான ஒண்ணாகக் காரமிட்டு
உருக்கி ஒன்றாய்க்கலந்திடவே களங்கமாமே. (524)

இந்த உப்பை எடுத்து உருக்கினால் பொன்போல் கண்விட்டு ஆடும். இந்த உப்புக்கு பாதி தங்கமும் தங்க எடை கட்டிய நாகமும் நாகத்தின் எடை

லிங்கமும் லிங்கத்தின் எடை சவ்வீரமும், இவை எல்லாவற்றின் எடைக்கும் சமமாக காரமும் சேர்த்து உருக்கினால் களங்காகும்.

### உப்புக் களங்கில் வேதை

களங்கத்தில் ரவிமதியில் ஆயிரத்துக் கொன்றீய
கண்டிடுமே திசமாத்து கருதிப்பாரு
திளங்கத்த குருப்பண்ணு செந்தூரம் பண்ணு
தெக்ஷணாமூர்த்தி யென்ற பாட்டர் பக்கல்
துளங்கத்துத் தொண்டு பண்ணி தீக்ஷை கேட்டேன்
சித்த மகிழ்ந்தப் போதே வுப்பைச்சொன்னார்
வளங்கத்தை யிந்தனாள் மனதில் வைத்து
மகத்தான நிகண்டுக்குள் திறந்திட்டேனே. (525)

இந்த களங்கை ரவிமதியில் ஆயிரத்துக்கு ஒன்று ஈந்தால் பத்து மாத்து உள்ள தங்கம் கிடைக்கும். இந்த உப்பை குரு, செந்தூரமும் செய், தெக்ஷணா மூர்த்தி என்ற பாட்டர் அருகில் சென்று தொண்டு பண்ணி தீக்ஷை கேட்டேன். மனம் மகிழ்ச்சி கொண்டு இந்த உப்புக் கட்டை கூறினார். அதை மனதில் மறவாமல் வைத்துக்கொண்டு இந்நிகண்டில் தெரிவித்தேன்.

### தெக்ஷணாமூர்த்தி உப்பு உபதேசம்

திறந்திட்டேன் சித்தர் மயமெத்தவாகச்
செகத்திலே யேமமது துரும்பாய்ப் போக
கறந்திட்டேன் காய சித்தி யெளிதிலாகக்
கனமான சிவயோகங் கருதிக் காண
பறந்திட்டேன் குளிகை கட்டி கெவனமாடப்
பரத்துக்கு அடுக்க நின்று பானம் பண்ண
மறந்திட்டேன் சமுசார வலையில் சிக்கி
மாளாதே வுப்பினுட வளஞ்சொன்னேனே. (526)

சித்தர்கள் அதிகமாகட்டும் என்ற எண்ணத்தில் வெளிப்படையாகத் தெரிவித்தேன். ஏமம் என்ற தொழில் மிகவும் எளிதாக தெரிவித்தேன். காயசித்தியும் சிவயோகமும் குளிகை கட்டி கவுனம் சித்தியாகவும் அமுதரசம் பருகவும் மிக எளிதாக உப்புக்கட்டை தெரிவித்தேன் .சம்சார வலையில் சிக்காமல் இருக்க உப்பினுட வளமை சொன்னேன்.

வளஞ்சொன்னேன் பாட்டருட மூலர் பாதமலர் தூவி
பதினொருக்கால் வணக்கால் வணக்கஞ் சொன்னேன்
வள்ஞ்சொன்ன பதஞ்சலியார் வியாக்கிரமர் பாதம்
மறவாமல் தொழுதிறைஞ்சி தெண்டஞ் சொன்னேன்

வளஞ்சொன்ன சிவயோக முனிதன்பாதம்
மகிழ்ந்திறைஞ்சி பாதத்தில் வணக்கஞ் சொன்னேன்
வளஞ்சொன்ன தெக்ஷணாமூர்த்திக்குச் சரணம்
மகத்தான அகஸ்தியருக்குச் சரணந்தானே. (527)

*மூவருடைய பாதம் போற்றியும் பதஞ்சலிக்கும், வியாக்கிரம பாதருக்கும், சிவயோக முனிக்கும், தெக்ஷணாமூர்த்திக்கும் அகஸ்தியருக்கும் வணக்கத்தை கூறி தெண்டம் செய்து போற்றுகிறேன் என்கிறார் போக முனிவர்.*

விளம்பினா ராயுறு வேதந்தானும்
வேணமட்டும் சரக்குப்பேர் தொகுத்துச் சொன்னார்
நளம்பெறவே வுபரசங்கள் கற்கம் யாவும்
நாட்டினார் மாணாக்கள் பிழைக்க வென்று
தளம்பெறவே பெருநூலுஞ் சுருக்கஞ் சொன்னார்
சாற்றினார் மலைக்கருக்கள் சித்தற்காக
களம்பெறவே பரிபாஷை யாவுஞ்சொ்ன்னார்
கழறினார் போகருடமாற் கந்தானே. (528)

தானான சித்தருக்குச் சரணமாகுந்
தந்தைதாயாங் காலாங்கி அய்யருக்கு
பானான பதினொருக் காற்சரணஞ் சொன்னேன்
பரியாக யெனையீன்ற பராபரிக்குந்
தேனாக நூறுதிரஞ் சரணஞ் சொன்னேன்
சிவத்துக்கு மாயிரந்தான் சரணமாகும்
ஆனான ரிஷிசித்தர் அனேகங் கோடி
அடங்கலுக்குந் தெண்டனிட்டேன் நிகண்டு முற்றே.(529)

*காலாங்கி நாதருக்கும், பராபரிதாயாருக்கும், சிவபெருமானுக்கும், ரிஷிகளுக்கும், சித்தர்களுக்கும் முறையே பதினொன்று நூறு ஆயிரம் கோடி என்ற முறையில் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறுகிறார் போகமுனிவர்.*

*மாற்கமா மிந்தநூலு மதிப்புடன் ஆராய்ந்தேதான்*
*தீர்கமா மாயிரத்து யெழுநூறு பாடலாக*
*ஆற்கமா முனிவர்போக ரறைந்திட்டார் மாந்தருக்கு*
*ஏற்றமாங் குருநூலாகு மெழில்வேத முற்றதாமே.*

*முற்றும்*

# போகர் கருக்கிடை நிகண்டு

## இந்நூலில் இடம் பெற்றுள்ள மூலிகைகள், பிற பொருள்களின் மருத்துவ குணங்களும் வேதியல் பண்புகளும்

| மூலிகைகள் | மருத்துவ குணங்களும் வேதியல் பண்புகளும் |
|---|---|
| 1. பாச்சுற்றி | கடிவிஷங்கள், குஷ்டங்கள் போக்கி கிரகணி கிருமிநாசினி மேகங்கள் போக்கி ஈயத்தின் தோஷம் போக்கி |
| 2. பரியங்கப் பாதி | துரிசைச் செம்பாக்கும். |
| 3. நருஞ்சோந்தி | கல்லுப்பைக் கட்டும். |
| 4. ஆரை | ரச வெண்ணெயை (பாதரசத்தை) இறுகச் செய்யும். ஈயத்தை பற்பமாக்கும். இரணத்திலிருந்து ஒழுகுகின்ற நீரைக் கட்டுப் படுத்தும் தண்ணீரைச் சுருக்கும். |
| 5. பசளை | ரசத்தை மணியாகச் செய்யும். சாதிலிங்கம் மயினமாகும். நாகத்தைச் செந்தூரமாக்கும். |
| 6. இருவேலி | பித்தத்தைச் சாந்தியாக்கும். சிலேத்துமத்தைப் போக்கும். சுரம் தாகத்தைக் கட்டுப்படுத்தும். |
| 7. பருத்தி | கிரந்தி விரணங்களைப் போக்கும் |
| 8. செம்பருத்தி | விரணங்கள் குஷ்டங்கள் போக்கும் இரத்தத்தை சுத்தியாக்கும். சாறு நாகத்தைக் கட்டும். |
| 9. அகத்தி | விதைத் தயிலம் இரும்பை உருகச் செய்யும். பழுப்புச் சாறு சத்துக்கு ஆதி. பட்டை வேகத்துக்கு ஆதி. வேர்ப்பட்டை மேகம் போக்கும். |
| 10. சக்கரவர்த்தி | விதைத் தயிலம் பாஷாணத்தைக் கட்டும் சிலேத்துமத்தைக் குறைக்கும் மூக்குப் புண்களைப் போக்கும் |

| | |
|---|---|
| 11. அரைக்கீரை | வாதசுரம் போக்கும் பித்தசமனி. |
| 12. காளான் | செங்காளான் சூதம் கட்டும் கருங்காளான் நாகம் கட்டும். பச்சைக் காளான் பரிசவேதி |
| 13. வனமிட்டி | சிலேத்துமத்தைக் கட்டுப் படுத்தும் தாளகத்தைப் பற்பமாக்கும் சாரத்தைக் கட்டும். வசிகரத்தை உண்டாக்கும். |
| 14. பூசனிக்காய் | பாஷாணங்களின் ஊறலைப் போக்கும். இடுமருந்தை முறியப் பண்ணும். குளிர்ச்சி உண்டாக்கும். |
| 15. கக்கரி | சிலேத்துமத்தைக் குறைக்கும். கபத்தை இறுக்கும். நல்ல பசியை உண்டாக்கும். |
| 16. கொம்மட்டி | மூத்திரக் கிரிச்சரம் போக்கும் தாகத்தைக் கட்டுப்படுத்தும். வாத பித்தங்களைக் குறைக்கும். |
| 17 இரும்பிலி | கெந்தகத்தைத் தயிலமாக்கும். இதன் சாற்றில் நாகம் கட்டும். இலையில் ஈயம் கட்டும். வாத பித்த கபம் என்ற முத்தோஷங்களையும் சமனமாக்கும். |
| 18. புஷ்கரத்தின் வேர் | கண்களுக்கு நன்மை செய்யும் இரணங் களை ஆற்றும், கிருமிகளை நாசம் செய்யும் தாதுவை விருத்தி செய்யும். |
| 19. பிரம்பு | சூலை நாசனி. |
| 20. மிளகறணை | கடிவிஷங்களைப் போக்கும் கப வாதங்களைக் குறைக்கும் இரணங்களைப் போக்கும். |
| 21. கோகழி | |
| 22. கிளுவை | உருக்கைப் பற்பமாக்கும். வாத பித்த சமனி. இரணம் போக்கி. மேக சாந்தி. |
| 23.ஐவிரலி | சாதிலிங்கத்தை மயினமாக்கும். சிலேத்தும நாசினி. |

| | |
|---|---|
| 24. கவுதும்பை | பாஷாணங்களைக் கட்டும். |
| 25. பிறங்குநாரி | நாகத்தைக் கட்டிச் செந்தூரமாகவும் செய்யும். வாதசமனி. |
| 26. செங்கத்தாரி | பட்டைச் நாற்றில் சாகம் செம்பாகும். வேர்ச்சாற்றில் வெள்ளி செம்பாகும். பூச்சாற்றில் தங்கம் செம்பாகும். பழச் சாற்றில் அயம் செம்பாகும். |
| 27. காட்டுத் தீ மரம். | காற்றுப்பட்டால் பறவைகள் மிருகங்கள் மடியும் லோகங்கள் பற்பமாகும். |
| 28. புல்லூரி | காமாலை நாசனி. திரிதோஷ சமனி. |
| 29. திலகவிருட்சம் | வெள்ளைப் பாஷாணங் கட்டும். தாளகத்தின் மஞ்சள் நிறத்தைப் போக்கும். |
| 30. உச்சிலந்தி | செம்பைப் பற்பமாக்கும். திரவங்களையும் செந்தூரமாக்கும். உடம்பை இறுகச் செய்யும். |
| 31. பாவட்டை | மாந்தத்தை அறுக்கும் கிரகணியை மாற்றும். கபத்தைப் போக்கும். சுக்கான் கல்லைச் சத்தாகச் செய்யும். |
| 32. கருங்கொடி | மனோசிலைய்யை மார்க்கமாக்கும். அயத்தைச் செந்தூரமாக்கும். |
| 33. ஒட்டொட்டி | கெந்தகத்தைச் செம்பாக்கும். தயிலமாக்கும். சுவாச காசத்தைப் போக்கும். |
| 34. செம்பரத்தை | சாதிலிங்கத்தை மயினமாக்கும். காரீயத்தைச் செம்பாக்கும் |
| 35. கொடிக்கள்ளி | வாத நாசனி. இதன் பாலில் சூதம் கட்டும். ஈயத்தை நாகமாக்கும். |
| 36. இலைக்கள்ளி | வச்சிர கண்டம் செந்தூரமாகும் |

| | |
|---|---|
| 37. திருகு கள்ளி | அயத்தை ஈயமாக்கும். நாகத்தைக் கட்டும். |
| 38. மான் செவிக்கள்ளி | லோக பந்தனி, நாகத்தைப் பற்பமாக்கி குன்மத்தைப் போக்கி. |
| 39. பொன்னாவாரை | காரீயம் செந்தூரமாகும். நாகத்தைக் கட்டும். |
| 40. ஓதிய மரம் | இரண நாசனி, அதிசாரக் கழிச்சலைப் போக்கும். |
| 41.புன்னை | வாதநாசனி, இரணங்கள் குட்டம் போகும். |
| 42. சுரபுன்னை | நாகத்தைச் செந்தூரமாக்கும். வேரின் சாற்றில் வெடியுப்புக் கட்டும். குஷ்ட ரோகத்தைப் போக்கும். |
| 43. நறும்பிசின் | நவலோகங்களையும் பற்பமாக்கும். |
| 44. திருவட்டப்பிசின் | இரணங்களை ஆற்றும் |
| 45. சன்னை | |
| 46. உகாமரம் | குன்மம் போக்கும். பசியை உண்டாக்கும். |
| 47. கண்டில் வெண்ணெய் | |
| 48. சிவப்பு நெல் | |
| 49. நல்லரிசி | சம்போக விருத்தி |
| 50. வெள்ளரிசி | வலுவைத் தரும். |
| 51. கறுப்பரிசி | உடலுக்கு உறுதி. புண்கள் குஷ்டம் போக்கும். |
| 52. கோதும்பை | |
| 53. அவல் | |
| 54. வரகு | |
| 55. தினை | |

15,

| | |
|---|---|
| 56. மொச்சை | சத்து மிகுந்தது. உருக்கினத்துக்கு ஆதி |
| 57. பனிப்பயிறு | |
| 58. கறுப்புக் கடலை | கெந்தகத்தைத் தயிலமாக்கும் |
| 88. சீந்தில் | தேகம் சித்தியாகும் |
| மருள் | இரணம் போகும் |
| காஞ்சோறி | கபத்தைச் சாடும் |
| ஆடாதோடை | சுரத்தைப் போக்கும் |
| கருங்காலி | குட்டம் போக்கும் |
| வெண்கருங்காலி | நாகம் கட்டி மணியாகும் |
| 89. வேம்பு | பித்தம் போக்கும் |
| பெரியவேம்பு | வாதம் போகும் |
| நிலவேம்பு | சுரம் போக்கும் |
| சர்க்கரைவேம்பு | காயசித்தி |
| கோரைக்கிழங்கு | தோஷம் போக்கும் |
| பற்படாம் | கண்ணுக்கு ஆகும் |
| வெட்டிவேர் | தாபம் போக்கும் |
| இலாமிச்சம்வேர் | பித்தசுரம் போகும் |
| 90. பேய்ப்புடோல் | பித்தம் போக்கும் |
| வட்டத்திப்பிலி | பேதியை நிறுத்தும் |
| குமிழ் | சன்னிபோகும் |
| தேவதாரம் | சிலேத்துமத்தை அறுக்கும் |
| கண்டங்கத்திரி | சுவாச நோய்களை அகற்றும் |
| 91. சிறுவழுதலை | காசம்போக்கும் |
| வழுதலை | சிலேத்துமம் போகும் |
| நெரிஞ்சில் | மூத்திரக் கிரிச்சரம் போகும் |
| வில்வம் | வாந்தியை நிறுத்தும் |
| முன்னை | நேக நோய்களைப் போக்கும் |
| கழற்கொடி | விரைவாதம் போகும் |
| வெண்கழற்கொடி | குன்மம் போகும் |
| கொட்டைக்கரந்தை | வாக்குத் தெளிவாகும் |
| 92. நாறு கரந்தை | காயசித்தியாகும் |
| நன்னாரி | இடுமருந்தின் தோஷத்தைப் போக்கும் |
| பேய்ப்பீர்க்கு. | கெந்தகத்தைத் தயிலமாக்கும் |

| | |
|---|---|
| ரெண்டு பீர்க்கு | வாதத்தைச் சமனாக்கும் |
| பழுபாகல் | லிங்கத்தைக் கட்டும் |
| வெள்ளரி | மூத்திரக் கிரிச்சரம் போகும் |
| உகாய் | சத்துக்களை இறக்கும் |
| வெள்ளைக்கிலுகிலுப்பை | சூதத்தை பற்பமாக்கும் |
| 93. கோவை | சலக்கழிச்சல் போகும் |
| இனிப்புக் கோவை | ரசத்தைக் கட்டும் |
| கொன்றை | கிருமி போக்கும் |
| எலிச் செவி | நீரைச் சுருக்கும் |
| சதுரக்கள்ளி | பாஷாணத்தை மெழுகாக்கும் |
| சிவதை | பேதியுண்டாக்கும் |
| நாயுருவி | மந்தத்தைப் போக்கும் |
| சிவப்புச் சதுரக்கள்ளி | தங்கத்தைச் செம்பாக்கும் |
| 94. சாறடை | திமிர்வாதம் போக்கும் |
| மூக்குரட்டை | பீனிசம் போகும் |
| செம்முள்ளி | சிலேத்துமத்தை அறுக்கும் |
| சித்தாமுட்டி | சுரம் போக்கும் |
| பேராமுட்டி | சகல சுரங்களையும் போக்கும் |
| பாலை | சுளுக்குப் போகும் |
| திருநாமப்பாலை | பித்தம் தீர்க்கும் |
| குடசப்பாலை | அதிசாரம் போக்கும் |
| 95. வெட்பாலை | இரும்பை ஈயமாக்கும் |
| பழம்பாலை | பித்தத்தைச் சாடும் |
| நரிப்பயறு | பித்தத்தைச் சமனாக்கும் |
| முதியார்கூந்தல் | காரீயத்தைப் பற்பமாக்கும் |
| வெள்ளை ஆமணக்கு | வாதம்போகும் |
| சிவப்பு ஆமணக்கு | சாதிலிங்கம் மயினமாகும் |
| மாதுளை | இரும்பை உருக்கும் |
| கொம்மட்டி மாதுளை | வாந்தியை நிறுத்தும் |
| 96. விளா | பித்தம் போகும் |
| சர்க்கரை | தாபம் மயக்கம் போகும் |
| கரும்பு | கல்லடைப்பு போகும் |
| வெள்ளைக் கரும்பு | கபம்போக்கும் |
| அமுக்கறா | சயம் போகும் |

| | |
|---|---|
| பிரமி | விக்கல் போகும் |
| பூனைக் காஞ்சோரி | சிலேத்துமத்தை போக்கும் |
| பூனைக்காலிப் பருப்பு | தம்பனத்திற்காகும் |
| 97. சிறுபூளை | நீர் இறங்கும் |
| மந்தாரை | பாஷாணம் மயினம் |
| கொக்கிறகு | சாதிலிங்கம் மயினம் |
| அழிஞ்சில் | விஷங்கள் போகும் |
| பாகல் | பாஷாண தோஷத்தைப் போக்கும் |
| காட்டாத்தி | கிராணி போகும் |
| சாணாக்கி | தங்கம் நீறும் |
| முசுமுசுக்கை | சயங்கள் போகும் |
| 98. புன்னை | புண் ரணங்கள் போம் |
| கீழாநெல்லி | காமாலை போகும் |
| கருங்கொள்ளு | உருக்கினத்துக் காகும் |
| கருங்கூகை நீர் | உஷ்ணத்தைப் போக்கும் |
| தேக்கு | ச்லத்தில் அழுக்கு நீக்கும் |
| தகரை | மாந்தம் போக்கும் |
| ஊமத்தை | சூதவெண்ணெய் இறுகும் |
| சேவகனார் கிழங்கு | விஷகடிகள் போகும் |
| 99. கரிசாலை | பாண்டு ரோகம் போக்கும் |
| பொற்றலை | காயசித்தி |
| எருக்கு | கருச்சன்னி போம் |
| வெள்ளெருக்கு | சாரம் கட்டும் |
| மணித்தக்காளி | தாதுவிர்த்தி |
| கருந்தக்காளி | கெந்திகட்டும் |
| குன்றிமணி | சாரம்கட்டும் |
| பெரிய முள்ளங்கி | மூத்திரக் கிரிச்சரம்போம் |
| 100. சின்னமுள்ளங்கி | கெந்திகட்டும் |
| ஆற்று முள்ளங்கி | சிலேத்துமம் போகும் |
| முருங்கை | கண்ணுக்குள் இரணம் போக்கும் |
| புனமுருங்கை | நாகங்கட்டும் |
| துளசி | தோஷங்களைப் போக்கும் |
| கருந்துளசி | செந்தூரத்தாதி |
| நீர்த்திப்பிலி | சன்னிபோகும் |
| வெள்ளுள்ளி | வாதம் போகும் |

| | | |
|---|---|---|
| 101. | ஈருள்ளி | வேகம் போகும் |
| | நொச்சில் | கடுப்புப் போகும் |
| | கருநொச்சில் | கரப்பான் போகும் |
| | வாழை | பெரும்பாடு போகும் |
| | வாழைக்கிழங்கு | வழலை தீரும் |
| | தென்னைமரம் | மருட்சை போக்கும் |
| | பனங்கிழங்கு | வீரிய விருத்தியுண்டாக்கும் |
| | நிலப்பனை | இளமை யுண்டாக்கும் |
| 102. | வெள்ளைக் காக்கணான் | பேதி உண்டாக்கும் |
| | முடக்கொத்தான் | வாதம்போகும் |
| | சேம்பையால் | தினவுபோகும் |
| | சங்கங்குப்பி | குட்டம் போகும் |
| | பொரும்பில் | இரணம் போக்கும் |
| | கறுப்பறுகு | காசம்போக்கும் |
| | வெள்ளறுகு | மேகம் போக்கும் |
| | பவழ அறுகு | சுவாசரோகம் தீர்க்கும் |
| 103. | புளியாரை | காயசித்தியுண்டாக்கும் |
| | தாமரை | கண்ணுக்குக் குளிர்ச்சி |
| | தாமரைவளையம் | நஞ்சுகளை முறிக்கும் |
| | தாமரை மணி | வசிகரம் ஆகும் |
| | தாமரைத்தாது | மேகம் போக்கும் |
| | தாமரைக்கிழங்கு | ஆண்மை உண்டாக்கும் |
| | செங்கழுநீர் | வாதபித்த சிலேத்மரோகங்களைப் போக்கும் |
| 104. | அரக்காம்பல் | சிலேத்துமம் போக்கும் |
| | கல்தாமரை | உலோகங்கள் செம்பாகும் |
| | வெள்ளைத்தாமரை | சூதம் கட்டும் |
| | குளிரி | உப்புக்கட்டும் |
| | மல்லிகை | சரக்குகள் எண்ணெய் கக்கும் |
| | அந்திமல்லிகை | மேனி அழகாகும் |
| | முல்லை | கோபம் தீர்க்கும் |
| | முல்லை வகைகள் | முத்தோஷம் போக்கும் |
| | நந்தியாவட்டை | கண்களுக்கு நல்லது |
| 105. | இருவாட்சி | இரத்த பித்தந் தீரும் |
| | செண்பகம் | பருக்கள் போகும் |

| | | |
|---|---|---|
| | சிறுசெண்பகம் | பித்தம் போகும் |
| | செவ்வந்தி | சித்தப் பிரமைபோகும் |
| | குங்கும வந்தி | கோழை போகும் |
| | எலுமிச்சை | பைத்தியம் போகும் |
| | சிறிய இஞ்சி | திரிதோஷம்போகும் |
| | பேரிஞ்சி | சுரங்கள் போகும் |
| 106. | முந்திரிப்பழம் | தோஷம் போக்கும் |
| | புளிமுந்திரி | திரிதோஷம் போகும் |
| | இலந்தை | கடுப்பு போகும் |
| | இலுப்பை | இரணம் போகும் |
| | மலையிலுப்பை | வாதம் போகும் |
| | பலாசு | பேதியாகும் |
| | முட்பலா | அரிதாரத்தை நீற்றும் |
| | ஆல் | புழுக்கள் போம் |
| 107. | அரசு | புத்தியுண்டாக்கும் |
| | இச்சில் | உஷ்ணம் போக்கும் |
| | நாவல் | இரணம் போக்கும் |
| | அகத்தி | பெரும்பாடு போக்கும் |
| | பேயத்தி | தம்பனசத்தி உண்டாகும் |
| | பூவரசு | சகல விஷகுஷ்டங்களையும் தீர்க்கும் |
| | அலரி | நடுக்கல் நீற்கும் |
| | வன்னி | இரும்பைச் செம்பாக்கும் |
| 108. | நீர்க்கடம்பு | நாகம்கட்டும் |
| | கடம்பு | பாஷாணங்கட்டும் |
| | வெண்கடம்பு | சூதம்கட்டும் |
| | வாகை | இரணம்தீரும் |
| | கருப்புவாகை | கெந்திகட்டும் |
| | வேங்கை | கடிவிஷங்கள் போகும் |
| | ஒட்டை | உதிரப் பெருக்கு நீங்கும் |
| | இலவு | அதிசார பேதி நீங்கும் |
| 109. | இலவம் பிசின் | சுக்கிலம்கட்டும் |
| | மாமரம் | வாந்தி நிற்கும் |
| | பொன்னாங்கண்ணி | கண்களுக்கு ஒளிதரும் |
| | மாவிலிங்கை | சன்னிதீரும் |
| | லோத்திரம் | கண்நோய் போக்கும் |

| | | |
|---|---|---|
| | வெள்ளை லோத்திரம் | துரிசைக் குருவாக்கும் |
| | வஞ்சிக்கன்று | இடுப்பு உறுதியாகும் |
| | ஆற்றுமருந்து | வழலைபோம் |
| 110. | ஆட்டுச் செவிமருது | ஈயத்தைப் பற்பமாக்கும் |
| | குதிரைச் செவிமருது | காரீயத்தைப் பற்பமாக்கும் |
| | இறிற் கிழங்கு | ஈளைபோகும் |
| | பாலிநீர் | பாஷாணங்கட்டும் |
| | தேள்கொடுக்கு | சிரங்கு போம் |
| | நெய்ச்சட்டி | சீதசுரம் போம் |
| | சிறுவிடுகொள் | தண்ணீர்கட்டும் |
| | பெரிவிடுகொள் | சாரம் சாகும் |
| 111. | தண்ணீர்மிட்டான் | மிருதார் சிங்கி செம்பாகும் |
| | காகோளி | நீர் ஒழுக்கை நிறுத்தும் |
| | சிறுகாகோளி | திறம் உண்டாக்கும் |
| | சீவகம் | கல்லுப்புக் கட்டும் |
| | மயிடகம் | கௌரி கட்டும் |
| | பேராமல்லி | சுரங்கள் போகும் |
| | சித்தாமல்லி | சவலை போகும் |
| | சிறுபுள்ளடி | கணநோய் போக்கும் |
| 112. | அஷ்டமதுகம் | பிரமியம் போகும் |
| | பாதிரி | சூதம் கட்டும் |
| | மதுமுகம் | இளமையுண்டாக்கும் |
| | புண்டரிகம் (தாமரை) | அப்பிரகம் சத்தாகும் |
| | மேதை | மகா தோஷங்களைப் போக்கும் |
| | மகாமேதை | துஷ்ட சுரம் போக்கும் |
| | தேக்கு | சிரங்கு போகும் |
| | ஞாழம் | தினவு போகும் |
| 113. | பால்வீழி | இரும்பை ஈயமாக்கும் |
| | வீழி | காயசித்தியாகும் |
| | பாதிரி | பாண்டு போகும் |
| | வெண்பாதிரி | தாளகம் கட்டும் |
| | பெரும் குரும்பை | பிறிவுக்கு (பேதனத்துக்கு) ஆகும். |
| | குறுஞ்சூலி | அண்டம் மெழுகாகும் |
| | நறுமுருங்கை | நாக ரசம் கட்டும் |
| | பெருங்குறிஞ்சில் | கடுப்பு போகும் |

| | | |
|---|---|---|
| 114. | ஆயில்பட்டை | வாதம் போகும் |
| | புங்கு | சூலை போகும் |
| | வலம்புரி | குளிதோஷம் போகும் |
| | மருக்காரை | நசியத்துக்கு ஆகும் |
| | பாற்பை | சவ்வீரம் கட்டும் |
| | இருளி | குடோரம் போகும் |
| | பாலிருளி | சூதம் கட்டும் |
| | இருள் விடு | காந்தம் சத்தாகும் |
| 115. | களா விழுது | வெடியுப்புக்கட்டும் |
| | மராமரம் | சூடன் கட்டும் |
| | கமுகு | பல்லுக்கு உறுதி |
| | தழுதாழை | வாதம் போகும் |
| | தெர்ப்பை | மூத்திரக் கிரிச்சரம் போகும் |
| | ஆதொண்டை | பீனிசம் போகும் |
| | குழலாதண்டை | சரக்குகள் கட்டும் |
| | நாணல் | துர்மாமிசத்தைப் போக்கும் |
| 116. | திமிசு | சோரத்தைக் கட்டும் |
| | புசபத்திரி | வசீகரம் செய்யும் |
| | விடத்தேரி | சூதத்தை பஸ்மமாக்கும் |
| | நெட்டி | நீரைக்கட்டும் |
| | தளத்துவம் | நாகத்தைச் செந்தூரமாக்கும் |
| | பெரியவாழை | ஈயத்தைச் செந்தூரமாக்கும் |
| | உத்தாமணி | உஷ்ணத்தை அறுக்கும் |
| | பிராய்முட்டி | சாரத்தைக் கொல்லும். |
| 117. | நறுங்குறிஞ்சி | மயிலிறகு சத்தாகும் |
| | நத்தைச்சூரி | இரும்பை உருக்கும் |
| | நெருஞ்சில் | நீர் உஷ்ணம் போகும் |
| | கர்ணப்புத்து | மனோசிலை மெழுகாகும் |
| | கல்புகுவள்ளி | காயசித்தி |
| | வெள்ளி | கல்லுப்புக்கட்டும் |
| | அசோகம் | குன்மம் போகும் |
| | வாலுகம் | விஷகடிகள் போகும் |
| 118. | முத்தக்காசு | சுரதோஷம் போகும் |
| | அதிங்கு | கால்கை கடுப்பு போகும் |
| | வெள்ளைகாக்கணத்தி | பேதியாகும் |

| | |
|---|---|
| நேர்வாளம் | பேதி அதிகரிக்கும் |
| குறட்டை | கோழை பீனிசம் போகும் |
| கஞ்சாங்கோரை | குளிர் போகும் |
| வருமாத்து | தாபம் போகும் |
| இங்கணம் | லிங்கம் இறுகும் |
| 119. கட்டுத்துளசி | இரைப்புப் போகும் |
| திப்பிலி காமன் | தாதுவிருத்தி |
| சாசி | பாம்பு விஷம் போகும் |
| அனிச்சை | சொரி போகும் |
| கற்றாழை | சூதம் சுத்தி |
| குப்பைமேனி | உப்பைக்கட்டும் |
| செறுப்படை | சிலேத்துமம் போகும் |
| சிவனார்வேம்பு | சில்விஷங்கள் போகும் |
| 120. தூதுவளை | சிலேத்துமம் போகும் |
| ஆடுதின்னாபாளை | நாகம் கட்டும் |
| வெற்றிலை | நாகம் நீறும் |
| ஆகாசக்கருடன் | சூதம் கட்டும் |
| ரத்தமண்டலி | இரும்பை உருக்கும் |
| காட்டாமணக்கு | இரும்பை ஈயமாக்கும் |
| மருதாணி | இரும்பைச் செம்பாக்கும் |
| கஞ்சா | யோகம் உறுதியாகும் |
| 121. நிலவாகை | புழுக்களைக் கொல்லும் |
| கட்டுக்கொடி | உப்பைக் கட்டும் |
| பிரண்டை | வயிரம் நீறும் |
| வல்லாரை | உடலைத் தேற்றும் |
| மயூரசிகை | நாகம் கட்டும் |
| தாம்பிர சிகை | சூதம் கட்டும் |
| கானலரை | பித்தளை நீறும் |
| தில்லை | பாஷாணத்தைக் கொல்லும். |
| 122. மலைமரத்தால் | பித்தளை நீறும் |
| கப்பெட்டி | குதிரைப்பல் பாஷாணம் மெழுகாகும் |
| பிளிச்சிறுகீரை | சூதம் கட்டும் |
| நீரரளி | இரும்பு செம்பாம் |
| செவ்வரளி | தங்கம் செம்பு ஆகும் |
| சத்திச் சாரணை | காரீயத்தைப் பற்பமாக்கும் |

| | | |
|---|---|---|
| | தும்பை | சுரங்கள் போகும் |
| | பேய்த்தும்பை | தோஷம் போகும். |
| 123. | பேய்க் கொள்ளு | எல்லாவற்றையும் சத்து ஆக்கும் |
| | பேய்க்கடலை | கெந்தியைத் தயிலமாக்கும் |
| | பேய்த்துவரை | தாளகத்தைத் தயிலமாக்கும் |
| | அழுகண்ணி | சூதம் கட்டும் |
| | தொழுகண்ணி | வெட்டுப்பட்ட சதையை ஒன்றாக்கும் |
| | முடவாட்டின்கால் | சவ்வீரம் கட்டும் |
| | நாகவிந்து | நாகம் கட்டும் |
| | இருப்பவல் | பாலை இறுகச் செய்யும். |
| 124. | பொன்மத்தை | சூதம் கட்டும் |
| | கருமத்தை | கந்தகத்தைக் கட்டும் |
| | நச்சுப்புல் | ரசேந்திரம் குருவாகும் |
| | நான்முகப்புல் | ஈயத்தைப் பற்பமாக்கும் |
| | காவட்டம்புல் | மாந்தத்தைப் போக்கும் |
| | சுணங்கமர்ம் | சூதத்தைக் கட்டும் |
| | எருமைக் கனைச்சான் | எழிலகம் சுத்தி |
| | ரோம விருட்சம் | சகலசித்தி. |
| 125. | சேர்ந்தாடு பாவை | தங்கம் செம்பாகும் |
| | முண்டினி | சித்தான குளிகை |
| | சாயாவிருட்சம் | சணவேதி (ஒரு நொடிக்குள் வேதை உண்டாக்கும் - உலோகத்தை மாற்றும்.) |
| | கருநெல்லி | சகல சித்தி |
| | கல்லாரை | சூதம் கல்லாம் |
| | கல்சேம்பு | சூதம் குருவாகும் |
| | கல்லரளி | தங்கம் செம்பாகும் |
| | மூவிலைக்குருத்து | ரசம் மணியாகும் |
| 126. | முத்திருக்கஞ்செவி | சூதம் கட்டும் |
| | செந்திராய் | சூதம் செம்பாகும் |
| | செம்பல்லி | சூதம் கட்டும் |
| | செவ்வகத்தி | சாதிலிங்கம் மயினம் |
| | நிலஞ்சோதி | பித்தளையை வெளுப்பாக்கும் |
| | நிலக்கடம்பு | அப்பிரகம் சத்தாகும் |
| | பிறங்கைநாரி | கவுரிபாஷாணம் கட்டாகும் |
| | பூதணக்கு | தாளகத்தைக் கட்டும் |

| | |
|---|---|
| 127. செருந்தி | பாஷாணத்தைக் கட்டும் |
| கொத்தான் | பித்தம் போகும் |
| வரட்சுண்டி | நீரைக் கட்டும் |
| ஆதிரம் | வெடியுப்பைக் கட்டும் |
| காட்டுமா | தாபம் போக்கும் |
| அம்பளங்காய் | கல்லுப்பைக் கட்டும் |
| புனப்புளி | சாரம் கட்டும் |
| இதளை | சூலைபோகும். |
| 128. தும்பை | சூதம் பற்பமாகும் |
| சிறுதும்பை | சோபம் தீர்க்கும் |
| சோனகப்பூ | பாதரசமாகும் |
| மந்திரா | சன்னிபோக்கும் |
| பேய்த்தும்மட்டி | பாஷாணங்கட்டும் |
| பெருங்கரும்பு | வெள்ளீயம் பற்பமாகும் |
| துடறி | தாளகம் பற்பமாகும் |
| தேவதாளி | சூதம் பற்பமாகும். |
| 129. தாளி | இளைப்பு இருமல் மூர்ச்சை போகும் |
| நறுந்தாளி | சிலேத்துமம் போகும் |
| நாகதாளி | நாகம் கட்டும் |
| பேய்ச்சுரை | விஷங்கள் தீரும் |
| பேய்ப்பீர்க்கு | கந்தகத்தைத் தயிலமாக்கும் |
| சற்பாட்சி | நல்ல பாம்பின் விஷத்தைப் போக்கும் |
| சுவசற்பாட்சி | லிங்கம் கட்டும் |
| விஷ்ணுகாந்தி | சுரங்கள் போகும் |
| 130. நாகபலை | தாமிரம் செந்தூரமாகும் |
| நீர்க்கடம் | ஈயம் செந்தூரமாகும் |
| கிளிமூக்கு | உலோகங்கள் செந்தூரமாகும் |
| ஈகை | தாளகம் செந்தூரமாகும் |
| நறுவிளி | நாக்குப்புண் ஆற்றும் |
| புளிவஞ்சி | நாகரசம் பற்பம் |
| சிறுகல்லூரி | கல்லுப்புக்கட்டும் |
| வெட்பூலா | உஷ்ணம் போகும் |
| 131. நீர்ப்பூலா | போகம் மிகச் செய்யும். |
| தலைச்சூடு வள்ளி | ரசம் கட்டும் |
| பிரம்மதண்டி | சூதம் கட்டும் |

| | | |
|---|---|---|
| | பொடுதலை | வயிற்றுக் கடுப்பைப் போக்கும் |
| | கோடாசாலை | வயிற்றுப் புழுசாகும் |
| | இடுகொள்ளு | சத்துக் கூர்மை |
| | காட்டுக் கொள்ளு | சாரம் கட்டும் |
| | பேய்க் கரும்பு | பிசாசு போகும் |
| 132. | தினைப்பூ | மனோசிலைகட்டும் |
| | கிருமிசத்துரு | புழுக்கள் போம் |
| | பேய்த்தும்மட்டி | பாஷாணங்கட்டும் |
| | நாய்ப்பாகல் | மலட்டுப் புழுப்போம் |
| | துரும்பு | சூதம் பற்பமாகும் |
| | நீர்க்குறா | சத்திறக்கும் |
| | பூவம்பழம் | எண்ணெய்கக்கும் |
| | புதுப்பலா | கரப்பானாகும். |
| 133. | முட்பலா | ஆண்மை உண்டாக்கும் |
| | வனமரை | அரிதாரத்தை வெண்மையாக்கும் |
| | தண்கரு | சவளையாகும் |
| | இசங்கு | சிலேத்துமம் போகும் |
| | வெள்வேல் | இரணம்போகும் |
| | கருவேல் | பல் இறுகும் |
| | காஞ்சிரங்காய் | சித்தியாகும் |
| | வேம்பாடம்பட்டை | பெரிய ரணங்கள் போகும் |
| 134. | மலையாத்தி | பேதிகட்டும் |
| | சடைச்சி | விரியன் பாம்பின் விஷத்தைப் போக்கும் |
| | அகப்பூச்சடைச்சி | துரிசை வெள்ளையாக்கும் |
| | தமனத்துவயம் | தம்பனம் செய்யும் |
| | சதுகம் | உப்புக் கட்டும் |
| | மாஞ்சு ரோகிணி | கண்புகைச்சல் போகும் |
| | மூங்கில் அரிசி | சுரதோஷம்போகும் |
| | மூங்கில் குருத்து | இரத்தம் போகும். |
| 135. | செவ்விறகு | அயத்தைச் செம்பாக்கும் |
| | செம்மரம் | தங்கத்தைச் செம்பாக்கும் |
| | கருமருது | அரிதாரத்தைக் கருப்பாகச் செய்யும் |
| | ஒருக்கொம்பு | வெள்ளி செம்பாகும் |
| | நீர்விளா | பைத்தியம் போக்கும் |
| | கழுதைமான்புள்ளி | வெள்ளீயம் கட்டும் |

| | | |
|---|---|---|
| | நேயம்மரம் | அரிதாரம் கட்டும் |
| | பொன் வண்ணச்சாலி | உலோகங்களைத் தங்கமாக்கும். |
| 136. | மலர்க்கொன்றை | புழுக்களை அகற்றும் |
| | பெரிய மலர்க்கொன்றை | கிருமிகளைப் போக்கும் |
| | ஓமை | தினவு போக்கும் |
| | சிறுநீலி | நரை போகும் |
| | உதிரமாரி | துரிசைச் செம்பாக்கும் |
| | புளிநறளை | திமிர் போக்கும் |
| | பேய்க் கொம்மட்டி | லிங்கம் கட்டும் |
| | சுண்டைக்காய் | சுரங்கள்போகும். |
| 137. | காரெள்ளு | திலதமாகும் |
| | பீதரோகிணி | கண்குளிர்ச்சியாகும் |
| | கொடிநெல்லி | கெந்தி செம்பாகும் |
| | சின்னருகு | தயிலத்துக்கு ஆதி |
| | ஆவாரை | ஈயத்தைச் செந்தூரமாக்கும் |
| | காட்டுக்கரணை | கெந்தகத்தைத் தயிலமாக்கும் |
| | குருந்து | மனோசிலையைத் தயிலமாக்கும் |
| | அதளைக்காய் | சூதத்தைக் கொல்லும். |
| 138. | நரிமுருங்கை | சயத்தைப் போக்கும் |
| | கிளிமுருங்கை | இரும்பைச் செந்தூரமாக்கும் |
| | நெய்ப்பத்திரை | காயசித்தியாக்கும் |
| | மஞ்சிபத்திரி | காந்தத்தைச் செம்பாக்கும் |
| | நாய்வேளை | அயத்தைக் கட்டும் |
| | பச்சை நாபி | சூதம் கட்டும் |
| | மாகாளி | மயக்கம் போக்கும் |
| | தாளிப்பனை | நீர்போக்கும் |
| 139. | விருத்தி | சவர்க்காரத்தைச் சுன்னமாக்கும் |
| | ஓரிலைத் தாமரை | அழலை போக்கும் |
| | நீர்முள்ளி | வீக்கம் போக்கும் |
| | வெள்ளை நீர்முள்ளி | செம்பு குருவாகும் |
| | பாற்சோற்றி | பனிச்சை போக்கும் |
| | பரியங்கபாதி | பாஷாணத்தைக் கட்டும் |
| | நறுஞ்சோந்தி | நாகம்கட்டும் |
| | ஆரை | சூத வெண்ணெயை இறுகச்செய்யும் |

| | | |
|---|---|---|
| 140. | கரும்பசளை | சூதம் கட்டும் |
| | இருவேலி | தாபத்தைப் போக்கும் |
| | பருத்தி | பெரும்பாடு போக்கும் |
| | செம்பருத்தி | பித்தம்போகும் |
| | அகத்தி | வேக்காட்டை நீக்கும் |
| | சக்கிரவர்த்தம் | பித்தம் போகும் |
| | அரைக்கீரை | சுரத்தை அகற்றும் |
| | நான்குவகைக் காளான்கள் | சூதத்தைக் கட்டும். |
| 141. | வனமிட்டி | சாரம் கட்டும் |
| | பூசணி | ஊறல் போக்கும் |
| | கக்கரி | நீர்பெருக்கும் |
| | கொம்மட்டி | வாதம் போகும் |
| | இரும்பிலி | கெந்தகத்தைத் தயிலமாக்கும் |
| | புஷ்கர மூலம் | கண்ணுக்கு நல்லது |
| | பிரம்பு | சூலை போக்கும் |
| | மிளகறணை | கிரந்தி போக்கும் |
| 142. | கொழுகு | கிருமிகளைப் போக்கும் |
| | கிளுவை | கொடிய ரணங்களைப் போக்கும் |
| | ஐவிரலி | லிங்கம் கட்டும் |
| | கவுதும்பை | மூலநோயைப் போக்கும் |
| | பிறங்குநாரி | பொட்டிலுப்பைக் கட்டும் |
| | செங்கத்தாரி | அயத்தைச் செம்பாக்கும் |
| | காட்டுத் தீ | துரிசை வெளுப்பாக்கும் |
| | புல்லூரி | கருங்குட்டம் போகும். |
| 143. | திலகமரம் | தொட்டிப் பாஷாணத்தைச் செந்தூர மாக்கும் |
| | உச்சிச்சிலந்தியால் | குதிரைப்பல் பாஷாணம் கட்டும் |
| | பாவட்டை | வாதம் போக்கும் |
| | கருங்கொடி | பாஷாணங்களைக் கட்டும் |
| | ஒட்டொட்டி | உடலை உறுதியாக்கும் |
| | செம்பரத்தை | சாதிலிங்கத்தை மயினமாக்கும் |
| | கொடிக்கள்ளி | பாஷாணங்களை வலுவடையச் செய்யும் |
| | இலைக்கள்ளி | பாஷாணத்தைக் கொல்லும். |

| | |
|---|---|
| 144. திருகுகள்ளி | கவுரி பாஷாணத்தைக்கட்டும் |
| மான்செவிக்கள்ளி | தாளகத்தை மெழுகாக்கும் |
| பொன்னாவாரை | ஈயத்தைச் செந்தூரமாக்கும் |
| ஒதியம் | இரணத்தை ஆற்றும் |
| புன்னை | ஆறாத ரணங்களையும் ஆற்றும் |
| சுரபுன்னை | அரிதாரம் கட்டும் |
| நறும்பிசின் | நாகம்கட்டும் |
| வட்டப்பிசின் | துர்நீர் போக்கும் |
| 145. சன்னை | மனோசிலை கட்டும் |
| உகாய் | அப்பிரகத்தைக் கொல்லும் |
| கண்டில்வெண்ணெய் | கண்பருவைப் போக்கும் |
| சிவப்பு நெல் | உடலை உறுதியாக்கும் |
| நல்லரிசி | நாக்குக்கு ருசியாகும் |
| வெள்ளரிசி | சீரணமாக்கும் |
| கறுப்பரிசி | கடிகள் போகும் |
| கோதும்பை | உடல் இறுகும். |
| 146. அவுல் | ஆண்மை பெருக்கும் |
| வரகு | ஆண்மை குன்றும் |
| தினை | சீரணமாக்கும் |
| மொச்சை | வாதத்தை உண்டாக்கும் |
| மணிப்பயறு | பித்தம் போக்கும் |
| கருப்புக் கடலை | காயசித்தியுண்டாக்கும் |
| அனுமுலு துவரை | உடலைப் பிரகாசமடையச் செய்யும் |
| 212. யானைத்தந்தம் | வெடியுப்பைக் கட்டும் |
| குதிரைக் குளம்பு | இரும்பை ஈயமாக்கும் |
| ஒட்டகப்பிச்சு | கெந்தகத்தை மெழுகாக்கும் |
| கழுதை மூத்திரம் | தாதுக்களைச் சுத்தி செய்யும் |
| சிங்கத்தின் எலும்பு | சூதத்தைச் செயசூதமாக்கும் |
| மாட்டுப்பிச்சு | சாதிலிங்கம் மயினம் |
| மான்கொம்பு | தோஷங்களைப் போக்கும் |
| செம்மறியாட்டுக் கடாப்பிச்சு | சரக்குகள் மயின்மாகும். |
| 213. வெள்ளாட்டு மூத்திரம் | மகோதரம் போக்கும் |
| பன்றிக்குட்டி | சூதம் கட்டும் |
| நாய்மூளை | நாகம் கட்டும் |

| | |
|---|---|
| நாய்மாமிசம் | ஈயம் கட்டும் |
| குரங்குப்பிச்சு | தங்கம் நீறும் |
| ஓணான் பிச்சு | ஈடுமருந்து முறியும் |
| கருடன் முட்டை | ரசத்தைக் கட்டும் |
| செம்போத்து | ரசம் மயினமாகும் |
| 214. மயில் நெய் | கெந்தி சிவப்பாகும் |
| கிளி இறகு | ஈயம் உருகி ஆடும் |
| நாணுவான் முட்டை | வசிய தைலம் |
| சக்கிர வாகம் | நாகத்தைக் கட்டும் |
| அன்னம் | குளிகை கெவுன குளிகையாகும் |
| காக்கைமுட்டை | கெந்தி கட்டும் |
| கோழிமுட்டை | சரக்குகளைச் சுன்னமாக்கும் |
| ஆந்தை | பாதாள அஞ்சனம் |
| 215.குயில் முட்டை | பாஷாணம் சிவக்கும் |
| நாட்டுப் புறா எச்சம் | குருவுக்கு ஆதி |
| வீட்டுப்புறா எச்சம் | சத்துக்கள் வெளுப்பாகும் |
| தாரா முட்டை | கண் துலக்கமாகும் |
| ஊர்க்குருவி | தம்பனம் உண்டாக்கும் |
| அளுங்கு | சூதம் கட்டும் |
| உடும்பு நெய் | பாஷாணம் கட்டும் |
| முதலை நெய் | பாலரசம் சித்தியாகும். |
| 216. ஆமை | சூதம் கட்டும் |
| கல்லாமை | நாகங்கட்டும் |
| காட்டெறும்பு | விஷத்தைத் தீர்க்கும் |
| பூநாகம் | ஈயத்தைக் கட்டும் |
| இந்திர கோபப்பூச்சி | தங்கத்தைச் செம்பாக்கும் |
| கருநாகம் | சவ்வீரம் மெழுகாகும் |
| பாம்புக்குள் | தாளகம் கட்டும் |
| நாகப்பாம்பு | சனவசியம். |

⌘⌘⌘